www.padippakam.com

# காலச்சுவடு




இதழ் 12

ரூ 20

படிப்பகம்

www.padippakam.com




Distributors:

**R.D. Enterprises**
No. 55/14, GODOWN STREET
BALAKRISHNA MARKET
MADRAS - 600 001
☎ 581990, 585487

படிப்பகம்

www.padippakam.com



அன்பார்ந்த நண்பர்களுக்கு,

வணக்கம். இது எங்கள் பொறுப்பில் வரும் காலச்சுவடின் நாலாவது இதழ். ஓராண்டின் நிறைவு. இந்த நேரத்தில் உங்களுடன் சில சொற்களைப் பகிர்ந்துகொள்ள விரும்புகிறோம்.

இந்த ஓராண்டில் காலச்சுவடு ஏற்படுத்தியிருக்கும் பாதிப்பு என்ன? ஒரு தீவிர பத்திரிகை, சூழலில் எழுப்பும் சிற்றலைகளைத் துல்லியமாகப் பதிவுசெய்ய கருவிகள் எதுவுமில்லை. வாசக வரவேற்பு மிகுந்த உற்சாகமூட்டுகிறது. இதழுக்கு இதழ் விற்பனை சிறிய அளவில் அதிகரித்து வருவது மட்டுமல்ல; தமிழில் எந்தச் சிற்றிதழும் இன்றுவரை எட்டாத இலக்கத்தைத் தாண்டி முன்னகர்ந்தும் கொண்டிருக்கிறது. படைப்பாளிகளின் ஆதரவு நிறைவு தரும் விதத்தில் உள்ளது. சிற்றிதழ் ஆசிரியர்கள் தரமான படைப்புகளைப் பெற முடியாத நிலை பற்றி தொடர்ந்து குறைபட்டு வந்துள்ளனர். விரும்பும் அளவுக்கு படைப்புகளை அச்சேற்ற தயாரிப்புச்செலவே காலச்சுவடுக்குத் தடையாக உள்ளது.

காலச்சுவடின் புத்தக மதிப்புரைகள் நிறைவுகொள்ளச் சிறிது இடம் தருகின்றன. நம் சூழலில் விமர்சனத்திற்கு தகுதியற்றவையாகக் கருதப்பட்ட புத்தகங்கள் சிலவற்றை கவனப்படுத்த முடிந்திருக்கிறது. புத்தக மதிப்புரை புத்தகத்திற்கும் வாசகனுக்குமான உறவை தீவிரப்படுத்தும் வெளியா அல்லது கொம்பு சீவி விடுகிறவர்களின் தொழுவமா?தமிழில் கூர்மையான, நேர்மையான புத்தக மதிப்புரைகள் கடந்த அறுபது எழுபது ஆண்டுகளில் குறிப்பிடத்தக்க அளவு வந்துள்ளன. (இவற்றில் ஒரு சிலவற்றை காலச்சுவடில் மறுபிரசுரம் செய்ய உள்ளோம்) புத்தக வெளியீட்டுத்துறை வளர்ந்துவரும் இக்காலத்தில் புத்தக மதிப்புரையின் முக்கியத்துவம் அதிகப்பட்டு வருகிறது. வாசகனை முன்னிலைப்படுத்தி எழுதப்படும் புத்தக மதிப்புரைகள் காலச்சுவடில் தொடர்ந்து இடம்பெறும்.

புதுமைப்பித்தன் படைப்புகளை வெளியிடும் வாய்ப்பைப் பெற்றிருப்பதில் ஊக்கம் அடைந்திருக்கிறோம். அவரது தொகுக்கப்படாத படைப்புகளையும், திட்டமிட்டு புதைக்கப்பட்ட படைப்புகளையும் மீட்டு பிரசுரிக்கும்போது அவரை புதிய சொற்களுடன் அணுக முடியலாம்.

காலச்சுவடில் பிரசுரிக்கப்படும் படைப்புகளின் போதாமைபற்றி - குறிப்பாகச் சிறுகதைகள், கவிதைகள் - வாசகர்களும் நண்பர்களும் தொடர்ந்து எழுதி வருகின்றனர். நம் காலத்திய படைப்பாளிகளின் வரையறைகளைத் தாண்டி இயங்குவது எந்த இதழுக்கும் சாத்தியமில்லை. இருப்பினும் சிறந்த படைப்புகளைப் பெறுவதற்கு அதிக முயற்சி எடுத்துக் கொள்வதன் மூலமும் மொழிபெயர்ப்புகள் மூலமும் வரும் இதழ்களில் இக்குறையை நிவர்த்தி செய்ய முடியுமென நம்புகிறோம். காலச்சுவடை ஒரு விவாதத்திற்கான வெளியாக்கும் திட்டம் ஓரளவிற்கு நிறை வேறியுள்ளது. எனினும் புதிய குரல்களை அறிமுகம் செய்யவேண்டும் என்ற ஆசை முழு அளவில் நிறைவு பெறவில்லை. வாசகருடன் தொடர்புகொள்ளும் முனைப்புடன் எழுதக்கூடியவர்கள் தமிழில் இன்று குறைவு. புதிய துறைகளில் தேர்ச்சி பெற்றிருப்பவர்கள் மொழி மீது விருப்பம் கொள்ளத் தயங்கி நிற்பது ஒரு தடை. இன்னும் நிறைய செய்ய முடியும் என்ற நம்பிக்கையுடன் இருக்கிறோம்.

காலச்சுவடின் அடக்கவிலையைவிட விற்பனை விலை மிகக் குறைவு. குறுகிய காலத்தில் காகிதத்தின் விலையும் இருமடங்காக ஏறிவிட்டது. இருந்தாலும் காலச்சுவடு உரிய கரங்களுக்குப் போய்ச்சேர விலை தடையாக இருக்கக்கூடாது என்ற எண்ணத்தில் விற்பனை விலையில் எந்த மாற்றமும் செய்யவில்லை. பற்றாக்குறையை விளம்பரங்கள் மூலம் ஓரளவிற்கு ஈடுகட்ட முடிகிறது. இம்முயற்சியில் பெருமளவிற்கு ஆதரவு தந்து வருபவர் லலிதா ஜுவல்லரி சுகுமாரன்.

ஒரு இதழின் பட்டறையில் எண்ணற்ற கரங்கள் ஓசையின்றி இயங்குகின்றன. எம்.எஸ்., ஸ்ரீனிவாசன், சலபதி, லீலா, ரவீந்திரன், மே.துரா., அரவிந்தன் ஆகியோர் செய்துவரும் உதவிகள் ஆதாரமானவை. தீவிரப் பத்திரிகையின் முக்கியமான சவால் வாசகனை எட்டுதல். விற்பனை மையங்கள் குறைந்துவரும் இன்றைய நிலையில் காலச்சுவடின் வினியோகம் அதிகமும் நண்பர்களையே சார்ந்திருக்கிறது. வெ. நாராயணன், பல்லடம் மாணிக்கம், தமிழ்ச்செல்வன், அன்புசிவம், தேவதேவன், தேவிபாரதி, அழகியசிங்கர், நசிகேதன், மகாலிங்கம், செ. ரவீந்திரன், சுரேஷ், செந்தூரம் ஜெகதீஷ், து.காந்தி, பத்மனாப ஐயர், செல்வம், நிவேதிகா, பஞ்சாங்கம், ராமலிங்கம், பவா. செல்லத்துரை, லோகநாதன் ஆகியோர் செய்துவரும் உதவிகள் மறக்க முடியாதவை. காலச்சுவடை நிலைபெறச் செய்யும் பணியில் அயராது உழைத்து வருபவர் அய்யனார். காலச்சுவடுக்கு பல வழிகளிலும் உதவிவரும் ரவி சுப்பிரமணியன், ஜெயமோகன், லல்லி, வேதசகாயகுமார், அ.கா.பெருமாள், ஜி.எஸ்.ஆர்.கிருஷ்ணன், ஆதிமூலம், மருது, நாகம், லட்சுமி, பஷீர், தளவாய், அம்பை, சங்கர் ஆகியோர் அனைவருக்கும் எங்கள் நன்றி. இவர்களின்றி காலச்சுவடு இல்லை.

O

சுபமங்களா ஆசிரியர் கோமல் சுவாமிநாதனின் மறைவு தமிழுக்கு இழப்பாகும். நடுத்தரக் கலாச்சார இதழை உருவாக்கும் முயற்சியில் தீவிர இதழ்களில் உருவான பல படைப்பாளிகளுக்கும் அவர் இடமளித்து வந்தார். அத்துடன் பல்வேறுபட்ட சிந்தனைப் போக்குகளுக்கும் - தம் இதழ் இடம் தந்த அளவுக்கு - அவர் பக்கங்களை ஒதுக்கியும் வந்தார். தனளவில் அவருக்கு சில சிந்தனைகள் மீது நம்பிக்கை இருந்தாலும்கூட அவற்றைப் பற்றிய விமர்சனங்களுக்கும் அவற்றைத் தாண்டிய சிந்தனைகளுக்கும் அவர் இதழில் இடம் கிடைத்தது. சிந்தனைகளை வளர்க்க விவாதம் அவசியம் என்பதிலும் நம்பிக்கை கொண்டிருந்தார். அவருடைய அடிச்சுவடுகளை மேலும் வலுப்படுத்தும் வகையில் சுபமங்களாவின் செயல்பாடுகள் தொடர வேண்டுமென காலச்சுவடு விரும்புகிறது.

ஆசிரியர் குழு



படிப்பகம்

www.padippakam.com

## கவிதையின் வாழ்வும்

## வாழ்வின் கவிதையும்

கே. சச்சிதானந்தன்

'ஆஷ்விட்சுக்குப் பிறகு கவிதை சாத்தியமில்லை' என்ற தியடோர் அடோர்னோவின் கூற்றை, நம் காலத்தின் மாபெரும் படுகொலைக்கு ஒரு நுண் மனதின் எதிர்வினையாகப் புரிந்து கொள்ள முடியும். இருப்பினும் அதே 'ஆஷ்விட்சு' தான் நெல்லி ஸாக்ஸ் முதல் பால் செலான் வரை நம் காலத்தின் மிகச் சிறந்த கவிஞர்களையும் உருவாக்கியது என்பது கவிதையின் சரித்திரத்தில் இருக்கும் முரண். கவிதை மீதான கடும் எதிர்ப்புணர்வினால் 'வார்த்தைகளின் எச்சத்திலிருந்தும், அழிவிலிருந்து மீண்ட வார்த்தை களிலிருந்தும், மாபெரும் குப்பைக் கூளத்தின் மாபெரும் மயானத்தின வார்த்தைகளிலிருந்தும் எதிர் கவிதையை உருவாக்க முயன்ற 'டடியூஸ் ரோசெவிக்' கூட நம் காலத்தின் மிகச்சிறந்த கவிஞர் என்பேன். 'அழகியல அனுபவத்தை'த் தூண்ட 'அழகைத்' தயாரித்தல் என்பது இவருக்குத் தீமையற்ற ஆனால் முட்டாளதனமான செயல்' என்று பட்டது. "பீதியால் பீடிக்கப்பட்டவர்களுக்காக, கொலைக் களத்தில கைவிடப் பட்டவர்களுக்காக, தப்பிப் பிழைத்தவர்களுக்காக" தான் எழுதுவதாக இவர் கூறினார்.

இந்த வரையறை நம் அனைவருக்கும் பொருந்தும். ஏனெனில் நாம் அனைவருமே இவ்வையகத்தின் ரத்தக்களறியான கால்கட்டத்தின் எஞ்சியவர்கள்தாம். இடதுசாரி, வலதுசாரி, மதம், இனம், மொழி என அனைத்துக் கருத்தியல்களிலிருந்தும் ரத்தம் பெருக்கெடுத்த கால கட்டம் இது. அனைத்துக் கருத்தியல் கடவுள்களின் தோல்விக்கும் நாம் சாட்சிகள்: அவர்கள் நமக்கு அளித்ததெல்லாம் போர்க்களங்கள், விதவைத் தாய்கள், சேயகளை இழந்த தந்தைகள், அனாதையாக்கபபட்ட குழநதைகள், அலைக்கழிந்துக் கொண்டிருக்கும் அகதிகள். கருத்தியலை முன்னிறுத்தி பேசுபவன் எவனுமே - விடுதலையின் நமபிக்கையை அளிககும கருத்தியலைக் கூட - வெற்றாகவும் பொய்யாகவும், அபாயகரமாகவும ஒலிக்கின்றான். அவன் நம்மை எந்தக் கணத்திலும் கைதிகள் முகாமிற்கு இட்டுச் செல்லக்கூடும்; ஒரு புக்கன் வால்டு, ஒரு குலாக் அல்லது சீன வேலை முகாம்... இன்றைய கவிஞன் அடிவானில் உதிக்கும் நட்சத்திரங்களைப் புதிய சர்வாதிகாரியின் தோற்றத்தின் அறிகுறியாகக் கண்டு கொள்கிறவன். அந்த சர்வாதிகாரியின் பெயர் ஹிட்லராகவோ, முசோலினியாகவோ, ஸ்டாலினாகவோ, போல்போட்டாகவோ, தூசெஸ்கூவாகவோ, கோமேனியாகவோ இருக்கலாம். நம் காலத்தின் எழுத்துத் துறையின் சரித்திரமானது கொள்கையின் பொருட்டு ஏற்ற உயிர்த் தியாகத்தின் சரித்திரமும்கூட - தணிக்கை, சிறைவாசம், நாடுகடததலும் மரணமும். இந்தப் பட்டறிவு எல்லா ரக சர்வாதிபத்தியங்களையும் எதிர்க்கும்படி கவிஞனைக் கட்டாயப்படுத்த வேணடும். ஒடுக்குமுறை கட்டவிழ்த்துவிடப்பட்ட காலகட்டங்களே எழுத்தாளனின் சிறநத படைப்புகளை வெளிக்கொணர்கின்றன. 'ஜேம்ஸ் ஜாய்ஸ்' எழுத்தாளர்களைப் பற்றி கூறியிருக்கிறார் 'எங்களைப் பிழியுங்கள், நாங்கள் ஆலிவ்கள்' என்று. நாஸி சிறைமுகாம்கள், பிரான்சின் மீதான ஜெர்மனிய ஆக்கிரமிப்பு, அமெரிக்காவிலும், ஆப்பிரிக்காவிலும், கறுப்பர்களுக்கெதிரான ஒடுக்குமுறை, உலகின் பல பகுதிகளிலும் பொதுவுடைமைவாதிகளுக்கெதிரான ஒடுக்கு முறை, சோவியத் ஒன்றியத்தில், சீனாவில், கிழககு ஐரோப்பாவில் அரசாங்கத்தை எதிர்த்தவர்களின் சித்திரவதை, பாலஸ்தீனியர்களின நாடுகடத்தல் மற்றும் சிறிய, பெரிய யுத்தங்கள் நம் காலத்தின் மிகச் சிறநத கவிதைகளை உருவாக்கின. ஆனால் நாம இந்த நெருக்கடி மிகுந்த காலங்களில் ஆயிரக்கணக்கில கொல்லப்பட்ட, மௌனமாக்கப்பட்ட கவிஞர்களை, கவிஞர்களாகும் சாத்தியங்களைக கொண்டிருந்தவர்களை மறக்கலாகாது. கவிதையின் முழு மலர்ச்சிககு ஜனநாயகம் இன்றியமையாதது. சமத்துவத்தின் கலப்பில்லாத ஜனநாயகத்தில் சாரம் இல்லை; அமைதியும் சுற்றுச் சூழலிய விழிப்பும் இன்றி ஜனநாயகமும் சமத்துவமும் சாத்திய மில்லை.

இது கொள்கைப்பிடிப்பு பற்றிய அசௌகரியமான கேள்விக்கு நம்மை இட்டுச் செல்கிறது. உலகை வழி நடத்தும், கட்டுப்படுத்தும் அதிகார நடவடிக்கைகளில் கவிதையின் தாக்கம் மிகக் குறைவு என்பதை நாம் முதலில் புரிந்து கொள்ள வேண்டும். மனிதனின் வாழ்விலும் செயலிலும் அது ஓரங்கட்டப்பட்டிருக்கிறது. இந்த நிலை 'கவிதையால் எதுவும நடப்பதில்லை' என்ற ஆடனின் கூற்றை உண்மையோ என எண்ண வைக்கிறது. நான் 'உண்மையோ' என சந்தேகமாகக் கூறக் காரணம் நமது தேசியம் ஓரளவிற்கு இரண்டு நெடுங் கவிதைகளை அடிப்படையாகக் கொண்டது. இவை இன்னும் நம் நினைவிலி மனதிலும் நம் மக்களின் உணர்வின் உறுதியிலும் அதிர்வுகளை உருவாக்காமலில்லை. ஆழ்வார்கள், பசவண்ணர், அக்கமா தேவி முதல் நாமதேவர், மீரா, கபீர், துக்காராம் வரை பல நூற்றாண்டுகள் - கவிதையின் ஆதிக்கத்தில் - நிகழ்ந்த பக்தி போன்ற



படிப்பகம்

www.padippakam.com

கலாச்சார இயக்கங்களினாலும், பிரதேச மொழிகளில் இயற்றப்பட்ட ராமாயணங்கள், பாரதங்கள், பாகவதங்களாலும் நமது தேசத்தின் அடித்தளம் உறுதிப்பட்டுள்ளது. இருப்பினும் இன்று நம் சமுதாய வாழ்வில் கவிதையின் பங்கு ஓரங்கட்டப்பட்டிருக்கிறது எனக் கூறக் காரணம், அதன் அறத்தின் சக்தியால் நம் காலத்தின் இனப் படுகொலைகளை தடுக்க முடியவில்லை என்பதால்தான். சந்தையும் அதன் மதிப்பீடுகளும் நம் இருப்பின் ஒவ்வொரு தளத்தையும் ஊடுருவி வருவதால் கவிதை மேலும் ஓரங்கட்டப்பட்டு வருகிறது. இந்த உலகே ஒரு பெரும் பங்குச் சந்தையாக அதிக விலை கேட்பவனுக்கு உகந்ததாக மாறிக் கொண்டிருக்கிறது. நம் காலத்தில் செழித்துவரும் பண்பாட்டுத் தொழிற் சாலைகள், புற்றீசல்போல் பெருக்கெடுத்து வரும் வணிக இலக்கிய தொழிற் கூடங்களுடன், பாப் திருவிழாக்கள், இனப் பாரம்பரியத்தின் ஏற்றுமதி, பார்முலா படங்கள், தொலைக் காட்சி நாடகங்கள், வீடியோ அரங்குகள் அனைத்துமே வாழ்வின் முக்கிய ஸ்தானங்கள் வரை எட்டியிருக்கும் நுகர்வு கலாச்சாரத்தின் நீட்சியே அன்றி வேறில்லை. வளர்ந்து வரும் இந்த பொழுதுபோக்கு உற்பத்தி மையங்களின் ஒரு உறுப்பாகக் கவிதையை உருமாற்றும் சபலம், மேலும் மேலும் அதிகமான கவிஞர்களைக் கோமாளிகளாக மாற்றிக் கொண்டிருக்கிறது. இற்றுப்போன வார்த்தைகளில் உழன்று கொண்டிருப்பவர்களாக, ஓசை நயத்திற்காக வார்த்தைகளின் தரத்தைப் பண்டமாற்றிக் கொண்டிருப்பவர்களாக, கவிதையின் உள்ளார்ந்த அமைப்பில் புதுமை என்பதைவிட நிகழ்த்துதலுக்கு அதிக மதிப்பளிப்பவர்களாக... இலக்கணத்தைக் குருட்டுத் தனமாக - எந்த முயற்சியுமின்றி எளிதாக செரித்துவிட முடியுமென்பதால் - பின்பற்றுபவர்களாக, போலி நம்பிக்கை களைக் கணிசமான அளவில் வாசகர்களுக்குச் செலுத்திப் போதை ஏற்றுபவர்களாக இவர்கள் இருக்கின்றார்கள். இந்தக் கவிஞர்கள் தங்கள் வாசகர்களின் கலாச்சார ஒப்பிசைவின்மைகளை மேலாதிக்கப் பாங்குடன் அணுகுகின்றனர். நம்முடைய இன்றைய நிலையை 'மக்கள் இலக்கியம்' போன்ற குளிர்ச்சியான பதங்கள் மூலம் இனிமையாக்க முயல்வது ஒரு பின்னடைவாகும். ஏனெனில் எழுத்தாளனை விடவும் அதிக கலாச் சாரமுடைய வாசகர்களை இலக்கியம் முன்யூகம் செய்து கொள்ள வேண்டும். அப்படிப்பட்ட வாசகர்கள் இன்று உண்மையில் இல்லாவிட்டாலும்கூட. எழுத்தாளனின் கொள்கைப் பிடிப்பு என்பதற்கு எளிமைப் படுத்தப்பட்ட உள்ளடக்கம் என்றோ, நீர்த்துப் போன சொல்முறை என்றோ அர்த்தம் இருக்க வேண்டியதில்லை. இது பண்பாட்டு தற்கொலைக்கு ஒப்பானது. சோவியத் ஒன்றியத்திலும், சீனாவிலும், புரட்சிக்குப் பிந்திய இலக்கியத்தின் வறுமை, இலக்கியத்தைக் கட்டாயமாக வெகுஜனமாக்குவதில் இருக்கும் அபாயத்தைத் தெளிவாகக் காட்டுகிறது. 'மக்கள் இலக்கியத்திற்கு' எது பொருந்துமோ அது 'கொள்கைப் பற்றுடைய இலக்கியத்திற்கும்' பொருந்தும். 'கொள்கைப் பற்றுடைய கவிதைகளை' யாரும் பிரக்ஞைபூர்வமாக படைக்க முடியாது. ஏனெனில் எல்லா கவிதைகளுமே பல குரல் தன்மை உடையவை - பல வகையான நுழைவுகளுக்கும், பலவகையான வாசிப்புகளுக்குமான சாத்தியப்பாடு இவற்றில் உண்டு. பிரதியின் இருப்பானது - ஆசிரியனின் நோக்கம், அவன் கொள்கைகள், குறிக்கோள்கள், தன் எழுத்தைப் பற்றிய அவன் புரிதல் போன்றவற்றிலிருந்து - தன்னிச்சையானது. எனவே 'கொள்கை பிடிப்பு' இறுதியில் வாசிப்பு சார்ந்ததாக ஆகிறது. அதிக எளிமைப்படுத்தப்பட்ட அரசியல் பார்வைகள் சரிந்துவிட்ட, அனைத்து அமைப்புகளின் சட்டகங்களும் குலைந்துவிட்ட அல்லது சீரழிந்துவிட்ட காலகட்டத்தில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். ஆனால் இந்த கால கட்டத்தில்தான் தனிநபர்களையும், சமூகங்களையும், மனித குலத்தையும் பாதிக்கும் பிரச்சினைகளைப் பற்றிய விழிப்புணர்வும் அதிகரித்து வருகின்றது. சமூகத்தின் ஆட்சியாளர்கள் கவிஞன் தன் குரலை உயர்த்திப் பேச வேண்டும் என விரும்புகிறார்கள்; மக்களிடம் தாக்கத்தை ஏற்படுத்தும் சிந்தனைகளை முன்வைக்க வேண்டும் என்று விரும்புகிறார்கள், அவனுடைய உள்ளுணர்வின் எதிர்வினைகளைத் தீவிர சார்பு நிலைக்குத் தள்ள ஆசைப்படுகிறார்கள். பரபரப்பை ஏற்படுத்தும், தீப்பொறி பறக்கும் எழுத்தாளனின் அறிக்கைகள் யதார்த்த உலகில் எந்த உரசலையும் ஏற்படுத்துவதில்லை என்பது அவர்களுக்குத் தெரிவதில்லை. மேலும் கவிஞனின் வார்த்தைகளை, அச்சாகும், ஒலிப்பரப்பாகும் வார்த்தைகளின் கடல் விழுங்கி விடுகிறது. அரசியலின் பிடிக்குள் வந்துவிட்ட உண்மைகளைக் கவிஞர்கள் ஒப்பிக்க வேண்டும் என அரசியல் தலைவர்கள் எதிர்பார்க்கிறார்கள். இதன் மூலம் கவிதையை உள்ளார்ந்த மதிப்பெதுவுமற்ற அலங்காரப் பொருளாக மாற்றி விடுகிறார்கள். பழமைவாத விமர்சகர்களும் சரி, வாசகர்களும் சரி, கவிதை ஏற்கனவே அறியப்பட்டவற்றை உறுதிப்படுத்த வேண்டும் என்றும், இருந்து கொண்டிருக்கும் சமுதாயக் கட்டுமானத்தைப்

**இந்த வளர்ந்து வரும் பொழுதுபோக்கு உற்பத்தி மையங்களின் ஒரு உறுப்பாகக் கவிதையை உருமாற்றும் சபலம், மேலும் மேலும் அதிகமான கவிஞர்களைக் கோமாளிகளாக மாற்றிக் கொண்டிருக்கிறது. இற்றுப்போன வார்த்தைகளில் உழன்று கொண்டிருப்பவர்களாக ஓசை நயத்திற்காக வார்த்தைகளின் தரத்தைப் பண்டமாற்றிக் கொண்டிருப்பவர்களாக, கவிதையின் உள்ளார்ந்த அமைப்பில் புதுமை என்பதைவிட நிகழ்த்துதலுக்கு அதிக மதிப்பளிப்பவர்களாக... இலக்கணத்தைக் குருட்டுத் தனமாக - எந்த முயற்சியுமின்றி எளிதாக செரித்துவிட முடியுமென்பதால் - பின்பற்றுபவர்களாக, போலி நம்பிக்கைகளைக் கணிசமான அளவில் வாசகர்களுக்குச் செலுத்திப் போதை ஏற்றுபவர்களாக இவர்கள் இருக்கின்றார்கள்.**



படிப்பகம்

www.padippakam.com

*முத்தம்மா திருநெல்வேலி மாவட்டம் ஆறுமுகம்பட்டியைச் சேர்ந்தவர். பீடித் தொழிலாளி. பெண்ணாகவும் கூலி உழைப்பாளியாகவும் வாழ்வை எதிர்கொண்ட முத்தம்மாவின் நினைவுகள் துயரங்களாலும் போராட்டங்களாலும் மட்டுமானதல்ல; ஆழ்ந்த மன நெகிழ்ச்சியும் வாழ்தலின் வெம்மையில் வற்றிப்போகாத அங்கத உணர்வும் நிரம்பியவை.*

*சுமார் நூறு நிமிட நேர உரையாடலில் தனது குழந்தைப் பருவம் முதல் தன்னுடைய குழந்தைகளின் காலம் வரையிலான நீண்ட தொலைவை ஒரே வீச்சில் கடந்து செல்கிறார். இந்த கடந்து செல்லலில் தன்னிரக்கமோ தோல்வி மனப்பான்மையோ சிறிதும் இல்லை. தன் வாழ்வின் பிரதிநிதித்துவம் வாய்ந்த நிகழ்வுகளை தன்னியல்பாகத் தொகுத்துக் கட்டமைத்திருக்கும் விதமும் அதற்கான துல்லியமான மொழியும் முத்தம்மாவைச் சிறந்த கதைச் சொல்லியாக அடையாளம் காட்டுகின்றன.*

*மைய நீரோட்டத்திற்கு அப்பால் வாழும் மக்களின் அசலான மனங்களும் மொழியும் அவர்களின் அனுபவங்களும் வாய்மொழியாக நேரடிப் பதிவுகளுக்கு உட்படும்போது அவை தமிழின் அநேக முற்போக்குப் படைப்பாளிகளின் 'மக்கள் இலக்கியங்களை'விட அதிக உயிர்ப்பும் நம்பகத்தன்மையும் கொண்டவையாக இருக்கும். இப்பதிவுகளின் மூலம் வரலாற்றின் மௌனங்களிலிருந்தும் எழுத்துருவமான புனைவுகளின் சிதைவுகளிலிருந்தும் அவர்களின் குரல் வெளிப்படும். 'சொல்லுகிறவர்கள்' 'எழுதுகிறவர்களின்' 'மூல'ப்பொருளாக என்றும் இருக்க வேண்டியதில்லை.*

*ஒலிநாடாவிலிருந்து அச்சுக்கு முத்தம்மாவின் கதை மாற்றப்பட்டபோது அவரது குரலின் தாளகதி மழுங்கிவிட்டது. இனி முத்தம்மா தன் கதையைச் சொல்கிறார்.*

பிறந்தோம் வள்ர்ந்தோம் பட்டிக்காட்டுல. ஆறுமுகம் பட்டி பட்டிக்காடுதானே. எங்கம்மா ரொம்ப பட்டிக்காடு. எங்கம்மாவுக்கு துணி போடக்கூடாது, கண்ணாடி பார்க்கக் கூடாது. பாவாடை சட்டை போட்டு நாங்க அறியோம.

ஒரு சேலையை எடுத்தாந்து ரெண்டா கிழிச்சிக்கிடுவா. எங்கக்காவுக்கும் எனக்கும். அவ ஒரு தட்டு நான் ஒரு தட்டா உடுத்திக்கிடுவோம். இதாம் எங்க அம்மாவுக்கு உள்ளது. அவ வாழ்க்கை வரலாறு அதான். அவ காலத்துல துணியே போட்டது கிடையாது. எங்களுக்கு அது மாதிரி துணியே எடுத்துத் தர்றது கிடையாது. கொசுவலம் பின்னால வைச்சுக் கட்டிக்கிடனும்.

அப்ப எல்லாப் பிள்ளைகளும் காக்காட்டி விளையாடும். பாவாடை சட்டை போட்டிருக்க பிள்ளைக காக்காடும் போது நல்லா விரியுமில்ல! அப்ப எங்களுக்கு அழுகையா இருக்கும். நம்ம பாவாடை விரிய மாட்டேங்கே... அப்படின்னுட்டு ரொம்ப வருத்தத்தோடு இருப்பேன். எங்க அக்கா என்ன செய்வா இந்தக் கொசுவலத்தை எடுத்து நல்லாச் சுத்தி சுத்தி கொசுவலம் வைச்சி 'ஏ புள்ளே எம் பாவாடையைப் பாருங்க' அப்படின்னுட்டு விரிச்சிக் காமிப்பா அந்தப் பிள்ளைகள்ட்ட. எங்கம்மாவுக்கு படிப்பு என்னான்னே தெரியாது. படிக்க வைக்க எதுவுமே செய்யமாட்டா. அந்தக் காலத்துலுள்ள ஆள். 92 வயசாச்சு. இன்னும் இருக்கா.

பெறவு ஒரு காலத்துலே, கொஞ்சம் நாகரீகம் வருது. நாகரீகம் வந்தவுடனே எங்கம்மாகிட்ட சேல கேக்கேன் நான். நல்ல சேல எடுத்துத்தாம்மா... ஒரு வாயில் சீலை எடுத்துக் கொடும்மா... எல்லாரும் வாயில் சீலையா கட்டுதாங்க அப்படின்னுட்டு எங்கம்மாகிட்ட நிதம் கேட்டு அழுவுதேன். எனக்கு நீ சேல எடுத்துத்தா சேல எடுத்துதான்ட்டு. அப்ப ஒரு நாளு என்ன செஞ்சிருக்கா இங்கிருந்து போயிருக்கா கடைக்கு. மில்லுல வேல பார்த்துட்டு வரும்போது. கடையில போய் 'எம்மவ வயலு வயலுன்னு கேக்காய்யா; ஒரு வயலு கொடுங்க'ன்னு அப்படின்னுருக்கா. அப்ப கடைக்காரன் சொல்லியிருக்கான் 'நீ எத்தனாயிரம் ரூபாய்க்கும்மா வயலு பிடிக்கப் போறே?' 'அதான்யா அந்தச் சீலையில ஒரு வயலு இருக்குல்ல அந்த வயலுதான் கேட்கா என் மவ.' 'ஏ உடுக்க சேலையாம்மா?' 'ஆமா.' 'ஓ வாயில் சேலையாம்மா?' 'அந்த எழவுதான்!' அப்படின்னுட்டு சொல்விட்டா. நல்ல சேலயா பார்த்து எடுத்து வந்துட்டா. எனக்கு சந்தோஷம் சொல்லவே முடியல. ஆனா எங்கம்மா சேல எடுத்தான்னா அந்த பணிக்கர் சேலதான், தறி சேலதான் எடுத்துக் கொடுத்து ரெண்டா கிழிச்சிடுவா. அவளுக்கு ஒன்னு! எனக்கொன்னு! இப்படித்தான் எங்க அம்மா கதை.

நாலு பேர் நாங்க.' ரெண்டு ஆம்பளை. ரெண்டு பொம்பளை. எங்கக்கா எனக்கு மூத்தவ. அண்ணன் எனக்கு மூத்தவன். தம்பி எனக்கு இளையவன்.

எங்கண்ணனுக்கு பத்து வயசிருக்கும் போது எங்கப்பா இறந்து போச்சு; எங்களுக்குத் தெரியாது. அப்ப எனக்கு ஆறு வயசு. அப்ப உள்ளதுகளுக்கு ஆறு வயசுன்னா ஒன்னுந் தெரியாதுல்ல. இப்ப உள்ள புள்ளைகதான் பொறந்தவுடனே ரஜனி ஸ்டைலு அந்த ஸ்டைல்ங் கறதுங்களே. எங்கப்பா இறந்தவுடனே எனக்கு நேரே இளையது ஒரு தங்கச்சி இருந்தது. நாங்க எல்லாம் சின்னப் புள்ளைகதானே. எங்கம்மா வேலக்குப் போயிடுவாங்க. மில்லு வேல. நாலு புள்ளைகளையும் வைச்சிட்டு, ஒரு புள்ளே வேறே வயித்துல எங்கப்பா சாவும் போது. அஞ்சு மாசம் வயித்துல... வேலக்குப் போறா. இந்தப் புள்ள சின்னப் புள்ள. மூணு வயசு போல கிடக்கு. அந்தப் புள்ள செத்துப் போவுமேன்னு நினைச்சது கிடையாது. சின்னப் புள்ளைகதானே நாங்க எப்படி யிருந்தாலும். எங்கக்காக்கூட போகணும்னு சொன்னா நான் சொல்வேன், அக்கா நீ கூட்டிட்டுப் போ. அவ சொல்வா நீ கூட்டிட்டுப் போன்னுட்டு. இந்த ரெண்டு பேரும் சேர்ந்து அந்தப புள்ளயை பூச்சாண்டி வாரான், கண்ணை மூடிக்கன்னு சொன்னா, ரெண்டு கண்ணையும் கையை வைசசி மூடிக்கிடும் அந்த புள்ள. அப்படிச் சொல்லி சொல்லி சொல்லி அந்தப் புள்ள கண்ணு மூடுபட்டே போயிடுச்சு. கடைசியில செத்தே போச்சு. பிறவு என் தம்பி பொறந்தான்.

சின்ன வயசில முதல்ல படிக்கப் போனத சொல்லுதேன் எங்கம்மா படிச்சிருந்தாதானே எங்களை படிக்க வைப்பா. எங்கம்மாவுக்குத்தான் படிப்புன்னா என்னன்னு தெரியாதே! ஒரு வாத்தியார் இருந்தார். அந்த வாத்தியார் வந்து எங்களுக்கு சொந்தக்காரங்க. நான் சினிமாப் பாட்டு படிக்கறத பாத்தவுடனே 'உன்னை எப்படியாவது படிக்க வைச்சிடறேன்மா' அப்படின்னு கேட்டார். பள்ளிக்கூடம் நாலு மணிக்கு முடியுதுன்னா அதுக்கு முன்னாலேயே என்னை கூப்பிட வந்திடுவார். 'நீ வந்து ரெண்டு பாட்டாவது படிம்மா' அப்படிம்பார். வந்தவுடனே பாட்டு படிப்பேன். நான் சாவுமுன்னே உனக்கு சொல்லித்தந்திட்டு சாவுதேம்மா அப்படின்னு சொல்வார். கடைசியில அவர் சொல்லித் தரல. பாட்டுப் படிச்சதுதான் மிச்சம். அவர் செத்துப் போயிட்டார். அதுக்கப்புறம் இன்னொரு வாத்தியாரு. அவர் ரிட்டையராயிட்டார். அவரு வந்து ராப்பள்ளிக்கூடம் சொல்லிக் குடுக்கேன் பிள்ளைகளா, நீங்க எல்லாரும் வாங்க அப்படின்னு சொன்னவுடனே, எப்படியாவது படிச்சிடனும்னு ஒரு ஆசை; எனக்கு ரொம்ப ஆசை. எங்கக்காளும் நானும் படிக்கப் போனோம். படிக்க போனா முதல்ல சிலேட்டு வாங்கிக் கொடுத்துட்டா எங்கம்மை. ஒரு பொஸ்தகமும் வாங்கிக் கொடுத்துட்டா. ஒரு மாசம் ஆனவுடனே ஒரு ஆளுக்கு ரெண்டு ருவா கேட்டார். நாலு ருவா கேட்டார். நாலு ருவா கொடுத்து பொட்டச்சிக படிக்கவா, படிக்க போவேண்டா அப்படின்னு சொல்லிட்டா. கடைசியில சிலேட்டு, பொஸ்தகம் வாங்கினது வேஸ்டாப் போச்சு. அதுக்கப்புறம் சிவந்திபுரத்துல போய் படிச்சோம். பொஸ்தகம் கிடையாது. இப்பந்தான் அரசாங்கத்துல இருந்து என்னன்னவோ கொடுக்காங்களே. அந்த நேரத்துல என்ன உண்டு?



படிப்பகம்

www.padippakam.com

அப்பமும் படிக்க முடியல, இப்பமாவது படிக்கணும்னு பாத்தேன். அதும் முடியல. கரெக்டா ஒரு மாசம் படிச்சேன். அப்பந்தான் முதல் முதல இந்த பால் மாவு ஊத்துதாங்க பள்ளிக்கொடத்துல. அரசாங்கத்துலருந்து பால் மாவை கலக்கி ஊத்துவாங்க மத்தியானம் போல. ஒரு புள்ள எனகூட சேர்ந்த சிநேகிதி மூணாங்கிளாஸ படிப்பா. என்னை ஒண்ணாங் கிளாஸ்ல கொணடு போய வைசசிட்டாங்க. பொஸ்தகம் கிடையாது ஒண்ணுங கிடையாது. சும்மா அநத புள்ளகள பார்த்து ஆனா ஆவன்னான்னு படிச்சிட்டே இருப்போம். ஒரு மாசம் ஆனவுடனே அவ ஒரு கொலுசை தொலைச்சிட்டா. பள்ளிக்கூடத்துக்கு வேணான்ட்டாங்க. நானும் போவல. அம்மாமார் பள்ளிக்கொடத்துக்கு ஒரு வாரம் போயிருக்கேன்.

ஆமா அங்கேயும் போய் ரெண்டு பாடம் படிச்சிட்டு, கும்மிப் பாட்டு மாததிரம் படிச்சிட்டு... எங்கக்கா சடங்காயிட்டா, அதுக்கப்புறம் போவல. கல்யாணம் முடிச்ச பெறவுதான்... எங்க வீட்டுக்காரங்க படிச்ச ஏடு இருந்தது. என் கூட இனனொரு பிள்ளையும் சேர்ந்தா. அந்த ஏட்டை வைச்சி முதல்ல ஆனா ஆவன்னா சொல்லி படிச்சோம். அப்புறம் எங்க வீட்டுக்காரங்க ஒணணாங்கிளாஸ் புஸதகம் வாங்கிட்டு வந்தாங்க. ஒண்ணாங்கிளாஸ் புஸ்தகத்தை பீடித் தட்டுல வைச்சிட்டே படிச்சோம். பீடித்தட்ட தூரப்போடக் கூடாதே.

சின்ன வயசுலேயே, பத்து பன்னெண்டு வயசுலேயே பீடி சுத்த ஆரம்பிச்சேன். சொக்கலால் பீடிதானே. வேற எந்த பீடியும் கிடையாது. மடக்கு பீடி எதுவுமே கிடையாது அப்ப. பீடித்தட்ட வைசசிட்டே பொஸதகத்தையும் விரிச்சி வைசசிட்டே ஆனா ஆவன்னா படிச்சிட்டே பீடியும் சுத்திக்கிடுவோம். நைட்டுல எங்க வீட்டுக்காரங்க சொல்லிக் கொடுப்பாங்க. ஏறுக்குமாறா சொனனேன்னா மண்டையில ஒரு குட்டு குட்டி வைசசிடுவாங்க. குட்னவுடனே 'போங்க உங்க படிப்பப் பாருங்க, உங்களப் பாருங்க, குட்டாம சொல்லித் தந்தா என்னானனு?' கேட்டா, 'அது எப்படி?' அப்படினனு ரெண்டாந்தரம் குட்டுவாங்க. அப்புறம் நான் பேசாம படுத்துக்கிடுவேன். படிக்க மாட்டேன். படிசசா அரைகுறைப படிப்புதான. படிச்சுடலாம். பேப்பரை வாசிச்சறலாம்.

**அழுவுதேன்**
**அழுவுதேன்**
**அழுவுதேன்**
**அஞ்சுகோட்டை**
**கண்ணீர் அங்கன**
**வைச்சு அழுவுதேன்.**
**என் நிலமை**
**இப்படியாயிட்டே,**
**என்ன செய்ய**
**அப்படின்னுட்டு**
**அழுவுதேன்.**

சடங்காயி ரெண்டு வருஷங் கழிஞ்சி மூணாவது வருஷம். எங்க வீட்டுக்காரங்க வந்து ரொம்ப கஷ்டப் பட்டவங்க. அப்ப டேம்பு ஆரம்பிக்கு. அதுலதான் வேல பாக்காங்க. மாசம் அம்பது ரூபா சம்பளம்... அப்பத்தான் கல்யாணத்தை முடிச்சாங்க. கல்யாணத்தை முடிச்சி ஒரு அஞ்சு வருஷம் நல்லா இருந்தோம். மணிமுத்தாறுல எங்களுக்கு வீடெல்லாம் கொடுத்திருந்தாங்க. வீடு நல்ல வீடுதான். காலையில இட்லி காபிதான். எப்பவும் டிபன்தான். நல்லா இருந்தோம். சினிமா எந்தப் பக்கத்துல இருக்கோ அந்தப் பக்கம் போயிடுவோம்; சினிமா பார்க்கறதுக்கு. எங்க வீட்டுக்காரங்க நல்லா சினிமா விருப்பம் உள்ளவங்கதான். நான் பாட்டு படிச்சா கேட்டுகிட்டே இருப்பாங்க. எங்க போய்யிட்டு வந்தாலும் சந்தோஷமா இருக்கணும். 'பாட்டுப்படி முத்து' அப்படிம்பாங்க. நான் பாட்டுப் படிப்பேன். அப்புறம் ரெண்டு பேரும் சந்தோஷமா இருந்தோம். அதுக்கப்புறம் மணி முத்தாறு டேம்பு முடிஞ்சிடுச்சி. சீட்டைக் கையிலக் கொடுத்துட்டாங்க வேலயில்லைன்னு. சீட்டைக் கொடுத்தவுடனே ஒரு வாரம் ஒரே அழுகதான். என்ன செய்ய? இவ்வளவு நாளா கிளீனர் அப்படின்னு வண்டியில போவ இருந்துட்டு அதுக்கப்புறம் மம்பட்டியைத் தூக்கணும்னா. கூலி வேலைக்குத்தானே போகணும். நான் வேலை பார்த்ததே கிடையாது எங்க வீட்ல. வீட்டுக்கும் முத்தத்துக்கும் நடமாடறதுதான். அம்பது ரூவா சம்பளத்துல இருவது ரூவா மிச்சம் தேத்திடுவோம். அப்ப விலைவாசி கம்மிதானே. அப்ப ஒரு சேல ஏழு ரூவாதான. இப்ப எடுக்க முடியுமா? 'நீனாவது ஒரு வாரத்துக்கு கூலி வேலைக்குப் போ, போ முத்து. என்ன செய்ய? எனக்கு வெட்கமா இருக்கு. இவ்வளவு நாளா நான வணடியிலயே போயிட்டேன. இனிமே நான் எப்படி போவேன்? நீ ஒரு வாரம் போ.'

அப்ப.... முத நா போயாச்சி. பக்கத்து வீட்டு புள்ள கூட போயிட்டேன். போயி மணிமுத்தாறுல இந்த புல் வைக்காறங்கள்ல இந்த 'ஸ்லோப்' அதுலே போய் கீழும் மேலும் கீழும் மேலும் ஏறணும். ஏறணும் இறங்கணும். அந்தப் புல்லை எடுத்துக் கொடுக்கணும். பழையபடி எடுத்துட்டு வரணும். மண்ணள்ளி கொண்டு போய் போடணும். போட்டுப் போட்டு கால் ஆனக்கால் மாதிரி வீங்கிப் போயிடுத்து. அழுவுதேன் அழுவுதேன் அழுவுதேன் அஞ்சுகோட்டை கண்ணீர் அங்கன வைச்சு அழுவுதேன். என் நிலமை இப்படியாயிட்டே, என்ன செய்ய அப்படின்னுட்டு அழுவுதேன். என் கூட வந்த புள்ள என்னை கைநாத்துப பணணுதா, 'யக்கா நீங்க அழுவாதீங்க. இந்த வேலையை வுடறாதீங்க. உஙகளுக்கு இன்னும் ரெண்டு நாளைக்கு அப்படித்தான் இருக்கும். பிறவு ஒண்ணுமே செய்யாதுக்கா', அப்படின்னு கைபோட்டு என்ன கூப்பிடுதா. கால் எடுத்து வைக்க முடியல. வீட்ல வந்திருந்து அழுவுதேன். எங்க வீட்டுக்காரங்க என்னோடு சேர்ந்திருந்து அழுவுதாங்க. 'என்ன கடனதாலதானே நீ இவ்வளவு கஷ்டப்படறே முத்து. என்ன செய்யட்டும்', அப்படின்னுட்டு அவங்களும் கூட சேர்ந்து அழுதுகிட்டு... 'வெந்நீ போட்டு ஒத்துங்க' அப்படினனு பக்கத்து வீட்டு புள்ள போயிடுசசி. வெந்நீ துணியை வைச்சி ஒத்துதாக கால்ல.

பழையபடி அந்த புள்ள வந்து கூப்பிடுது. எனக்குப் போகவே இஷ்டமிலல. 'யககா... இதோட வுட்றாதீங்க, இப்ப இந்த நேரத்துல விட்டிங்கன்னா பழையபடி வேலைய பாத்துதானே ஆகணும். இன்னிக்கு மாத்திரம் கஷ்டமாயிருக்குன்னு விட்டுறாதீங்க. வந்துருங்க வலியோட வலியா. நாங்க மத்தியானத்துக்கப்புறம் உங்கள வேல பாக்கவிடாம கொஞ்சம் கொஞ்சம் இடையில நிண்ணு வாங்கிட்டு போறோம்,' அப்படின்னு சொல்லி அந்த புள்ள கூட்டிட்டுப் போயிருச்சி. கூட்டிட்டுப் போனவுடனே பழையபடி போயிட்டேன். போய் இப்படி மேலுங் கீழுங் இறங்காம இப்படி ஒரு தளத்துல நின்னு மண்ணு சுமக்கச் சொல்லி வைச்சிட்டாங்க. மண்ணை அந்தால பைய பைய சுமந்து கிட்டே... அழுதுகிட்டுதான். அழுகைதான் கண்ணை மிஞ்சுடுதே, கஷ்டம் வரும்போது கண்ணீர் வுந்துருதில்ல. கஷ்டமே இல்லாம இருந்துட்டு கஷ்டம் வரும்போது கண்ணீர் தானே முன்ன வருது. எப்படியெல்லாம் இருந்தோமே இப்டி கஷ்டம் வந்திரிச்சே அப்படின்னுட்டு.

எங்க வீட்டுக்காரங்க பிறவு கூலி வேலைக்கு எங்க டேம்புலயே வந்துட்டாங்க. ரெணடு பேருமே வேல பாத்தோம். அதுக்கப்புறம் ஒரு ஏழு வருஷம் போல வேல பாத்தோம். வேல பாத்துட்டு பழையபடி வீட்டுக்கு வந்தாச்சு.

இங்க வேல பாத்துட்டு இருக்கும் போதேதான் எங்கண்ணன்காரன் 'நீங்க வேல பாக்கறது எனக்கு கஷ்டமாருக்கு. நீ வா. உனக்கு ஏதாவது ஒரு வேல ஏதாவது கடை வைச்சுத் தாரேன்.' அப்ப நான் சொன்னேன். 'நம்ம போவேண்டா, நம்ம இங்கேயே இருப்போம் அத்தான். நம்ம அங்க போயி நம்ம பொருள வித்து செய்யவா, அந்த பொருள் இருந்தா ஒரு ஆபத்துக்கு நமக்கு உதவும். நம்ம போவேண்டா' அப்படின்னேன். எங்க வீட்டுக்காரங்க கேட்கல. எனக்கு அட்டியல் போட்டிருந்தாங்க கழுத்துக்குள. அஞ்சு களஞ்சி. அவங்க ஒரு வீடு கட்டினாங்க. அதுக்கு ஒரு கூரை வைக்க முடியல. மழை



படிப்பகம்

www.padippakam.com

வந்திட்டு. உடனே எங்கம்மா 'நீ அட்டியலை கொடும்மா உனக்கு அடுத்த மாசம் திருப்பிக் கொடுத்திடறேன்'ன்னு சொன்னவுடனே அட்டியலை கழட்டி அம்மா கையில கொடுத்திட்டேன். அம்மா என்ன செஞ்சிட்டா அண்ணன் கையில கொடுத்திட்டா. அண்ணன் என்ன செஞ்சிட்டான் அடகு வைக்கப் போறேன்னுட்டு வித்துட்டு வந்திட்டான். வித்துட்டு வந்துட்டு எங்களுக்கு ஒரு அம்பது ரூவாய்க்கு சாமான் வாங்கிக் கொடுத்தான். அப்ப அம்பது ரூவாய்க்கு சாமான் வாங்கனாத்தான் ரொம்பயே. உடனே அம்பது ரூவா சாமானை வெச்சி கடை வைக்க பண்ணிட்டான். கடை வச்சா ரெண்டு பேரும் கடையில இருந்தா என்ன வருமான்ம் வரும்? ஒருத்தரு கடையில இருந்தா அதுக்குரிய வருமானம் அப்ப கிடையாது. இருந்து இருந்து பாத்துட்டு கடைசி முடிவு கடையும் எடுபட்டுப் போச்சு. உடனே பீடி சுத்துதோம். எங்கே? முக்கூடலுக்கு. முக்கூடல் போனாக்க ஒரு ரூவா ஆறணா சம்பளம் பத்தும் பத்தும் இருபது மைல் நடக்கனும். கார் கிடையாது. அம்பாசமுத்திரத்தோட சரி, காருக்கு போவமும் மாட்டேன். கோழி கூப்பிட எந்திரிச்சி போனோம்னா கரெக்டா ஒம்பது மணிக்கு அச்சாபீஸுக்கு போயிடுவோம். அதுக்கு முன்னால ஒரு இடத்துல, ஆத்துப் பக்கத்துல இறக்கி வச்சு சாப்பாடு கட்டிக் கொண்டு போறதில கொஞ்சம் சாப்பிட்டு தண்ணியை குடிச்சிட்டு பழையபடி பெட்டியைத் தூக்கிட்டு போயிடுவோம். பழையபடி அங்கிருந்து. நாலு ரூவா இருபது பைசா தருவாங்க முன்னூறு வண்டலுக்கு. இருபது பைசான்னா ரெண்டணா. அப்ப பைசால்லாம் கிடையாதே. ரெண்டணா தந்தா அதக் கொண்டு வந்து அச்சாபீஸ் பக்கத்துல முறுக்குக்கடை வைச்சிருப்பாங்க. அந்த முறுக்கு இவ்வளவு அகலம் இருக்கும். உள்ளங்கை அகலம் நல்லா நெருங்க இருக்கும். ரெண்டணா கொடுத்தா நாலு முறுக்குத் தருவாங்க. அந்த நாலு முறுக்குல ரெண்டு முறுக்கை நான் சாப்பிட்டுருவேன். அந்தச் சோத்தையும் அங்கன இருக்க எல்லோருமா சாப்பிடுவோம். மரத்து நிணல்ல இருந்து சாப்பிட்டு அந்த ரெண்டு முறுக்கையும் எங்க வீட்டுக் காரங்களுக்கு வைச்சிக்கிடுவேன். வைச்சிக்கிட்டு பேசாம நாங்க பாட்டுக்கு நடவதான். இருபதுக்குக் கொறையாம போவோம். சில ஆட்க வண்டி கொண்டு வருவாங்க, அந்த வண்டியில இந்துப் பெட்டியை வைச்சிக்கிட்டான்னா, சில ஆட்க வைச்சிக்கிடுங்கம்பான்; சிலவன் வைக்கவிட மாட்டான். அப்படியா நடந்து வருவோம். எங்க வீட்டுக் காரங்க வருவாங்க. இந்த பங்களா இருக்குல அது பக்கத்துல வந்துருவாங்க. ஒரு கட்டு முன்னூறு வண்டலு அப்ப. பெரிய கட்டு பிரஸ் கட்டு. இந்த முறுக்கு வைச்சிருப்பேன்ல அந்த முறுக்க ரெண்டையும் கொடுப்பேன். கடிச்சி தின்னுட்டு நடந்துகிட்டே வருவாக. சில அன்னக்கி விறகு சுமக்க போவாங்க; சில அன்னக்கி போவமாட்டாங்க. நான் அந்த நாலு ரூவாயைக் கொண்டாந்து மூணு ரூவாய்க்கு அரிசி பருப்பு எண்ணெய் எல்லாம் நாலணா நாலணாவுக்கு இப்படியா வாங்கிக் கிடலாம். அப்ப ஒரு ரூவாய்க்கு ஒரு பக்கா அரிசியும் ஒரு காப்படியும் போடுவான். அப்ப ஒண்ணேமுக்கால் பக்காவாச்சு. வாங்கிப் போட்டு ஒரு வாரத்துக்கு சமாளிச்சுருவோம். பழையபடி மறு வாரம் போய் வாங்கிட்டு வருந்தட்டி எல்லாம் இருக்கும். எங்க வீட்டுக்காரங்க இடையில ஏதாவது ரெண்டு நாளைக்கு விறவுக்குப் போனா அந்த துட்டை வைச்சி சினிமாவுக்கு எங்கயாவது போய்க்கிடறது. அதுக்கப்புறம் அது முடிஞ்சுது.

நாங்க மணிமுத்தாறுல இருக்கும் போது எங்களுக்குத் தெரிஞ்சவரு, இன்ன இடத்துல டேம் ஆரம்பிக்கிறாங்களாம், சம்பளம் நிறைய கொடுக்காங்களாம், ஒரு ஆளுக்கு அஞ்சு ரூவா... அஞ்சு ரூவான்னா பெரிய சம்பளம் அப்ப... நீ வாடேன்னு எங்க வீட்டுக்காரங்களை வந்து கூப்பிட்டாரு. எங்கம்மா என்னை போவ வேண்டாங்கா. நீ போவ வேண்டாம்மா, அங்க முத முத எப்படி எப்படியெல்லாம் இருக்கோ, நீ போவ வேண்டாம் அப்படின்னா. எங்க வீட்டுக்காரங்க என்ன சொல்லுதாங்கன்னா 'நீ வராம நான் எப்டி போவேன் முத்து. பொம்பளைய கூட்டிட்டு போனாலும் ஒரு இடத்துல திரணையிலாவது படுத்துக் கிடலாம்; அப்போ பொம்பளை இருக்கா அப்படின்னு சொல்லி எரக்கப்பட்டு இடங் கொடுப்பாங்க. ஆம்பளைக்கு யாா் இடங் கொடுப்பா? அதனால நீ இல்லேன்னா நான் வரவே மாட்டேன். எத்தன நாளைக்குத்தான் உங்கண்ணன் கைய எதிர்பார்த்து உங்கம்மா கைய எதிர்பார்த்து சாப்பிடறது? நமக்குன்னு நாம தனிய உழைச்சி சாப்பிடணும். வா' அப்படின்னு கூப்பிடுதாங்க. நான் வாரேங்கேன், ஒரு தரம் வரலங்கேன். இப்படியா யோசனையில இருக்கு. அந்தவுடனே சினிமாவுக்கு வான்னு கூட்டிட்டுப் போயிட்டாங்க. சினிமாவுக்குப் போவ போவ போதை ஏத்துதாங்க எனக்கு. அப்படின்னு இப்படின்னு சொல்லி கடைசில நான் ஒத்துகிட்டேன். 'சரி வாரேன்' அப்படின்னு சொல்லியாச்சி.

ஆளியார் டேம்பு, பொள்ளாச்சி பக்கத்துல. இங்கயிருந்து கோயமுத்தூருக்கு எட்டு ரூவா சார்ஜ்சு எங்களுக்கு. கல்டகுறிச்சியிலிருந்து வண்டியேறி போயாச்சு. அவரு டிக்கட வக்கிறதுக்கு எல்லாம் கொண்டு வாராரு... அவரு டிக்கடதான் வப்பாரு. அதான் எங்களுக்கு ரூவா போட்டு கூட்டிட்டு போறாரு. கூட்டிட்டுப் போனா எங்கண்ணன், இந்த அட்டியல வித்தானே எங்களுக்கு தெரியாம, அட்டியல வித்து அவன் ரெண்டாள கூட்டிக்கிட்டு வாறான். எங்களுக்கு ரூவா போடல எங்கண்ணங்காரன்... மோசஞ் செஞ்சவன். அங்க வந்து, இந்த திருநேலில வந்து வண்டி இருக்கோம். அவங்களும் அதே வண்டிக்குள்ள வந்து சேர்றாங்க. பொள்ளாச்சில போய் எறங்கி... வண்டிகக வாறம்... ரெண்டு பேரு காதல்ல வந்துட்டாங்க, பொண்ணும் மாப்ளயும். அவங்களும் எங்ககூடவே வந்து சேந்துட்டாங்க. யாருமே அங்க போனது கிடையாது. எடத்தையும் பாக்கல ஒண்ணும் பாக்கல. 'இந்த எடத்துலதான் டேம்பு ஆரம்பிக்கப் போறாங்கய்யா... நீ இந்த எடத்துல எறங்கு' அப்டீன்னு டிரைவர் சொன்னான்... இந்த க்ளீனர் சொன்னான். இவுங்க சொல்லுதாங்க 'என்ன பெரம்பிகுளம்னு சொன்னா மலையா இருக்கும்னு சொன்னாங்க, மலைக்குள்ள இருக்கும்னு சொன்னாங்க, நீ மொட்டத் தரையில எறக்கிவிடப் பாக்கியே, அதெல்லாமில்ல. நாங்க அங்கதான் போகணும்' அப்டீன்னுட்டாங்க.

அந்த ஒடனே எஸ்டேட்டு பக்கம் வால்பாற. அதுகக மேல மல. அந்தச் சரிவுல கொண்டு எறக்கிவுட்டுட்டான். அஞ்சு மைலுக்கு அந்தப் பக்கம் எறக்கிவுட்டுட்டான். அட கடவுளே, அந்த எடத்துல, அவர் சொன்ன இடத்துல எறங்கியிருந்தா இவ்வளவு வேணுமா? கடேசியா நடப்பம்... விதியோ விதின்னு. மழ ஜோன்னு கொட்டோ கொட்டுன்னு கொட்டுது. நெருஞ்சி முள்ளு படந்து படந்து கெடக்குது. நெருஞ்சி முள்ளு கால்ல குத்தது கூட எங்களுக்கு ஒணர்வில்ல.... போறம்... கண்ணீரு ஒரு பக்கம் வடியுது. பசீன்னா தாங்க முடியல... பசி... யாரு வீட்ல போயி என்ன சாப்ட? எங்ன போயி கேக்க? எந்த வீட்ல குத்த வகக? யாரத் தெரியும் நம்மளுக்கு? மணி என்ன ஆயிட்டு, ஏழு மணி ஆயிட்டு. ஏழு மணிக்கு தடந்தெரியுமா? தடமும் தெரியல தெசையும் தெரியல. நாங்க பாட்டுக்கு போறம். எந்தப் பக்கம் கொஞ்சம் ஒளி தெரியிதோ அந்த நேருக்குப் போறம். அங்க ஆளு இருப்பாங்கன்னு போறம்... அஞ்சு மைலுல்ல, அஞ்சு மைலுக்கு அந்தப் பக்கம் கொணடுல்ல விட்டுட்டு போய்ட்டான். அவம் மரியாதையா சொன்னா நம்ப கேக்கணுமில்ல. கேக்கலண்ணா....அதான்...

எங்கள கொண்டு ஓரத்துல வச்சிருக்காங்க. இந்த குளுவச்சி... நரி குளுவங்க குடிச போட்டுககிட்டு இருப் பாங்களே, அதுபோல பெட்டி சட்டி எல்லாம் வச்சுக்கிட்டு இட்ட கொரங்கு மாதிரி குத்த வச்சுக்கிட்டு இருக்கம். ஆளுந் தெரியாது, பேருந தெரியாது. ஒருத்தரும் தெரியாது. பேசாம இருக்கோம். வாரவுங்கள்லாம் பாத்துட்டு பாத்துட்டு



படிப்பகம்

www.padippakam.com

போறாங்க. எங்கள கூட்டிட்டு போனாரே தேவரு, ஒரு வீட்ட கண்டுபுடிச்சு வந்துட்டாரு. பொட்டலம் வக்கத்தான் அந்த வீடு எடம் இருக்கு. குடிச தான, பெரிய வீடு ஒண்ணும் கெடையாதே. அந்த பொட்டணத்த கொண்டு பாதுகாப்பா வச்சாச்சு. சமையல் பண்ணியாச்சு. சமையல் பண்ணி, ஒரே சாம்பார்தான். அதுல வேற தொட்டுக்கிட கிட்டுக்கிட ஒண்ணுங் கெடையாது. எல்லாத்துக்கும் ஊத்தியாச்சு. சாப்டாச்சு. சாப்டுட்டு படுக்கணுமே, பதிமூணு பேரும்... எங்க படுக்கதுக்கு எடம் இருக்கு (சிரிப்பு). முழிச்சிக்கிட்டே இருக்கோம். அந்தால ஒரு ஆளு சொல்லிச்சுது இந்த மாதிரி ஒரு காண்டரக்குகாரங்க ரூம்பு ஒண்ணு மறிச்சு போட்ருக்காங்க. நீங்க போயி அதுல போயி படுங்க. காலையில் எந்திரிச்சி வேல எங்கயாவது இருக்கான்னு பாக்கலாம்னு சொல்லிட்டாங்க.

ஒடனே சரின்னு அவ்வளவு பேரும் போய் படுத்தாச்சு. ஒரு ரூம்புக்கு நாலு பேரு அஞ்சு பேருன்னு போய் படுத்தாச்சு. கரீக்கிட்டா பன்னிரெண்டு மணி. நைட்ல, பன்னெண்டு மணி இருக்கும்... நம்ம மணியா வச்சிருக்கம் அபபம் பாக்க?

அடிச்சது பாரு மழ். ஆன தும்பிக்கை மாதிரி மழ பெய்யிது. அவ்ளோவ் பெரிய மழ.

கடேசில எங்களுக்கு தெசையும் தெரியல, எந்தப் பக்கம் ஆறு இருக்குது, எந்தப் பக்கம் நம்மளுக்கு வீடு இருக்குன்னு தெரியல.

இருட்டு! தடதடதடங்குது!

அந்த வெளிச்சத்துல பாத்தா வெள்ளமாட்டம் தெரியுது. நாங்க ரூமுக்குள்ள நிக்கோம்!

அந்த படுத்திருந்த ரூமுக்குள்ள இவ்வளவு தண்ணி. வச்சிருந்ததுணியெல்லாம் நனஞ்சு போச்சு. தொப்பல் விட்டு போயிருக்கோம். கையி காலெல்லாம் அப்டியே வெறைக்கிது. அப்டியே இருக்கு... எங்க அண்ணஞ் சொன்னான்: ஆத்துக்குள்ளதான் நிக்கோம். வீட்டுக்குள்ள நிக்கம்னு நெனக்காத நீ. ஏல, எல்லாவுங்களும் ஒண்ணு போல சங்கிலி கோர்த்தால கோருங்களே கையிகள, வெள்ளம் அடிச்சிரக் கூடாது' அப்டீன்னுட்டு சங்கிலி போட்டாச்சு. கொருத்தாச்சி எல்லாரும். (சிரிப்பு) சங்கிலியைத் கொருத்து நிக்கோம்... இந்த ஓட்டனங்க பூராவும் மம்பட்டியும் சம்மட்டியும் துக்கிட்டு ஓட்டமா ஓடியாந்தாங்க. வந்து அணை கட்டுதாங்க. தண்ணி வீட்டுக்குள போவுதுல அதுக்கு அணை கட்டுதாங்க. அந்தால 'ஏப்ப இவ்வளவு பேரையும் பாத்துகிட்டு நிக்கற. அட இங்க வந்து கொஞ்சம் தள்ளுடா. தள்ளேன்டா...' அப்படிங்கான். 'இவ என்னடா பேப்பயலா இருக்கான். நாங்கள்ளாங் விறைச்சி போய் கையி காலெல்லாம் நடுங்கிப் போய் நிக்கோம்.' அப்படின்னு இவங்க போல்ல. 'ஏய் என்ன கல்லாட்டம் நிக்கற. போய் தண்ணியைப் போய்த் தள்ளுடா' அப்படிங்கறான். 'அட சும்மா கிட' அப்படின்னு இவங்க சண்டை போடுதாங்க. அந்தானக்கி, கிடக்க குச்சி கூளமெல்லாம் பூரா கால்கள்ல வந்து அடிக்கி. படுத்திருந்த இடத்துல இவ்வளவு தண்ணி. முட்டுக்குச் சரியா சுவர் வைச்சிருக்காங்க. எல்லாம் அள்ளிட்டுப் போயிட்டு மழை. அந்த வெள்ளம் பூரா மேல வந்து அடிக்கு. ஆறு எந்த பக்கங்கிடக்கு? எங்களுக்கு மேல கிடக்க ஆறு. 'ஆத்துக்குள்ள நிக்கோம். கட்டைகளும் கிட்டைகளும் வந்து அடிக்கு நம்மள' அப்படிங்கான் எங்கண்ணன் (சிரிப்பு). கடைசி இப்படி வைச்ச கைய எடுக்க முடியல. விறைக்கி. ரெண்டு மணி நேரம் நின்னுருக்கோம் தண்ணிக்குள்ள. அந்தால ஒரு ஆளு சொல்லிச்சுது 'ஐயோ பாவம் எந்த தேசத்துக்காரங்களோ எந்த ஊர்க்காரங்களோ அநாதையா வந்து நிக்காங்க. படுக்க இடமில்லாம இங்க தண்ணிக்குள்ள நிககாஙகளே. அவங்கள போயி அணைபோடுனனு சொலலு தாங்களேய்யா!' ஒடனே எங்களுககு அழுவையா வருது. ஒரு ஆள் சொல்லும் 'தம்பி இனனககி மழை வெறிச சிக்கிடாது. நீங்க இப்படி போஙக. கெழகக வநது டிபார்ட்டுமணட் வீடு கட்டிப் போட்டுருக்காங்க. பெரிய பெரிய வீடு. சிமெண்டு ஓடு. அதனால உங்களுக்கு எப்படியும் கொஞ்சம் பாதுகாப்பா ராத்திரி மட்டுமாவது இருந்திரலாம்'. அந்தவுடனே அவ்வளவு பேரும் பைய பைய பொறப்படறோம். பொறப்பட்டு அந்த இடி இடிக்குமலா அபப வெளிச்சம் அடிக்கும்ல அப்ப விறுவிறுவிறுன்னு போவோம நாங்க. அந்தால அந்த இருட்டு வநதவுடனே நின்னுக்கிடறது. அதுலேயே. பழையபடி இடி இடிககையில ஒடுறது. இப்படியே ஒரு மைல் நடந்திருக்கோம். தீப்பெட்டிய உரசிப் பாககணுமனா ஒனனுமிலல. தீப்பெட்டியெல்லாம் நனைஞ்சு போசசு. இங்கிருந்து தடவி தடவி தடவிப் போறோம். போயி.. வெளிச்சத்துலத் தெரியுது வெளோன்னு. அங்கயாத்தான் இருக்கும் அப்படின்னு நினைச்சிட்டு போறோம். போய்ட்டோம். வீட்டைப் போய்ப் பார்த்தோம். தலைவிதியைப் பாருங்க, அங்கயாவது நமம நிம்மதியா நம்மளுக்கு இருக்கதுக்கு இடம் இருநததானனு பாருங்க! சிமென்ட்டு போட்டு தண்ணி ஊத்திக் கிடக்கு. எப்படியிருக்கும்! விடிய விடிய நட்டமா நின்னுருககோம். ரெணடு மணி நேரமா. அட கடவுளே, இன்னிககு நமககு கொடுத்து வைச்சது இவ்வளவுதான. அப்படினனுட்டு விடிய விடிய விடியகணலதான விடிஞ்சுது. விடிஞ்ச பெறவு எங்கள அதுலேயே நிக்கச் சொலலிட்டு 'பொம்பளக எல்லாம் நீங்க இதுல இருஙக. வேலை எங்கயாவது இருக்கா, சாப்பாட்டுககு ஏதாவது வழி இருக்கா அப்படின்னு. பார்த்துட்டு வாறோம்' அப்படின்னு. சொல்லிப் பார்த்துட்டு அரிசி எல்லாம் வாங்கிட்டு வந்தாங்க. அன்னைக்கி





படிப்பகம்

www.padippakam.com

எங்க வீட்டுக்காரங்களுக்கு வந்து நல்லா சந்தோஷமா எப்பமும் சிரிச்சிகிட்டு இருக்கணும். நம்ம கவலய, கஷ்டத்த வந்து வெளிய காமிக்க கூடாதும்பாங்க. வெற கட்டு சொமந்துகிட்டு வெளிய வந்தாலும் நல்லா ஸ்டைலாதான போவணும்பாவ.

அவரு வந்து கலர் ரொம்ப கம்மி. கருகருன்னு டாரு டப்பாதான். எங்கக்காதான் சொல்லுவா டாரு டப்பாவ புடிச்சேன் அப்டீம்பா, அதுபோல. அப்ப கல்யாணம் முடிஞ்சு போயிருக்கம். எங்க பக்கத்து வீட்லயிருந்து ஒரு ஆளு கேக்குது, 'உம் புருஷன் எது?' அப்டீன்னு கேட்டுது. 'இதான் என் வீட்டுக்காரங்க' அப்டீன்னேன். 'உண்மய சொல்லு, இது ஒம்புருஷனா?' 'ஆமா, இதுதான் எம்புருஷன்' அப்டீன்னேன். 'இல்லியே... ஒனக்கும் அவனுக்கும் எவ்ளவோ வித்தியாசம் இருக்கே. ஒன்னய கூட்டிட்டு வந்திருப்பான் 'அப்டித்தான் நெனக்கேன்' அப்டீங்கா.

'சும்மா கெடம்மா... கூட்டிக்கிட்டு எதுக்கு வரணும்? எங்க வீட்ல நாஞ் செல்லப்புள்ள. அவுங்க வீட்ல் அவுங்க செல்லப் புள்ள. அதனால எங்கள சின்ன வயசிலே கல்யாணம் முடிச்சு வச்சுட்டாங்க.'

'ஆங்... அப்டி சொல்லு... அப்டி இருக்கும்' (சிரிப்பு) அப்டீன்னு சொல்லுதா அந்த பக்கத்து வீட்டு பொம்புள. அப்ப அந்த எடத்தவிட்டு இன்னோரு எடத்துக்கு வரம் நாங்க. ஒரு வீட்ல வந்து வாடகக்கி இருந்தம். வாடகக்கி இருந்தா எங்க வீட்டுக்காரங்களுக்கு டிபாட்டுமெண்டுல வேல கெடச்சிட்டு. டிபாட்டுமெண்டுனா ஒண்ணே கால் ரூவா சம்பளம. இருந்திருந்து கொஞ்சம் கூடியிருக்கு. சும்மா ஒரு காட்டுப்பொறத்துல போயி காத்துக் கெடக்கணும். அதுக்கு ஒண்ணே கால் ரூவா சம்பளம் கொடுப்பான். அத வாங்கிட்டிருந்தோம்.

அந்த ஊர்ல நம்ப ஊரப்போல வேலகளுக்கு பொம்ளைகள்லாம் போக வேண்டிய சோலியே இல்ல. இப்ப நாலு பேரு இருக்காங்க, சமச்சுப் போட்டா அந்த நாலு பேரும் சம்பளம் குடுத்துருவாங்க. நம்ப சம்பளமும் அதுலே பாத்துர்லாம். அப்டித்தான் வீட்டுக்கு வீடு நடக்கு அந்த ஊர்ல.

அதுக்கப்புறம் நெறைய்ய டேம்புகள் காண்ட்ரக்டு எடுத்து நடக்குது. நெறைய்ய வேல. வேல பாக்கத்தான் காலும் கையும் தெடனும் வேணும். நல்ல வேல எல்லாப் பககமும்.

திருநவேலின்னா வேலயே குடுக்க மாட்டான். 'எந்த ஊரு?' அப்டீன்னு சொன்னா 'எங்களுக்கு திருநவேலி.'

நம்ம பேச்ச பாத்தவொன்னே சொல்லிருவான். அவுங்க இழுத்திழுத்து பேசுதாங்கள, நம்ம பேச்ச பாத்தவொன்ன

'ஒங்க ஊரு?'

'எங்களுக்கு திருநவேலி'

'வேலயில்ல நீ போ!'

மல்லுகட்டி அங்குனே நின்னு சாதிச்சு அந்த டேம்புல காண்டரக்டுகாரங்கிட்ட வேல பாத்தோம். வேல பாத்துட்டு அதுக்கப்புறம் அந்த எடத்த விட்டு அடுத்த எடத்துக்கு வந்தோம். வந்த பெறவு கொஞ்சம் கஷ்டம் ஒஞ்சுட்டு. நல்லா ஜாலியா இருந்தோம். என்னென்ன நம்ம நெனக்கமோ, எங்க வீட்ல எதுஎது எங்கம்மா எனக்கு வாங்கிக் குடுக்கலியோ அதெல்லாம் எம் புருஷன் எனக்கு வாங்கிக் குடுத்தாங்க. என்ன என்ன தேவையோ, நம்ம கேக்கவே வேண்டா. எங்கம்மாவுக்கு பொரிகடல தவிர வேற எதுவுமே தெரியாது. எங்க வீட்ல நா இருக்கும் போது, பொரிகடலதான். மில்லுல சம்பளம் போட்டா பொரிகடல ஒண்ணுதான் வாங்கிட்டு வருவா. வேற எந்தப் பண்டமும் அவளுக்கு தெரியவே செய்யாது. புள்ளைக இல்லையா.... ரெண்டுவேரும் ஜாலிதான். ஜாலியா இருந்து நல்லபடியா இருந்தோம். இருந்துட்டு அதுக்கப்புறம் எனக்கு... அஞ்சு வேரு கொழந்தயில்லாம இருந்துல, அதுல மொதல்ல நாந்தான் கொழந்த உண்டாகியிருக்கேன். கொழந்த உண்டானவுன்ன என்ன வக்க எடமில்ல. ஆம்பளயாளு, பொம்பளயாளுங்க எல்லாஞ் சேந்து ஒரு நாளக்கி ஒரு சோறு பொங்கியாந்து தருவாங்க எனக்கு. அவுங்களுக்கெல்லாம் கொழந்தையில்ல. மொத மொத இவுங்களுக்கு கொழந்தையிருக்கே அப்டீன்னு ஆம்பளயாளும் சோறு பொங்கியாநது தருவாங்க. பொம்பளயாளும் சோறு பொங்கியாந்து தருவாங்க. எனக்கு ஒரு ஆறு மாசம் பொறந்தது. எங்க வீட்டுக்காரங்களுக்கு வைசூரி கண்டுட்டு. வைசூரி கண்டவொன்ன இவுங்களுக்கு ஒம்போதுநாள் காச்ச அடிச்சிருக்கு. காச்சஅடிச்சி அதுக்கப்புறம் அம்மமங்கண்டுட்டு. அந்த ஊர்ல அம்மங் கண்டா ரொம்ப பயப்படுதாங்க. மொகத்துல முழிக்கக் கூடாதுங்காங்க. இப்ப நம்ம ஊர்லயெல்லாம் அப்படியில்ல, நம்ம பாட்டுக்கு போவம் வருவோம். அந்த ஊர்ல வந்து மொகத்துலே முழிக்கக் கூடாது. வேற எதுவுமே குடுக்க கூடாதாம். தயிரு மாத்தரந்தான் குடுக்கணுமாம். உப்பு போடாமா குடுக்கணுமாம். அப்ப இப்டியெல்லாம் பக்கத்து வீட்ல சொல்லுதாங்க. இப்டி குடு அப்டி குடுக்காத அப்டீன்னு சொல்லுதாங்க.

எங்க வீட்ல சொல்லுவாங்க 'ஏ முத்து, அவுங்க சொல்லீட்டு கெடக்காங்க. உப்பு போடாம எப்டி சாப்ட முடியும் வயரார. நம்ம ஊர்ல இப்டியா செய்வாங்க? நம்ம ஊர்படியே நீ செய்யி' அப்டீன்னாங்க. அப்பறம் கொஞ்சம் உப்புப் போட்டு பெசுஞ்சு... கையில எல்லாம் ஒரே முத்துதான். எலய போட்டு சோத்த அள்ளித்தான் குடுக்கணும். அள்ளி குடுத்து அதுக்கப்புறம் சாப்டுவா. வெளிய போறது கூட... வெளியபோக முடியலேன்னுட்டாங்க. அப்டி கஷ்டப்பட்டு ஒரு இருவது நாள் வரைக்கும் ரெண்டு பேருமே வேலக்கி போ முடியல. எனக்கு ஆறு மாசம் ஆயிட்டா, எனக்கும் வேலக்கி போ முடியல. அதுக்கப்புறம் இவுங்க என்ன செய்தாங்க, 'ஓட்னே நம்ம வீட்டுக்கு போகணும், இனிமே நம்ம இருக்க கூடாது. நீயும் வேலக்கி போ முடியாது. நானும் வேலக்கி போ முடியாது. என்ன செய்வோம், இந்த எடத்துல?' அப்டீன்னுட்டு அதுக்கப்புறம் கூட்டிட்டு வந்தாச்சு இங்க. இங்க கூட்டிட்டு வந்து, ஒரு ஆறு மாசம் வரைக்கும் எங்க வீட்டுக்காரங்க வேலக்கி போகல. அவுங்கம்மா மில்லு வேல பாத்தது. அவுங்க வேல பாத்ததுனால ரெண்டு பேருமே இருந்துக்கிட்டோம்.

அதுக்கப்புறம் ஐஸ் யாவாரம் பாத்தாக எங்க வீட்டுக்காரங்க. ஐஸ் யாவாரம் பாத்து கூடட்ற வேலக்கி போயி, வெறக கெட்டு சொமந்து, மில்லுக்குள போயி காண்ட்ராக்டுல வேல பாத்தாக. அப்ப சம்பளம் எவ்வளவு ரூவா? மூணு ரூவா.

நாங்க போயி கொஞ்ச நாள்ல எங்க அத்த ரிட்டேடு ஆயிட்டாங்க. அவுங்களுக்கு காலு வாதம் மாதிரி வந்தவொன்ன வேலய எழுதிக் குடுத்திட்டாங்க. கிராஜிட்ல.

எங்கத்தே வேல பாத்த ரூவாய வச்சு சொந்த எடம் எடுத்துப்புட்டோம். சொந்த எடம் எடுத்து ஒரு வீடு கட்டியாச்சு. அண்ணனுக்கும் தம்பிக்கும் ஒரே வீடு கட்டி ரெண்டுவேரும் அந்த வீட்லே இருக்கோம். ஏங்கொழுந்தனுக்கு கல்யாணம் முடிக்கல. எல்லாம் குடும்பமா ஒண்ணாத்தான் இருக்கோம்.

பெறவு ஏங்கொழுந்தனுக்கு கல்யாணம் முடிஞ்சது. கல்யாணம் முடிஞ்சவொன்ன அவனுக்கு தனீ வீடு வச்சாச்சு. அந்த ஒரே வீட்டத்தான். பக்கத்துல எடுக்கதுக்கு வழி கெடையாது. ரூவாயில்ல. அதுக்காக ஒரே வீட்ல நடு சென்டர்ல செவுரு வச்சு அவன் அந்தப் பக்கம் நாங்க இந்தப் பக்கம் இருந்துகிட்டோம்.

அவுங்க இதுல அத நெனக்கவேயில்ல. செரி. நம்ம சும்மா காண்ட்ரக்டுல வேல பாப்போம். எப்டி எப்டி ஆவுதோ அப்டீன்னுட்டு வேல பாத்துகிட்டு இருக்கும்போது ஒரு ஆளு சொல்லிருக்கு, 'இப்ப ஆளு எடுக்காங்க, உங்க அம்மா (எங்க அத்த) நாப்பது வருஷம் வேல பாத்து இருக்காங்க மில்லுல. ஒன்னே ஒங்கம்மா வந்து கிராஜிட்டுதான போட்ருக்கு, நீயும் போயி எழுதிக்குடேன்' அப்டீன்னு சொல்லிருக்கு ஒரு ஆளு.



படிப்பகம்

www.padippakam.com

ஒன்னே எங்க வீட்ல சொல்லிருக்காங்க. 'எங்கம்மா கிராஜிட்டு. எப்டி எனக்கு வேல தருவாங்க?' அப்டீன்னு கேட்ருக்காங்க. 'சரி கெடச்சா கெடக்கி, கெடக்காட்டா போவுது, நீயும் போயி ஆளோட பேரக்குடேன்' அப்டீன்னு சொன்ன ஒன்ன இவுக பேர குடுத்திட்டாவ. பேரக் குடுத்துட்டு அன்னிக்க வேல' பாக்கல. மறுநாளு அவுங்க போயி வேலக்கி நின்னிருக்காங்க. நா சண்ட போடுதேன். 'ஓங்களுக்கு எங்க வேல கெடைக்கும்? ஓங்கம்மா கிராஜிட்டு போட்டவுக. ஓங்களுக்கு எப்டி வேல கெடைக்கும்? இந்த மூணு ரூவா சம்பளத்தையும் கெடுத்துட்டு இருக்கயளேன்னு ரெண்டு வேரும் சண்ட போட்டுட்டு' இருக்கோம். சரி பாப்போம். எத்தன இதோ போவுது அதுல இதுவும் போவுது. என்ன செய்ய அப்டீன்னுட்டு போயி மறுநாளு போயி இருக்காங்க.

மொதல்ல பேரு குடுத்தாச்சாம். கரெக்டா குடுத்துருக்காவ. மொதல்ல கேட்ருக்காங்க. 'என்ன நீ ரெண்டாம் தாரத்து புள்ளையா மொத தாரத்து பிள்ளையா, ஓங்கம்மா ஒனக்கு ஒத்தையிலயா? ஓங்கப்பாவுக்கு ரெண்டு பொண்டாட்டியா மூணு பொண்டிடாட்டியா' அப்டீன்லாம் கேட்ருக்காக. இல்ல எங்கம்மா ஒரே ஆளுதான், நாங்க ரெண்டு ஆம்புள அப்டீன்னு இவுக எல்லாஞ் சொல்லி பேரு குடுத்துருக்காவ. எவ்வளவுருவா வாங்குனாவ ஓங்கம்மா அப்டீன்லாம் கேட்டுக்காங்க. இவுக கரெக்டா சொல்லிருக்காவ. இத்தன ரூவா கிராஜிட்டு, இத்தன ரூவா பிராவிடன்பண்டு வந்தது அப்டீன்னு சொல்லிருக்காங்க. எல்லாம் எழுதிக்கிட்டாக. மறுநாளு போயி நிக்காங்களாம். எங்க வீட்டுக்காரங்க ரொம்ப வளத்தியா இருக்க மாட்டாங்க. கட்டதான். ஒல்லிதான். கூட்டம் பின்னால நிக்கிதாம். ஐநூறு ஆளு நிக்கிதாம். இவுக பெறத்த போயி ஒரு பாலத்து மேல உட்காந்திருக்காவ. 'இவ்ளோவ பேரு நிக்காவ. நம்மம்மா கிராஜிட்டு, நம்மளுக்கு எங்க வேல கெடைக்கும் மில்லுல' அப்டீன்னுட்டு பீடி குடிச்சிட்டே இருக்காவ. அந்த ஒன்ன ரெண்டு ஆளு சொல்லி... மூணு ஆளு எடுத்துருக்கான். நாலாவது ஆளா அவுகள கூப்புட்ருக்கான். சொரணம் மவன் மாடசாமியின்னு. நூறு ஆளுக்கு இந்தப் பக்கம் நின்னுகிட்டு கைய ஒசத்திருக்காக 'ஸார்.... நான் இங்க இருக்கேன் ஸார்...அப்டீன்னுட்டு' (சிரிப்பு)

வேலக்கி போயாச்சு. வேலக்கி போனவொன்ன என்னெல்லாம் செக் பண்ணுதாங்களோ, அங்கல்ல போயி பாஸ் பண்ணனும். நம்ப டாக்டரு இந்த கொட(விலா) பக்கத்துல நாலு வெரல வச்சு இடிச்சு பாத்தாக. 'என்னய்யா ஒரே எலும்பா இருக்கே?' அப்டீன்னு கேட்டானாம் டாக்டரு. 'இல்ல சார் எம் பாடியே வீக்குதான்' அப்டீன்னாகளாம். 'சரிசரி போ' அப்டீன்னுட்டானாம். வேலக்கி போய்ட்டு சீட்டு வாங்கிட்டு வாறாக அன்னைக்கு. அதுப்புறம் வந்து சொன்னாக 'நீ சண்ட போட்டால்ல, எப்படி எங்க அம்மானால எனக்கு கெடச்சுடுச்சு' அப்படீன்னு வேலக்கி போறாக. வேலக்கிபோய் சேர்ந்தாக. நல்லா இருந்தோம். இந்தக் கொழந்த... இந்தப்புள்ள எனக்கு எறந்து போச்சு... இந்த ஒம்போது வருஷம் கழிச்சி பொறந்துதே அந்தப்பயன் எறந்துபோச்சு. அதுக்கப்புறம் வந்து... கொழந்த பெறக்க பெறக்க... எட்டு மாசம் ஆனவொன்ன கொழந்த பொறந்துரும். எட்டுமாசம்... ஒம்போது மாசம்... நெலக்கவே செய்யாது, வயித்துலயே நெலக்காது, அப்டியே பொறந்துரும். அதுல வேற எங்களுக்கு ரொம்ப கவல. இல்லாம இருந்துட்டா ஒண்ணுமில்ல. இருந்திருந்து இப்படி போவுதே. அப்படீன்னு ரொம்ப கவல பட்டோம். கவலப்பட்டு கடேசி முடிவுதான் ஒரு பையன் பெறந்தான். எம் மவன்.

அதுக்கடுத்தால எனக்கு ஒடம்பு ரொம்ப இதாயிப் போச்சி. ஓடம்புல ஒண்ணுமே இல்லியே. கொழந்த செத்தவொன்ன அவள என்ன கவனிக்காங்க? கவனிக்க மாட்டங்கல்ல, 'புள்ளதான் செத்துப்போச்சே இவுளுக்கு என்ன பார்வை' அப்படீன்னு சொல்லிருதாகள்ல...





படிப்பகம்

www.padippakam.com

சொன்னோம். 'செரி, நீங்க நாளைக்கி கொண்டு வந்து கட்டுங்கோ' அப்டீன்னு சொல்லிட்டாங்க. அந்தவொன்ன செரின்னு மறுநாளு ஆயிரம் ருவா கொண்டு கட்டினோம். கட்டி பிறவு படிப்புல சேந்துட்டான. சேந்தா... நாம் பீடி சுத்தனும். பீடி சுத்தித்தான் இவனுக்குச் சாப்பாட்டுக்கு. பீடி சுததி வாரததுக்கு பதினைஞ்சி ருவா கொணடுட்டுப் போவேன. வசசிக்கடா செலவுக்குன்னு குடுப்பேன. அவம் பத்திரமா வசசிக்குவான. ஒன்னே இந்த பையங்க பூராவும் திங்கறதுக்கு ஏதாசசும வசசிருககுமே, ஒவ்வொருத்த வீடல காரச்சவ்வு அரைச்சி குடுத்திருப்பாங்க. முறுக்கு சுட்டுக் குடுத்திருப்பாங்க. எங்க வீடல என்ன உணடு? ஒன்னு மில்லே. நான் என்ன செய்வேன்? அரிசியை வறுத்து அதுககூட கொஞ்சம் பொரிகடலையும் வாங்கிப் போட்டு ஒரு பாட்டல்ல போட்டு... அப்புறம் கொண்டகடல வாங்கி அத உப்பு தண்ணி தெளிச்சி கொண்டு போய் குடுப்பேன். இத தின்னுக்கடா அப்டீன்னு. 'எம்மா பள்ளிக்கூடம் போய் வநதவொன்ன என்னத்த திம்போம்னு வருதும்மா' அப்டீம்பான். இதத்தான் ரெண்டு ஆர்லிக்ஸ் பாட்டல்ல கொண்டு போயி குடுப்பேன.

எஙகணணன ஒரு நாளாவது போயி பாததுடுவானனு எவ்வளவோ சொன்னேன். 'அண்ணே நீ போயி பாத்துட்டு வாணணே, பாததுட்டு வாண்ணே. எல்லாப பையனகளுக் கும் யாரயாரோ போயி பாககஙகளாம. நீ ஒரு நாள் போயி பாருண்ணே' அப்டீன்னேன். பாக்கவே மாட்டேன்னுட்டான்.

கடேசில அவம்புள்ள படிககப போவும்போது வாரத்துக்கு ஒரு தடவ போயி பாக்கத்தான் செஞ்சான. இன்னும் அத எம் மவன் நெனக்கத்தான் செய்யறான். 'நம்ம மாமா ஒரு நாள் பாக்க வர மாட்டேன்னுட்டாரேம்மா, அவரு மவன் படிக்கும போது வாரத்துக்கு ஒரு நாள் போறாரேம்மா' அப்டீனனு கேக்கத்தான் செஞ்சான. அதுககப்புறம் படிசசு முடிசசான்.

அதுக்குப் பெறவு, ஒவ்வொரு பக்கமா அப்ளிகேஷன போட்டான். போட்டவொன்ன மொதல்ல பாண்டிச்சேரில வேலககி வா அப்டீன்னு இண்டர்வ்யூ வநதிருச்சி. இண்டர்வ்யூ வந்தவொன்ன இங்கியிருந்து போய்ட்டோம். நெய்வேலில அக்கா இருக்கதுனால அங்க போயி தங்கி... ரெண்டு பேரும் போயிருந்தோம். நானும் போயிருந்தேன். எம்மா நானுத்தம்பது ருவா சம்பளமாம்? நானுத்தம்பது சம்பளத்த வச்சு என்னம்மா செய்யமுடியும்? நாஞ் சாப்பிடுவனா? ஒங் களுககு அனுப்புவனா? அப்டீன்னான். அப்ப நாஞ் சொன்னேன் 'எடா... நானுத்தம்பது ருவா சம்பளமின்னாலும் ஒனககே நீ கழிச்சிகிட்டாலும் பரவாயில்லை. எங்களுக்கு நீ பணம் ஒண்ணும் அனுப்ப வேணடாம். எப்டின்னாலும் எல்லாரும் சொல்லுவாங்க, ஒங்க மகன் என்ன செய்யிதான் அப்டீன்னு சொன்னா வேல பாக்கான அப்டீன்னு சொன்னா அது பேரா இருக்கும். இல்ல எம்மவன் சும்மா வீடல இருக்கான் அப்டீன்னு சொன்னா அது எப்டிடா பேரா இருக்கும்? நானுததம்பது ருவா சம்பளமிருந்தாலும் பரவாயில்ல. நீ வேலக்கி போ. அப்டீன்னு சொல்லிட்டேன்.

அவனுக்கு மனசே இல்ல. நானுத்தம்பது ருவா சம்பளத்துல என்னன்னு வேலக்கி போகன்னுட்டு. பெறவு கடேசி 'செரியம்மா நாம் போறேன்' அப்டீன்னுட்டு போய்ட்டான்.

அதுக்கப்புறம் நானுத்தம்பது ருவா சம்பளம் வாங்கி அதுல எனககு அம்பது ருவா அனுப்புனான். மாசம் அம்பது ருவா அனுப்பிடுவான். அம்பது ருவா அனுப்பிட்டு அவனும் சாப்பாட்டுக்கு எல்லாம் பாத்துக்குவான். அங்க ஒரு ரெண்டு வருஷமோ மூணு வருஷமோ வேல பாத்தான். அங்க வேல பாத்துக்கிட்டு இருந்துட்டு அதுக்கப்புறம் இங்க அப்ளிகேஷன் போட்ருக்கான் ஒதுருக்கு. ஒன்னே ஒதூர்ல கூடுதல் சம்பளமின்ன வொன்ன அங்க வரச் சொல்லி ஆடர் வந்துட்டு. ஒன்னே அங்கயிருநது இங்க வந்துட்டான். இங்க வந்து அவனுக்கு ஆயிரத்தி ஐநூறு ருவா சம்பளம். ஆயிரத்தி ஐநூறு ருவா சம்பளம் வாங்குனா எனக்கு நானூறு ருவா வந்துரும். நானூறு ருவா, ஐநூறு ருவா அனுப்புனா ஒரு சீட்டையும் போட்டு தந்துட்டு போய்ட்டான். 'அம்மா இவ்வளவு ருவா நீங்க செலவழிங்க, இவ்வளவு ருவா சீட்டுக்கு நான் அனுப்புறேன் அப்டீன்னு சொல்லி ஐநூறு ருவா அனுப்பிச்சிடுவான். அவனும் வரவு செலவு பாகக வேண்டியிருக்குமில்ல.

அப்பறம் அஙகயிருநதுக்கிட்டே என்ன செஞ்சுட்டான், இங்க அபளிகேஷன் போட்டான். இந்த கெமிக்கல்ல. ஒடனே நீ வேலக்கி வநதுடு அபடீனனு சொலலி ஆடர் வநதுட்டு. இநத ஆறுமுகனேரிக்கு. அங்கயிருந்து இங்க வநதுட்டான.

இங்க வந்து வேல பாத்தான். வேல பாத்தவொன்ன சம்பளம் கூடுன சம்பளம். மூவாயிரத்து ஐநூறு ருவா சம்பளம் வாங்குனான். ஒன்னே கலியாணம் புள்ளைக்கு முடிக்கணும்னு பாத்தேன். ப்ச்... புள்ளைக்கு (பொண்ணுக்கு) கலியாணம் கூடல. அவனுக்குத்தான் பொணணு வீட்டுக்காரங்க வந்துக்குட்டே இருக்காங்க. என்ன என்ன என்ன என்னன்னுட்டு.

பெறவு அதுக்கப்புறம் அவனுக்காவது கலியாணதத முடிப்போம் அப்டீனனு சொலலி அவனுக்கு கலியாணதத முடிசசேன. ஒரு ரெண்டர வருஷம ஆசசு கலியாணம முடிசசு. கலியாணம் முடிச்சதுககு பட்டபாடு பெரிய பாடு. இநத காததிக மாசம் கலியாணம வசசா மழ இல்லாம இருக்குமா? அய்யோ மழயோட கெடந்து அல்லலு அல்லலு பெரிய அல்லலு பட்டோம். அல்லல் பட்டு... பொணணு எநத ஊரு, தஞ்சாவூரு பக்கத்துலயில்ல, தஞ்சாவூருக்கு போவணும். நிச்சயதார்த்தத்துக்கு போயிருக்கோம். ரெண்டாயிரம் ருவா கேட்ருக்கான வேனுக்கு. ரெண்டாயிரம் ருவா செலவழிச்சு நிச்சயதாம்பூலம் வச்சிட்டு வநதாசசு. அதுக்குப் பெறவு மூணாவது மாசம் காததிய மாசம் ஆயிப்போசசு. நா அவ அப்பாககிட்ட சொன்னேன், நம்ம வந்து அயப்பசி மாசம் கலியாணத்த வச்சிக் கிடுவோம்னேன். அவன என்ன சொல்லிட்டான், 'நா எல்லாப் பக்கமும் லோனு போட்ருக்கேன, லோனு எப்ப எப்ப வருதோ, அதுனால நீங்க எனக்கு ஒரு மாசம் ஆவாசம தரணும். அப்பததான் நான செய்ய முடியும்' அப்டீன்னுட்டான். சரின்னுட்டு அய்ப்பசி போயி காத்திய மாசம் வநதுட்டு. காத்திய மாசம் கலியாணம் வச்சு வீட்ல பந்தல் போடல. ஒண்ணுஞ் செய்ய முடியல. இந்த 'கோதம்' தியேட்டரிலே வச்சு கலியாணம் முடிச்சோம். கலியாணத்த முடிச்சு ஒரு ஒனனற வருஷம ஆவுது.

*கண்டு உரையாடியவர் : க. லல்லி (25.8.94)*

*கோட்டோவியம் : கே. எம். ஆதிமூலம்*

●


**பாரபாஸ்**

பேர்லாகர் குவிஸ்ட்

(நோபல் பரிசு பெற்ற ஸ்வீடிஷ் நாவல்)

தமிழாக்கம் : க. நா. சு.

விலை ரூ.35

நாற்பதாண்டுகளுக்கு முன் வெளிவந்து தமிழ் வாசகர்களையும் எழுத்தாளர்களையும் வெகுவாக பாதித்த நாவலின் மறுபதிப்பு

**வேர்கள் இலக்கிய இயக்கம்**

**12-** டி, தந்தை பெரியார் சாலை

வட்டம் 7, நெய்வேலி 607 803




படிப்பகம்

www.padippakam.com

# இடம், மௌனம், வாழ்க்கை

அம்பை

வாழ்க்கையில் நாம் ஆக்ரமிக்கும் இடம் என்பது எது? நாம் காலூன்றி நடமாடும் இடமா அல்லது மனம் வியாபிக்கும் இடமா? பல சமூகவியல்வாதிகள் இடத்தை உள்ளிடம், வெளியிடம் எனப் பிரித்து வீட்டின் உள்ளே உள்ள இடம் பெண்களுக்கு, வெளியே உள்ள இடம் ஆண்களுக்கு என்று சரித்திர ரீதியாகப் பார்த்திருக் கிறார்கள். உள்ளே உள்ள இடத்திலிருந்தபடியே வெளியே உள்ள உலகைக் கைப்பற்றியிருக்கிறார்கள்; இந்த உள்ளுலகம் அவ்வளவு குறுகியதல்ல என்று வேறு சில சமூகவியல்வாதிகள் வாதிட்டிருக்கிறார்கள். ஆனால் கணிப்பில் எடுத்துக் கொள்ள வேண்டிய மிக முக்கியமான கேள்வி இடத்தின் தன்மை பற்றியது. பௌதிக மதில்கள் உடைந்து உள்ளே-வெளியே என்ற பாகுபாடுகள் தகர்க்கப்பட்டுவிட்டாலும் பெண்கள் அடையக்கூடிய, நடக்கூடிய, எட்டக்கூடிய இடம் ஒரு உள்ளிடத் தன்மை யால் செலுத்தப்படுகிறது. இந்தச் செலுத்தல் மூச்சை அடைக்கிறது; நடையைப் பிடிக்கிறது; கண்ணையும் காதையும் பொத்துகிறது; வாயை அடைக்கிறது. வாழ்க்கையின் சகல போராட்டங்களும் இந்த இடத்தின் தன்மையை மாற்றி அதன் இறுக்கங்களைத் தளர்த்துவதை ஒட்டியதுதாம்.

பெண்கள் எழுதும் படைப்பிலக்கியத்தின் மிகவும் முக்கியமான போராட்டம் இந்த இடத்தைப் பற்றியது. இடத்தை ஒட்டிய அத்தனை குறுகல்களும் பெண்களின் உடம்பின் மேல் கவிந்து கொள்கிறது. உயிர் மூச்சு ஓடும், பல்வேறு அங்கங்கள் உள்ள உடம்பு மாத்திரம் அல்ல; அவர்கள் வாழ்க்கையின் பௌதீகப் பரப்பு; அன்றாட வாழ்க்கை; தனிப்பட்ட வாழ்க்கை, அதில் நெய்யப்பட்ட அன்பு, காதல், மோகம், காமம் எல்லாமுமே. இதனால்தான் இடத்தை முறிக்கும் முயற்சிகளில் அவரவர் உடம்பை - பௌதிக வீச்சை - மீண்டும் கைப்பற்ற வேண்டியிருக் கிறது. கைப்பற்றியபின் அதன் பௌதிகத் தன்மையை மாற்றி வெளியுடன் அதை இணைக்க வேண்டி இருக்கிறது. சிலர் எழுத்துக்களில் இந்தப் போராட்டம் பல வகைகளில் வெளிப்படுகிறது. அன்றாட வாழ்க்கை விவரங்கள், அரசியல் போராட்டங்களும் தனிப்பட்ட வாழ்க்கையும் இவை எல்லாம் கூடிய எழுத்தில் இடத்தின் தன்மை பற்றிய விவரங்கள் வெளிப்படையாக இல்லாமல் ஒரு மிகைப்படுத்தப்பட்ட மௌனத்தில் இருக்கிறது. ஐந்தே ஸ்வரங்கள் கொண்ட ராகம் ஒன்று இல்லாத இரு ஸ்வரங்களைச் சுற்றி அமைவதைப் போன்ற ஓசையுடைய மௌனம்.

ராஜேஸ்வரி பாலசுப்பிரமணியத்தின் **தில்லையாற்றங் கரை**, சுகந்தி சுப்பிரமணியனின் **புதையுண்ட வாழ்க்கை** இரண்டும் நாவல் மற்றும் கவிதை வாயிலாக இடத்தையும் மௌனத்தையும் பற்றியவை. **தில்லையாற்றங்கரை** சட்டங்களும், சம்பிரதாயங்களும் பெண்கள் வாழும் இடத்தை எக்காலமும், இடைவிடாமல், பல்விதங்களில் பிடியில் வைத்துள்ளது பற்றியது. இதில் வரும் மூன்று முக்கிய பெண்களும் பல விஷயங்களைப் பற்றிப் பேசுகிறார்கள். ஆனால் அவர்கள் வாழ்க்கை, அவர்கள் பேசாமல், நாடாமல், அடையாமல் விடும் மனிதர்கள், விஷயங்கள், இடங்கள் பற்றியது. அது போலவே சுகந்தி சுப்பிரமணியத்தின் கவிதைகளில் வாழ்க்கையை எதிர் கொள்ளும் போது நேரும் அத்தனை பௌதிகப் போராட்டங்களும் உள்ளன. ஆனால் கவிதைகள் அவை பற்றியவை அல்ல. கவிதைகள் நினைவு - நினைவு கூர்தல் இரண்டுக்கும் இடையே உள்ள பிரதேசம் பற்றியவை. விளக்கத்தில் அடைக்க முடியா பிரதேசம். மிகவும் உத்வேகமான உணர்வுகள் கூட இவர்கள் எழுத்தில் உள்ள மௌனத்தால் லகானிடப்பட்டு இருக்கின்றன. அந்த லகானில் உள்ளடங்கிய வேகம் ஒரு அதீதப் பாய்ச்சலைக் காட்டுகிறது. **தில்லையாற்றங்கரையில்** கௌரியும் பத்மநாதனும் கொள்ளும் அன்பு, அரசியல ஒடுக்குமுறை, குடும்ப சம்பிரதாயங்கள், கிராம வழக்கங்கள், குடும்ப சோகங்கள் இவற்றினிடையே வெளிப்பாடு பெறாத அன்பு. நாவலின் முடிவில் கௌரி பத்மநாதனை வேறு ஒரு சூழ்நிலையில் இன்னொருவளின் எதிர்காலக் கணவனாகக் காண்பதில்கூட ஒரு நாடகத் தன்மை இல்லை. காரணம் இது நாவலின் தாக்கரீதியான 'முடிவு' இல்லை. நாவல் இவர்கள் இருவரும் கொண்ட அன்பு பற்றியது இல்லை. அந்த அன்பிற்கான இடம் பற்றியது. சுகந்தி தன் கவிதையில்

என் குழந்தையின்
தொப்புள் கொடியை
அறுத்தது யார்?
பாட்டியா? நர்ஸா?
நினைவில்லை.

என் முதல் கர்ப்பம்
பற்றிய முதல் செய்தியை
யாரிடம் சொன்னேன்?
ஞாபகமில்லை...

என்று கூறும்போது உடம்பை ஒட்டிய விவரங்களைக் கூட வாழும் இடம் மறைத்து விடுவது தெரிகிறது. ஒரு குறிப்பிட்ட நினைவைச் சேகரிக்கவும், நினைவு கூர்தலை அனுமதிக்கவும் இடம் இல்லா பௌதிக இடம்.

சில வருடங்கள் முன்பு மறைந்து போனார் கௌரி அம்மாள். **கடிவாளம்** என்ற மறக்க முடியாத நாவலை எழுதிய கௌரி அம்மாள். அவருடைய வெளியிடப்பட்ட, கைப்பிரதியில் உள்ள எல்லா எழுத்துக்களும் ஒரு கட்டாக வந்து சேர்ந்தது போன மாதம். அதில் **பாமும் பணம்** என்ற காவேரி பத்திரிகையில் ஸர்வஜித் ஆண்டில் வெளியான ஒரு கதை. ஒரு குடும்பம். சிடுசிடுக்கும் கணவனும், பொரிந்து கொட்டும் மனைவியும், பரிட்சைக்குப் போகும் அம்பியும் உள்ள குடும்பம். அதில் இரு பூனைகள். கணவனுக்குப் பூனையைப் பிடிக்கவில்லை. அம்பிக்கும். ஒரு நாள் களேபரத்தில் பூனைகளை வேலைக்காரியிடம் கொடுத்து விடுகின்றனர். அவள் அதைப் பூனையைச் சுட்டுத்தின்கும் குறவனுக்கு நான்கணாவுக்கு விற்று விடுகிறாள். நண்பர் ஒருவர் வந்து மானுடம் பற்றிப் பேசுகிறார். மனைவி பாமும் பணத்தால் விளைந்த விபரீதம் என்று நினைக்கிறாள். அன்றாடத் திட்டங்களும், மோதல்களும், விரட்டல்களும், உபதேசங்களும் மனைவி கூற வேண்டியதை நண்பர் நீளச் சொல்லிக் கொண்டு போகிறார். பாமும் பணம் என்ற வெளிப்படையான தலைப்பு முடிவும், 'பணம், பேய்' என்று போகிறது. ஆனால் இத்தனை கூச்சலிலும் அடங்கியிருக்கிறது ஒரு மௌனம். குறவனிடம் சிக்கி இறந்து போனது பூனைமட்டும்தானே? கௌரி அம்மாளின் அருகே நெருங்கி, தொட்டுக் கொண்டு நிற்க வேண்டும் போல் இருக்கிறது. ●



படிப்பகம்

www.padippakam.com





## கே. சச்சிதானந்தன் நேர்காணல் இரு எதிர்வினைகள்

### 1

காலச்சுவடு இதழ் 11இல் கவிஞர் சச்சிதானந்தன் அவர்களின் பேட்டி படித்தேன். மொழி, இனம் பற்றி அவரது கருத்துகளைத் தவிர பிறவற்றுடன் எனக்கு பெரும்பாலும் உடன்பாடே.

"சமஸ்கிருதம், பிராகிருதம் ஆகியவற்றின் அடிப்படையில் இந்திய மொழிகள் அனைத்திற்கும் பொதுத்தளம் இருக்கிறது. தொன்மங்கள், கடவுள்கள், சடங்குகள் ஆகியவற்றிலும் அது உள்ளது. பக்தி இயக்கம் தெற்கில் தொடங்கி இந்தியா முழுவதும் தழுவி இலக்கிய பொது தளத்தை உருவாக்கியது. சீர்திருத்த இயக்கம், காலனியாதிக்க எதிர்ப்பியக்கம், நவீனத்துவ இயக்கம் ஆகியவற்றிலும் இந்திய பொதுத்தன்மை உண்டு" என்று கூறி இந்திய துணைக்கண்ட ஒற்றுமையை மரபு கம்யூனிஸ்ட்டுகள் கூறுவது போலவே கூறி வலியுறுத்துகிறார்.

லத்தீனும், கிரேக்கமும் அய்ரோப்பிய மொழிகளுக்கெல்லாம் பொதுவான அடித்தளம் வழங்குகின்றன. இதனால் அய்ரோப்பிய நாடுகள் இணைந்து 'அய்ரோப்பிய தேசம்' உருவாவதுதான் சரியெனச் சொல்ல முடியுமா? தமிழ் நான்கு திராவிட மொழிகளுக்கும் அடிப்படை மொழியாக விளங்குவதால் அதனடிப்படையில் 'திராவிட நாடு' உருவானால் ஏற்பாரா? கடவுள், சடங்குகள் என்று கூறி மத அடிப்படையில் ஒரு ஒருமைப்பாட்டை இவர் சுட்டிக்காட்டுவதைத்தானே பி. ஜே. பி., ஆர். எஸ். எஸ்-காரர்களும் செய்கிறார்கள். பிறகு இவருக்கும், அவர்களுக்கும் வேறுபாடு என்ன? அப்படியானால் ஏசுவைப் பின்பற்றும் அய்ரோப்பிய நாடுகள் ஒரு நாடாகவும், இஸ்லாமைப் பின்பற்றும் மேற்காசிய நாடுகள் ஒரு நாடாகவும், புத்தத்தைப் பின்பற்றும் கிழக்காசிய நாடுகள் ஒருங்கிணைந்து ஒரே நாடாவதும்தான் முற்போக்கானதாயிருக்கும். இது சரியா?

பக்தி இயக்கத்திற்கு முன் புத்த இயக்கம் இந்தியாவில் தோன்றி கிழக்காசியா முழுதும் அணைத்துப் பரவியுள்ளது. இதன் அடிப்படையில் இந்தியா, சீனா, ஜப்பான், கொரியா, வியத்நாம் போன்றவை இணைய முடியுமா? மார்க்சிய இயக்கம் அய்ரோப்பாவில் தோன்றி உலகம் முழுவதும, ஒடுக்கப்பட்ட மக்களுக்காக பாடுபடுவது என்ற அடிப்படையில் அரசியல, இலக்கியத்தில் பொதுவான அடித்தளத்தை ஏற்படுத்தி இருப்பதால் உலகம் முழுவதும் ஒரே நாடு ஆகமுடியுமா? அப்படியானால் சோசலிச ரஷ்யாவும், செஞ்சீனமும் முதலில் ஒன்றுபட்டிருக்க வேண்டுமே! மாறாக எல்லைத்தகராறுவரை அல்லவா பிரச்சினை நடந்தது. இப்படிப்பார்த்தால் உலகம் முழுதும் ஒன்றிணைப்பதாகக் கூறும் 'காட்' உடன்படிக்கை நல்லதுதான் என்றாகிவிடுமே!

"கேரள தேசியம், தமிழ் தேசியம் போன்றதல்ல. பல்வேறு குடியேற்றங்கள், பழங்குடிகள் ஆகியவை கலந்து உருவான சமூகம்" என்கிறார் அவர். தமிழர்களும் அப்படித்தான், அதாவது கேரள தேசிய இனத்தைப் போன்றவர்தான் என்று கூறி அடுத்த பத்தியிலேயே தான் முதலில் கூறியதை மறுத்து தனக்குத் தானே முரண்படுகிறார். இதில் அவர் என்ன கூறவருகிறார் என்பதை குழப்பாமல் விளக்க வேண்டும்.

தேசியம் என்பது மரபின அடிப்படையில் அமைக்கப் படுவதல்ல என்பதை நல்ல மார்க்சியவாதியான அவர் அறிந்தும் ஏன் குழம்புகிறார் என்பது தெரியவில்லை. தெலுங்கர்கள், சவுராஷ்டிர இனத்தவர், மராட்டியர், மலையாளிகள் இவர்களுக்கெல்லாம் முன் ஆரிய-பார்ப்பனர்கள் ஆகியோரின் குடியேற்றங்களை ஏற்று உள்வாங்கிக்கொண்டு குறவர், குறும்பர், வடுகர், தோடர், இருளர் போன்ற பழங்குடிகளை அரவணைத்ததான் முன்னைய தமிழகமும் சரி, இன்றைய முற்போக்கான 'தமிழ்த் தேசியமும்' செல்கிறது. இதில் எங்கே தமிழ் தேசியம் கேரள தேசியத்துடன் முரண்படுகிறது? குணா, நகைமுகன் போன்ற ஒரு சிலர்தான் பிறப்பால் தமிழரைத்தவிர அனைவரையும் தமிழ் தேசியத்தவராக ஏற்கக்கூடாது என்கின்றனர். ஆனால் அவர்களது கருத்து பரவலாக நிறப்பிரிகை இதழின் தோழர்கள், பெ. மணியரசன் அமைப்பினர், 'மன ஓசை' அமைப்பான த. நா. மா. லெ. கட்சி அரங்க. குணசேகரன் என்ற தலித் தலைவரின் தமிழக மனித உரிமைக் கட்சியும், கருணா மனோகரன் போன்ற தமிழக முற்போக்காளர் பலராலும் எதிர்க்கப்படுவதை அனைவரும் அறிவார்கள். பிறகு எப்படி தமிழ் தேசியம் வேறுபட்டதாகவும், வேறு மாதிரியானதாகவும் இருக்கும்?

அடுத்து மரபினம் தொடர்பாக பல தவறான தகவல்களைத் தருகிறார் சச்சி. அதாவது "கேரள மககள் திராவிட பாரம்பரியத்தை உரிமைகோர முடியாது. ப்ரோட்டோ அஸ்ட்ரலாய்டுகள், ஆரிய, திராவிட மஞ்சள் இனப்பழங்குடிகள் இவர்கள் கலந்து உருவான சமூகம் இது" என்கிறார். இப்படி இனக்கலப்பு ஏற்பட்டுவிட்டதாலேயே ஒரு மரபினம் பாரம்பரியம் இல்லை என்று ஆகிவிடாது. வெள்ளை இனமோ, கருப்பு இனமோ, மஞ்சள் இனமோ எல்லாம் கலப்படைந்தே கிடக்கின்றன. ஆக கலப்பேயில்லாத தனித்தன்மை யான மரபினம் என்ற அடிப்படையில் திராவிட பாரம்பரியம் பேசப் படவில்லை. இந்த தென்னிந்தியாவில் வசிக்கும் கருப்பினத்தில் அஸ்ட்ரலாய்டு, மஞ்சள், ஆரிய, திராவிடக் கூறுகளில் எது தூக்கலாக உள்ளது என்பதை வைத்துதான், திராவிட இனக்கூறுகள் தூக்கலாக இருப்பதால் தென்னிந்தியர் திராவிட மரபினப் பாரம்பரியம் உளளவர்கள் என வரையறுக்கப்படுகிறது. கருப்பு நிறத்தோல், குட்டையான உடல், சிறிய கண்கள், அகன்ற மூக்கு இவை திராவிட இனக்கூறுகள். இவை தமிழ்நாடு, கேரளம், கர்நாடகம், ஆந்திரத்தில் நிறையவே காணப்படுகின்றனவே!

மேலும் கேரள மக்கள் மட்டும் அஸ்ட்ரலாய்டுகள், மஞ்சள் ஆரியப் பழங்குடிகளிடம் கலந்து எப்படி தனியே உருவானார்கள்? அஸ்ட்ரலாய்டுகள் என்ற முண்டாக்கள் என்ற கோல் இன மக்கள் பீகார், ஒரிசா, வங்கம் போன்ற பகுதிகளில் இன்று வசிக்கின்றனர். மஞ்சள் இன நேபாளி, கூர்க்கா, அஸாமி, மணிப்பூரி, நாகா மக்கள் இமயமலை அடிவாரத்திலும், கிழக்கிந்தியாவிலும் வசிக்கின்றனர். பழங்குடிகளுக்கு ஓடமோ, படகோ, கப்பலோ ஓட்டத் தெரியாது. எனவே மேற்கண்ட இரு இன மக்களும் கேரளத்தின் அரபிக்கடற்கரை வழியாக வந்திறங்கி கேரளப்பழங்குடிகளிடம் கலந்திருக்க முடியாது. ஒரேவழி நிலம். கர்நாடகம், தமிழ்நாடு ஆகிய இரு மாநிலங்களைக் கடந்துதான் வந்திருக்க முடியும். அப்படியிருக்க வரும் வழியில் ஆந்திர, கர்நாடக, தமிழ்நாட்டுப் பழங்குடியினருடன் கலக்காமல் எப்படி கேரளத்தில் மட்டும் வந்து அவர்கள் கலந்தார்கள்?

மேலும் இன்னொரு குண்டையும் தூக்கிப்போடுகிறார் அவர். ஆரியர் குடியேற்றம் என்ற கருதுகோள்கூட மறு விசாரணை



படிப்பகம்

www.padippakam.com

செய்யப்படுகிறது என்கிறார். இதைக் கூறுவது பி. ஜே. பி., ஆர். எஸ். எஸ். கும்பலே! ஆனால் அதற்கு ஆதாரங்கள் எதையும் அவர்கள் தருவதில்லை. சச்சியும் தரவில்லை. முன்பு திலகர் அவ்வாறு சொன்னார். அவரது கூற்றும் அப்போதே சிந்து சமவெளி நாகரிக அழிவு, ரிக்வேத குறிப்புகளை வைத்து மறுக்கப்பட்டு விட்டது. ஆரியர் 'மூலஸ்தானம்' என்ற இன்றைய மூல்டானிலிருந்து காபூல், ரசா ஆறுகளைக் கடந்து ஹரப்பா என்று இன்று அழைக்கப்படும் ரிக்வேதம் குறிப்பிடும் 'ஹரியூப்பியா' உள்பட பல நகரங்களையும் கோட்டைகளையும் தகர்த்து அங்கிருந்த கருப்பு நிற தாசர்களான திராவிடர்களுடன் போரிட்டு அவர்களை இனப்படுகொலை செய்து கிழக்கிலும், தெற்கிலும் விரட்டி முன்னேறியதாக ரிக்வேதத்திலிருந்தே குறிப்புகள் எடுத்துத்தரப்பட்டு, ஹரப்பா, மொகஞ்சதாரோ அகழாய்வு மூலம் அவற்றை நிரூபித்தும் விட்டார்கள். அங்கிருந்து தப்பி ஓடி பாகிஸ்தானின் மலைப்பகுதிகளில் அடைக்கலம் புகுந்து வாழும் பிராகுவி மொழி பேசும் திராவிடப் பழங்குடிகள் இன்றும் அதை தாங்கள், கிழக்கில் 'ஹாலெப்பி'யிலிருந்து வந்ததாகக் கூறி நினைவு கூர்கிறார்கள். வரலாற்றுச் சான்றுகள் இப்படி தெள்ளத் தெளிவாய், ஏராளமாய் குவிந்து கிடக்கும் நிலையிலும் சச்சி இந்திய ஒற்றுமையை வலியுறுத்த இப்படி அப்பட்டமாக பொய் சொல்லவேண்டியதில்லை. ராகுல சாங்கிருத்தியாயனின் 'இந்தியாவில் ஆரியர்கள்', 'வால்கா முதல் கங்கை வரை' ஆகிய நூல்களை அவர் மீண்டும் ஊன்றிப் படித்துப் பார்ப்பாராக!

"திராவிடர்கள் இங்கு வருவதற்கு முன்பு இந்தியாவின் உண்மையான உரிமையாளர்களாக இருந்தோம் என்று பழங்குடிகள் இயக்கம் ஒன்று ஆரம்பிக்கும் வரைதான் திராவிட வாதம் ஓரளவு செல்லுபடியாகும்" என்று பயமுறுத்தவேறு செய்கிறார் சச்சி. திராவிடர் கழகத்தை தோற்றுவித்த தந்தை பெரியார், "பார்ப்பனர்கள் ஆரியர்களின் நேரடியான சந்ததியினரல்ல, கலப்படைந்தவரே என்ற போதிலும் பழக்க வழக்கம், ஆசாரம், சில பண்பாடுகள் ஆகியவற்றை தனியே பேணிக்கொண்டு தங்களை உயர்ந்தவர்கள் என்று கூறி சுரண்டி ஆதிக்கம் செய்ய விரும்புவதாலேயே நாம் சுயமரியாதை பெற, சுரண்டலிலிருந்து விடுபட தனி அடையாளம் கண்டு கொள்ளவே திராவிடர் என்று சொல்லிக்கொள்கிறோம். ரத்தப் பரிட்சை பார்த்தல்ல. இது அரசியல் இயக்கமே அன்றி இன இயக்கமல்ல!" என்று அப்போதே கூறிவிட்டார். இதையெல்லாம் அறிந்துகொள்ளாமல் திராவிட இயக்கம் 'இன இயக்கம்' என சச்சி முத்திரை குத்துவது, அவர் திராவிட அரசியல் பற்றி அறிவதில் இதுநாள் வரை - மலையாளத்தில் பெரியார் நூல்கள் வந்தும்கூட - எவ்வளவு அலட்சியமாய், ஒரு நாலாவது மனிதனைப்போல் இருந்திருக்கிறார் என்பதையே காட்டுகிறது. அவர் இந்த இயக்கத்தின் மேல் 'இந்துத்துவா' கும்பல்போல் எவ்வளவு சினம், காழ்ப்புணர்ச்சியோடு உள்ளார் என்பதையும் நன்கு காட்டுகிறது.

திராவிடர் வெளியிலிருந்து வரவில்லை; இந்தியாவின் பூர்வீக குடிகளே என்பது தெளிவான சான்றுகளுடன் அறிஞர்களால் மெய்ப்பிக்கப்பட்டுள்ளது. ஆனால் தோழர் சச்சி இன்னும் எந்தக் காலத்தில் இருக்கிறார்? அப்படி புதிய ஆதாரங்கள் கிடைத்திருந்தால் அவர் உடன் அனைவருக்கும் தெரியப்படுத்த வேண்டுமென வற்புறுத்திக் கேட்டுக் கொள்கிறேன்.

திராவிடர்கள் வாழும் பகுதியில் உள்ள பிற இன - அஸ்ட்ரலாய்டு-மக்களாகக் கருதப்படுவது, வேடர்கள், இருளர்களே! அவர்கள் அஸ்ட்ரலாய்டு மரபினப் பழங்குடிகள் என சொல்லப்படுகிறது. ஆனால் அந்த இனத்தவர்தான் என்று சொல்வதற்கு அம்மரபினத்திற்குரிய மொழியேதும் பேசாததோடு அவர்களது சொற்கள் திராவிட மொழிகளில் ஒரு சிலவாவது கலந்து காணப்படாததும், திராவிடப்பகுதியில் உள்ள ஊர், இடங்களின் பெயர்கள் ஒன்றுகூட அம்மொழியில் காணப்படாததும் சச்சியின் கூற்றை நம்ப இயலாதன ஆக்குகின்றன. அதேவேளை மங்கோலியப் பழங்குடியினர் வாழ்ந்த இமாச்சல பிரதேசத்தின் இமயமலை அடிவாரத்தில் ஊர்ப்பெயர்களும், ஏன் சில இடங்களில் மொழியும் கூட மங்கோலிய இன மொழியாகக் காணப்பட அதைப் பேசுபவர்களும், வாழ்பவர்களுமாக 'கஸ்'கள் என்ற ஆரியப்பழங் குடியாயிருக்கின்றனர். இது அவ்விடத்தின் பூர்வீகப் பழங்குடிகள் மங்கோலிய 'இராத' இனத்தவரே என்று நம்ப இடமளிப்பதாய் உள்ளது.

மேலும் மங்கோலிய - மஞ்சள் இனப் பழங்குடியினர் ஓரிசா, வங்கம் போன்ற திராவிட வடக்கெல்லைப் பகுதியில்தான் கலந்து அம்மாநில மக்கள் உருவாகியுள்ளதாக வரலாறு சொல்லப்படுகிறதே ஒழிய தென்னிந்தியாவின் உள்ளே வந்து கலந்ததாக சான்று கிடையாது. கனகசபைப்பிள்ளை தமிழர்கள் மஞ்சளினப் பழங்குடிகள் என்கிறார். ஆனால் அது மறுக்கப்பட்டுவிட்டது. 'சாணார்' எனப்படும் நாடார் சமுதாயம் அப்பெயரைக்கொண்டு 'சீனர்' - மங்கோலிய மஞ்சளினத்தவர் என்று சொல்லப்பட்டது. அவர்கள் நடுவில் மஞ்சள் நிறத்திற்கு துளியும் இடமின்றி இருப்பதால் அக்கூற்றும் அடிபட்டுப் போயிற்று.

ஆரியப் பழங்குடிகள் எதுவும் தென்னிந்தியாவில் இருந்ததில்லை. நாகரிகம் பெற்ற பார்ப்பனர் என்ற ஆரியர்தான் சங்க காலத்தில் அன்றைய கேரளம், தமிழ்நாடு இணைந்த 'தமிழகத்'தில் கலந்தனர். அதுவும் பெரும்பாலும் உயர்ஜாதிகள் அளவிலேயே! கீழ் ஜாதிகளில் அது மறைமுகமாக, பாலியல் வன்முறை மூலமாக குறைவாகவே நடந்தேறியது. இப்படியிருக்க தென்னிந்திய திராவிடர் எப்படி அஸ்ட்ரலாய்டு, மஞ்சள், ஆரியப் பழங்குடிகள் கலந்த முழுக்கலப்பு இனமாக இருக்க முடியும்?

எம். கோவிந்தன் மலையாளத்தைத் தமிழுக்கு அருகில் கொண்டுவர முயன்றதை சச்சி, "... அவருடைய எழுத்து சாமானிய மலையாளிக்கு சுத்தமாகப் புரியவில்லை. வெறும் பரபரப்பு, வேடிக்கை என்றே அவரது முயற்சிகள் முடிந்தன" என்கிறார். எம். கோவிந்தன் ஒரு சொற்றொடரின் வடசொற்களை நீக்கி அவ்விடத்தில் இன்று தமிழ்நாட்டு தமிழில் வழக்கிலுள்ள சொற்களைப் புகுத்தி அம்முயற்சியை செய்திருந்தாரானால் அம்முயற்சி தோல்வியடைந்திருக்கும்தான். அந்த சமஸ்கிருத சொற்களுக்கு பதில் 'பச்ச மலயாள' சொற்களை (பச்சை மலையாளம் - தனித்தமிழ் போன்ற வடமொழி கலவாத தூய மலையாளம்) பயன்படுத்தி இருந்தாரானால் அம்முயற்சி தோல்வியடைய வாய்ப்பில்லையே!

இது சாமானிய, பாமர, ஏழை, கீழஜாதி மலையாளிக்கு சச்சி பரிந்துரைக்கும் வடமொழி கலந்த 'சமரச மலையாள'த்தை விட நன்றாகவே புரியும். இது மொழியை பின்னோக்கி இழுக்கும் முயற்சியல்ல. பழங்குடி மலையாளத்தின் தன்னம்பிக்கை, சுயமரியாதையை வெளிப்படுத்தும் முயற்சியே! "ரஷ்ய மொழியில் பிறமொழிச் சொற்களை கலந்து அதன் அழகைக் கெடுக்காதீர்!" என்றார் லெனின். அவர் அப்படிச் சொன்னது ரஷ்ய மொழியைப் பின்னோக்கி இழுக்கும் முயற்சியா? அல்லது அதன் சுயமரியாதையைக் காக்கும் முயற்சியா? தமிழ் 40, 50-களிலிருந்த கரடு முரடான வடமொழி கலந்த தமிழை படிப்படியாகக் கைவிட்டு மறைமலையடிகள், பரிதிமாற் கலைஞர், பாவாணர், பெருஞ்சித்திரனார் பரிந்துரைத்த தனித்தமிழுக்கு திரும்பாவிட்டாலும் தனித்தமிழ்ச் சொற்களைக் கையாளும் நிலைக்கு எவ்வளவோ மாறிவந்துள்ளதை அக்காலத்திய, இன்றைய நூல்களைப் படிக்கும் எவரும் உணரலாமே! இதனால் தமிழ் கெட்டுவிட்டதா? பின்னோக்கி சென்றுவிட்டதா?

எனவே தற்போது எம். கோவிந்தனின் முயற்சி கோமாளித்தனமாக, பரபரப்பு, வேடிக்கையாகப்பட்டாலும் நீண்டகால தொலை நோக்குப் பார்வையில் சமஸ்கிருதமயமாக்கப்படும் மலையாளத்தை விட தமிழ்மயமாக்கப்படும் மலையாளமே அறிவியல் மலையாளத்திற்கு ஏற்படும் கலைச்சொல் பஞ்சம், அருகில் உள்ள பெரும் பகுதியான தமிழ்நாட்டுடன் எளிதில் தொடர்புகொள்ள முடிதல், கேரள இலக்கியங்கள் மொழிபெயர்ப்பின்றி நேரடியாக தமிழகத்தில் பரவுதல், சுற்றுலா, வணிகம், பண்பாடு ஆகியவற்றில் இயல்பான நெருக்கம் ஆகியவற்றை ஏற்படுத்த மிகவும் உதவும்.

மலையாளம் சமஸ்கிருத திணிப்பிலிருந்து விடுபட்டு பாமர மலயாளி பேசும் 'எளிய பச்ச மலயாளச்சொல்' மிகுந்த தூய மலையாளத்திற்குத் திரும்பி, கீழிறங்கி, அகல விரிவடைந்து அனைத்து மலையாளிகளுக்குமான 'மலையாள'மாக மாறவேண்டும் என்பது எப்படி 'மையவாத'மாகும்?

ஆங்கிலக்கலப்பற்ற பாமர தமிழன் பேசும் தமிழே உயர்த்தப்பட வேண்டும் என்பதுபோன்ற ஜனநாயகக்குரல்தானே இது? தமிழில் சமஸ்கிருத திணிப்பு இல்லை; ஆங்கிலத்திணிப்பு இருக்கிறது. எனவே ஆங்கிலத்தை எதிர்க்கிறோம். மலயாளத்தில் ஆங்கில திணிப்பைவிட சமஸ்கிருத திணிப்பு அதிகமாக உள்ளது. எனவே அதனை எதிர்க்க வேண்டுகிறோம். இதில் என்ன தவறு?

தேசிய இன தன்னுரிமை அல்லது விடுதலை கோருதல் அதன் மூலம் தாய்மொழிக்கல்வி கிடைத்து ஆழமான அறிவுபெருகி தேசிய தொழில்நுட்பம் வளரும். இதனால் தேசிய உற்பத்தி பெருகி ஏகாதிபத்திய தரகு முதலாளித்துவம் வீழும். பாட்டாளி வர்க்கம் வளரும் என்ற நல்லதற்குதானே! இது எப்படி இன, மொழி மையவாதமாகும்? தோழர் சச்சி நன்கு விளக்கினாரானால் நன்றியுடையவனாவேன்.

திரு. ஜெயமோகன் சிறப்பாக பேட்டி கண்டுள்ளார். அவருக்கு என் பாராட்டுகளும், வாழ்த்துகளும்.

**கோ. ஜெயபாலன்,** கும்பகோணம்.



படிப்பகம்

www.padippakam.com

## 2

'காலச்சுவடு' ஏப்ரல்-ஜூன் 1995 இதழ் வெளியிட்டுள்ள மலையாளக் கவிஞர் சச்சிதானந்தன் நேர்காணல், ஒரு படைப்பிலக்கியவாதி கோட்பாட்டுத்தளத்திலும் விசாலமான படிப்பறிவுடன் இயங்குவதையும் அவருடைய அக்கறைகள் கலை - இலக்கியத்தைத் தாண்டிய பரந்த வீச்சு கொண்டிருப்பதையும் அறிந்து கொள்ள உதவுகிறது. மார்க்சிய மரபு, மொழியியல் கோட்பாடுகளில் அறிவு, இந்திய இலக்கியத் திறனாய்வு மரபுகளுடன் அவருக்குள்ள பழக்கம் ஆகியன, நவீனக் கோட்பாடுகளான போஸ்ட் ஸ்ட்ரக்சுரலிசம், போஸ்ட் மாடர்னிசம் ஆகியவற்றை அவரால் ஆழமாக உள்வாங்கிக் கொள்ளவும் தெளிவாக விளக்கவும் உதவியுள்ளன. இத்தகைப் பின்னணி ஏதுமின்றி நவீனக் கோட்பாடுகளுக்குள் திடீர் பிரவேசம் செய்து தம்மையும் பிறரையும் திக்கு முக்காடச் செய்பவர்களிடமிருந்து அவர் துல்லியமாக வேறுபட்டு நிற்கிறார்.

எனினும் மார்க்சியத்தைக் 'கடந்து வந்து', ஃபூக்கோ, தெரிதா போன்றவர்களின் கோட்பாடுகள் மூலம் இலக்கியம், பண்பாடு, மொழியியல், வாசிப்பின் அரசியல் முதலியவற்றை விளக்கும் சச்சிதானந்தன் மார்க்சியத்திற்கும் முந்திய கோட்பாட்டுச் சட்டகத்திற்குள் சரிந்து விழுந்திருப்பது வியப்புத் தருகிறது. லெனின் பற்றி ஃபூக்கோ வழியாக அவர் முன்வைக்கும் விமர்சனம், 19ஆம் நூற்றாண்டு பூர்ஷ்வா தனிமனிதவாத விமர்சனமாகவே அமைந்துவிடுகிறது. லெனின் வாழ்ந்த வரலாற்றுச் சூழல், சமூக - பொருளாதாரக் கட்டமைப்பு, போல்ஷவிக் கட்சியின் அமைப்பு, உலக ஏகாதிபத்தியக் கட்டமைப்பு, உள்நாட்டுச் சக்திகள் முதலானவற்றை முற்றாகப் புறக்கணிப்பதன் மூலம் கோட்பாட்டுத் தளததில் மாபெரும் பின்னோக்கிப் பாய்ச்சலை நிகழ்த்தியுள்ளார் சச்சிதானந்தன். 1917 நவம்பர் புரட்சிக்குப் பிறகு ஏழு ஆண்டுகள் மட்டுமே லெனின் உயிரோடிருந்தார். முதலிரண்டாண்டுகள் ரஷ்யாவை உலகப் போரிலிருந்து விடுவிக்கவும் நான்காண்டுகள் 14 முதலாளித்துவ நாடுகளின் ஆயுதத் தலையீட்டைப் எதிர்த்துப் போராடவும் உள்நாட்டுப் போரைச் சமாளித்த பிறகு, பஞ்சம், வறட்சி, பட்டினி, பற்றாக்குறையை எதிர்கொள்ளவும் செய்த பிறகு அவரால் (அவரது கட்சியால்) 1921 முதல் 1924 வரை நடைமுறைப்படுத்த முடிந்ததெல்லாம் புதிய பொருளாதார கொள்கையைத்தான்; சோசலிசத்தை அல்ல. அப்போது அவருக்கும் போல்ஷவிக் கட்சிக்கும் வரலாறு வழங்கிய வாய்ப்பு அவ்வளவுதான். இந்த வரலாற்றுப் போக்கில் மாபெரும் வரலாற்று மனிதர்கள் தம் முத்திரையை பதிக்கவே செய்கின்றனர். ஆனால் முத்திரை மட்டுமே வரலாற்றுப் போக்காகிவிடாது. தீவிர இடதுசாரி ஆதரவுக் கவிஞர் என்ற நிலையிலிருந்து வளர்ச்சி அடைந்து சாகித்ய அகதமி பத்திரிகாசிரியராகி காந்தியத்தில் தார்மீக ஆயுதங்களைக் கண்டறிவதற்கு சச்சிதானந்தனுக்கு 25 ஆண்டுகள் பிடித்த தென்றால் கொந்தளிப்புகள் மிகுந்த ஏழாண்டுகளில் லெனின் என்ன சோசலிசத்தை எப்படிக் கட்டியிருக்க முடியும்?

அவரது வேறு சில சறுக்கல்களுக்குக் காரணம், கேள்விகள் கேட்டவரைப் போலவே அவரும் ஆகாயத்தில் மூக்கை பதித்துக் கொண்டு பேசும் தோரணையிலும் ஆழ்ந்திருந்ததுதான். இல்லாவிட்டால் "குரோச்செயிலிருந்து கிராம்ஷி பெற்றுக் கொண்ட நிரந்தரப் புரட்சி, முடிவற்ற புரட்சி என்ற கருத்தை முன்வைக்கிறீர்களா?" என்ற ஜெயமோகனின் படு அபத்தமான கேள்விக்குப் போகிறபோக்கில் குஷாலாகப் பதில் சொல்வதைத் தவிர்த்துவிட்டு "நிரந்தரப்புரட்சி, முடிவற்ற புரட்சி என்ற கருத்தாக்கங்களை கிராம்ஷி குரோச்செவிடமிருந்தோ அல்லது வேறு யாரிடமிருந்தோ பெற்றுக் கொண்டதாக உங்களிடம் சொன்னது யார்? அதற்கு என்ன ஆதாரம்? கிராம்ஷியின் 'சிறைக் குறிப்பேடு' களிலிருந்தோ அல்லது பிற படைப்புகளிலிருந்தோ இதற்கு ஆதாரம் காட்ட முடியுமா?" என்றெல்லாம் எதிர்க்கேள்விகள் கேட்டிருப்பார் சச்சிதானந்தன். ஏனெனில் கடந்த காலத்தில் சில ஆண்டுகள் கிராம்ஷியின் சிந்தனையை மலையாளம் பேசும் உலகில் பரப்புவதை ஒரு பணியாக மேற்கொண்டிருந்தவர் அவர் (அப்போது கிராம்ஷி ஒரு மோஸ்தர், இப்போது லையாடார்ட் போல.) நிரந்தரப் புரட்சி (Permanent Revolution) என்பது 1850இல் மார்க்சாலும் பின்னர் 1905இல் (ரஷ்யப்புரட்சி தோல்வியடைந்த பிறகு) டிராட்ஸ்கியாலும் வெவ்வேறு அர்த்தங்களில் முன்வைக்கப்பட்ட கருத்தாக்கம் என்பதையும், 1848இல் ஐரோப்பாவில்தான் கண்ட புரட்சி அலை பாட்டாளிவர்க்க சர்வாதிகாரமாக வளர்ச்சியடையும் வரை நிரந்தரப் புரட்சி நடக்கும் என்று மார்க்ஸ் கொண்டிருந்த எதிர்பார்ப்பு ஏன் நிறைவேறவில்லை என்பதை விளக்குவதுதான் கிராம்ஷியின் 'சிறைக் குறிப்பேடுகளின்' முக்கிய நோக்கம் என்பதையும் 'டிராட்ஸ்கியின் கருத்தாக்கத்தையும் அவர் நிராகரித்தார் என்பதையும் சச்சிதானந்தன் சுட்டிக் காட்டியிருப்பார். கிராம்ஷி பற்றிய பூர்ஷ்வா விமர்சகர்கள் அவரை ஹெகலிய 'கருத்துமுதல் வாதச் சிமிழுக்குள் அடைத்து வைக்கச் செய்த முயற்சிகளும் 1947இல் குரோச்செ "கிராம்ஷி எனது முகாமைச் சேர்ந்தவர்தான்" என்று உரிமை பாராட்டச் செய்த முயற்சியும் என்றோ தோல்வியடைந்துவிட்டன என்பதையும் குரோச்செவின் கருத்துமுதல்வாதத்தை நிராகரிக்க 'சிறைக் குறிப்பேடுகளில்' எந்தெந்தப் பக்கங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன என்பதையும் எடுத்துரைத்திருப்பார்.

'பிராந்திய தேசியவாதம்', 'தமிழ் திராவிட இயக்கங்கள்', 'தமிழ் தேசியம்' என்ற சொற்றொடர்களைப் பயன்படுத்தி ஜெயமோகன் (இவற்றுக்கெல்லாம் உள் நோக்கமில்லை என்று கூறுவதற்கில்லை) எழுப்பியுள்ள சில கேள்விகள், சச்சிதானந்தன் ஒரு வேதாந்த தேசிகர், அவர் கூறுவதெல்லாம் வேதவாக்கு, வேதத்தினடிப் படையில் அவர் வழங்கும் தீர்ப்புக்கு மேல் முறையீடு கிடையாது என்ற அனுமானத்தோடு கேட்கப்பட்டுள்ளன. அந்த அனுமானத்தை உறுதிப்படுத்தும் வகையிலேயே அவரது பதில்களும் அமைந்துள்ளன. நாகாலாந்து, காஷ்மீர், பஞ்சாப், அஸ்ஸாம், மணிப்பூர், தமிழ்நாடு போன்றவற்றில் வெவ்வேறு வடிவங்களிலும் அளவுகளிலும் முன்வைக்கப்படும் தன்னுரிமைக் கோரிக்கை கலாச்சாரத் தனித்தன்மைக்காக மட்டும் எழுப்பப்படுவதல்ல. அவை ஒவ்வொன்றுக்கும் உரிய அரசியல், பொருளாதார நியாயங்களும் உள்ளன. தமிழர்கள் தங்கள் பண்பாட்டுத் தனித்தன்மையைக் காப்பாற்றிக் கொள்வதுடன் (இதன் பொருள் காற்றுப் புகவிடாமல் இருப்பது என்பதோ, அப்படிக் காற்றுப் புகுந்தவுடனேயே தனித்தன்மை என்பது இல்லாது போய்விடும் என்பதோ அல்ல) இந்தியா என்ற பரந்த அரசியல் புவிப்பகுதியில் பிறரோடு கொள்வன-கொடுப்பன கொண்டு சகவாழ்வு நடத்த வேண்டும் என்று விரும்புவர்களில் நானுமொருவன்; என்னைப் போன்றோருக்கும் சுந்தரத் தெலுங்கு, கங்கைக் கரைக் கோதுமைப் பண்டம், சேரநன்னாடு (அதன் இளம் பெண்கள் மட்டுமல்ல) ஆகியன உவப்பானவைதான். ஆனால் அத்தகைய பரந்த மனப்பான்மை பிறரிடமிருந்தும் வராதபோது, மேற்சொன்ன ஆரோக்கியமான தமிழ் தேசியம் திரிபுபட்டுவிடுகிறது. கர்நாடகத்திலிருந்து தமிழர்கள் விரட்டியடிக்கப்படுகையில், சர்வதேச - தேசிய சட்டப்படி தமிழர்களுக்குக் கிடைக்க வேண்டிய காவிரிநீர் மறுக்கப்படுகையில், தமிழ்நாட்டிலுள்ள சில தெலுங்கு முதலாளிகள், தெலுங்கு பேசும் மக்கள் தொகையை ஊதிப் பெருக்கிக்காட்டி தேவையில்லாத கோரிக்கைகளை எழுப்பத் தொடங்குகையில், நாஞ்சில் நாட்டு நாயர்கள் சங்கம் நாஞ்சில் பகுதியை மீண்டும் திருவனந்தபுரத்துடன் இணைக்க வேண்டும் என்று தீர்மானம் போடுகையில் 'காற்றுப்புகா' தனித்தமிழகத்திற்கான கோரிக்கை என்ற எதிர்வினை (இதை நான் பகிர்ந்து கொள்ளவில்லை) உருவாகத்தான் செய்கிறது. நூற்றுக்குத் தொண்ணூறு விழுக்காடு தமிழர்களையே கொண்டிருந்ததும் அவர்களது உழைப்பால் பெருந்தோட்டங்கள் உருவாக்கப் பட்டதுமான தேவிகுளம் பீர்மேடு பகுதிகளை 'கம்யூனிஸ்ட் ஏ. கே. கோபாலன் முதல் நாயர் சர்வீஸ் சொசைட்டி மன்னத் பத்மநாபன் வரை கேரளத்தோடு இணைத்துக்கொள்ளச் செயத வெற்றிகரமான முயற்சியை தமிழர்கள் எப்படி மறந்துவிட முடியும்? இவையெல்லாம் மலையாளிகளின் கலாச்சாரத் தனித்தனமையை மட்டும் காப்பாற்றச் செய்த முயற்சிகளா? அல்லது அரசியல் - புவியியல் வேட்கைகளின் வெளிப்பாடுகளா? ஒரு ராஜன்பிள்ளை திகார் சிறையிலே மாண்டபோது உலகமே அழிந்துவிட்டதுபோல எல்லாக் கட்சி மலையாளிகளும் சேர்ந்து ஓலமிட்டது மலையாள தேசியத்தின் வெளிப்பாடல்லவா? இதில் கலாச்சாரத் தனித்தன்மை பிரச்சனை எங்கே உள்ளது?

தமிழ் திராவிட இயக்கங்கள் என்று ஜெயமோகன் குறிப்பிடுவது எவற்றை? அவற்றை அதனதன் பெயர் சொல்லி அழைப்பதில் என்ன தயக்கம்? நீதிக்கட்சி, சுயமரியாதை இயக்கம், திராவிடர் கழகம், தி.மு.க., அ.தி.மு.க., ம.தி.மு.க. ஆகியவற்றை 'திராவிட இயக்கங்கள்' என்ற பொதுத் திணைக்குள் அடக்கிவிடலாம் என்றும் அவற்றுக்குள் வேறுபாடுகள் ஏதும் இல்லை என்றும் நிறுவ விரும்புகிறாரா? அல்லது அவை எல்லாவற்றுக்குமே பெரியார்தான் மூலாதாரம் என்றும் பெரியாரிசத்தின் அடிப்படையே ஆரிய-திராவிட வேறுபாடு என்ற ஐதீகம்தான் என்றும் நிரூபிக்கவும் அந்த நிருபணத்தைச் செய்ய வேதாந்த தேசிகரைத் துணைக் கழைப்பதும்தான் அவரது நோக்கம் என்றும் படுகிறது. "எந்த ஒரு அரசியல் இயக்கத்தையும் நம்மால் நிரூபிக்க முடியாத பழங்கால



படிப்பகம்

www.padippakam.com

ஐதீக வரலாற்றின் அடிப்படையில் உண்டு பண்ணுவது பரம அபத்தமானது" என்றாலும் இந்து, இந்தியா, இந்துத்துவம், ராமஜென்மபூமி என்ற "யாராலும் நிருபிக்க முடியாத ஐதீக வரலாற்றின்" துணையுடன்தானே இங்கு ஒரு தேசம், தேசியம், சில அரசியல் கட்சிகள் உண்டுபண்ணப்பட்டிருக்கின்றன. இவற்றைக் கட்டுவதற்கு இந்த ஐதீகங்களே போதுமானவை என்பது அபத்தமானது. ஆனால் குறிப்பிட்ட அரசியல், சமூக, பொருளாதார சக்திகள் ஓர் அரசியல் உறுதிப்பாட்டுடன் இந்த அபத்தமான ஐதீகங்களைப் பயன்படுத்தித்தானே அரசியல் இயக்கங்களையும் தேசத்தையும் "உண்டு பண்ணியிருக்கின்றன" என்பது அபத்தமானதல்ல; நிதர்சனமானது. உலகிலுள்ள பல தேசங்களும் தேசியங்களும் இத்தகைய ஐதீகங்களின் மீது எழுப்பப்பட்டவைதான் என்பதை பெனடிக்ட் ஆண்டர்ஸன் Imagined Communities என்ற நூலில் விளக்கியுள்ளார். Historic Nations, a Historic Nations என்ற ஹெகலிய ஐதீகங்களை மார்க்சும் ஏங்கல்சும் கூடப் பகிர்ந்து கொண்டிருந்தனர்.

ஆரியர்-திராவிடர் என்ற வேறுபாட்டை முதலில் உருவாக்கியவை திராவிட(ர்) அல்லது பார்ப்பன எதிர்ப்பு இயக்கங்களல்ல. ஜெர்மானிய ரொமாண்டிக் சிந்தனையாளர்களும ஆங்கிலேய வரலாற்றறிஞர்களும் எழுதியவற்றின் அடிப்படையில் தங்களது 'ஆரிய மேன்மை' பற்றிப் பெருமையடித்துக் கொள்ளத் தொடங்கியவர்கள் பார்ப்பனர்கள்தாம். 'ஆரியர்கள் மத்திய ஆசியாவிலிருந்து வந்தவர்கள்', 'வந்தேறிகள்' என்ற கருத்தை நீதிக்கட்சி தோன்றுவதற்கு முன்பே தமிழறிஞர்கள் பலரும் கொண்டிருந்தனர். பார்ப்பன சாதியைச் சேர்ந்த பி. டி. சீனிவாசய்யங்கார் போன்றோரும் இத்தகைய கருத்துகளைப் பகிர்ந்து கொண்டிருந்தனர். மராத்தியத்தில் பார்ப்பனரல்லாத இயக்கத்தைத் தொடங்கிய ஜோதிபா ஃபுலெ, தமிழ்நாட்டில் இந்நூற்றாண்டுத் துவக்கத்தில் மறைந்து போன தலித் அறிஞர் அயோத்திதாஸ் பண்டிதர் ஆகியோரும் இக்கருத்தைக் கொண்டிருந்தவர்களே. ஃபுலெயைத் தனது ஆசானாகக் கருதிய அம்பேத்கரும்கூட சில சமயம் இக்கருத்தை ஏற்றுக் கொண்டிருக்கிறார். இராமாயணத்தை ஆரிய-திராவிடப் போராட்டத்திற்கான எடுத்துக்காட்டாக நேரு பார்த்திருக்கிறார்.

இந்திய வரலாறு பற்றி மரபின (racial) அடிப்படையில் முன்வைக்கப்பட்ட விளக்கங்களும் வாதங்களும் பல்வேறு தரப்பினரால், பல்வேறு அளவுகளில், பல்வேறு விதங்களில் பகிர்ந்து கொள்ளப்பட்டன. அத்தகைய வரலாறெழுதுநெறி (historiography) மேலோங்கியிருந்த காலத்தில் வாழ்ந்த ஃபுலெ, பெரியார், அம்பேத்கர் போன்றோர் மீது அத்தகைய விளக்கங்கள் தாக்கம் ஏற்படுத்தியிருந்ததில் வியப்பில்லை. ஆனால் அவ்விளக்கங்களிலிருந்துதான் அவர்கள் தங்கள் அரசியல், சமூக, தத்துவக் கோட்பாடுகளை உருவாக்கிக் கொண்டார்கள் என்று கூறுவதுதான் அபத்தமானது. இந்திய சாதிய சமுதாயத்தில் நிலவும் யதார்த்தமான முரண்பாடுகளும் ஒடுக்குமுறைகளும்தான் அவர்களது அரசியலுக்கும் தத்துவத்துக்குமான அடிப்படையாக அமைந்தன. அவற்றுக்கு வலுச்சேர்ப்பதற்காக அன்று கிடைத்த 'வரலாற்று விளக்கங்கள்' அனைத்தையும் பயன்படுத்திக் கொண்டனர். பார்ப்பனர்கள் ஆரியரல்லாதவர்கள் அல்லது திராவிடர்கள் என்ற கருத்து அன்று மேலோங்கியிருக்குமேயானால் அப்போதும்கூட ஃபுலெ, பெரியார் போன்றோர் பார்ப்பன எதிர்ப்பைத் தொடங்கித்தான் இருப்பார்கள்.

இன்று மரபின அடிப்படையில் வரலாற்றை விளக்கும் போக்கு மங்கி வருகிறது. (அம்பேத்கர், தம் காலத்திலேயே அதைக் கைவிடத் தொடங்கினார்.) வரலாறு, மொழியியல், மானுடவியல், தொல் பொருளியல் முதலிய துறைகளைச் சார்ந்த அறிஞர்கள் மேற்கொண்ட ஆராய்ச்சிகளின் பயனாகக் கிடைத்துள்ள விவரங்களின் அடிப்படையில் வரலாற்றறிஞர் ரொமிலா தாப்பர் கூறுகிறார் : சிந்துவெளி நாகரிகமும் நகரங்களும் அழிந்ததற்குக் காரணம் ஆரியர்களின் படையெடுப்பு அல்ல; மாறாக மிகப் பரவலாகவும் ஆழமாகவும் ஏற்பட்டுவந்த சூழலியல் (ecological) மாற்றங்கள்தாம்; பல்வேறு மரபினங்களுக்கிடையே ஏற்பட்ட மோதல்களால்தான் சாதிய சமுதாயங்கள் தோன்றியிருக்க வேண்டும் என்ற அவசியம் இல்லை; வேதகாலப் பண்பாடு என்பது இந்தோ-ஐரோப்பியப் பண்பாட்டின் சில கூறுகள், சிந்து சமவெளிப் பகுதியில் நிலவிய பண்பாட்டின் சில கூறுகள் ஆகியவற்றின் கலவையாகும்; சமஸ்கிருதம் பரவியதற்குக் காரணம் படையெடுத்து வந்த ஆரியர்களின் வெற்றியல்ல; மாறாக பண்பாட்டுக் கூறுகளும் தொழில் நுட்பங்களும் ஓரிடத்திலிருந்து மற்ற இடங்களுக்குப் பரவியதுதான்; வேதகால சமஸ்கிருதத்தின் சொற்றொகுதியும் ஒலியியலும் மூல-திராவிட மொழிக் கூறுகளைக் (Proto - Dravidian) கொண்டுள்ளன (*'Interpreting Early India'* by Romila Thapar, OUP. 1993)

இக்கருத்துகளைக் கொண்டு பெரியாரின் பார்ப்பன எதிர்ப்பை அபத்தமென்று மறுதலிக்க முடியாது (இந்தியாவில் பார்ப்பனியம் ஒரு அடக்குமுறைச் சக்தி என்பதை ரொமிலா தாப்பரோ - ஏன் சச்சிதானந்தமோகூட மறுப்பதில்லை). பெரியாரின் சிந்தனைக்குள்ள அடிப்படையே வேறு :

> இந்நாட்டில் வாழும் தற்காலப் பார்ப்பனர்கள் மத்திய ஆசியாவில் இருந்து குடியேறிய ஆரியர்களின் நேரடியான சந்ததியினர் அல்ல என்பது உண்மையே ஆனாலும் அவர்களை திராவிடர்கள் என்று ஒப்புக் கொள்ளாமைக்குக் காரணம் அவர்களுக்கும் நமக்கும் உள்ள பண்பு, கலை, ஆசாரம், நடப்பு ஆகிய வேறுபாடுகள்தாம். நம் கழகத்தில் யாரையும் பிறவி காரணமாக வேறினத்தார் என்று ஒதுக்கவில்லை. பழக்க வழக்கங்களையும் பார்த்துதான் அவர்களுக்கும் நமக்கும் இருந்துவரும் அடிப்படை பேதத்தைக் கருதித்தான் பிரிவினை செய்கிறோம். (*விடுதலை*, 5.10.1948)
>
> நாம் பிறவிபார்த்து இனப்பிரிவினை செய்யும்படி கேட்கவில்லையே. அவரவர்கள் கொண்டாடும் உரிமைகளைக் கொண்டுதானே பிரிக்கும்படி சொல்லுகிறோம். (*பெரியார் ஈ.வேரா சிந்தனைகள்*, ப. 547 - 548)

'திராவிடர்' என்பதும்கூடப் பெரியாரைப் பொறுத்தவரை, அடிப்படையில் பார்ப்பனியத்தை ஏற்றுக் கொள்ளாத ஒரு சமூகத் தொகுதிக்கான குறிச்சொல்தான் - சில சமயம் அவர் மரபினத்தோடு அதைத் தொடர்புபடுத்திப் பேசியுள்ள போதிலும்.

பெரியாரின் அடிப்படைக் குறிக்கோள் என்ன ?

> சாதி வேறுபாடுகள், உயர்வு தாழ்வுகள் ஒழிய வேண்டும் என்பதுதானே நமது ஆசை. சாதியைக் கைவிட்டு, சாதி ஆசாரத்தைக் கைவிட்டு, 'அனைவரும் ஒன்றே' என்ற கொள்கையை ஏற்க முன்வரும் பார்ப்பனரை நாம் ஏன் ஒதுக்கப் போகிறோம்... வேற்றுமையில்லாத மனித சமுதாயம் வேண்டுமென்பதுதான் நமது குறிக்கோளே ஒழிய, வேற்றுமை பாராட்டி யாரையும் ஒதுக்கி வைக்க வேண்டும் என்பதல்ல நமது குறிக்கோள். (*விடுதலை*, 5.10.1948)

பெரியாரை ஒரு கேலிச் சித்திரமாக மாற்றுவதைக் கைவிட்டு அவரது எழுத்துக்களை அவர் வாழ்ந்த வரலாற்றுச் சூழல்கள், நிகழ்வுகள் ஆகியவற்றுடன் தொடர்புபடுத்தி வாசிக்கையில் "யாராலும் நிருபிக்க முடியாத அபத்தமான ஐதீகங்களுக்கு" அடியில பொதிந்துள்ள சமூக உண்மைகளை, தார்மீக நியாயங்களைப் புரிந்து கொள்ள முடியும். சச்சிதானந்தன் கூறுகிற Triple Hegemony பற்றிப் பெரியார் கூறியுள்ள ஆழமான கருத்துகளைத் தெரிந்து கொள்ள முடியும். அந்த திரிசூலத்திலுள்ள பார்ப்பன ஆதிக்கம், ஆணாதிக்கம் பற்றிய பெரியாரின் கருத்துகளின் பொருத்தப்பாட்டைப் பற்றி ஒரு கணமேனும் சிந்தித்துப் பார்க்க முடியும். ஆனால் ஜெயமோகனின் பார்ப்பனியமும் சச்சிதானந்தத்தின் ஆகாயத்தில் மூக்கைப் புதைத்துக் கொள்ளும் தோரணையும் இதற்கெல்லாம் இடம் கொடுக்குமா என்பது சந்தேகமே.

9.10.95

சென்னை

**எஸ். வி. ராஜதுரை**

**காப்ரியேல் கார்ஸியா மார்க்வெஸ்**
**கல்குதிரை 12**

**விலை ரூ.100**

மார்க்வெஸ்ஸின் படைப்புகள், பேட்டிகள்,
மார்க்வெஸ் பற்றி பிறருடைய எழுத்துகள்
அடங்கிய விரிவான தொகுப்பு

**கோணங்கி**
6162 இந்திரா நகர்
கோவில்பட்டி 627 702



படிப்பகம்

www.padippakam.com

போன்ற உணர்வை அடைந்தான். இவன் வரைந்து உருவாக்கியபின் கேன்வாஸின் வெளியே அவள் நழுவிக் கொண்டிருப்பதுபோல இருந்தது. இது அவனுக்கு சுய அனுதாபத்தோடு கூடிய மங்கலான ஒரு மன அருவருப்பை ஏற்படுத்தியது. அருவருப்பைத்தாண்டி சமாதானம் அடையவும் பிரக்ஞையின்றி முயன்று கொண்டிருந்தான். அவளது கண்களை முத்தமிட்டுக் கொண்டிருந்தபோது இதை நிறுத்திவிடேன் என்று அவன் கேட்டது அபத்தமாக இப்போது விரிந்து கொண்டிருந்தது. ஷீலா வேறு யாரோடும் இப்போது படுக்க முடியாது என்று சொன்னாள். இங்கேயே இருக்கலாம் என்றாள். அவள் உணர்வின் இறுக்கம் கலைந்து நினைவு திரும்பும்போது கண்களில் படர்ந்திருந்த வெறுமை அழகிய மன வருத்தத்தை அவனுக்கு ஏற்படுத்தியது. இருளுக்குள் அவள் கண்களில் தெரிந்த வெறுமை போதையாகவும் இருந்தது. பாலு படிகளில் மேலே ஏறி வருவது இருளுக்குள் உருளும் சப்தமாய் கேட்டது. ஷீலாவின் மேல் கிடந்த கால்களை எடுத்துக்கொண்டு பற்றியிருந்த வியர்வை பிசுபிசுப்போடுள்ள அவளது உள்ளங்கையில் உதடுகளை ஒற்றி எடுத்துவிட்டு மொட்டைமாடியின் ஒரு இரண்டரையடி உயர படியில் இறங்கி ஓடுகள் பதித்த தரையில் நீளமாய்ப் படுத்தான்.

நட்சத்திரங்கள் ஆழமாய் வன்மத்தோடு ஜொலித்தன. மேலேயுள்ள வெளிச்சத்தையும் வெளிறிய வெடித்த சாம்பல் மலையொன்று தலைகீழாய் தொங்குவது போன்று தூரத்தில் தெரிந்த ஒரு மேகத்தையும் பார்க்க வெறுப்பாய் இருந்தது. சுமாராக ஏழு மணிவாக்கில் குடித்த பீரும் **90ml McDowels Brandy**யும் வெகுவாக தணிந்திருப்பதை உணர்ந்தான். லேசாக சரிந்து படுத்தபோது கைப்பிடிச்சுவரின் ஒரு இடுக்கு வழியே எங்கிருந்தோ வந்த மின் வெளிச்சம் முகத்தில் அறைந்தது. மீண்டும் பழைய நிலைக்குத் தன்னைச் சரி செய்துகொண்டு படுத்தான். ஷீலாவோடு வந்த பெண்ணை குமரேசன் முடித்துவிட்டு எழும்பிப் போனதும் வேறு ஒரு ஆள் அந்த இடத்துக்குப் போவது தெரிந்தது. அது யார் என்று தெரியவில்லை. அந்த இடத்தில் அசௌகரியமிக்க சௌகரியங்களை ஏற்படுத்திக் கொடுத்தவனுக்கு நண்பனாக அவன் இருக்கக்கூடும் என்று யூகித்தான். அவன் நடந்து போனவிதம் அருவருப்பூட்டும் நிமிர்வோடு இருந்தது. அவன் கைவீசிய ஒரு கணம் போட்டியில் பங்கெடுக்கப் போகிறவனின் உடல் விறைப்பை அவன் அடைந்திருப்பது போன்ற ஒரு தோற்றத்தை ஏற்படுத்தியது. அந்தக் காட்சி ஏற்படுத்திய அருவருப்பான உணர்வை விலக்க முயன்று வானத்தில் எதையும் பார்க்கப் பிடிக்காமல் மீண்டும் அருவருப்புக்குத் திரும்பினான். அடுத்தும் ஒன்றிரண்டு பேர் காத்திருந்தார்கள். அவர்கள் அவளின் எந்த இடத்தை அடைய குறியாக இருக்கிறார்களோ அந்த இடம் தனக்கு பொருட்டாகவும் பொருட்டில்லாதிருப்பது போலவும் தோன்றியது. அவர்களது மனம் உருவாக்கும் தட்டையான ஆடுகளத்துக்கு வெளியே தனது ஓவியங்கள் லட்சக் கணக்கில் நிறைந்திருப்பது போல அவனுக்கு இருந்தது. ஷீலா லேசாக வெறுப்பாக முனகுவது கேட்டது. பாலு பதிலுக்கு ரகசியமாகத் திட்டிக் கொண்டிருந்தான். ஷீலா பதிலுக்கு மலையாளத்தில் திட்டினாள். அவனுக்குப் படுத்திருக்கப் பிடிக்காமல் எழுந்தான். சிகரெட் ஒன்றைப் பற்றவைத்து உறிஞ்சிய புகை சுரத்தில்லாமல் இருந்தது. பாலுவுக்கும் ஷீலாவுக்கும் நடந்த தகராறில் காது வலிந்து நின்று கொண்டிருந்தது. எந்த தொந்தரவும் செய்யாமல் அவளோடு படுத்திருக்கலாம் என்று அவன் நினைத்தான். சண்டை மேலும் வலுத்துக் கொண்டிருந்தது. அவளது வசை கலந்த மலையாளத்தின் ஒலி எழும்பிக் கொண்டிருந்தது. இருளுக்குள் ஒலி படர்ந்து கீழறைகளுக்கும் சாலைக்கும் தாவி நின்றது. மீண்டும் படர்ந்து தாவி நின்றது. அவளது குரல் ஓயும் மௌனத்துக்குள் வெறியும் கோபமும் கலந்த பாலுவின் விம்மல் கேட்டுக் கொண்டிருந்தது. கடைசியாக காதை கூர்மையாக்கிக் கொண்டு கேட்ட குருட்டு மௌனத்தில் அவள் விலாவில் பாலுவிட்ட உதையின் சத்தம் கரைந்த போது அவள் திருப்பித்தாக்கத் துவங்குவதை உணர்ந்தான். வேகமாக படிகளில் ஏறி அவர்களுக்கு மத்தியில் உட்கார குனியும்போதே 'ஏன்' என்று மிகவும் ரகசியமாகக் கேட்டான். கலவரமாய் ஏதேனும் நடந்து யாரேனும் ஒருத்தி இறந்து போய் விடுவாளோ என்று தோன்றியது. போலீஸ் வந்தால் எப்படி தப்பிப்பது என்றும் தப்ப இயலாது என்பதும் அவனுக்குள் ஒரு பதட்டத்தை இப்போது ஏற்படுத்தி யிருந்தன. அந்த தேசிய நெடுஞ்சாலையின் அரை கி.மீ தூரத்திலிருந்த போலீஸ் ஸ்டேசன அடுத்த கட்டடமாக இருப்பதுபோல தோன்றியது.

பாலுவின் உதட்டில் இரத்தக் கசிவு இருப்பது இருட்டில் தெரிந்தது. 'கடிச்சிற்றா தேவடியா' என்று சொல்லியபடி பாலு அவனை விலக்கிக்கொண்டு நிர்வாணமாக அவளை உதைக்க எகிறினான். மேலே மிதந்து வந்த வெளிச்சத்தில் கால்கள் பளபளத்து மீண்டும் இருண்டது. இரண்டொரு கணங்கள் மௌனமாக கழிந்த பின் இருட்டு, மூவரையும் வெறுமையோடு சூளுவது கண்டு பயந்து இவன் 'ஏன் கடிச்சே' என்று கேட்டான். பாலுவிடம் ஏதேனும் விஷயங்களைக் கேட்கும் போதுள்ள அதே விதமான த்வனியோடு அவன் அவளைக் கேட்டது பாலுவுக்கு எரிச்சலை ஏற்படுத்தியிருக்க வேண்டும். அவனைத் தாக்குவதற்குரிய முகபாவத்தை பாலு திடீரென அடைவதைப் பார்த்தான். 'இவம்மாருக்கு இங்ஙனதன்ன மனசிலாக்கணும். ஞானும் மனுஷியாணல்லே' என்று அவள் முடுக்கில் நீண்டு படுத்தாள். அவனிடம் எதுவும் பேசாமல் எழுந்து போவதுதான் அவன்மீது தான் தொடுக்கும் உச்சகட்ட தாக்குதல் என்று நினைத்துக் கொண்டு பாலு எழும்பி போனான். அவன் எழும்பி போன விதத்தையும் பாலுவின் பார்வையையும் தவிர்த்தபோது வன்மமான சாம்பல் இருளை உணர்ந்தான். அந்த சமயத்தில் ஷீலாவின் கரங்கள் ஓட்டுத்தரையில் உட்கார்ந்தபடி ஊன்றியிருந்த இவனது இடது கரத்தை பற்றியிருந்தன. கரங்களை விலக்கி அவளருகில் மிகவும் நெருக்கமாக ஒட்டிக்கொண்டு படுத்தான். அவளது சூடான மூச்சு ஒரு பக்க ஓர நெஞ்சில் தெரிந்தது. சில கணங்களில் மல்லாந்து கண்களை மூடிக் கொண்டு படுத்திருந்தாள். அவனுக்கு ஜெயாவின் ஞாபகமாய் இருந்தது. அதே சமயத்தில அவன் உடனிருந்த நண்பர்கள் அனைவருக்கும் அப்போது தன்மீது வெறுப்பு கவிந்து கொண்டிருப்பதை தன பார்வையில் படும்படியாய் அவர்கள் நடந்து திரிந்த விதத்தில் உணர்ந்தான்.

குமரேசன் திரண்ட சதைகளின் சிலபகுதிகளில் குருட்டு ஒளி மினிர ஜட்டியோடு மாடியின் இரண்டடி உயர மதில சுவரில் கால்படாமல் மறுபக்க திண்டில் குதித்தான். அவன் மற்ற நண்பர்களைவிட சற்று உற்சாகமாகவும் தன்மீது அதிகமான கோபமில்லாமலும் இருப்பதுபோல அவனுக்குத் தோன்றியது. அவனது உற்சாகம லேசான மனக்கசப்பை ஏற்படுத்துவதையும் உணர்ந்தான். ஷீலாவோடு வந்த பெண்ணோடு குறைந்தபட்சம் இரண்டு தடவைகளேனும் போய் வந்திருக்கிறான் என்பதையும் யூகிக்க முடிந்தது. குமரேசனும் நண்பர்களும் இருளுக்குள் ரகசியமாகப் பேசிக் கொண்டது யூகிக்க முடியாதபடி மர்மத் தன்மையோடு இருந்தது. ஷீலாவோடு கண்டிப்பாகப் போய் விடவேண்டும் என்கிற எண்ணம் பிற நண்பர்களுக்கு இருப்பதுபோல குமரேசனுக்கும் இருப்பதை உணர்ந்தான். ஷீலாவோடு போய்விடவேண்டும் என்பது ஒருவித சவாலாக அவர்களுக்கு மாறி இருப்பதாக அவனுக்குப் பட்டது.

ஷீலாவோடு வநத பெண் எந்திரம்போல எல்லோருககும ஈடுகொடுத்தபடி வெறுந்தரையில் கனத்த பிருஷடங களோடும பெரிய மாருகளோடும மல்லாந்து படுத்திருப்பதும நபாகள் மாறி மாறி அவளிடம் போய்க கொண்டிருப்பதும் ஷீலாவோடு படுத்திருந்த இடத்திலிருந்து முக்கோண திசையில் பத்தடி தூரத்தில் தெரிந்தும் தெரியாமலுமாய் இருந்தது. ஆட்கள் தொடர்ந்து குறுக்கு நெடுக்காக நடந்து கொண்டிருந்தார்கள். உடலசைவுகளிலும் பருமனிலும் சிறிய வேறுபாடுகள் இருந்தும் இருட்டுக்குள் இன்னின்னார் என்று அறிந்து கொள்ள இயலவில்லை. அவன் சரிந்து படுத்தபடி



படிப்பகம்

www.padippakam.com

வானத்தைப் பார்க்க முடிந்தபோது ஞாபகங்கள் நகர மறுத்து நின்று கொண்டிருந்தன. ஷீலா இப்போது உதட்டை இறுகப் பற்றி அவனது இடுப்பைச் சுற்றி வளைத்தாள். அவன் எந்த உணர்வுமற்று வறண்ட நிலையிலிருந்தான். தான இரண்டாவது முறையாக அவளோடு உறவுகொள்ள முடியாது என்று தோன்றியது. வெட்கமும் கூச்சமும் அடைந்தான். அவள் தன்னை மிதித்துத் தள்ளிவிட்டுப் போய் விடுவாள என்று நினைத்தான். அவள் அவனது பேண்டைப் பிடித்து மூர்க்கமாக இழுத்தாள். அவளது இடுப்பைச் சுற்றி வளைத்து கண்களில் முத்தமிட்டான். 'சீக்கிரம் முடிச்சிற்று வாடே' என்று அதட்டும் த்வனியுடன் சொல்லிவிட்டு அப்படிச் சொல்ல முடிந்த நிமிர்விலும் பிற நண்பர்களின் மனோபாவத்தைப் பூர்த்தி செய்து விட்ட சாதகமான விறைப்பிலும் குமரேசன் பின்னகர்ந்து செல்வதை உணர்ந்தான். ஷீலாவின் கண்கள் இப்போது வசீகரமாயிருந்தன. நண்பர்களின் மர்மஒலிகள் கேட்காமல் போயிருந்ததை அவன் அறியவில்லை. இருட்டும் ஒளியும் எதுவும் கண்களில் படாமல் அவளது கண்களும் பின் கழுத்தும் அவன் கண்களை மறைத்திருந்தன. சில நிமிடங்களில் எழுந்து விலகினான். கீழே இறங்கியபோது சில நண்பர்கள் அவளுக்காக வரிசையில் நின்று கொண்டிருந்தார்கள். இவனைப் பார்த்துச் சிரிக்க முயற்சித்தார்கள். அவர்கள் சற்று முன்பு வரை தன்மீது கொண்டிருந்த மௌனமான வெறுப்பை சரி செய்து கொள்ள முயற்சிப்பது போல இவனுக்குத் தோன்றியது. அவர்களுக்கு தன்மீது வெறுப்பிருந்த சமயத்தில் தனக்கும் அவர்கள் பேரில் வெறுப்பிருந்திருக்கும் என்கிற கூட்டான கற்பனையில் அவர்கள் இருந்தது அவனுக்கு பதிலுக்குச் சிரிக்க முயற்சிக்கவோ சைகை செய்யவோ இயலாத ஒரு நிலையை உருவாக்கியிருந்தது அவமானமாக இருந்தது. இந்த சில மணிநேரங்களுக்குள்ளாக அவர்களுக்கு தன்மீது விரோதமான அபிப்பிராயம் ஏற்பட்டு விட்டதும் மிகவும் சாதாரணமாக வாக்கியத்தைக்கூட இவனிடம் பேசும் போது அழுத்தமான ஒலியோடுதான் பேசமுடியும் என்கிற நிலையை அவர்கள் அடைந்திருப்பதும் அவனுக்கு மர்மமாக இருந்தது.

சில யோசனைகளோடு கீழிறங்கி வரும்போது செல்வம் தன்னோடு கீழிறங்கி வருவதை உணர்ந்தான். செல்வதோடு சாலையில் இறங்கி நடக்கும்போது பூச்சிகளின் சப்தம் நிரம்பியிருந்தது. சில கால்மணி நேரங்கள் சாலையை ஒட்டிய திண்டில் உட்கார்ந்திருந்தான். திண்டின் பின்பகுதியில் இருட்டாய் நிற்கும் செடிகளுக்குள் இருட்டான வெள்ளம் குறைவான ஒலியோடு ஓடிக்கொண்டிருந்தது. அது எதனாலோ வறட்டுத்தனமான சத்தம் போல இவனுக்குக் கேட்டது. பேருந்துகள் சில நிமிஷங்களுக்கு ஒரு முறை சென்று கொண்டிருந்த சத்தம் வெளிச்சத்தோடு மூண்டு வந்து மெதுவாகக் கரைந்தது கொஞ்சம் இலகுவாகவும் இறுக்கமாகவும் இருப்பதுபோல இருந்தது. தூக்க முழிப்பு கண்களின் உறுத்தலில் தெரிந்தது. தலைவலியின் மெல்லிய இழைகள் நெற்றியின் இரண்டு பக்கங்களையும் மெல்லிசாக இழுத்துக் கொண்டிருந்தன. முகம் கழுவிக் கொண்டு கொஞ்சம் தண்ணீர் குடிக்கலாம் போல இருந்தது. எழுந்திருக்கவும் பிடிக்கவில்லை. செல்வத்திடம் சொல்லலாம் என்று நினைத்துக்கொண்டு சொல்லாமலிருந்தான். செல்வத்திடம் வார்ப்பில் கிண்டப்பட்ட உப்புமாபோல பேசுவதற்கு நிறைய விஷயங்கள் இருந்தன. அவற்றுக்கு மௌனமாக ஈடு கொடுக்க நிறைய உழைக்க வேண்டியிருந்தது. சிறிது நேரத்தில் மற்ற ஒலிகளை கேட்க முடியாமலாகி இருளில் வளவளக்கும் செல்வத்தின் குரலை மட்டுமே அவனால் கேட்க முடிந்தது.

○

அந்த குட்டி அறை அந்த குட்டி நகரத்தின் ஒதுக்குப்புறத்தில் வெளியூர் செல்லும் பேருந்துகளின் நுழைவாயிலுக்கு மிகவும் பக்கத்தில் ஒரு பழைய கட்டிடத்தின் முதல் மாடியில் இருந்தது. படிக்கட்டுகளில் நிறைய குப்பைகள் சிதறிக்கிடந்தன. படிக்கட்டின் மேலேறி அறையை அடைவது வரையில் கீழே வரிசையாக அடுக்கப்பட்டிருக்கும் புரோட்டா கடைகளிலிருந்து வெளியேறி காதைக கொத்துவது போன்று கேட்கும் இரும்பு ஒலிகளும கேட்கவில்லை. அறைக்கு வெளியே ஐந்தாறு நபாகள நின்றுகொண்டிருந்தாகள். ஐம்பது வயதுக்கு மேலுள்ள ஒருத்தி இருபத்தி ஐந்து வயதிருக்கும் ஒருத்தியை கூட்டிக் கொண்டு வந்திருந்தாள். இருவரும் பரஸ்பரம் இவனுக்கு நெருடலான சற்று உரத்த குரலில் தாங்கள் மிகவும் இலகுவாக இருக்கிறோம் என்பதை பிரகடனப்படுத்துகிறத் த்வனியில் பேசிக்கொண்டிருந்தார்கள். அவர்களது உரையாடலின் அடுக்குகள் உடைந்து கீழே விழுவதும் அதை சரி செய்ய மிகுதியான சக்தியை அவர்கள் செலவிட்டுக் கொண்டிருப்பதும் அவனுக்குள் வன்முறையைத் தூண்டிக்கொண்டிருந்தது. ஷீலாவிடமிருந்து அவன் பெற்றுக்கொண்ட காளான் உடலெங்கும் படர்ந்து கண்கள் வழியே வெளியே நீண்டு விழுவதுபோல கண்களில் சதைகளுக்குள் மணல் ஊர்வது போன்ற உறுத்தலெடுத்தது. காலையில் அவன் குறியை சுற்றி படர்ந்த மணல் போன்ற கொப்பளங்கள் கண்களில் பெரிய பெரிய கொப்பளங்களாய் விரிந்து கொண்டிருந்தன. லேசான நீர்க்கடுப்பில் அறை தொங்கிக் கொண்டிருப்பதுபோல உணர்ந்தான். மணல் உறுத்தல் போல ஷீலாவின் மேல் வெறுப்பாய் இருந்தது. அவளை சுற்றி படர்ந்து விரியும் காளான் தனக்குள் ஊடுருவி தனது முகம் உருகி கோணி இருப்பதுபோல அவனுக்குத் தோன்றியது. அவனுக்கு பதினெட்டாவது சீட்டு கொடுக்கப்பட்டிருந்தது. பத்து வயதுக்குள் உள்ள சிறுவன் பெயரை பதிவு செய்துவிட்டு சிகரெட் அட்டையில் எழுதப்பட்ட எண்ணை கொடுத்திருந்தான.

டாக்டர் அறையின் பக்கத்து அறை மிகவும் சிறியதாக இருந்தது. மூன்று மர பெஞ்சுகள் போடப்பட்டு வரிசையாக ஆண் பெண் நோயாளிகள் உட்கார்ந்திருந்தனர். உட்கார்ந் திருந்தவர்களுக்கு நடுவில் இரண்டடி நீளத்தில் பெஞ்சின் நீளத்திற்கு ஒரு இடைவெளி இருந்தது. ஒவ்வொருவரும் மற்றவரை உற்றுப் பார்த்துக் கொண்டிருக்க வேண்டிய அறை அது. ஒவ்வொருவரின் கண்களும் எதிரே பக்கத்துச் சுவரில் ஊர்ந்து கீழே தரையில் விழுந்து காளானின் விறைப்போடு அலைந்து கொண்டிருந்தன. அந்த அறைக்குள் உட்கார்ந்திருந்தான். பக்கத்தில் உட்கார்ந்திருந்தவனின் காதுக்கு மேலுள்ள பக்கமாக மண்டையில் காலைத் தூக்கி அடிக்க வேண்டும் என்று தோன்றிய எண்ணம் கரைந்த போது அறையின் சுவர்களை சுற்றி ஹெச்.ஐ.வி., பலவிதமான பால்வினை நோய்களின் வர்ண புகைப்படப் போஸ்டர்கள் பெரிது பெரிதாய் ஒட்டப் பட்டிருப்பதைப் பார்த்தான். எதிரே மூலையில் உள்ள தலைக்கு உயரே ஒரு டேபிள் பேன், சிறிய ஓசையுடன் மிகவும் வேகமாகச் சுற்றிக் கொண்டிருந்தது. அங்கு வந்திருந்த பெண்களின் முகத்தை உன்னிப்பாகப் பார்த்தான். அவர்களில் எவருக்குமே ஷீலாவின் கண்கள் இல்லை. கதவு திரைகளுக்குள் ஒளிந்திருந்து மனிதர்களைப் பார்க்கும் கண்களே அவற்றில் பெரும்பாலானவை. ஷீலாவின் கண்களில் தெரிந்த வன்முறைக்கு தலைகீழான ஒரு வளவளா கண்களாய் அவை இருந்தன. அவன வயதை ஒத்த ஆண்கள் சில பேர் பக்க வாசல் வழியே வெளியே போவதும உள்ளே வருவதும் அந்த சிறு பையனிடம் ஏதேனும கேட்பதுமாய் இருந்தார்கள். அவன் எங்கேயோ அடிக்கடி பார்க்கிற பெயரை ஞாபகம் வைத்துக் கொள்ளாத ஒருவன் சுத்தமாக அறியாதது போன்ற முகபாவத்தோடு அவனை மிகவும் நுட்பமாக கண்காணித்துக் கொண்டிருந்தான். அறையை விட்டு வெளியே வந்து கைப்பிடி சுவர்களை பிடித்தபடி கீழே பார்த்தான். ஆள் அரவங்கள் பலவிதமான இடைவெளிகள் கொண்ட வாகன ஒலிகளோடு - சமயம் மஞ்சள் சிவப்பாக மங்கி கொண்டிருப்பதை கவனமற்ற நிலையில் உணர்ந்தான். கீழே படிக்கட்டுகளில் அவன் பார்த்த இரு பெண்களும் விடாமல் தொடர்ந்து முன்பு போலவே பேசிக் கொண்டிருந்தார்கள். அதை கவனிக்க பிடிக்காமல் மூன்றடி நீள மாடி வராண்டாவில் நடக்கத் தொடங்கினான். இன்னும் அவனுக்கு, முன்னால் குறைந்த பட்சம் பத்துப்



படிப்பகம்

www.padippakam.com

## எழுத்தும் பிம்பமும்

மனுஷ்ய புத்திரன்

*"தினமும் ஒரு மணி நேரமாவது புத்தகம் படியுங்கள்"*
*- சென்னை தொலைக்காட்சியின் ஒரு ஸ்லைடு அறிவுரை.*

கடந்த பத்தாண்டுகளில் தமிழ் மக்களின் பொழுதுபோக்கு மற்றும் மனித உறவுகள் சார்ந்த கலாச்சார நடவடிக்கைகள் தீவிர மாறுதல்களுக்கு உள்ளாகிவிட்டன. வீட்டிலும் வெளியிலும் ஆதாரமான சமூக பிணைப்புகளைப் பேணக்கூடிய பாரம்பரியமான மனோபாவங்களும் வழிமுறைகளும் ஒரே வீச்சில் துடைத்தெறியப்பட்டது போல ஓய்வுநேரங்கள் மின் பிம்பங்களால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளன. இதற்கு முன் நமது சமூகத்தில் வேறெந்த நவீன - விஞ்ஞான சாதனமும் இத்தனை விரைவாக நுழைந்து இவ்வளவு விரிவான ஆதிக்கத்தை செலுத்தியதில்லை. இன்னும் சரியான போக்குவரத்து, மருத்துவம், குடிநீர், கழிப்பிட வசதிகள் இல்லாத கிராமங்கள்கூட செயற்கைக் கோள்களோடு இணைக்கப்பட்டு விம்பிள்டன் பந்தயங்கள் நேரிடையாக ஒளிபரப்பாகின்றன. பண்டிகைகள் தமது மரபான குறியீடு களையும் கொண்டாட்டங்களையும் இழந்து தொலைக் காட்சியின் சிறப்பு நிகழ்ச்சிகளாக மாறிவிட்டன.


கருத்துருவங்களால் அதிகாரத்தைக் கட்டமைக்கும் செயலுக்கு மத நிறுவனங்கள் ஆற்றிவந்த பணியை இந்த நூற்றாண்டில் பெரும் வலிமையுடன் தகவல் தொடர்புச் சாதனங்கள் கைப்பற்றிக் கொண்டன. பொருளியல் - கலாச்சார - அரசியல் மேலாண்மைகளைக் கொண்டிருந்த வர்க்கங்கள் தமது அதிகார கட்ட மைவிற்கு இணக்கமான மனங்களை வடிவமைப்பதற்குத் தகவல் தொடர்பு சாதனங்களைப் பயன்படுத்திக் கொண்டன. தகவல் தொடர்பு என்பது தகவல் உருவாக்கமாகவும் அறிதல் என்பது கற்பித்தலாகவும் மாறியது. உலகின் சமூக அரசியல் நிகழ்வுகள் பற்றி அதிகாரபூர்வமான 'உண்மைகளும்' 'வரலாறுகளும்' உருவாக்கப்பட்டன. இத்தகைய அதிகாரபூர்வமான உண்மை களை நிலைநாட்டுவதில் தொலைக் காட்சியின் கண்டுப்பிடிப்பும் விரிவாக் கமும் மிகப்பெரியத் தாண்டுதல்களை நிகழ்த்தியுள்ளது. அதற்கு முந்திய எல்லாத் தொடர்பு சாதனங்களையும் பின்னுக்குத் தள்ளிவிட்டது.

1980கள் வரை இந்தியாவில் தொலைககாட்சி பெருநகர் சார்ந்த மேட்டுக்குடி மக்களால் பயன்படுத்தப் பட்ட ஒரு அரிதான விஷயமாகவே இருந்தது. நெருக்கடி நிலை தோல்விக்குப் பிறகு மீண்டும் அதிகாரத்திற்கு வந்த இந்திரா காந்திக்கு இந்தியா போன்ற பரந்த பன்முக கலாச்சார - மொழி அடையாளங் களைக் கொண்ட ஒரு நாட்டில் மையப் படுத்தப்பட்ட ஆட்சியமைப்பு ஒன்றைப் பாதுகாக்க வேண்டுமெனில் மையப் படுத்தப்பட்ட, மக்களோடு நேரிடையாக உறவுகொள்ளக்கூடிய ஒரு தொடர்பு சாதனம் அவசியமாக இருந்தது.

நாடு முழுக்க ஒரே சமயத்தில் தனது முகத்தையும் குரலையும் திறந்து விடுவதற்கும் இந்தி மொழி, இந்து மதக் கருத்தியல், போலி மதச் சார்பின்மை, தனிமனித அரசியல் அதிகாரம் போன்றவற்றால் ஒரு போலியான தேசிய உணர்வைக் கட்டுவதற்குத் தொலைக்காட்சி மிகப் பொருத்தமான சாதனமாக இருந்தது. இந்தியா முழுக்க தொலைக்காட்சி அஞ்சல் நிலையங்கள் பெரும் நிதிச்செலவில் அமைக்கப்பட்டன.

இந்தியாவில் மிகப்பெரிய அளவில் நடந்த ஈமச்சடங்கு இந்திரா காந்தியுடையதுதான். மருத்துவமனையிலிருந்து அவரது உடல் கொண்டு வரப்பட்டதிலிருந்து அவரது சாம்பல் இமயமலையின் மீது தூவப்படுவதுவரை ஒவ்வொரு நிகழ்விலும் கோடிக்கணக்கான இந்திய மக்கள் தொலைக்காட்சி மூலம் உணர்ச்சிப்பெருக்குடன் பங்கேற்றனர். இதன் விளைவாக ராஜீவ் காந்தி வரலாறு காணாத பெரும்பான்மையுடன் பிரதமராகிறார். இதற்கு இணையான மற்றொரு நிகழ்வு இந்துக்களுக்கு அவர்களது புராண உலகை மறுபடைப்புச் செய்து கொடுக்க ராமாயணம் ஒளிபரப்பானபோது பாபர் மசூதியை இடித்துவிட்டு ராமருக்கு கோவில் கட்ட பெரும் ஆவேசத்துடன் நாடெங்கிலிருந்தும் செங்கற்கள் பூஜை செய்து அயோத்திக்கு அனுப்பப்பட்டன.

தில்லியிலிருந்து ஒளிபரப்பப்பட்ட முற்றிலும் இந்தியில் அமைநத நிகழ்ச்சிகள் தமிழ் மக்களிடையே பெரிய வரவேற்பைப் பெறவில்லை. அச்சமயத்தில் இலங்கை



ஓவியம் : கே. எம். ஆதிமூலம்



படிப்பகம்

www.padippakam.com

தொலைக்காட்சியான ரூபவாஹினி தமிழில் செய்தி அறிக்கைகளும் திரைப்படங்களும் உள்ளடக்கிய தனது நிகழ்ச்சிகளைத் தமிழகத்தில் பரவலாகத் தெரியும் வண்ணம் ஒளிபரப்பி வந்தது. ரூபவாஹினிக்கு இங்கு பெரிய அளவில் பார்வையாளர்கள் இருந்தனர். திராவிட அரசியல் கட்சிகளின் தொடர்ச்சியான கோரிக்கைகளாலும் வணிகரீதியாக இலாபம் ஈட்டவும் சென்னை தொலைக்காட்சியின் தமிழ் நிகழ்ச்சிகள் தமிழகத்தின் உட்பகுதிகளுக்கு அஞ்சல் செய்யப்பட்டன. பொது மக்களின் இலவசப் பார்வைக்காக கிராமப் பஞ்சாயத்துக் களுக்குத் தொலைக்காட்சிப் பெட்டிகள் அளிக்கப்பட்டன. நடுத்தரக் குடும்பங்கள் விரிவான அளவில் தொலைக் காட்சியைப் பெற அவற்றின் விற்பனை தீர்வைகளும் இறக்குமதி தீர்வைகளும் தொடர்ந்து குறைக்கப்படுகின்றன.

தமிழ் ஒளிபரப்பு தொலைக்காட்சி பார்வையாளர்களின் எண்ணிக்கையை அதிகரித்தபோதும் அதன் குறைவான நேரமும் ஜனரஞ்சக ஈர்ப்புத் தன்மையற்ற நிகழ்ச்சிகளும் மக்களை அவ்வளவாகக் கவர முடியவில்லை. தொலைக் காட்சி பெட்டியின் உச்சக்கட்ட உபயோகிப்பும் காட்சி கலாச்சாரத்தின் விஸ்வரூபமும் வீடியோ சாதனங்களின் வருகையால் நிகழ்ந்தது. தனக்குத் தேவையான நிகழ்ச்சிகளைத் தேர்வு செய்து கொள்ளும் வசதி இருந்ததால் அபரிமிதமான வீடியோ மோகம் தலை தூக்கியது. நடுத்தரக் குடும்பங்கள் அவற்றைச் சொந்தமாகவோ வாடகைக்கோ பெற்று பெரும் அளவில் பயன்படுத்தின. கிராமப்புற திருவிழாக்களிலும் பிற விசேஷ நிகழ்ச்சிகளிலும் பாரம்பரியமான கலாச்சார நிகழ்ச்சிகள் ஒதுக்கப்பட்டு வீடியோ படங்கள் காட்டும் பழக்கம் வந்தது. ஏராளமான வீடியோ கேசட் வாடகை நிலையங்கள் முளைத்தன. கேபிள்கள் மூலம் நாள் முழுக்க திரைப்படங்கள் காட்டப்பட்டன. ப்ளூஃபிலிம் கேசட்டுகள் தாராளமாக கிடைக்கத் தொடங்கின. இறுக்கமான பண்பாட்டு அழுத்தங்கள் கொண்ட பல நடுத்தர தமிழ் குடும்பங்களில் 'நீலப்படங்கள்' மனத்தடையற்று ஏற்றுக்கொள்ளப்பட்டன. தமிழகத்தின் பல நகரங்களிலும் அவை தயாரிக்கப்படுவது பற்றிய செய்திகள் தொடர்ந்து வெளிவருகின்றன. கடந்த பத்தாண்டுகளில் ஆண் பெண் உறவுகளிலும் பாலியல் சார்ந்த வெளிப்பாடுகளிலும் பெரும் மாறுதல்கள் ஏற்பட்டுள்ளன. வீடியோ கலாச்சாரத்தின் வழியே உற்பத்தி செய்து பெருமெடுப்பில் பரப்பப்பட்ட பாலியல் புனைவுகள் கடும் பாலியல் ஒடுக்குமுறைகளைக் கொண்ட தமிழ் கலாச்சாரத்தால் மிகுந்த நோய்த்தன்மையுடன் உள்வாங்கப்பட்டு, பல புதிய பண்பாட்டு - உளவியல் நெருக்கடிகள் ஏற்பட்டுள்ளன.

இந்த வீடியோ கலாச்சாரத்தின் நீட்சியாகவும் உச்சக்கட்டமாகவும் அமைந்ததுதான் இப்போதைய செயற்கைக்கோள் தனியார் தொலைக்காட்சி ஒளிபரப்புகள்.

எம்.ஜி.ஆர். இறப்பதற்குச் சிறிது காலத்திற்கு முன் நோய்வாய்ப்பட்டு அவர் வீட்டிலிருந்த சமயத்தில் அவரது பொழுதுபோக்கிற்காக ஒரு விசேஷ ஆண்டனா பொருத்தப் பட்டிருப்பதாகவும் அதன் விலை இலட்ச ரூபாய் என்றும் அதன் மூலம் உலக நாடுகளின் தொலைக்காட்சி ஒளிபரப்புகளைப் பார்க்கலாம் என்றும் தமிழ் பத்திரிகைகள் அதிசயத்தோடு செய்தி வெளியிட்டன. அடுத்த சில ஆண்டுகளில் அது இவ்வளவு பெரிய இராட்சத வலைப் பின்னலாக உருவெடுக்குமென அப்போது யாரும் நினைத்திருக்க மாட்டார்கள்.

இந்திய அரசின் தாராளமயப் பொருளாதாரக் கொள்கை களால் அது தகவல் தொடர்பு மற்றும் கலாச்சாரத் துறைகளிலும் தனது ஏகபோகத்தை முடித்துக் கொள்ள வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. மேற்கு நாடுகளுக்கு இந்தியாவில் தமது சந்தையைக் கட்டுவதற்கு அதற்குகந்த மனோபாவங்களை உருவாக்குவது அவசியமாக இருந்தது. மேலும் தனது 'நாகரிக', 'உன்னத' பண்பாட்டை ஒரு 'கிரகப் பண்பாடாக' (Global Culture) மாற்றும் ஐரோப்பாவின் கனவு பலிக்க அது கடைசியில் சக்தி வாய்ந்த ஆயுதம் ஒன்றையும் கண்டுபிடித்துவிட்டது. இந்த ஆயுதத்தின் முன் கொலம்பஸை எதிர்கொண்ட செவ்விந்திய பழங்குடிகளைப் போல பல மூன்றாம் உலக நாடுகள் நிலைகுலைந்து நிற்கின்றன. செயற்கைக்கோள்கள் மூலம் பிபிசி, ஸ்டார் நிகழ்ச்சிகள் ஒளிபரப்பாகத் தொடங்கின. கேபிள்கள

## பேசும் "டெலிவிஷன்"

### ஆகாசம் மூலமாக படமும், பேச்சும்

### பேசும் சினிமாவுக்கு ஆபத்தா?

வீட்டிலிருந்தபடியே ஆகாசத் தந்தி (ரேடியோ) மூலமாக ஆயிரக்கணக்கான மைல்களுக்கு அப்பால் நடக்கும் பிரசங்கத்தையோ, பாடும் பாட்டுக்களையோ கேட்கலாமென்பது உங்களுக்குத் தெரியும். "டெலிவிஷன்" என்பது ஒரு இடத்தில் நடக்கும் சம்பவங்களை அதே சமயத்தில் மற்றொரு இடத்தில் திரையில் காட்டுவதாகும். இக்காட்சியை கம்பி மூலம் அனுப்ப முதலில் கண்டு பிடித்தனர். அப்புறம் கம்பியில்லா தந்தி மூலம் அனுப்ப கண்டுபிடித்தனர். சப்தத்தையும் காட்சியையும் கம்பியில்லாத் தந்தி என்ற ஆகாசத் தந்தி அல்லது ரேடியோ மூலம் அனுப்ப முடியுமானால், பேசும் சினிமாவை ஏன் அனுப்பக்கூடாது? இந்த யோசனை டெலிவிஷன் நிபுணரான ஸ்ரீ. பெய்ர்ட் மூளையில் தோன்றியது. அவர் இவ்விஷயத்தில் மிகுந்த ஆராய்ச்சி செய்தார். இப்பொழுது வெற்றியடைந்துவிட்டார்.

ஒரு இடத்தில் பேசும் சினிமாவைக் காட்டும்போது அதே சமயத்தில் ஒவ்வொருவரும் வீட்டிலிருந்தபடியே ரேடியோ டெலிவிஷன் கருவியின் மூலமாக பேசும் சினிமாவை பார்க்கவும், கேட்கவும் செய்யலாம்.

சென்ற மாதம் லண்டனில் எட்டு முக்கிய முக்கியஸ்தர்கள் முன்பு இக்காட்சியை ரகசியமாக பெய்ர்ட் காட்டினார். "நான் ஒரு ஒற்றன்" என்ற படமும் "மிக்கி மௌஸ்" என்ற படமும் மற்றொரு இடத்தில் காட்டப்பட்டன. அவற்றை பெய்ர்ட் தமது இயந்திரத்தின் மூலமாக கிரகித்து மேற்படி 8 பேர்களுக்கும் காட்டினார்.

சினிமா படுதா 2 அடி அகலம், 2 அடி நீளமுள்ளதாயிருந்தபடியால், மிகச் சமீபமாக நெருங்கி பார்க்க வேண்டியிருந்தது. பெரிய அளவில் காட்ட அபிவிருத்தி செய்யலாமென்று அவர் சொன்னார். சப்தம் மிகத் தெளிவாய் கேட்டதாம்.

சினிமா காட்சி சாலையில், பேசும் சினிமா நடைபெறும்போது அப்படியே அதை கிரகித்துக் காட்ட மற்றொரு தடவை முயற்சி செய்யப்படும். இரண்டொரு சில்லரை விஷயங்களில் அபிவிருத்தி செய்ய வேண்டியிருந்த போதிலும் பேசும் டெலிவிஷன் நடப்புக்கு வரப்போவது உறுதி.

இன்று வராமலிருக்கலாம். நாளை வராமல் இருக்கலாம். சில வருஷங்களில் கட்டாயம் வந்தே தீரும். அப்படி வந்தால் பேசும் சினிமா தொழிலின் கதியென்ன?

**மணிக்கொடி, 1933 டிசம்பர் 17, ஞாயிற்றுக்கிழமை.**



படிப்பகம்

www.padippakam.com

வழியே அவை நகர்ப்புற வீடுகளில் பாய்ச்சப்பட்டன. இந்தியர்களின் ரசனையில் புதிய தாக்கங்களை உண்டாக்கின. மேற்கத்திய இசை, உல்லாச மனோபாவம் பாலியல், வன்முறை வெளிப்பாடுகள் இங்கு வேறு வகையான கலாச்சாரத் தேவைகளை உருவாக்கின. திரைப்படத்துறை இத்தேவைகளை நிறைவேற்ற வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு ஆளானது. இசை, தொழில்நுட்பம், கதை அமைப்புகளில் மேற்கின் சாயல் கொண்ட அவற்றின் நகல் எடுப்புகளான படங்கள் தயாரிக்கப்படுகின்றன. மணிரத்னம், ஏ. ஆர். ரகுமான், பிரபுதேவா போன்றவர்களின் வளர்ச்சியை இவற்றின் விளைவாகவே கருதமுடியும்.

அந்நியத் தொலைக்காட்சி ஒளிபரப்புகள் ஆங்கிலம் அறிந்த நகர்புற மேல்தட்டு மக்களைக் கவர்ந்த அளவு பிற பகுதியினரைச் சென்றடைய முடியவில்லை. தமிழில் முழுநேர ஜனரஞ்சக நிகழ்ச்சிகளை ஒளிபரப்புவதன் மூலம் பெருமளவில் பார்வையாளர்களை ஈர்க்க முடியும் என்று கண்டுகொண்ட மு. கருணாநிதியின் மருமகன் முரசொலி மாறனால் சன்டி.வி. தொடங்கப் பட்டது. தொண்ணூறுகளில் தமிழ் சமூகத்தில் நுழைந்த இந்த முதல் தனியார் தமிழ் ஒளிபரப்பு மிகக் குறுகிய காலத்தில் பெரும் செல்வாக்கையும் இலாபத்தையும் ஈட்டியது. சன் மியூசிக், சன் மூவி என இரண்டு கூடுதல் சானல்கள் வழியே நாள் முழுக்க திரைப்படங்களையும் திரைப்பட பாடல்களையும் ஒளிபரப்புகிறது. திராவிட இயக்க பின்புலத்திலிருந்து உருவெடுத்த சன் டி.வி. ஆங்கிலமும் கடித்துத் துப்பப்பட்ட தமிழும் கலந்த ஒரு கான்வென்ட் தமிழைத் தனது அறிவிப்பாளர்கள் வழியே பரப்பி வருகிறது. ராமாயணம், மகாபாரதம், கிருஷ்ணா போன்ற 'பகுத்தறிவு' தொடர்கள் தமிழாக்கம் செய்யப்பட்டு ஒளிபரப்பப்படுகின்றன. இதற்குப் போட்டியாக ஜெ.ஜெ., ராஜ், கோல்டன் ஈகிள் போன்ற தனியார் தமிழ் ஒளிபரப்புகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. கடைசி நேரத்தில் விழித்துக்கொண்ட தூர்தர்ஷனும் இவற்றோடு தட்டுத் தடுமாறி போட்டியில் இறங்கியுள்ளது. தமிழ் வாரப் பத்திரிகைகளில் பெயர்களைத் தவிர வேறு எந்த வித்தியாசமும் இல்லாததுபோல இத்தனியார் தமிழ் ஒளிபரப்புகளும் ஒன்று மற்றொன்றின் நகல்களாக இருக்கின்றன. இவற்றை மையப்படுத்தப்பட்ட கேபிள்-வீடியோ ஒளிபரப்புகள் என்றே சொல்லலாம். இவை தனது முன்னோடியான வீடியோ வாடகை நிலையங்களைப் பெருமளவு அகற்றிவிட்டன. இவற்றின் நிகழ்ச்சிகளில் 95 சதவிகிதம் சினிமாவை அடிப்படையாகக் கொண்டு அமைந்தவை. திரைப்படங்கள், பாடல்கள், தொகுப்பு நிகழ்ச்சிகள், திரையுலகம் சம்பந்தப்பட்ட பேட்டிகள், போட்டி நிகழ்ச்சிகள் என திரைப்படத் தொழிலின் பிரமாண்டமான விரிவாக்கமாக இவை இயங்குகின்றன. எல்லாத் தமிழ் ஒளிபரப்புகளும் சேர்ந்து ஒரு வாரத்திற்கு நூறு திரைப்படங்களுக்கு மேல் காட்டுகின்றன.

இருபத்திநான்கு மணி நேரமும் ஒளிபரப்புகளை நடத்தும் இவ்வமைப்புகள் சினிமாவைத் தமிழர்களின் ஒரே கலாச்சார சாதனமாக மாற்றியுள்ளன. படங்கள் மூலமாக மட்டுமல்லாமல் நடிகர், நடிகைகள், தொழில்நுட்ப கலைஞர்களின் ஏராளமான பேட்டிகள் வழியே அவர்களும் பார்வையாளர்களும் அந்தரங்கமாகப் பிணைக்கப் படுகின்றனர். சினிமா குரல்களும் முகங்களும் தமிழ் வீடுகளில் உள்ள மனிதர்களின் இருப்பை விட அதிகமான இருப்பைக் கொண்டிருக்கின்றன. கனவு பிம்பங் களுடனான உறவிலும் ஏக்கங்களிலும் பார்வையாளர்கள் தம் சுயத்தை அழித்துக்கொள்கின்றனர். அல்லது மேலிருந்து திணிக்கப்படும் சுயங்களாகக் கட்டமைக்கப் படுகின்றனர்.

சினிமா தவிர்த்து இத்தொலைக்காட்சிகள் தயாரித்து ஒளிபரப்பும் நாடகங்களும் சினிமாவின் எச்சங்களாகவே உள்ளன. பொய்யான பிற்போக்கான வாழ்வியல் மதிப்பீடுகளை வெளியிடுகின்றன. நாடகங்கள் உயர்சாதி - பிராமணிய தன்மைகொண்ட உடல், சொல்லாடல்கள், பின்புலம், பேச்சு வழக்கு ஆகியவற்றால் பின்னப்பட்டவை. நகர்புற - உயர்சாதி பாசாங்குகளின் இவ்வுணர்ச்சிக் கதம்பங்கள் சகல விதமான சமூக தனிமனித போராட்டங்களையும் கற்பனைத் தன்மையோடு எளிமையாக்கி கொச்சைப்படுத்தி வெளியிடுகின்றன. இவ்வாறு மேல்த்தட்டு பிராமணிய பண்பாட்டின் குரலாக வெளிப்படும் தொலைக்காட்சி பிற அடித்தட்டு மக்களின் கலாச்சார அடையாளங்களையும் முஸ்லிம், கிறித்துவ மக்களின் கலாச்சார அடையாளங்களையும் ஒதுக்கி வந்துள்ளன. எஸ்.வி.சேகர், ஒய்.ஜி.மகேந்திரன் போன்றவர்களின் அசட்டுத்தனமான வக்கிரமான வேடிக்கைத் துணுக்குகள் தமிழர்களின் நகைச்சுவை உணர்ச்சியைப் பெருமளவு ஆபாசமாக்கியிருக்கின்றன. இதே விதமான ஒரு காரியம்தான் இத்தொலைக்காட்சி அமைப்புகள் 'சமூக உணர்வோடு' ஏற்பாடு செய்கிற விவாத அரங்குகளிலும் நடைபெறுகிறது. பட்டிமன்றத்திலிருந்து பிறப்பெடுத்த இவ்விவாத அரங்குகள் எல்லாவிதமான சமூகப் பிரச்சினைகளையும் அலசுகின்றன. சிவசங்கரி, விசு, சோ போன்ற நடுத்தர வர்க்க கருத்துருவாக்கவாதிகளால் நடத்தப்படும் இவ்விவாத அரங்குகள் நாம் மேற்கண்ட வக்கிரமான நகைச்சுவை களுக்கும் கொச்சைப்படுத்தல்களுக்கும் எவ்விதத்திலும் குறைந்தவை அல்ல. இவற்றை நடத்தும் ஒருங்கிணைப்பாளர்கள் தம் அடாவடித்தனமான பேச்சுவன்மையால் பார்வையாளர்களின் அபிப்ராயங்களைத் தம்முடைய சனாதன அளவுகோல்களால் நெறிபடுத்தி அவற்றின் மீது தம் 'இறுதி'த் 'தீர்ப்புகளை வழங்கி வருகின்றனர். இவற்றின் வழியாக மக்களின் பிரச்சினைகள் ஆளும்வர்க்க கருத்தியலுக்குள் உள்ளிழுக்கப்பட்டு சிந்திக்கப்படுகின்றன. மேற்படி விவாத அரங்குகளில் பங்கேற்கும் நடுத்தரவர்க்க பார்வையாளர்களின் மனோபாவம் மிகவும் அதிர்ச்சியூட்டுவதாக உள்ளது. இன்றைய சமூக - வாழ்வியல் நெருக்கடிகளின் மீது நடுத்தர வர்க்கம் கொண்டிருக்கும் குரூரமான அறவுணர்வற்ற அணுகு முறைகளைக் கவனிக்கும்போது கல்வியறிவும் சமூக விழிப்புணர்வு இயக்கங்களும் எத்தகைய தோல்வியை அடைந்துள்ளன என்பதை உணர முடிகிறது.

**தொலைக்காட்சிகள் தயாரித்து ஒளிபரப்பும் நாடகங்களும் உயர்சாதி - பிராமணிய தன்மைகொண்ட உடல், சொல்லாடல்கள், பின்புலம், பேச்சு வழக்கு ஆகியவற்றால் பின்னப்பட்டவை. இவ்வுணர்ச்சிக் கதம்பங்கள் சகல விதமான சமூக தனிமனித போராட்டங்களையும் கற்பனைத் தன்மையோடு எளிமையாக்கி கொச்சைப்படுத்தி வெளியிடுகின்றன.**

ஆளும் வர்க்கக் கருத்தாக்கங்கள் சமூக நெருக்கடி களை மொண்ணையான வியாக்கியானங்களால் சிதைக்கின்றன என்பது மட்டுமல்ல விளிம்பு நிலை மக்களையும் அவர்களின் பிரச்சினைகளையும் வேடிக்கைப் பொருளாக்கவும் செய்கின்றன. பகட்டான உடையும் அணிகலன்களும் கொண்ட தொலைக்காட்சி பேட்டியாளர்கள், வீட்டுவேலை செய்பவர்கள், நரிக் குறவர் கள், விபச்சாரிகள், பிச்சைக்காரர்கள் போன்றவர்களைச்



படிப்பகம்

www.padippakam.com

சந்தித்துக் கேட்கும் கேள்விகள் அவர்களின் சமூக இருப்பை எள்ளிநகையாடுவதாகவும் மேல்தட்டு வர்க்க திமிர் கொண்டவையாகவும் இருப்பதைக் காணலாம். உதாரணமாக பிச்சைக்காரர்களிடம் "உழைத்துச் சாப்பிட்டால் என்ன?" என்று கேட்பது. விபச்சாரியிடம் "வேறு தொழில் செய்யக் கூடாதா?" என்பது. கொலைக் குற்றத்திற்காக ஆயுள் தண்டனை அனுபவித்து வெளியே வந்த ஒரு பெரியவரை இத்தகைய ஒரு நிகழ்ச்சியில் சமூகவியலாளர்களும் பொழுதுபோகாத நடுத்தரவர்க்க பார்வையாளர்களும் 'குறுக்கு விசாரணை' செய்தனர். "கொலை செய்த சமயத்தில் அறிவுபூர்வமாகச் சிந்தித்து உங்கள் ஆத்திரத்தை அடக்கிக் கொண்டிருக்கக்கூடாதா?" என்பது போன்ற அபத்தமான கேள்விகள் திரும்ப திரும்ப கேட்கப்பட்டன. பொறுமையிழந்து உணர்ச்சிவசப்பட்ட அப்பெரியவர் "ஜெயிலிலிருந்து வந்தபிறகு எனது மூன்று பெண்களுக்கு நேர்மையாக உழைத்து திருமணம் செய்து கொடுத்திருக்கிறேன். எவனுக்கும் நான் பதில் சொல்ல வேண்டிய அவசியம் கிடையாது" என்றார்.

இத்தொலைக்காட்சிகள் தன்னுடைய நிகழ்ச்சிகளால் மட்டும் பார்வையாளர்களைக் கவர்வது இல்லை. பல்வேறு வழிகளில் அவர்களோடு மிகவும் நேரிடைத் தன்மை கொண்ட உறவை ஏற்படுத்திக் கொள்கின்றன. தனியார் தொலைக்காட்சி அமைப்புகள் பணியில் அமர்த்தியுள்ள அறிவிப்பாளர்கள், நிகழ்ச்சித் தொகுப்பாளர்கள் அனைவரும் தூர்தர்ஷனின் பிரேதங்களை மண்டிய இயந்தரமயமான அறிவிப்பாளர்களுக்கு நேர்மாறானவர்கள். இவ்வறிவிப்பாளர்களில் பெரும்பாலோர் பெண்கள். இளமையும், சிவந்த நிறமும், கவர்ச்சிகரமான தோற்றமும், நவநாகரிகமான உடையலங்காரங்களும் கொண்ட இப்பெண்கள் மிகவும் அந்தரங்கமான குரலிலும் உடல் அசைவுகளிலும் பார்வையாளர்களோடு நேரிடையாக உரையாடுகின்றனர். இவ்வறிவிப்பாளர்களுக்குத் தனிப்பட்ட ஏராளமான இரசிகர்கள் உண்டு. பத்திரிகைகள் இவர்களைப் பற்றிய செய்திக் கட்டுரைகளை வெளியிடுகின்றன. இவ்விதமாக தொலைக்காட்சியோடு பார்வையாளர்கள் உணர்வுபூர்வமாக பிணைக்கப் படுகின்றனர். இத் தொலைக்காட்சி அமைப்புகள் நடத்தும் போட்டி நிகழ்ச்சிகளால் இந்த நேரடி உறவு மேலும் வலுப்படுத்தப்படுகிறது. திறந்த - உள் அரங்குகளில் நடத்தப்படும் அபத்தமான போட்டி நிகழ்ச்சிகளை நோக்கி ஏராளமான தொலைக்காட்சி நுகர்வோர்கள் பங்கேற்பாளர்களாக இழுக்கப்படுகின்றனர். பெண்கள் 'முக்காப்புலா' பாட்டிற்கு நடனமாடுகின்றனர். இவை ஏற்பாடு செய்யும் அழகிப் போட்டிகளிலும் 'பேஷன் ஷோ'க்களிலும் போட்டி போட்டுக்கொண்டு பங்கெடுக்கின்றனர். ஆண்கள் நம்பியார் குரலில் 'மிமிக்ரி' செய்கின்றனர். ஜோடிப் பொருத்தம் நிகழ்ச்சியில் புதுமணத் தம்பதிகள் முதல் மணிவிழாத் தம்பதிகள் வரை அந்தரங்கமான கேள்விகளுக்கு நாணிக்கோணிக் கொண்டு பதிலளிக்கின்றனர். பார்வையாளர்களின் குரல் டெலிபோனில் பதிவு செய்யப்பட்டு ஒளிபரப்பாகின்றது. தொலைக்காட்சி கேமிராக்கள் வீடு தேடி போய் 'உங்கள் விருப்பம்' கேட்கின்றன. வேடிக்கை என்ற பெயரில் ஜெ.ஜெ டி.வி. ஆள் ஒருவர் ஆற்றில் குளித்துக் கொண்டிருக்கும் பெரியவர் ஒருவரின் துணியை எடுத்துக்கொண்டு ஓட அப்பெரியவர் கோவணத்துடன் விரட்டிக் கொண்டு வருவதைப் பார்த்து உலகெங்கும் வாழும் தமிழர்கள் வயிறு குலுங்கச் சிரிக்கின்றனர். பொருள்களின் விலை கண்டுபிடிக்கும் ஒரு போட்டியில் வெற்றி பெற்ற பெண்மணிகளுக்கு ஒரு நிமிடத்திற்குள் அங்கிருந்து எடுக்கும் பொருள்கள் பரிசாக அளிக்கப்படும். அப்பெண்கள் தள்ளுவண்டியோடு ஓடி ஓடி பொருட்களை அள்ளும் காட்சி கலவரங்களில் கடைகளில் கொள்ளையடிப்பவர்களை நினைவூட்டக் கூடியது. இந்த நேரடித் தொடர்பு கவர்ச்சிகரமான பரிசுப் பொருட்களுக்காக இலட்சக் கணக்கில் எழுதப்படும் அஞ்சலட்டைகள் வழியே இன்னொரு விதத்திலும் கட்டப்படுகின்றது. இவ்வுதாரணங்கள் அனைத்தும் மதிப்பீடு சார்ந்து ஏற்பட்டிருக்கும் பெரும் வீழ்ச்சிக்கு சாட்சியங்கள்.

மொத்தமாக கவனிக்கும்போது தொலைக்காட்சியின் விரிவாக்கம் ஒரு உள்ளீடற்ற, ஆரவார கேளிக்கைகள் கொண்ட ஒரு நுகர்வுக் கலாசசாரத்தை வளர்த்து வருவதை உணரலாம். ஒரு நுகர்வுக் கலாச்சாரத்திற்குத் தேவையான சகல மதிப்பீடுகளையும் இவை பரப்பி வருகின்றன. மேற்கத்திய நாகரீகம், ஆடம்பர வாழ்வு, நகர்புற மனோபாவம் ஆகியவையே இந்த நுகர்வுக் கலாச்சாரத்தின் அடிப்படைகள். இவை சமூகத்தின் எல்லா மட்டங்களையும் ஊடுருவுகின்றன.

**இந்துக்களுக்கு அவர்களது புராண உலகை மறுபடைப்புச் செய்து கொடுக்க ராமாயணம் ஒளிபரப்பானபோது. பாபர் மசூதியை இடித்துவிட்டு ராமருக்கு கோவில் கட்ட பெரும் ஆவேசத்துடன் நாடெங்கிலிருந்தும் செங்கற்கள் பூஜை செய்து அயோத்திக்கு அனுப்பப்பட்டன.**

தொலைக்காட்சியின் விரிவாக்கத்தால் தொழில்ரீதியாக பாதிப்புடைந்தவை சினிமாவும் பத்திரிகையும். இவற்றின் சந்தையைத் தொலைக்காட்சி பறித்துக் கொள்ள முற்படுகிறது. வீடியோ படங்கள் செல்வாக்குப் பெற்றிருந்த சமயத்தில் பெரிதும் பாதிக்கப்பட்டிருந்த திரைப்படத் துறையிலிருந்து திருட்டு வீடியோ படங்களைத் தடை செய்ய வேண்டுமென பெரும் கூக்குரல் எழுந்தது. திரைப்படத் தொழிலே நசிந்து போய்விடுமென்று அஞ்சப்பட்டது. ஆனால் வீடியோவைவிட பன்மடங்கு சக்தி வாய்ந்த செயற்கைகோள் தொலைக்காட்சி ஒளிபரப்பு வந்தபோது திரைப்படத்துறை அதனோடு சமரசம் செய்து கொண்டது. இத்தொலைக்காட்சி அமைப்புகள் ஏராளமான திரைப்படங்களை நல்ல விலை கொடுத்து வாங்கி ஒளிபரப்புகின்றன. இதனால் ஓடி முடித்த படங்களுக்கு ஒரு புதிய வருவாய் மதிப்பு ஏற்பட்டுள்ளது. வெளி வந்து சில வாரங்களேயான 'இந்திரா' திரைப்படம் சன் டி.வி.யால் பத்து இலட்சம் ரூபாய்க்கு வாங்கி ஒளிபரப்பட்டதாகச் சொல்லப்படுகிறது. மேலும் இன்றைய திரைப்படங்களில் பயன்படுத்தப்படும் பிரமாண்டமான காட்சி அமைப்புகளும் தொழில்நுட்பமும் தொலைக்காட்சியையும் தாண்டி திரையரங்குகளை நோக்கி பார்வையாளர்களை ஈர்க்கும் வலிமை கொண்டவையாக உள்ளன.

தொலைக்காட்சியோடு திரைப்படத் துறை ஏற்படுத்திக் கொண்டது போன்ற ஒரு இணக்கமான உறவை வெகுஜன பத்திரிகைகளால் உருவாக்கி கொள்ள இயலவில்லை. இலட்சக் கணக்கில் உற்பத்திச் செய்து வினியோகிக்கப்படும் இப்பத்திரிகைகள் விற்பனையில் பெரும் வீழ்ச்சியைச் சந்தித்துள்ளன. இவ்வீழ்ச்சியிலிருந்து தம்மைத் தக்க வைத்துக் கொள்ள சகலவிதமான தகிடுதத்தங்களையும் செய்து வருகின்றன. தமிழ் பத்திரிகைகளின் வக்கிரங்கள் சமீப ஆண்டுகளில் வளர்ச்சியடைந்திருக்கும் விதத்தைக் கவனிக்கும்போது அவற்றின் 'தப்பிப் பிழைப்பதற்கான' போராட்டத்தை அறிய முடிகிறது.

காட்சி கலாச்சாரத்தினால் படிக்கும் பழக்கம் அழிந்து



படிப்பகம்

www.padippakam.com

# நாஞ்சில் நாடனின் நாஞ்சில் நாடு

**சுந்தர ராமசாமி**

நாஞ்சில் நாடனின் படைப்புலகத்தை மூன்று சொற்களில் நினைவூட்டிக்கொள்ளலாம். கிராமம். நகரம். பயணம்.

நாஞ்சில் நாடனின் எழுத்தை அவருடைய சொந்த வாழ்க்கையை மறந்து படிக்க முடியாமல் போய்விட்டது என் பலவீனம். அதனால் நான் சொல்ல வருபவை விமர்சனமாக நிமிராமல் வெறும் அனுபவப் பதிவாக முடிந்து போய்விடலாம். அவருடைய எழுத்து அவருடைய வாழ்க்கையுடன் இணைந்து என் மனதில் விரியும்போது நான் வித்தியாசமான அனுபவங்களை பல சந்தர்ப்பங்களிலும் பெறுகிறேன். படைப்பு மட்டுமே சார்ந்து பெறும் அனுபவம்தான் இயற்கையானது என்று நம்புகிறேன். இன்றைய வாசகனும் நாளை வரவிருக்கும் வாசகனும் பெறும் இயற்கை அனுபவம் அது. அவரைப் பற்றி அவர் மூலமாகவே அறிந்திருக்கும் நிலையில் எப்படி என்னை ஒழுங்குபடுத்திக் கொண்டால் வாசக அனுபவத்தை மட்டும் பெற முடியும் என்பது எனக்குத் தெரியவில்லை.

வாழ்க்கையிலும் சரி, எழுத்திலும் சரி நாஞ்சில் நாடனை ஒரு விவசாயி என்று சொல்லவேண்டும். 'வயல்களிலும் தென்னந்தோப்புகளிலும் வேர்வை சிந்த வேலை செய்வது எனக்கு மனநிறைவைத் தரும் அனுபவம்' என்று ஒருமுறை நாஞ்சில் நாடன் என்னிடம் சொன்னார். அவருடைய பேச்சு மூலம் அவரை நேசிக்கக் கிடைத்த சந்தர்ப்பங்களில் ஆக முக்கியமானது எனக்கு இதுதான். வாழ்க்கை தரும் ஆரோக்கியத்தில் மையம் கொண்டிருக்கிறான் விவசாயி. அவன் நிற்கும் இடம் மண். அவன் நிற்கும் இடம் வெளி. இதனால் புற உலகம் அதன் வீரியத்துடன் அவன் மீது கவிகிறது. காற்று, மழை, வெயில், வெளிச்சம். இந்த ஒற்றைச் சொற்களின் வகைபேதங்கள் முக்கியம். இவற்றின் வகைபேதங்கள் அனைத்தும் விவசாயிகளின் உணர்வுகளில் கலந்திருக்கின்றன. இயற்கையின் மிகப் பெரிய முக விலாசம் அவன் உணர்வில் கலந்திருக்கிறது. விளைச்சல்களை உறுதிப்படுத்தும் வகையில் அவன் பணியாற்றியாக வேண்டும். ஆனால் அவன் உடல் வருந்த உழைத்த பின்பும் இலக்கு சார்ந்த விளைவுகள் கூடும் என்பதற்கு உறுதி இல்லை. இயற்கையின் கூறுகள் அனைத்தும் அவனுக்கு உதவுகின்றன.



அவையே அவனைச் சோர்வில் ஆழ்த்தும் வகையில் அவன் நலன்களுக்கு எதிராகத் திரும்புகின்றன. புற உலகில் சாதகமாக நிற்பவையே பாதகமாகவும் மாறும் நிலை புற உலகத்திற்கும் அவனுக்குமான உறவை ஒரு நிச்சயமற்ற தளத்திற்குத் தள்ளிவிடுகிறது. இந்நிலையில் நின்று அவன் வாழ்க்கையைப் புரிந்து கொள்ளும் விதம் தத்துவம் சார்ந்த பொதுமை உணர்வுக்கு அவனை நகர்த்தி விடுகிறது என்று சொல்லலாம். தன் வாழ்க்கை அனுபவம் சார்ந்து ஒரு விவசாயி பேசுவது நகரத்தைச் சார்ந்த ஒரு பணியாளன் பேசுவதை விடவும் சுவையும் ஈர்ப்பும் கண்டுபிடிப்பும் கொண்டதாக இருக்கலாம். விரிந்த வாழ்க்கையுடன் அவன் கொள்ளும் நெருக்கமும் விலகலும். இந்நிலை படைப்பிற்கு மிக முக்கியமானது.

இளமையில் தன் பின்னணி சார்ந்து விவசாயக் கலாச்சாரத்தில் ஊறிப்போயிருந்த நாஞ்சில் நாடன் தன் பணி சார்ந்து நகர வாழ்க்கைக்குள் தன்னைத் திணித்துக் கொள்ள வேண்டிவந்தது. கிராமத்தை இழப்பது என்பது விவசாயக் கலாச்சாரத்தின் சகல கூறுகளையும் இழப்பது தான். வயற்காடுகள், தோப்புத் துரவுகள், வெட்டவெளி, இயற்கை, மண்சார்ந்த கலைகள், மண்சார்ந்த மனிதர்கள், மண்சார்ந்த உறவுகள். பெரிய இழப்புகள் இவை. ஆனால் இந்த இழப்புகள் தான் நாஞ்சில் நாடனின் படைப்புக்கே அடிப்படையாக நிற்கும் உந்துசக்தியும்கூட. விவசாய வாழ்க்கையில் நிகழ்வது போலவே பாதகம் சாதகமாகிறது இங்கு. இழந்ததை அவர் மீண்டும் பெற்றாக வேண்டும். நான்கு சுவர்களுக்குள் மேஜையின் முன் நாற்காலியில் அவர் தன்னை அறைந்து கொண்டாயிற்று. மேலே போலிக் கூரை. போலி வெளிச்சம். போலிக் காற்று. போலிப் பேச்சு. போலிச் சிரிப்பு. இந்தச் சூழலில் இழந்துபோன விவசாய வாழ்க்கையை மீண்டும் பெற முடியுமா? இறந்து போன விவசாயியின் மனநிலையை மீண்டும உயிர்ப்பிக்க முடியுமா? இவைதாம் நாஞ்சில் நாடனின் சவால்கள்.

இழந்து போனவற்றை நினைவில் மீண்டும் படைப்பது, படைத்தவற்றைப் பகிர்ந்து தக்கவைத்துக் கொள்வது. இவை இழந்த வாழ்க்கையை மீட்டெடுப்பதுதான். அவர் இழந்த கடந்த காலத்தை அவர் மீட்டெடுக்கும்போது நாம் இழந்த கடந்த காலத்தையும் நாம் சிறிது தக்கவைத்துக் கொள்ள முயலுகிறோம். மனங்கள் தாவிச் செல்லும் கலையின் ஆற்றல் இது. நாஞ்சில் நாடனின் எழுத்தில் இந்த விவசாயக் கலாச்சாரத்தின் மறு உயிர்ப்புத்தான் மிகவும் சத்தான பகுதி. அலுப்புச் சலிப்பின்றி மீண்டும் மீண்டும் இந்த உலகத்திற்குள் அவர் வருவதையும் அவ்வுலகம் சார்ந்த அனுபவ சாரங்களில் திளைப்பதையும் பார்க்கலாம். தான் கடந்து வந்த வாழ்க்கையை நமப, நம்பி உயிர்ப்புப்பெற அதை ஜீவனுடன் படைத்தாக வேண்டும். படைப்பின் ஜீவன் எப்போதும் துல்லியமான விபரங்களைக் கேட்டு நிற்கிறது. விபரங்களைப் போலவே விபரங்களின வகைதொகைகளும் முக்கியமானவை. அவருடைய எழுத்தில் மரம், குளம், தெரு, புல், பூச்சி, பூண்டு போன்ற பொதுப்பெயர்கள் எதுவும் கிடையாது. ஒவ்வொன்றும் அதற்கு உரித்தான தனிப்பெயருடன்தான் வருகிறது. இந்தப் பெயர்களை அடுக்கிக் கொண்டு போவதில் அவர் பெறும் உவகையை நுட்பமான வாசகன் உணர முடியும்.

மற்றுமொரு வலு இவருடைய மொழி. கிராமிய வாழ்க்கையின் சாரத்திலிருந்து அவர் நெய்தெடுத்துக் கொண்டிருக்கும்மொழி. கிராமிய மக்களுடைய பேச்சுகளிலிருந்தும் தென்னந் தோப்பின் சலசலப்பிலிருந்தும் தவளைகளின வறட்டுக் கத்தல்களிலிருந்தும் உருவாக்கிக் கொண்டது என நமக்கு சொல்லத் தோன்றும் மொழி. தன் அனுபவங்களின் பிரிக்க முடியாத பகுதியாக இந்த மொழி இருப்பதால் சொல்ல வந்த விஷயங்களின் நுட்பங்கள் சேதாரமாகாமல் மிக அனாயாசமாகச் சொல்லிவிடுகிறார்.

அவருடைய எழுத்தின் மற்றொரு பகுதி அவர் பொருந்த முயலும், பொருந்தியும் பொருநத முடியாமல் போகும் நகரத்தைப் பற்றியது. நகரத்தைப் பற்றிக கூற வரும்போது இழந்துபோன கிராம வாழ்க்கையின் சோகப் பூசுசுத்தான் படருகிறது. வாழ்வுக்கெதிரான பிழைப்பாகவும், ஜோடனையாகவும், அன்னியமாகவும் காட்சி தரும் நகர வாழ்க்கையில் கரையாமல் கட்டி தட்டிக் கொண்டு நிற்கும் ஜீவனின் வேதனையை உணர முடிகிறது. கிராமத்தில் தன்னை இனங்கண்டுகொள்ள இந்த ஜீவனுக்கு எவ்வளவோ இருந்தன. இதம் தரும் அரவணைப்புகள் இருந்தன. நகரத்தில் தன்னைக் கண்டுகொள்ள அடையாளம்கூட இல்லை. தன் உடல்கூட அங்கு தனக்குச் சொந்தமில்லை. ஏவலாளிக்கு அடகு வைக்கப்பட்டிருக்கிறது அது.

கிராமமும் சொந்தமில்லாமல் நகரமும் சொந்தமில்லாமல் போனபின் மிஞ்சுவது கிராமத்திலிருந்து நகரத்திற்கும், நகரத்திலிருந்து கிராமத்திற்கும் போகும் பயணங்கள்தான். இந்தப் பயணங்கள் இருவிதமான வாழ்க்கையும் பறிபோய்விட்டதின் குறியீடு. திரிசங்கு நிலையின் குறியீடு. நகரத்திலிருந்து கிராமத்திற்கு வந்து நிலைக்க முடியாது. கிராமத்திலிருந்து நகரத்திற்கு சென்று ஒட்ட முடியாது. ஆகவே பயணங்களும் வீணாகிவிடுகின்றன. பதற்றமாகவும் இருக்கிறது. பயணங்களில் எப்போதும் இட நெருக்கடி. இருக்கைகளை மாற்றிக்கொள்ள வேண்டிய அசௌகரியம். படுக்கைகளை மாற்றிக்கொள்ள வேண்டிய அசௌகரியம். ஒரு வண்டித் தொடரிலிருந்து மற்றொரு வண்டித் தொடருக்கு தொற்றிக்கொள்ள வேண்டிய அவஸ்தை.

இந்த வகையில் பார்க்கும்போது ஒரு முழுமையான உலகம் நாஞ்சில் நாடனின் எழுத்து மூலம் உருவாகி வருவது தெரிகிறது. திட்டமிட்டு உருவாக்கப்பட்ட உலகமா இது? திட்டமிட்டு ஒரு உலகத்தை உருவாக்க முடியுமா? படைப்பைத்



படிப்பகம்

www.padippakam.com

தூண்டுவது படைப்பாளி வாழ்வின் தளத்தில் கொள்ளும் முரண்பாடுதான். இந்த முரண்பாடு படைப்பாளியைத் துயரத்தில் ஆழ்த்துகிறது. தனக்கும் தன் அனுபவங்களுக்கும் தன் உணர்வுகளுக்கும் உண்மையாக இருப்பவன் தன் உலகத்தைப் படைத்து தன் துயரத்தை சக மனிதர்களுடனும் பகிர்ந்து கொண்டுவிடுகிறான்.

இழந்து போன ஒன்றைப் பாராட்ட முற்படும்போது நம்மையறியாமலே மிகை வந்துவிடுகிறது. இழந்த வாழ்க்கையைச் சொல்ல வந்த நாஞ்சில் நாடனிடம் மிகை என்பதே இல்லை. கிராமிய வாழ்வின்மீது அவர் புனிதம் எதுவும் ஏற்றவில்லை. இழந்து போன கிராமிய வாழ்க்கையையும் அவர் சுதந்திரமாக மறுபரிசீலனை செய்கிறார். அதேபோல் அவரால் ஒட்ட முடியாத நகர வாழ்க்கையைப் பற்றி அவருக்கு கரிப்பு இல்லை. அந்த வாழ்க்கை முறையையும் கோடானுகோடி மக்கள் ஏற்றுக்கொண்டிருப்பது அவருடைய விவேகத்திற்குத் தெரிகிறது. நகர வாழ்க்கைக்கு மாற்றாக அவர் கிராமிய வாழ்க்கையை நமக்கு சிபாரிசு செய்யவும் இல்லை. தன்னுடைய இயற்கை சார்ந்த ஏக்கங்களை பிறர் மீது சுமத்தும் அபத்தம் அவரிடம் இல்லை. இவ்வளவு நிலைகளும் - ஓரம் சார மறுக்கும் நிலைகள் இவை - வாழ்க்கையின் சிக்கல் பற்றி இவருடைய புரிதலைத்தான் வெளிப்படுத்துகிறது. திட்டவட்டமாக நாஞ்சில் நாடன் என்ன சொல்கிறார் என்று கேட்கலாம். முடிவாகவும் திட்டவட்டமாகவும் நாஞ்சில் நாடன் ஒன்றையும் சொல்லவில்லை. எனக்குத் தெரிந்து எந்தக் கலைஞனும் முடிவாக ஒன்றும் சொல்லிவிடவில்லை. ஒன்றை அழுத்திச் சொல்ல மறுத்தவர்கள் எண்ணற்ற அனுபவங்களை உயிர்ப்பித்து வாழ்க்கையின் பெரும் வீச்சிற்குள் நம்மை தள்ளியிருக்கிறார்கள். முடிவாகவும் ஆணி அடித்தாற் போலவும் சொன்னவர்கள் இல்லையா ? இருக்கிறார்கள். அவர்கள் அநேகமாக அவர்களுக்கு முன் வந்தவர்கள் உருவாக்கித் தந்திருக்கும் கருத்துகளுக்குதான் கற்பனை வடிவம்தர முயன்றிருக்கிறார்கள். அவர்களுடைய கற்பனை வடிவங்களைப் படிப்பதைவிட அவர்களுக்கு முன் வந்தவர்களின் கருத்துருவங் களையே நாம் படித்துவிடலாம். அந்த கருத்துருவங்கள் கற்பனையின் இடையூறின்றி எளிமையாகவேனும் இருக்கும்.

இப்போது நாம் அவருடைய 'பேய்க்கொட்டு' என்ற சிறுகதைத் தொகுப்புக்கு வரலாம். நாஞ்சில் நாடனின் உலகத்திற்கு உரித்தான குணங்கள் அனைத்தும் கொண்டவை தான் இந்தக் கதைகளும். சொல்லாமல் விட்டுவிட்ட இரண்டு குணங்களையும் இப்போது நாம் சேர்த்துக்கொள்ளலாம். ஒன்று: வெளிப்படையாகத் தெரியும் விமர்சனம். இரண்டு: நகைச்சுவை உணர்ச்சி. (எ.கா: சிறியன செய்கிலாதார், உழவாரப் படையாளி) இக்கதைகள் எல்லாமே நாஞ்சில் நாடனின் கதைகளுக்குரிய எதிர்பார்ப்புகளை காப்பாற்றிக் கொண்டும் போகின்றன. இவற்றில் எவற்றையும் நாம் தூக்கிச் சொல்லவோ தாழ்த்திப் பேசவோ முடியாது இக்கதைகளில் கூடியிருக்கும் நிறைவுகள் சகஜமாக இவருக்குக் கைவந்தவை.

கைவந்தவற்றை ஒதுக்கிவிட்டு அடுத்தபடிக்கு நகருவதைப் பற்றியும் ஒரு படைப்பாளி யோசித்துப் பார்க்க வேண்டும். இக்கதைகள் எதுவும் பெரிய தோல்விகளை அடையாதது எனக்கு ஏமாற்றமாக இருக்கிறது என்று சொன்னால் அதை சரிவர நாஞ்சில் நாடன் புரிந்து கொள்வார் என்ற நம்பிக்கை எனக்குண்டு. பெரிய தோல்வி என்பது பெரிய முயற்சியை சார்ந்தே வரமுடியும். குழவியைப் பந்தாட முடிந்துவிட்டால் அதன்பின் அம்மியைத்தான் தூக்கவேண்டும். கைகால்கள் முறிந்து போகலாம். கனமானவற்றைத் தூக்கி காயம்பட்டு நிற்பதும் படைப்பாளிக்குப் பெருமைதான்.

கிராம வாழ்க்கையை இழந்ததுபோல் இன்று வரையிலும் படைப்பில் அவர் சேர்த்து வைத்துக் கொண்டிருக்கும் சகல சொத்துக்களையும் அழகுகளையும் இழந்து ஏழ்மைக் கோலம் பூண்டு நின்றால் எப்படி இருக்கும் என்று யோசித்தேன். அந்த ஏழ்மை அவருக்கு புதிய சவால்களைத் தரக்கூடும். இந்த நெருக்கடியிலிருந்து புதிய நாஞ்சில் நாடன் பிறக்கலாம். நிறைவாகத் தந்து கொண்டிருப்பவரிடம் அதிகம் கேட்டு நெருக்கடிக்கு அவரை உள்ளாக்குகிறோமே என்று தோன்றலாம். அதிகம் எதிர்பார்க்க அதிகம் பேர் நமக்கு இல்லை.

*(கோவை விஜயா பதிப்பகத்தினரும் தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றத்தின் குமரி மாவட்டக் கிளையும் இணைந்து 22.1.95 அன்று நாகர்கோவிலில் நடத்திய நாஞ்சில் நாடனின் 'பேய்க்கொட்டு' சிறுகதைத் தொகுப்பு வெளியீட்டுக் கூட்டத்தில் படித்த கட்டுரை)*

●


## எமது புதிய வெளியீடுகள்

**ஒரு யுகசந்தியின் புதிய தரிசனங்கள்** (விலை ரூ.15)

ஜெயகாந்தனின் இளமைக்கால வாழ்வும், அவரது படைப்புகளைப் பற்றி பல்துறைப் பெருமக்களின் கட்டுரைகளும் நிறைந்த நூல். கட்டுரையாளர்கள் : குன்றக்குடி அடிகளார், மாயாண்டி பாரதி, கூத்தகுடி எஸ். சண்முகம், அ. சீனிவாசன், சௌரி, மு. கு. ஜெகந்நாத ராஜா, சிவக்குமார், செ. செல்லப்பன், கோவி. மணிசேகரன், டாக்டர். கா. செல்லப்பன், சுப்ரபாரதிமணியன், ஞானி, டாக்டர். சு. வெங்கடராமன், எஸ். சங்கரநாராயணன், அசோகமித்திரன்.

**இராஜகுமாரன்** (விலை ரூ. 13)

திரு. J. மாதவராஜ் எழுதி, செம்மலர் மற்றும் முற்போக்கு மாத இதழ்களில் வெளிவந்த சிறுகதைகள், ஜெயகாந்தன் முன்னுரையுடன்.

**ஒரு கவிஞனோட கதை** (விலை ரூ. 17)

ஆசிரியர் : இளசை. அருணா.

11 சிறுகதைகள் அடங்கிய தொகுப்பு - கலை இலக்கியப் பெருமன்றத்தின் பரிசினைப் பெற்ற நூல். பொன்னீலன், மேலாண்மை பொன்னுசாமி, கழனியூரன், வே. சதாசிவன், தூரங்குடி ஆ. முத்தானந்தம், எஸ்.எஸ். போத்தையா, சோ. தர்மன், தனுஷ்கோடி ராமசாமி, தோப்பில் முகமது மீரான், நாரண துரைக்கண்ணன், தருமபுரி ரவீந்திர பாரதி, ஏ.எஸ்.கே. முதலியோரது மதிப்பீடுகளுடன்.

**ஓர் இலக்கியவாதியின் அரசியல் அனுபவங்கள்**

ஜெயகாந்தன்

புதிய மூன்றாம் பதிப்பு - விலை ரூ. 67

**மீனாட்சி புத்தக நிலையம்**

**மயூரா காம்ப்ளக்ஸ், 48, தானப்பமுதலி தெரு, மதுரை 625 001**




படிப்பகம்

www.padippakam.com

"பாண்டிச்சேரியிலானோ வேலு ஜோலி செய்யுன்னது?"

"ஆமாம். தாத்தா வீட்டில் இல்லையா?"

"ரண்டு பேர் வந்து தெங்ஙாசிக்கு விளிச்சோண்டு போயி"

"இவன் பேர் என்ன?... பேர் என்னடா?...ம்"

"அக்பர்", என்றாள் அக்கா. அக்பரை உள்ளே கொண்டு போய் சோறு உண்ட வாயைக் கழுவினாள். வெளியிலிருந்து ஒரு பெண்குழந்தை ஓடிவந்தது. இதுதான் அக்பரின் அக்காவாக இருக்கும்.

"அடடே...யார் இது?... இவள் பேர் என்னக்கா?"

"ஷகீலா...ஷகீலா, இது ஆரானன்னு மனசிலாயோ.. வேலண்ணன்... எந்தா பறையி"

"தமிழ் தெரியுமா இவளுக்கு?"

"ஓ நன்னாயிட்டு சம்சாரிக்குன்னன்டல்லோ", திடீரென்று ஏதோ ஞாபகம் வந்தது போல், "ஒரு நிமிஷம்", என்றபடியே வீட்டின் மூலையில் கிடந்த மண்வெட்டியை எடுத்துக் கொண்டு வெளியே கிளம்பினாள். கிழங்கு பிடுங்கப் போகிறாள் போலும். வாயில் நீர் சுரந்தது.

"ஐயோ, ஒண்ணும் வேண்டாமே..." வளர்ந்ததற்கப்புறம் நல்ல பிகு பண்ணக் கற்றிருக்கிறேன்.

"இவ்விட இருக்கி, ஞான் இப்பவரான்...ஷகீலா, அண்ணன்கூட இருக்கு..." என்று கட்டளையிட்டு விட்டு தோட்டத்தில் புகுந்துவிட்டாள்.

ஷகீலாவிற்கு நான் அண்ணன், எனக்கு உம்மானி, அக்கா. உம்மானிக்கு ஷகீலா மகள். செம்புத்தாத்தாவிற்கு ஷகீலா, பேத்தி. தாத்தாவின் மகளை எப்படி அக்கா என்று அழைக்கிறேன்? விந்தையான உறவுகள்...

ஷகீலா ஓடிவந்து என் காலைப் பிடித்துக் கொண்டது. கைகளில் தூக்கிக்கொண்டேன். முன் அறைகளில் கருப்பு-வெள்ளை புகைப்படங்கள் வரிசையாக மாட்டப்பட்டிருந்தன.

"நீ என்ன கிளாஸ் படிக்கிறே?"

"ஸெகண்ட் ஸ்டாண்டார்ட்," என்றது.

"உனக்கு யாரையெல்லாம் ரொம்ப பிடிக்கும்?"

"அம்மா..."

"அப்புறம்?"

"அப்பா..."

"அம்மா இதில் எங்கே இருக்காங்க?"

உம்மானி அக்காவைச் சுட்டிக்காட்டியது.

"அப்பா?"

சுட்டு விரல் நீண்ட இடத்தில்--

செம்புத்தாத்தா...

எதிர்காலத்தில் பூமியின் வடிவம் 'கனசதுரம்' என்றுகூட நிரூபிக்கப்படலாம்...

யாருக்குத் தெரியும்?

• • •

**தமிழில் இஸ்லாமிய இதழ்கள்** ☺

**ஆசிரியர்: அ. மா. சாமி.** வெளியீடு : நவமணி பதிப்பகம் 12, 2வது பெருஞ்சாலை, நகர வளர்ச்சிக் குடியிருப்பு சென்னை 600 004. பக்கம் 416, விலை ரூ.120.

'தமிழ் இதழ்கள் - தோற்றம், வளர்ச்சி', '19ஆம் நூற்றாண்டுத் தமிழ் இதழ்கள்' ஆகிய முக்கிய நூல்களை வழங்கியவர் அ. மா. சாமி.

என் ஆராய்ச்சிக்காகச் சென்ற பதினைந்து ஆண்டுகளில், முக்கியமானவை என்று கருதப்படும் தமிழக நூலகங்கள் பலவற்றுக்கும் சென்றிருக்கிறேன். 'தாருல் இஸ்லாம்' போன்ற இரண்டொன்றைத் தவிர இஸ்லாமிய இதழ்கள் என் கண்ணில் தட்டுப்படவில்லை. எனவே, அ. மா. சாமி தகவல்கள் சேர்த்துக் கொடுத்திருக்கும் இஸ்லாமியத் தமிழ் இதழ்களின் எண்ணிக்கை மலைப்பை உண்டாக்குகின்றது.

இந்நூலைப் படிக்கும்போது, ஆவணக் கருவூலங்கள் என்று கருதப்படும் நூலகங்களில் செயல்படும் கருத்தியல் சார்புகள் பற்றி எண்ணிப்பார்ப்பது தவிர்க்க முடியாததாகின்றது. வேறு எந்த நிறுவன அமைப்பையும் போலவே நூலகங்களும் பெரும்பான்மையும் அதிகாரக் கருத்தியல்களையே பிரதிபலிக்கின்றன. அவ்வகையில், 'பொது' நூலகங்கள் என்று கருதப்படும் நூற்களஞ்சியங்களில் இஸ்லாமிய நூல்கள்/இதழ்கள் குறைவாகவே கிடைக்கப்பெறுவது வியப்புக்குரியதன்று. (பல ஆண்டுகளுக்கு மேலாகப் பல இஸ்லாமிய இதழ்களில் தொடர்ந்து எழுதி வந்த தோப்பில் முஹம்மது மீரான் 'ஒரு கடலோர கிராமத்தின் கதை' வெளிவரும் வரை தமிழ் இலக்கிய உலகில் அறியப்படாதவராக இருந்தார் என்பதை மனங்கொள்ள வேண்டும்) நவீனக் கல்வி, கருத்துப் பரவல் அமைப்புகளில் கிறித்தவர் முன்னோடிகளாக விளங்கியதால் கிறித்தவ நூல்களுக்கும் இதழ்களுக்கும் இந்த அவலம் ஏற்படவில்லை. பண்டித அயோத்தி தாசின் நூல்கள், 'பறையன்' 'ஒரு பைசா தமிழன்' போன்ற இதழ்கள் முதலான பழைய தலித் படைப்புகள் நூலகங்களில் கிடைக்காமல் போவதற்குரிய காரணிகளையும் இப்பின்னணியில் புரிந்து கொள்ளலாம். (நானும் ஆ. சிவசுப்பிரமணியனும் இணைந்து எழுதிய 'பின்னி ஆலை வேலை நிறுத்தம் 1921' என்ற நூலுக்கு முக்கிய ஆதாரங்களில் ஒன்றாக விளங்கிய 'ஆதி திராவிடன்' என்ற இதழ் மறைமலையடிகள் நூல்நிலையத்தில் கிடைத்தபோது ஏற்பட்ட வியப்பு இன்றும் நினைவிலிருக்கிறது) எனவேதான், பழைய தலித் இதழ்களைத் தேடிக் (தமிழ் தலித் தொழிலாளர்கள் நிறைந்த) கோலார் தங்கவயலுக்குச் செல்லவேண்டியிருக்கிறது.

இந்தப் பின்புலத்தில் பார்க்கும்போது, அ. மா. சாமியின் நூல் மிகுந்த முக்கியத்துவம் பெறுகிறது. ஆய்வுலகம் இதுவரை அறிந்த நூலகங்களுக்கு அப்பால், இஸ்லாமியச் சமூக அறிவாளர்களிடமும் பெரும்புள்ளிகளிடமும் (உள்நாட்டிலும், இலங்கை முதலான வெளிநாடுகளிலும்) தொடர்பு கொண்டு பல பழைய இதழ்களையும் அவற்றைப் பற்றிய செய்திகளையும் அகழ்ந்தெடுத்திருக்கிறார். 'ராணி' ஆசிரியர் என்ற முறையில் தெற்காசியா மற்றும் தென்கிழக்காசியத் தொடர்புகளையும் அ. மா. சாமி இதற்கெனப் பயன்படுத்திக் கொண்டுள்ளார். புதிய ஆய்வுகள் புதிய தரவுகளை வேண்டி நிற்கின்றன. பிடிபடுகின்ற மீன், தூண்டிலையும் நீர்நிலையினையும் பொறுத்தது. ஆளும் பார்ப்பனிய/மேல்சாதி கருத்தியல்களுக்கு உட்பட்ட நூலகங்களில் பார்த்தால், இஸ்லாமியர்கள் மையநீரோட்டத்தைப் புறக்கணித்தவர்களாகவும், தமிழ்/இந்தியப் பண்பாட்டிலிருந்து ஒதுங்கிக் கொண்டவர்களாகவும், மதவெறி பிடித்தவர்களாகவும்தான் காட்சி அளிப்பார்கள். வேறு இடங்களில், வேறு நோக்குநிலைகளிலிருந்து பார்த்தால் யதார்த்தங்கள் வேறுவகையாக இருக்கக்கூடும். இஸ்லாமிய அடையாளம் என்பது ஒற்றைத் தன்மை உடையதல்ல; மதம் மட்டுமல்ல, மொழி அடையாளமும் முஸ்லிம்களுக்கு முக்கியமானதாக இருந்திருக்கிறது; அரபுத் தமிழுக்கு எதிராகவும் ஆதரவாகவும் விறுவிறுப்பான விவாதங்கள் தமிழ் இஸ்லாமிய உலகுக்குள் நடந்திருக்கின்றன; முதல் இந்தி எதிர்ப்புப் போரில் (1937-39) உருது பேசும் முஸ்லிம்களுக்கு மாறாகத் தமிழ் முஸ்லிம்கள் இந்தியை எதிர்த்துள்ளனர்; குர்ஆனைத் தமிழில் பெயர்க்கும் முயற்சிகள் தொடர்ந்து நடந்திருக்கின்றன; பள்ளிவாசலில் அரபு மொழிக்குப் பதிலாகத் தமிழில் 'குத்பா' ஆற்றுவதற்குச் செய்யப்பட்ட முயற்சிகள் வெற்றி பெற்றுள்ளன; இஸ்லாமிய அறிவாளரிடையேயும் தனித்தமிழ் செல்வாக்கு செலுத்தியுள்ளது என்பன போன்ற செய்திகள் தெரியவரும்.

அ. மா. சாமியின் நூல் ஒரு செய்திக் களஞ்சியம். மூல இதழ்களிலிருந்து படியெடுக்கப்பட்ட இருநூற்றுக்கும் மேற்பட்ட படங்களும் நூலில் அடக்கம். பா. தாவூத் ஷா போன்ற தமிழ்ச் சமூகத்தின் முக்கியமான அறிவாளர்களைப் பற்றிய அரிய குறிப்புகளும் நூலில் உண்டு.

இறுதியில், அரிதின் முயன்று சேகரித்த செய்திகளைப் பகுப்பாய்வுக்கு உட்படுத்தவில்லை என்பதோடு எந்தவோர் ஒழுங்குக்குள்ளும் அவற்றை நிரல்படுத்தவில்லை என்ற குறையை மட்டும் சுட்டிக் காட்டவேண்டிய கடமை மதிப்புரையாளருக்கு உண்டு.

**ஆ.இரா. வேங்கடாசலபதி**



படிப்பகம்

www.padippakam.com

# கலை ஆவேசத்தின் பாய்ச்சலும் பிரக்ஞையின் கடிவாளமும்

### கோணங்கி, சுரேஷ்குமார இந்திரஜித், ஜெயமோகன் ஆகியோரின் படைப்புலகம்: ஒரு பார்வை

அரவிந்தன்

இன்று தமிழ்ப் படைப்புலகில் அப்பழுக்கற்ற யதார்த்தவாதத்திலிருந்து சமரசமற்ற நான்லீனியர் வரை பலவித போக்குகள் நிலவுகின்றன. புதிய இசங்களும் சித்தாந்தங்களும் மோஸ்தர்களும் நமது அரசியல் சமூக வாழ்வை பாதித்துள்ளது போலவே இலக்கியத் துறையையும் பாதித்து அதன் விளைவாக கட்சி கட்டிக்கொண்டு சண்டைபோடும் போக்கும் ஆரவாரத்துடன் இருந்து வருவதைப் பார்க்கிறோம். படைப்பைவிட, படைப்பாக்கம் சார்ந்த சித்தாந்தங்கள் அழுத்தம் பெறத் துவங்கியிருக்கும் இன்றைய சூழ்நிலையில் எந்த சித்தாந்தத்திற்கும் விசுவாசம் செலுத்தாமல் படைப்பையே பிரதானமாகக் கொண்டு இயங்கிவரும் இளம் எழுத்தாளர்களில் முக்கியமானவர்கள் என்று கோணங்கி, சுரேஷ்குமார இந்திரஜித், ஜெயமோகன் ஆகிய மூவரையும் குறிப்பிட முடியும்.

இந்த மூவரும் ஒருவிதத்தில் பிரதிநிதித்துவ அம்சம் கொண்டவர்கள். இளம் எழுத்தாளர்கள். தனித்தன்மை வாய்ந்தவர்கள். நவீன மனம் கொண்டவர்கள். தங்கள் முன்னோடிகள் நிகழ்த்திய சாதனைகளைத் தாங்களும் மீண்டும் நிகழ்த்துவதில் ஆர்வமற்று புதிய சாதனைகளைப் படைக்கும் உத்வேகம் கொண்டவர்கள். உலக இலக்கியத்தின் போக்குகள் குறித்த பிரக்ஞை உடையவர்கள். தமிழ் இலக்கியத்தை அதன் அடுத்த தளத்திற்குக் கொண்டு செல்லும் ஆர்வம் கொண்டவர்கள். படைப்பாக்கத்தில் தீவிரமாக இயங்கிவரும் இந்த மூவரின் எழுத்துகள்பற்றிய மதிப்பீடுகள் ஒருவிதத்தில் இன்றைய தமிழ் எழுத்தின் ஒரு பரிமாணம் குறித்த மதிப்பீடாகவே அமையும்.

இவர்களது படைப்புகளை எளிதில் வகைப்படுத்திவிட முடியாது. 'மறைந்து திரியும் கிழவன்' என்ற தனது தொகுதியின் முன்னுரையில் சுரேஷ் குமார இந்திரஜித் சொல்வது போல, "புதிய வெளிப்பாட்டுமுறை கலைச் சொற்களுக்கு சவால் விட்டுக் கொண்டிருக்கிறது." யதார்த்தம், மிகையதார்த்தம், மாயாஜால யதார்த்தம், குறியீடு போன்ற சில கலைச் சொற்களைப் பயன்படுத்தி யாரையும், குறிப்பாக இவர்களை விளக்கிவிட முடியாது. ஒன்றுபோல தோற்றம் காட்டி பிறகு வேறொன்றாக மாறிவிடும் வெளிப்பாடு முறை இவர்களுக்கு சகஜமாகக் கை வந்திருக்கிறது. மேலும், இலக்கிய விமர்சகனுக்கோ, வாசகனுக்கோ உதவ பயன்படுத்தப்படும் கலைச்சொற்கள் பலவித வியாக்கியானங்களால் குதறப்பட்டு சக்தியிழந்து போய்விட்டதுடன் சில சமயங்களில் சுமையாகவும் ஆகிவிட்டிருக்கின்றன. எனவே கூடியவரை இந்தக் கலைச்சொற்களின் குறுக்கீடு இல்லாமல் என் பார்வையை முன்வைக்க முயல்கிறேன்.

இவர்களது கதைகளைப் படிக்கும்போது வாசிப்பு என்பது கடினமான உழைப்பு என்று தோன்றுகிறது. இந்த விஷயத்தில் முதன்மையாகக் குறிப்பிடப்பட வேண்டியவர் கோணங்கி. ஆழ்மனப் படிமங்களும் மாயாஜால உருவகங்களும் பின்னிப் பின்னிச் செல்லும் இவரது கதையோட்டத்துடன் சேர்ந்து நகர மிகவும் சிரமப்பட வேண்டியுள்ளது. படிமங்களின் திரை சுரேஷிடம் அவ்வளவாக இல்லை. என்றாலும் இவரது படைப்புகளில் அக உலகும் புற உலகும் ஒன்றோடொன்று பிணைந்து மாயம் காட்டும் தருணங்களை கவனத்துடன் பிரித்தறிந்து மேலே செல்ல வேண்டியுள்ளது. பின் தொடரும் சிரமத்தை ஜெயமோகன் கதைகள் அவ்வளவாக வைக்கவில்லை என்றாலும் இவர் சொல்லும் விஷயங்களை வைத்து, சொல்லாமல் உணர்த்தும் விஷயங்களைக் கண்டடைவதற்கு தீவிரமான தேடலை மேற்கொள்ள வேண்டியிருக்கிறது.

எழுத்தாளன் தனக்காகவேதான் எழுதுகிறான் என்ற பல கலைஞர்களின் கூற்றுகளிலிருந்து நாம் முடிவுக்கு வரவேண்டியுள்ளது. ஆனால் உருவாகும் நிலையில் மிக அந்தரங்கமானதாக, எழுதுபவனுக்கு மட்டுமே சொந்தமானதாக விளங்கும் படைப்பு, உருவாகி முடிந்த நிலையில் பகிர்ந்து கொள்வதற்கான ஒரு விஷயமாகிவிடுகிறது. எனவே பகிர்ந்து கொள்ளுதல் என்ற அம்சமும் சேர்ந்த பிறகுதான் படைப்பாக்கம் என்ற சொல் பூரணத்துவம் எய்கிறது. வானத்தில் பறந்து திரியவும் கற்பனையாய் உலகங்களை சிருஷ்டித்துக் கொண்டு அங்கே குடிபெயரவும் ஒரு படைப்பாளிக்கு முழு சுதந்திரமும் உரிமையும் உண்டு என்பதை யாரும் மறுக்கமுடியாது. ஆனால் வாசகனை கவனத்தில் கொண்டு மண்ணில் ஒரு சிறிதாவது காலூன்றிக் கொண்டிருக்க வேண்டியது அவசியமாகிறது. இது இல்லாததால் கோணங்கியின் படிமங்களும் மாயாஜால உருவங்களும் வேர்களற்று அந்தரத்தில் ஊசலாடி அவரது உலகத்தை நமக்கு அன்னியமாக்கி விடுகின்றன. ஜெயமோகனும் சுரேஷ்குமாரும் கூட மிகையதார்த்த உத்திகளை பயன்படுத்துகிறார்கள் என்றாலும் உத்தி என்ற அளவில்தான் அவற்றை பெருமளவில் பயன் படுத்துகிறார்களே தவிர, அவையே கலையாகிவிடும் என்ற மயக்கம் அவர்களிடத்தில் காணப்படவில்லை. ஆனால் கோணங்கியோ குழப்பமான ஆழ்மனப் படிமங்களும் மாயாஜால உருவகங்களும் தவிர்த்த எழுத்தை எழுத்தாகவே ஏற்றுக் கொள்ள மறுப்பவர் போலத் தோன்றுகிறார். அவரது கதைகளைவிடக் குழப்பமான அவரது முன்னுரைகள் அல்லது முன் குறிப்புகள் நம்மை இந்த முடிவிற்குத்தான் இட்டுச்செல்கின்றன. இந்தக் குழப்பங்களைச் சிரமப்பட்டு தாண்டி கோணங்கியின் படைப் புலகிற்குள் நுழைந்தால் அங்கு நாம் காண்பது என்ன?

> **சிக்கலான படிமங்களையும் மாயாஜால உருவகங்களையும் ஊடுருவி அல்லது விலக்கிவிட்டுப் பார்த்தால் கோணங்கியின் கதைகளில் தொலைந்துபோன ஒரு வாழ்வின் சோகம் திரும்பத்திரும்ப வெளிப்படுத்தப்படுவதைப் பார்க்கலாம். தனது தனிப்பட்ட சோகத்தைப் பொதுமைப்படுத்துவதுதான் கோணங்கி என்ற கலைஞனின் வெற்றி.**

நவீன விஞ்ஞானத்தின் பிரமிக்கத் தக்க வளர்ச்சி காரணமாக எத்தனையோ வசதிகள் நமக்கு சாத்தியமாகி இருக்கின்றன. ஆனால் இயந்திரமயமாக்கலினாலும் உடன் நிகழ்ந்த மேற்கத்தியக் கலாச்சாரப் படையெடுப்பாலும் இங்குள்ள மண்ணின் அசலான தன்மையும் கலாச்சாரமும் வாழ்க்கை முறையும் சிதைந்தும் உருமாறியும் அழிந்தும் போய்விட்டன. பரபரப்பு மிகுந்த, ஈரமற்ற, குரூரமான போலி கலாச்சாரம் தன் விஷக்கரங்களை நாட்டின் மூலை முடுக்குகளில் எல்லாம் நீட்ட ஆரம்பித்ததால் இந்த மண்ணின் எண்ணற்ற கலாச்சார கூறுகளும் வாழ்க்கை மதிப்பீடுகளும் நீலம்பாரித்து உயிரைவிட்டிருக்கின்றன. இத்தகைய இழப்பும் இந்த இழப்பு சார்ந்த அவலமும் அவரது படைப்புகளில் காண முடிகிறது. 'மதினிமார்கள் கதை' தொகுதியில், தொலைந்து போன தனது மண்ணின் வாசத்தையும் தனது பூர்வகுடிகளின் வழிவந்த மரபையும் எண்ணித் துயருறும் மனதின் எதிர்வினையாகத் துவக்கம் கொள்ளும் கோணங்கியின் இலக்கிய யாத்திரை, படைப்பாக்கம் குறித்து சில தவறான கண்ணோட்டங்களால் பெருமளவு திசைமாறிப் போய் விட்டது. என்றாலும் அவருள் இருக்கும் அசலான கலைஉணர்வு வற்றிவிடவில்லை என்பதை உணர்த்தும் சில கதைகளும், சில வரிகளும் அவ்வப்போது அவரிடமிருந்து வெளிப்பட்டுக் கொண்டு இருப்பதையும் காணமுடிகிறது.

சிக்கலான படிமங்களையும் மாயாஜால உருவகங்களையும் ஊடுருவி அல்லது விலக்கிவிட்டுப் பார்த்தால் கோணங்கியின்



படிப்பகம்

www.padippakam.com

சித்தரிப்பும் கவித்துவமான படிமங்களும் அற்புதமான உத்திகளும் ஒரு கதையின் அழகையும் பரிமாணங்களையும் கூட்ட உதவினாலும் படைப்பின் கலைப் பெறுமானத்தை நிர்ணயிக்க அவை போதுமானவை அல்ல. அதுபோலவே படைப்பாக்கத்தினூடே செயல்படும் பிரக்ஞை அம்சம் ஒரு கதைக்கு ஒழுங்கையும் தொடர்பு கொள்ளத்தக்க சாத்தியக் கூறையும் அளிக்க மட்டுமே உதவும். இந்த அனைத்து அம்சங்களின் உதவியுடன் உருப்பெறும் படைப்பில் கூடும் ஆழமும் பரப்பும்தான் அதன் கலைப்பெறுமானத்தை நிர்ணயிக்கும். இந்த ஆழமும் பரப்பும்தான் கதையைக் காலம், இடம் தாண்டி கொண்டு செல்கிறது. கலைஞனின் தீவிரமான தேடலும் தீர்க்கமான பார்வையும்தான் கதைக்கு ஆழம் சேர்க்கும். இந்தத் தேடலும் பார்வையும் ஜெயமோகனின் பெரும்பாலான கதைகளில் காணப்படுவதுதான் அவரது படைப்புகளை முக்கியமானவையாக கருதுவதற்குக் காரணமாகின்றன.

'ஜகன் மித்யை'யில், தனது முழு வாழ்க்கையையும் வீண் என்று தனது மரணத் தருவாயில உணரும ஒரு ஜீவனின் சோகமும், அந்த சோகத்திற்குக் காரணமான அழுத்தமான நம்பிக்கையும் வெளிப்படும் விதத்தில் நம் வாழ்க்கையில் நாம் கொண்டிருக்கும் நம்பிக்கைகளைப் பற்றிய சுய விசாரணை தூண்டிவிடப்படுகிறது. 'போதி' கதையில் தன்னை அவிசுவாசி என்று பிரகடனம் செய்து கொள்ளும் கதாநாயகன் உண்மையிலேயே அவிசுவாசிதானா ? உண்மையில் அவிசுவாசி என்றால் அவன் ஏன் மடத்திற்குத் திரும்பி வந்தான் ? சின்ன சன்னிதானத்தின் ஒழுக்க வீழ்ச்சி அவனுக்கு ஏன் அதிர்ச்சியைத் தரவேண்டும் ? கால் அழுகி நாற்றமெடுத்து நரக வேதனையில் துடித்தபோதும் பீடத்தைத் துறக்க குரு. மகாசன்னிதானத்திற்கு ஏன் மனம் வரவில்லை ? உண்மையில் துறவு என்பது என்ன ? முழுமையான அவிசுவாசம் என்பது உண்மையில் சாத்தியம்தானா என்பது போன்ற பல கேள்விகளை எழுப்பியபடி இருக்கிறது 'போதி'. 'படுகை' கதையீல் பேச்சிப்பாறை அணையின் உருவாக்கமும் அங்கு வாழ்ந்திருந்த பழங்குடிகளின் சமூக வாழ்க்கையின் வீழ்ச்சியுமாக பின்னிக் கிடக்கும் சரித்திரம் வசீகரமான மாம முகமூடி போர்த்தி சொல்லப்படுகிறது. ஆக்கத்தின் பின்னால் இருக்கும் அழிவையும் பெரும் மாற்றத்தின் அடியில் கண்களுக்குத் தெரியாமல் மடிந்து போகும் உயிர்கள் மற்றும் கலாச்சாரங்களின் இழப்பு தரும் சோகத்தையும், நாட்டுப்புற கதை சொல்லும் மரபையும், புராணக் கற்பனை மரபையும் பின்னி முற்றிலும் புதுமையான முறையில் சொல்லப்பட்டிருக்கிறது. 'திசைகளின் நடுவே' கதையில், இன்பமே முக்கியம் என்று வாதிடும் லௌகீகவாதியான சார்வாகன், தனது கொள்கைக்கான உயிர்துறக்கும் லட்சியவாதியாக மடிவதன் அடிப்படையில் உள்ள தத்துவ முரண் அதன் சிக்கல்களோடு முன் வைக்கப்படுகிறது. அத்துடன், எந்தத் தத்துவத்திற்கும் தன் முழுவிசுவாசத்தை செலுத்த முடியாமல், எதனோடும் தன்னை அடையாளப்படுத்திக் கொள்ள முடியாமல் தவிக்கும் ஒரு ஆத்மாவின் துடிப்பும் பதிவு செய்யப்பட்டுள்ளது. இருபதாம் நூற்றாண்டின் இருத்தலியல் சார்ந்த தவிப்பைப் பிரதிபலிக்கும் தீஷணனின் நிலை, மகாபாரத காலத்தின் பின்னணியில் காட்டப்படுவதன் மூலம் கரும்பலகையில் வைத்த வெண்புள்ளி போல விஷயம் பளிச்சென்று துலங்குகிறது. கலை வெளிப்பாட்டின் போது ஆதர்ச பிம்பத்தோடு முற்றிலுமாக ஒன்றிக் கரைந்துவிட வேண்டுமா அல்லது ஓரளவாவது விலகல் தேவையா என்ற தத்துவ முடிச்சு 'லங்கா தகன'த்தில் பதிவாகியிருக்கிறது. தர்க்கரீதியில் தீர்க்க முடியாத இந்தக் கேள்விக்கு அழகியல் ரீதியாக விடைகாண முயல்வது இக்கதையின் சிறப்பு.

அந்தரத்தில் தொங்கும் கதைகளையும் இவர் எழுதியுள்ளார். வீடு, வனம், சிவமயம் ஆகிய கதைகளில் மொழியும் சித்தரிப்பும் அபாரமாக இருந்தாலும் கதையின் ஜீவனைப் பொறுத்தவரை நம்மைப் பலவித யூகங்களின் வெள்ளத்தில் ஆழ்த்துகின்றன. மற்ற கதைகளில் இருப்பது போன்ற சமிக்ஞைகள் குறைந்த பட்சமாகக்கூட இவற்றில் இல்லாததால் வாசகனைத் தொற்றத் தவறுகின்றன.

○

நடை மற்றும் சித்தரிப்பைப் பொறுத்தவரை கோணங்கியும் ஜெயமோகனும குறிப்பிடத்தக்க அளவு திறமை படைத்தவர்களாக இருக்கிறார்கள். இருவரது வார்த்தைகளிலும் அவ்வப்போது கவித்துவம இழையோடுகிறது. கதையின் நம்பகத் தன்மையை இவர்களது சித்தரிப்பு எளிதில் கூட்டிவிடுகிறது. சித்தரிப்பு குறித்து சுரேஷ் பெரிதாக அலட்டிக் கொள்வதாக தெரியவில்லை. கோணங்கியைப்போல ஜெயமோகனைப் போல வாழ்வின் பலவித கோலங்களை காட்டும் முயற்சியில் சுரேஷ்குமார் இறங்குவதில்லை. அவரது கதையுலகு பெரிய சித்தரிப்புத் திறன் எதையும் அவரிடம் கேட்டு நிறகவில்லை. அவரது கதையுலகிற்கு ஏற்றபடி ஒரு அன்னியனின் மொழி அவரிடம் இயற்கையாக உருக்கொள்கிறது. ஜெயமோகனின் பாத்திரங்கள் சூழலினின்றும் அன்னியப் படுகிறார்கள்; ஆனால் அவரது மொழி அன்னியனுக்குரிய மொழி அல்ல. மிகுந்த ஈடுபாடும் பிரக்ஞையும் கொண்ட மொழி. ஒவ்வொரு வாக்கியத்திலும ஆசிரியரின் முகததை அடையாளம காட்டும் மொழி. ஆனால் இந்திரஜித்தின் மொழி இயற்கையாகவே அன்னியப்பட்டு நிற்கிறது. படைப்பில் சமூகரீதியான பார்வையின் பிரதிபலிப்பு என்று பார்க்கையில் மூவரிடமும் குறிப்பிடத்தக்க சில அம்சங்கள் உள்ளன. சுரேஷ்குமாரின் 'எலும்புக் கூடு'கள் என்ற கதை தவிர, 'அறிக்கை'யும் கூர்மையான சமூகப் பார்வையைக் கொண்ட கதை. பற்றி எரியும் பிரச்சினைகள் மக்களின் கவனத்தை கேட்டு நிற்கையில் கடைந்தெடுத்த முட்டாள்தனத்தையே ஜீவாதாரமாகக் கொண்ட சினிமா போன்ற அம்சங்களால் மக்கள் காயடிக்கப்பட்டு வருவதைப் பதிவு செய்திருக்கிறது இக்கதை. சினிமாககாரர்களும் மதவாதி களும் சமூகத்தில் ஏற்படுத்தும் தாக்கத்தைப் பற்றி இவரது கதைகள் அவ்வப்போது மெதுவான ஆனால் அழுத்தமான குரலில் பேசுகின்றன. ஜெயமோகனின் 'பல்லக்கு', 'மாடன் மோட்சம்' ஆகிய கதைகளில் வெளிப்படையாகவும் 'நாகம்', 'படுகை', 'திசைகளின் நடுவே' ஆகிய கதைகளில் சூஷ்ம மாகவும் அவரது சமூகப் பார்வை பதிவாகியிருக்கிறது. ஜாதி முதலான அமைப்புகளுக்கு எதிரான குரலாகவும் மேட்டுக் குடிகள் தங்கள் அதிகார பீடங்களைத் தக்க வைத்துக் கொள் வதற்காகப் பயன்படுத்தும் தந்திரங்களை அம்பலப்படுத்தும் முயற்சியாகவும் அந்தப் பார்வையை இனம் காண முடிகிறது. கோணங்கியைப் பொறுத்தவரை, அவரது ஊா, மக்கள, கலாசசாரம ஆகியவற்றின் இழப்பின் வலி அவரது படைப்புகளின் பல இடங்களில் வெளிப்படுகிறது. நகரத்து போலி கலாச்சாரததின மீது அவருக்கு இருக்கும் கோபம, 'நகல்', 'மாயாண்டிக் கொததனின ரஸமட்டம்' ஆகிய சில கதைகளில் பதிவு பெற்றிருக்கிறது.

○

ஒட்டு மொத்தமாகப் பார்க்கையில் இந்த மூவருமே தமிழ்ப் படைப்புலகின் எதிர்காலம குறித்து ஓரளவேனும் நம்பிக்கை ஏற்படுத்துவதுடன் அதன் இன்றைய ஸ்திதியில் உள்ள பலங்களையும் பலவீனங்களையும் ஏதோ ஒருவிதத்தில் பிரதிநிதித்துவப்படுத்துபவர்களாகவும் இருக்கிறார்கள். ஒருபுறம் தீவிரமான ஈடுபாடு, புதுமைகள் படைப்பதில் துடிப்பு, பரிசோதனை முயற்சிகளில் ஈடுபடும ஆர்வம, மறுபுறம பல்வேறு இஸம்கள் மற்றும் சித்தாந்தங்களின் தாககுதலால் ஏற்படும் குழப்பம், திசை மாற்றம, வறட்சி, தேககம் இவற்றிற்கிடையே மெல்ல முன்னேறியபடி இருக்கும் நவீன தமிழ இலக்கியத்தின் தற்போதைய நிலையை இந்த மூவரும் வெவ்வேறு விதங்களில் பிரதிபலிக்கிறார்கள். நம்பிக்கை அளிக்கும் இளம் கலைஞர்கள் மிகவும் குறைவாக இருக்கும் இன்றைய காலகட்டத்தில் இந்த மூவரும் தங்கள் பலம், பலவீனம் ஆகியவை குறித்த பிரக்ஞையோடு மேலும் தீவிரமாக இயங்கினால் தமிழ்ச் சூழலில் ஒரு மாற்றத்தை ஏற்படுத்த முடியும் என்ற நம்பிக்கையை ஏற்படுத்துகிறார்கள். இப்போதைக்கு, இந்த நம்பிக்கை கொள்ள இடம் இருப்பதே ஒரு ஆறுதலான அம்சம் என்று தான் சொல்ல வேண்டும்.

●



படிப்பகம்

www.padippakam.com

விவாதம்

# இலக்கியமும் சமூக மறுப்பும்

இ. அண்ணாமலை

இலக்கியத்தை வகைப்படுத்துவது படைப்பாளியின் வேலை அல்ல. நல்ல படைப்பாளி இந்த வகை இலக்கியத்தை எழுதப்போகிறேன் என்று சொல்லிக் கொண்டு எழுதுவதில்லை. வாழ்க்கையை அவன் பார்த்த நோக்கில், அவன் தேர்ந்த மொழி வடிவத்தில் எழுதுகிறான். தனக்கும் தன் அனுபவத்துக்கும் உண்மையாக இருப்பது ஒன்றே சமூகம் அவனிடம் எதிர்பார்ப்பது. எழுதியதை வகைப்படுத்துவதும் வகைக்குப் பெயரிடுவதும் எழுதிய பின் நிகழும் வேலை. ஒரு இலக்கியப் படைப்பாளி இந்த வகை இலக்கியத்தை எழுத வேண்டும்; அல்லது இந்தத் தகுதி உடையவர்கள்தான் இந்த வகை இலக்கியத்தை எழுத வேண்டும் என்று விமரிசகன் எதிர்பார்ப்பதும் கட்டாயப்படுத்துவதும் இலக்கியப் படைப்புக்கும் இலக்கிய ஒழுக்கத்துக்கும் புறம்பான செயல்களாகும். தலித் இலக்கியத்தைப் பற்றி இத்தகைய எண்ணங்கள் இருப்பது இலக்கிய உருவாக்கத்துக்கும் வளர்ச்சிக்கும் முரணான போக்கு.

இலக்கியத்தை வகைப்படுத்திப் பெயரிட அடை கொடுக்கும்போது சங்க இலக்கியம் போன்று காலத்தின் அடிப்படையிலும், பக்தி இலக்கியம் போன்று உள்ளடக்கத்தின் அடிப்படையிலும், சிற்றிலக்கியம் போன்று உருவ, யாப்பு அடிப்படையிலும் விமரிசகன் செயல்படலாம். இக்காலத்தில் இலக்கியக் கொள்கை அடிப்படையிலும் (யதார்த்த இலக்கியம் முதலியன), சமூகக் கொள்கை அடிப்படையிலும் (மார்க்சிய இலக்கியம் முதலியன) விமரிசகன் இலக்கியத்தை வகைப்படுத்தி அடைமொழி கொடுக்கிறான். இதனால் ஒவ்வொரு வகைக்கும் தொடர்பில்லை என்றோ, ஒவ்வொரு இலக்கியமும் ஒவ்வொரு வகையிலேயே அடங்கும் என்பதில்லை. இலக்கிய வகைப்பாடு விமரிசகனின் வசதிக்காக, விஞ்ஞானி பின்னிக்கிடக்கும் இயற்கைப் பொருள்களை ஆய்வுச்சாலையில் வகைப்படுத்துவது போல, விமரிசகனும் இலக்கிய ஆய்வுக்காக வகைப்படுத்துகிறான். உண்மை உலகில் கலப்படமற்ற, தூய்மையான வகை இல்லை. விஞ்ஞானி விதித்துள்ள குணங்களை மட்டுமே கொண்ட தண்ணீர் இயற்கை உலகில் இல்லை. தன்னைச் சாராத தன்மைகளையும் கொண்டிருப்பதே பொருளின் இயல்பு. வகைப்படுத்தப்படும் இலக்கியத்தின் தன்மையும் இதுவே.

எழுதுபவனின் சமூகப் பின்னணியின் அடிப்படையிலும் எழுதப்படும் பொருளின் சமூகத் தன்மையின் அடிப்படையிலும் இலக்கியங்கள் வகைப்படுத்தப்பட்டுப் பெயரிடப்படுவதில்லை. அப்படிப் பெயரிட்டாலும், அந்தப் பெயர் ஒரு சமூகக் கொள்கையின் அல்லது பார்வையின் பெயருக்கு மாற்றுப் பெயராகவே இருக்கும். பூர்ஷ்வா இலக்கியம் என்று சொல்லும்போது கதையாசிரியர் பூர்ஷ்வா வகுப்பினர், கதை மாந்தர் பூர்ஷ்வா வகுப்பினர் என்ற பொருளில் சொல்வதில்லை. மார்க்சியப் பார்வைக்கு மாறான சமூகக் கொள்கையை வெளிப்படுத்தும் இலக்கியமே பூர்ஷ்வா இலக்கியம் எனப்படும். இதேபோல் கறுப்பர் இலக்கியம் என்று அமெரிக்க இலக்கியத்தில் ஒரு வகையைச் சொல்லும்போது அது கறுப்பர்களால் கறுப்பர்களைப் பற்றி எழுதிய இலக்கியத்தை மட்டுமேயோ அப்படிப்பட்ட இலக்கியம் எல்லாவற்றையுமோ குறிக்காது. கறுப்பர் பார்வையில் உருவான ஒரு சமூகக் கொள்கை அல்லது சமூகப்பார்வை கொண்ட இலக்கியத்தையே கறுப்பர் இலக்கியம் என்ற பெயர் குறிக்கும்.

தலித் இலக்கியமும் இதே போலத்தான். கதை ஆசிரியரோ கதை மாந்தரோ அல்லது இருவருமோ தலித் இனத்தைச் சார்ந்தவர்களாக இருந்தாலே ஒரு இலக்கியம் தலித் இலக்கியம் ஆகிவிடாது. சமூகக் கொள்கையின் அடிப்படையில் தலித்திய இலக்கியம் என்று சொன்னால் இந்தக் குழப்பம் குறையலாம். பாட்டாளி இலக்கியம் என்பதற்குப் பதில் மார்க்சிய இலக்கியம் என்பதே வழக்கில் இருக்கிறது. பெண் இலக்கியம் என்று சொல்வதில்லை; பெண்ணிய இலக்கியம் என்றே சொல்கிறோம். இவற்றைப் போன்றதே தலித்திய இலக்கியம் என்ற பிரயோகம். மார்க்சிய இலக்கியத்தைப் பாட்டாளிகள் மட்டுமே எழுதுவதில்லை. மார்க்சியத்தை உள்வாங்கிய, மார்க்சியத்தின் மூலம் சமூகத்தைப் பார்க்கும் எவரும் எழுதும் இலக்கியம் மார்க்சிய இலக்கியம் என்ற வகைக்குள் அடங்கும். இதேபோல் தலித்தியத்தை உள்வாங்கி, தலித்தியத்தின் மூலம் சமூகத்தைப் பார்க்கும் எந்த எழுத்தும் தலித்திய இலக்கியம் ஆகும்.

ஒரு இலக்கியத்தை தலித் இலக்கியம் என்று வகைப்படுத்த, தலித்தியம் பற்றிய தெளிவும் புரிதலும் வேண்டும். மார்க்சியத்தின் சமூகப் பார்வை வர்க்க முரண்பாடுகளை அடிப்படையாகக்கொண்டது. தலித்தியத்தின் சமூகப் பார்வை சாதி முரண்பாடுகளை அடிப்படையாகக் கொண்டது. வர்க்கமும் சாதியும் ஒன்றுகொன்று முற்றிலும் வேறுபட்டவையோ தொடர்பற்றவையோ அல்ல. ஆனாலும் பார்வையின் முக்கிய கோணம் வேறானது. மனித உறவுகளை - சுரண்டப்படுதல், தாழ்த்தப்படுதல், விசுவாசமாயிருத்தல் உள்ளிட்ட எல்லா உறவுகளையும் - சாதி அமைப்பின் விளைவாகக் கண்டு, விளங்கி, விளக்குவது இந்தக் கோணம்.

சாதி அமைப்பில் இருக்கும் பல சாதிகளுக்கும் கவுண்டர் இலக்கியம், படையாச்சி இலக்கியம் என்று தனி இலக்கிய வகை இருக்க முடியாது. முன்னர் சொன்னது போல, இலக்கிய வகை கதை மாந்தரின் சாதியின் அடிப்படையில் பெயரிடப்படுவது அல்ல. சாதியப் பார்வையை தலித்துகளுக்கு மட்டும் பொருத்துவதற்கு வரலாற்றுக் காரணங்களும் சமூகக் காரணங்களும் உண்டு. வரலாற்றுக் காரணங்களில் அம்பேத்கார் இயக்கம் முக்கியமான ஒன்று. இங்கே சமூகக் காரணங் களையே முக்கியமாகப் பார்க்கலாம்.

தலித்துகள் நால்வருணச் சாதி அமைப்புக்கு அப்பாற் பட்டவர்கள்; கீழ்ப்பட்டவர்கள். அவர்களுடைய இருப்பு மனிதத் தன்மை அபகரிக்கப்பட்ட ஒன்று (Dehumanized Existence). இதனால் தலித்துகளின் வாழ்க்கை அனுபவம், புரிதல், தத்துவம் இவை அடிப்படையில் மற்ற சாதியினரிடமிருந்து வேறுபட்டி ருக்கும். எனவே, மனித வாழ்க்கையைப் பற்றிய புதிய சமூக நோக்கு தலித் இலக்கியத்தின் இயங்கு சக்தியாக இருக்கும்.

தலித்தியத்தின்படி, தலித்துகள் தங்கள் அவல நிலையிலிருந்து விடுதலைபெறக் கொண்டுள்ள குறிக்கோள்களும் வழிமுறைகளும் மற்ற சாதியினரிடமிருந்து வேறுபட்டவையாக இருக்கும். குறிக்கோளில் அடிப்படையான வேறுபாடு, சாதிச் சமன்பாட்டிற்குப் பதில் சாதி ஒழிப்பை வேண்டுவது, சாதி அமைப்பில் உயர் இடத்தைப் பெறுவதற்குப் பதில் சாதி அமைப்பை உடைப்பது; இல்லையென்றால் சாதி அமைப்பிலிருந்து வெளியேறுவது; சாதி அமைப்பைக் கொண்டு இயங்கும் இந்து மதத்திலிருந்து வெளியேறுவது. பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட விதிமுறைகளை (norms) மறுத்தல் தலித்தியத்தின் இன்னொரு முக்கியமான அம்சம். விதிமுறைகள் வாழ்க்கை மதிப்பீடுகளாக (value system) இருக்கலாம்; அவற்றை வெளிப்படுத்தும், காக்கும்மதமாக, மதக்கொள்கைகளாக, சடங்குகளாக இருக்கலாம்; வாழ்க்கையைப் புரியவைக்கும் இந்த மதிப்பீடுகளை உருவாக்கும் தொன்மங்களாக (myths) இருக்கலாம்; உயர்ந்தவை என்று கருதும் உணவு முதலான பண்பாட்டுப் பழக்கங்களாக இருக்கலாம்; தரமானது (standard) என்று எல்லோரும் பயன்படுத்தும் மொழியாக இருக்கலாம். இத்தகைய விதிமுறைகளை எதிர்த்து, மறுத்து, உதறி எறியும் போக்கு தலித்தியத்தை வரையறை செய்யும்.

ஒரு இலக்கியம் மேலே சொன்ன தலித்திய நோக்கில் - வேறான சமூகக் கொள்கை நோக்கில் - வாழ்க்கையின் அனுபவத்தை, அவலத்தை அழகியல் உணர்வோடு சொல்லும்போதுதான் தலித் இலக்கியம் என்ற வகையில், அது இடம் பெறும். இந்த வேறான சமூகக் கொள்கை நோக்கின் திட்பத்தையும் நுட்பத்தையும் பொறுத்தே தலித் இலக்கியம் விமரிசனப் பார்வையில், ஆங்கார இலக்கியம் என்ற நிலையிலிருந்து உயர்ந்து, எதிர்ப்பு இலக்கியம் (protest literature) என்ற நிலையைக் கடந்து, மறுப்பு இலக்கியம் (counter literature) என்ற உன்னத நிலையை அடையும்.

●



படிப்பகம்

www.padippakam.com

பிரிவினர் தமக்கு அதற்கான சமூக வாய்ப்பும் தலைமையும் கிடைக்கவில்லையென்று கருதிய பொழுது . . . ' என்று எழுதுகிறார். வேங்கடாசலபதியின் இந்த நூல் இந்தக் கருத்து மாயைகளின் மேல் முதல் தாக்குதல் நடத்தியுள்ளது, ஆரவாரமின்றி.

ஆய்வுக்குரிய காலகட்டத்தில் (1927-44) நடந்த மற்றொரு நிகழ்வும் நம் கவனத்துக்குரியது. 1944இல் சேலம் மாநாட்டில் சுயமரியாதை இயக்கத்தைத் 'திராவிடர் கழக'மாகப் பெரியாரும் அண்ணாவும் மாற்றியபோது கி.ஆ.பெ.விசுவநாதம் தலைமையில் கே.எம். பாலசுப்பிரமணியம், ம.பாலசுப்பிரமணிய முதலியார் போன்றவர்கள் இயக்கத்தைவிட்டு வெளியேறிவிட்டனர். 1944 நவம்பரில் சென்னை வந்த டாக்டர் அம்பேத்காருக்கு இவர்கள் வரவேற்புத் தந்தனர். அந்த நிகழ்ச்சியில் பேசிய அம்பேத்கார் "சேலம் மாநாட்டுத் தீர்மானங்களை ஏற்றுக் கொண்டு பெரியாரிடத்தில் மீண்டும் போய்ச் சேருங்கள்" என்று அவர்களுக்கு அறிவுரை வழங்கினார். தாங்களும் அப்படித்தான் நினைத்துக் கொண்டிருப்பதாக பாலசுப்பிரமணியம் பதில் கூறினார். (இந்தச் செய்தி 30.9.1944 *குடியரசு*, இதழில் வெளியாகியுள்ளது.) தமிழும் சைவமும் என்ற கோட்பாடு வேளாளர்களைத் தேசிய இயக்கத்தில் இருக்க விடவில்லை. திரு. வி. க., சாவடி. கூத்த நயினார் பிள்ளை, இ.மு. சுப்பிரமணியபிள்ளை போன்றோர் எல்லாம், விடுதலைக்குப் பிறகு தேசிய இயக்கத்தில் இருக்க இயலாமல் வெளியேறி விட்டதையும் நாம் நினைவில் கொள்ளவேண்டும்.

"பார்ப்பனியத்தின் கொடுமையை உணரப் பறையனாய் இருந்து பார்" என்று கவிதை எழுதினார் இன்குலாப். அதுவும் தமிழ்நாட்டில் இருக்க வேண்டும். கைலாசபதியும் இர்ஷிக்கும் சிவத்தம்பியும் சறுக்கிய இடம் இதுதான்.

வேளாளருக்கும் பார்ப்பனர்களுக்கும் இடையில் உள்ள வேறுபாட்டை நாம் சரியாக இனம் காண வேண்டும். பார்ப்பனியம் என்பது ஒரு சாதி சார்ந்த அடையாளம். இதுவரை நாம் அதனை தனி மதமாகவும் முழுமையான தத்துவமாகவும் கருதிக் கொண்டதுதான் பெரிய தவறாகும். சைவ வேளாளர் என்பது சாதியை அடையாளமாக அன்றி அது தாண்டிய சமய அடையாளமாக அமைந்தது. அதனால்தான் சைவ வேளாளர்கள் 'பிள்ளைமார் சங்கம்', 'முதலியார் சங்க'த்திற்குப் பதிலாக சைவ சபைகள் கட்டினார்கள். பாளையங்கோட்டை சைவ சபையின் 1912இல் அச்சிட்ட விதிகளில், "தமிழராய்ப் பிறந்தார் இருபாலரும் உறுப்பினராகத் தகுதியுடையவர்கள்" என்று குறிக்கப்பட்டிருந்தது. சைவ வேளாளர்களால் திறந்த மனத்தோடு அம்பேத்காருக்கு வரவேற்புத் தரமுடிந்தது. எனவேதான் வேளாளர்களால் பிராமணர்களைப் போலன்றி திராவிட இயக்கத்திலும் பங்கெடுக்க முடிந்திருக்கிறது. ஆனாலும் அவர்கள் பிராமணர்களைப் போல அனைத்திந்தியச் சாதியல்லர். எனவேதான் கான்பூர், செம்பூர், மாதுங்கா, கரோல்பாக், டாடா நகர், சௌத் பிளாக் என்று அவர்களுக்காக வடபுலத்துக் கதவுகள் விரியத் திறந்து கிடக்கவில்லை. உடன்பட்டும், முரண்பட்டும் திராவிட இயக்கத்துக்குள்ளேயே அவர்கள் நின்றுகொண்டிருந்தார்கள். அந்தக் காலத்திலேயே ஓரங்கட்டப்பட்ட வ.உ.சி, ஒதுக்கப்பட்ட திரு.வி.க. ஆகியோர் அவர்களுக்குத் தேசிய இயக்கம் தந்த படிப்பினைகளாகப் போய்விட்டனர். சாதியத்தைப் பின் நிறுத்திவிட்டு சைவத்தையும் தமிழையும் முன் நிறுத்திய காரணத்தால் சுயமரியாதை இயக்கத்துக்குள்ளும் அவர்களுக்கு மூச்சுத்திணறல் ஏற்பட்டது. இந்தக் கதையை அரிய நூல்களைத் தேடிக்கண்டு நுணுக்கமாகவும் அழகாகவும் ஆய்வு நூலாக ஆக்கியிருக்கிறார் வேங்கடாசலபதி. வேளாளர்கள் திராவிட இயக்கத்தில் எப்பொழுதும் நட்டப்படும் கூட்டாளிகளாகவே (losing partners) இருந்து வந்துள்ளனர்.

இந்நூற்றாண்டின் தொடக்கம் முதல் அறுபதுகள் முடிய தாமிரபரணிக்கரையில் இருபோக நஞ்சை நிலங்களில் 90 விழுக்காடு சைவ வேளாளர்களிடமிருந்து மற்ற சாதியாருக்குக் கைமாறியிருப்பதற்குப் பதிவாளர் அலுவலகங்களே சாட்சி. வ.உ.சி, புதுமைப்பித்தன் போன்றோரும் இதில் உள்ளடக்கம்.

வேளாளர் என்ற சொல்லுக்கு வேர்ச் சொல் 'வேள்' என்பதாகும். இதன் பொருளே 'மண்' என்பதுதான். (மண்ணாலே பாண்டம் செய்தவர் வேளார், மண்ணிலே ஆட்சி உரிமை உடையவர் வேளாளர்) அதனால்தான் விளைமண்ணை விற்றுவிட்ட வேளாளர்கள் பார்ப்பனர்களைப் போலத் தமிழ மண்ணைத் தாண்டி எங்கேயும் போக முடியவில்லை. இந்த வகையில் வ.உ.சியும், புதுமைப்பித்தனும் ஆய்வாளரின் கால எல்லைக்குள் (1927- 1944) அடக்கம். புதுமைப்பித்தனின் 'பால்வண்ணம் பிள்ளை', 'நாசகாரக்கும்பல்' ஆகிய கதைகள் மட்டுமல்ல, வண்ணநிலவனின் 'கம்பா நதி'யும் விக்ரமாதித்தனின் எழுத்துக்களும் இந்தச் சோக நாடகம் விடுதலைக்குப் பிறகும் தொடர்ந்ததைக் காட்டுகின்றன. தூத்துக்குடியின் 'நாயகன்' வ.உ.சிதம்பரம் பிள்ளையும் அதே தூத்துக்குடியைச் சேர்ந்த பொ.முத்தையா பிள்ளையும் செட்டிநாட்டுப் பத்திரிகைகளிலே மோதிக் கொண்டு கரைந்து போனார்கள். தருமபுரமும் திருவாவடுதுறையும் சாதியையும் சமயத்தையும் காப்பாற்றவும் முடியாமற் போய்விட்டன. சங்கர மடம் போல அதிகார மையமாக உயர்ந்து நிற்கவும் அவற்றால் முடியவில்லை. திருஞானசம்பந்தர் - திருநாவுக்கரசர் கூட்டுப் போல 1930-களில் துக்ளக் 'சோ'வும் மார்த்தாண்டம் பிள்ளையும் சேர்ந்து 'முற்படுத்தப்பட்டோர் இயக்கம்' கண்டபோதும் வெற்றி பெற முடியவில்லை.

தமிழில் நாட்டார் மரபிலும் வடமொழி இலக்கிய மரபிலும் 'கண்ட காவியம்' என்ற ஒரு மரபு உண்டு. 'அர்ச்சுனன் தவசு', 'கிருஷ்ணன் தூது', 'அரிச்சந்திர மயான காண்டம்', 'பாஞ்சாலி சபதம்' என்றெல்லாம் நிறையப் பார்க்கலாம். வேங்கடாசலபதியின் இந்நூலும் ஒரு 'கண்ட காவியம்'. ஒரு நூற்றாண்டு வரலாறு (1880-1980) உடைய ஒரு தளத்தில் வேகமிகுந்த ஒரு சிறு காலப்பகுதியை (1927-1944) மட்டும் எடுத்துக் கொண்டு நுட்பமாகவும் கூர்மையாகவும் தெளிவான முறையியலோடும் இந்நூலை எழுதியிருக்கிறார். இதன் ஏனைய காலப் பகுதிகளும் நிறைவு செய்யப்பட்டால் இருபதாம் நூற்றாண்டின் தமிழ்ச் சமூக வரலாற்றில் ஒரு கனிசமான பகுதி துலக்கம் பெறும் என்பது நம் நம்பிக்கை.

**தொ. பரமசிவன்**

●


## கிருஷ்ணன் நம்பி கதைகள்

கிருஷ்ணன் நம்பியின் எல்லாக் கதைகளும் அடங்கிய தொகுப்பு. அழகான பதிப்பு

விலை ரூ.75

## மண்

**ஜெயமோகன்**

ஜெயமோகனின் ஒன்பது கதைகள் கொண்ட தொகுப்பு. இவற்றில் நாலு கதைகள் பிரசுரமாகாதவை. அழகான பதிப்பு.

விலை ரூ.60

*ஸ்நேகா*

348, டி.டி.கே சாலை (முதல் தளம்)
இராயப்பேட்டை
சென்னை 600 014



## நவீன விருட்சம்

(காலாண்டிதழ்)

ஆசிரியர் : ***அழகியசிங்கர்***

தனி இதழ் ரூ.7
ஆண்டு சந்தா ரூ.28


தொடர்புக்கு :
7 ராகவன் காலனி,
மேற்கு மாம்பலம்
சென்னை 600 033.




படிப்பகம்

www.padippakam.com

## ஏழுகடல் தாண்டி



### மௌனம்

ஃபிரான்ஸிலிருந்து கவிஞர் கி.பி. அரவிந்தனை தொகுப்பாளராகக் கொண்டு வெளிவரும் 'மௌனம்' ஐந்தாவது இதழ் சிறப்பிதழாக ஓராண்டு இடைவெளிக்குப் பின் வெளிவந்திருக்கிறது.

இவ்விதழின் முதன்மையான அம்சம் வென் யுஹோங்கின் 'வெறிநகரம்' சிறுகதை. (மொழிபெயர்ப்பு: வ. கீதா, எஸ். வி. ராஜதுரை) சீன கலாச்சார புரட்சி காலகட்டத்தின் வன்முறை வெறியாட்டங்களை உறையவைக்கும் குறியீடுகளுடன் சித்தரிக்கிறது. வன்முறையைப் பயன்படுத்துவதன் 'நோக்கங்களை' கடந்து எவ்வாறு ஒரு சுயேச்சையான இயக்கத்தை மேற்கொண்டுவிடுகிறது என்பதையும் பிறகு அதை ஒருபோதும் திரும்ப அழைக்க முடியாது என்பதையும் நினைவூட்டுகிறது. கதையின் பின்புலம் பற்றிய ஜான் கிட்டிங்ஸின் கட்டுரை சீன கலாச்சாரப் புரட்சிக் காலத்தில் நரமாமிசம் உண்ணப்பட்டது பற்றிய தகவல்களை முன்வைக்கும்போது உண்மை பல சமயங்களில் எந்த ஒரு அதீதமான குறியீடுகளையும்விட அதீதமும் பயங்கரமும் கொண்டதாக இருக்கிறது. 'மனிதன்' என்ற படிமம் பற்றிய பெரும் கேலிச்சித்திரம் எழுகிறது.

பொ. கருணாமூர்த்தியின் சிறுகதை இளமைக்கால ஊர், வீடு, மனிதர்கள் சம்பந்தமான சில நினைவுகள் என்பதற்கு மேல் எந்த அர்த்தத்தையும் பாதிப்பையும் தராமல் ஒரு செயற்கையான முடிவுடன் முடிவடைகிறது.

கவிதைகளில் கி.பி. அரவிந்தன், ஜெயமோகன் கவிதைகள் கவிதைக்கான சாத்தியப்பாடுகளைக் கொண்டிருக்கின்றன. பொதுவாக ஈழக் கவிஞர்களின் அதீத உணர்ச்சி பாங்கும் 'ரொமாண்டிக்' தன்மையும் சோலைக்கிளியிடமும் தொடர்ந்து கவனிக்கக்கூடியதாக உள்ளது. இது அனுபவத்திற்கும் மொழிக்குமிடையே ஒரு இசைவின்மையை தோற்றுவிக்கிறது.

யமுனா ராஜேந்திரன் தொடர்ந்து சினிமாபற்றி நிறைய எழுதி வருகிறார். இந்த இதழில் 'பெண்கள் சினிமா' பற்றி ஒரு அறிமுகக் கட்டுரை. பெண்களைப் பற்றிய முக்கியமான படங்களின் பட்டியல் மிகவும் பயனுள்ளது. அதே சமயம் 'மெட்டி', 'அவள் அப்படித்தான்', 'அவள் ஒரு தொடர்கதை' போன்ற படங்களை அவற்றின் எதிர்மறை அம்சங்களை கணக்கிலெடுக்காமல் போகிறபோக்கில் பெண்கள் சினிமா வரிசையில் சேர்த்துவிடுவது அபாயகரமானது.

எஸ்.வி.ஆரின் 'இந்து-இந்தி-இந்தியா' நூலுக்கு சமுத்திரன் விரிவான மதிப்புரை எழுதியிருக்கிறார். 'அதிகார பரவலும் சோசலிசமும் மக்களின் பல்வேறு தேசிய, மொழி, சமயப் பண்பாட்டு பிரதேச அடையாளங்களுக்கான பாதுகாப்பும் தன்னுரிமையும் சேர்ந்து நிலவுகிற ஒரு புதுவகையான இந்திய சமூகத்தையும் கற்பிதம் செய்து பார்ப்பது இன்றியமையாததாகிறது' என்ற எஸ்.வி.ஆரின் கருத்தைச் சுட்டிக்காட்டி 'ஒருங்கிணைப்புச் சக்திகளும் பிரிவினைச் சக்திகளும் பலமட்டங்களில் இயங்கிக் கொண்டிருக்கும் இந்தியாவில் ஒரு புதிய இந்தியா பற்றிய கற்பிதத்திற்கு உதவக்கூடிய அம்சங்கள் எவை ?' என்று வினவுகிறார்.

தஸ்லிமா நஸ்ரின் பற்றிய கட்டுரை காலம் கடந்து வந்த ஒரு தொகுப்புரைப் போல உள்ளது. மு. புஸ்பராஜன் இவ்விவகாரத்தை முஸ்லிம், ஹிந்து அடிப்படைவாதிகள், ஏகாதிபத்தியவாதிகள் பயன்படுத்திக்கொள்ளும் விதத்தை விமர்சிப்பதுடன் 'லஜ்ஜா' நாவல் கலாபூர்வமற்றது என்கிறார். பாரிசில் புலம்பெயர்ந்த தமிழர்களால் மேற்கொள்ளப்படும் சினிமா முயற்சிகள் பற்றிய கட்டுரை அவற்றின் தொழில்நுட்ப குறைபாடுகளைப் பற்றி பேசுவதுடன் நிறுத்திக் கொள்கிறது. அவற்றின் உள்ளடக்கம், சினிமாமொழி பற்றிய விவரங்களோ, ஈழத்தமிழர்கள் வரலாற்று ரீதியாக வந்தடைந்திருக்கும் இடத்திற்கு அவை முகம் கொடுக்கின்றனவா, அல்லது தமிழகச் சினிமாவின் எச்சங்களாக உள்ளனவா என்பதைக் கட்டுரையிலிருந்து அறிந்துகொள்ள இயலவில்லை.

அல்ஜீரியாவின் காலனியாதிக்க மற்றும் உள்நாட்டுப் போராட்டங்கள் பற்றிய கட்டுரை ஒன்றும் வெளிவந்திருக்கின்றது.

'சுபமங்களா' போன்ற பரவலாக விநியோகிக்கப்படும் இதழ்களிலிருந்து மறு பிரசுரங்களைத் தவிர்த்துக்கொண்டிருப்பது இந்த இதழின் ஒரு ஆரோக்கியமான விஷயம். வெளியீட்டாளர்களின் குறிப்பைப் படிக்கும்போது தமிழ சிறுபத்திரிகைகளின் தலைவிதி உலகில் எந்த மூலையிலிருந்தாலும் ஒன்றுதான் என்பது அறியக் கிடைக்கிறது.

தொடர்பு முகவரி : Charles Vignes
6 Square du Roule
92200 Neuilly S/Seine, France.

○

### உயிர்ப்பு

உணர்வுபூர்வமான பிரதிபலிப்புகளைத் தாண்டி நவீன சித்தாந்தங்களின் பின்புலத்தில் கோட்பாட்டு புரிதல்களை நோக்கி இயங்கும் 'உயிர்ப்பு' ஐந்தாவது இதழ் (ஆனி 95) வெளிவந்துள்ளது.

ஏகலைவனின் 'தன்னியல்புவாதம் குறித்து' என்ற நெடிய கட்டுரை அனுபவ வாதத்திற்கும் தத்துவத்திற்கும் இடையிலான சிக்கலான உறவையும் முரண்பாட்டையும் ஈழத்தின் இன்றைய அரசியல் யதார்த்தங்களின் ஊடாக விரிவாக ஆய்வு செய்கிறது. சாராம்சமான உண்மைகளுக்குப் பதில் தோற்றப்பாடுகளையும், நுண்ணிய ஆய்வுகளுக்குப் பதில் அனுபவங்களையும், ஆழ்ந்த தத்துவ புரிதல்களின் அடிப்படையிலான அரசியல் வேலைத் திட்டங்களுக்குப் பதில் தன்னியல்பான செயல்பாடுகளையும் கொண்ட போராட்டங்கள் அடையக்கூடிய சீர்குலைவுகளும் தேக்கங்களும் உதாரணங்களுடன் சுட்டப்படுகின்றன. புலிகளின் இன்றைய பாசிசத் தன்மைக்கு அதன் கோட்பாட்டு வறுமையே முக்கிய காரணம் என்கிறது. 'பொதுப்புத்தி'யின் அடிப்படையிலான மக்களின் எதிர்ப்புணர்வுகள் ஆளும் வர்க்கச சித்தாந்தங்களுடன் கலந்து கிடப்பவை. அவற்றின் புரட்சிகரமான அம்சங்களைத் தொகுத்து ஒரு மக்கள் சித்தாந்தத்தை உருவாக்குவதன் தேவையை வலியுறுத்துகிறது. சித்தாந்தம் என்றதும் அரசியல் பாடநூல்களை அள்ளிக்கொண்டு வரும் கிளிப்பிள்ளைத்தனம் பற்றியும் எச்சரிக்கின்றது. 'தத்துவத்திற்கும் பொதுப்புத்திக்கும் இடையில அளவு ரீதியான வேறுபாடுகளே உண்டு, பண்புரீதியான வேறுபாடுகள் இல்லை' என்ற கிராம்ஸியின் கருத்தாக்கத்தை விளக்கும் கட்டுரையாசிரியர் பொதுப்புத்தியின் அடிப்படையிலான செயல்பாடுகள் தன்னை ஒரு தனித்துவமான இருப்பாக மாற்றிக் கொண்டு இயங்கும்போது பண்புரீதியான எதிர்மறை விளைவுகள் ஏற்படுகின்றன என்கிறார். சாகசம், அதிகாரம், புகழ் ஆகியவற்றில் ஆவல் கொண்டவர்களே 'மக்களிடம் போவது' என்ற கவர்ச்சிகரமான கோஷத்தின்கீழ் கோட்பாட்டு உருவாக்கத்திற்கான தேவையை பின்னுக்குத் தள்ளுகிறார்கள், அதற்கான உழைப்பைத் தர மறுக்கிறார்கள் என்றுகூறும் ஏகலைவன் இந்த அடிப்படையில் தமிழகத்திலுள்ள மார்க்சிய - லெனினிய குழுக்களின் செயல்பாடுகளையும் விமர்சிக்கிறார்.

ஆதியின் 'அழகியலும் அரசியலும்' என்ற கட்டுரை படைப்பாக்கத்தின் அழகியல் கட்டமைப்பு சார்ந்த உள்ளார்ந்த விதிகளைப் புறக்கணித்துவிட்டு உள்ளடக்கத்தின்



படிப்பகம்

www.padippakam.com

# உலகத் தமிழ் மாநாடு

## இரண்டு கடிதங்கள்

**பேராசிரியர் ஏ. வேலுப்பிள்ளையின் கடிதத்திலிருந்து . . .**

ஜனவரி மாதம் முதல் வாரம் தஞ்சாவூரில் நடந்த உலகத் தமிழ் மாநாட்டில் கலந்து கொள்ள வந்த என்னையும், இலங்கையைச் சேர்ந்த இன்னும் பல தமிழர்களையும் இந்திய அரசாங்கம் வெளியேற்றியது. யாழ்ப்பாண பல்கலைக் கழகத்தைச் சார்ந்த, பேராசிரியராக இயங்கும் தகுதி பெற்ற பல பிரதிநிதிகளும் ஒட்டு மொத்தமாக வெளியேற்றப்பட்டனர். உலகத்திலேயே பெரும்பான்மையான தமிழர் இனம் இருப்பது, இந்தியாவுக்கு அடுத்தபடி இலங்கையில். கடந்த இரு நூற்றாண்டுகளில் இலங்கைத் தமிழ் ஆராய்ச்சி தமிழக் கல்விக்குத் தந்த பங்களிப்பு மிகவும் மெச்சத்தக்கது. இம்முறை மாநாட்டுக்கு வெகு சில பிரதிநிதிகளே அழைக்கப்பட்டிருந்தனர். பிறகு இந்தச் சிலரும் அவமதிக்கப்பட்டனர். இலங்கையின் கல்விமான்களில் மிகவும் தகுதி வாய்ந்தவர்களை உலகத் தமிழ் மாநாட்டில் பங்கு கொள்வதிலிருந்து ஒதுக்கியதன் மூலம் இம்மாநாடு வெறும் தேசிய மாநாட்டின் தரத்துக்குத் தாழ்த்தப் பட்டுவிட்டது.

நவம்பர் மாதம் இந்தியத் தூதரகத்துக்கு விசாவுக்கு விண்ணப்பித்துக் கொண்டபோது, தமிழக அரசாங்கத்தின் அரசாங்க விருந்தாளியாக நான் அழைக்கப்பட்டிருந்த அழைப்புக் கடிதத்தையும் அதனுடன் சம்பந்தப்பட்ட மற்றக் காகிதங்களையும் இணைத்திருந்தேன். 1989இல் உலகத் தமிழ் ஆராய்ச்சிக் குழுவின் துணைப் பொதுக் காரியதரிசியாக நான் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தேன். இந்தக் குழுவின் தலைவரான பேராசிரியர் நொபரு கராஷிமா, அரசாங்க விருந்தாளியாக அழைக்கப்பட வெளிநாட்டைச் சேர்ந்த இருபது மதிப்பிற்குரியவர்களின் பெயர்களைப் பட்டியலிட்டுத் தமிழக அரசாங்கத்துக்கு அனுப்பினார். அதில் எங்கள் பிரயாணம் மற்றும் தங்குவதற்கான செலவுகளைத் தமிழக அரசாங்கமே ஏற்கும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. ஏப்ரல் 1994இலேயே கராஷிமா முன்மொழிந்த கோரிக்கை மாநில அரசாங்கத்தால் ஏற்கப்பட்டு, ஏற்கப்பட்ட ஆணையின் பிரதிகள் சம்பந்தப்பட்ட அரசுத் துறைகளுக்கு அனுப்பப்பட்டுவிட்டன. மே இரண்டாம் தேதி உலகத் தமிழ் ஆராய்ச்சிக் குழுவின் நிர்வாகக் காரியதரிசியான பேராசிரியர் சு. ராஜாராம் இந்த தஸ்தாவேஜுகளை எனக்குத் தபால் மூலம் அனுப்பி மாநாட்டுக்காகப் பதிவு செய்து கொள்ளும்படி என்னை வேண்டினார். நானும் பதிவு செய்து கொண்டேன். என் ஆராய்ச்சிக் கட்டுரையும் அதன்பின் ஏற்கப்பட்டது. மாநாட்டுச் சிறப்பிதழின் ஆசிரியரான டாக்டர் ஆர். நாகசாமி, சிறப்பிதழுக்காக ஓர் ஆராய்ச்சிக் கட்டுரை எழுதும்படி கேட்டுப் பின்னர் என் கட்டுரையும் ஏற்கப்பட்டது. உயர் ஆராய்ச்சி முறைகளை மற்ற அறிஞர்களுக்கு அறிமுகப்படுத்த ஒரு சிறப்புச் சொற்பொழிவு ஆற்றும்படி பேராசிரியர் நொபொரு கராஷிமா எனக்கு எழுதினார். நான் ஒப்புக் கொண்டேன். இந்தச் சிறப்புச் சொற்பொழிவை எழுத நான் நிறைய நேரத்தையும், சக்தியையும் செலவிட்டேன். இன்னொரு பொதுக் காரியதரிசியான டாக்டர் இ. அண்ணாமலை, ஜனவரி மூன்றாம் தேதி நடக்கப் போகும் மதம் மற்றும் வேதாந்தம் என்ற தலைப்பிட்ட அமர்வுக்கு என்னைத் தலைமை தாங்கும்படி அழைத்தார். எனக்கு அளிக்கப்பட்ட இந்தக் கௌரவத்தை நான் ஏற்றுக் கொண்டு இந்த அமர்வை ஆவலுடன் எதிர்பார்த்தேன். தமிழ்நாட்டு அரசாங்கச் செலவில் ஜனவரி ஆறு முதல் பதினொன்றாம் தேதி வரை ஏற்பாடு செய்யப்பட்டிருந்த சுற்றுலாவில் பங்கு பெற என் பெயரைச் சிபாரிசு செய்திருப்பதாகவும் பேராசிரியர் ராஜாராம் எனக்கு எழுதினார். இந்தச் சுற்றுலாவையும் நான் ஆவலுடன் எதிர்நோக்கினேன். சுற்றுலாவுக்குப் பின் 14ஆம் தேதி ஊர் திரும்பும் முன் தமிழ் அறிஞர்களைச் சந்தித்து விட்டு, தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் நூல் நிலையத்தையும் பார்த்து விட்டு வர விரும்பினேன்.

நடந்தது என்னவோ ஒரு கொடுங்கனவு - நான் எதிர்பார்க்காத, என் தகுதிப் பொருந்தாத ஒன்று. சென்னைக்கு நான் 27ஆம் தேதி வந்த போது ஏர் இந்தியா பிரதிநிதிகளும், இந்தியா டூரிஸ்ட் இண்டர்நாஷனல் ஏஜண்டும் என்னை மாநில அரசாங்க விருந்தாளியாக வரவேற்றனர். 29ஆம் தேதி நடு இரவில் போலீஸார் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு பாதுகாப்பு குறித்து அச்சம் இருப்பதாகவும், எனக்குப் பாதுகாப்பு அளிக்கப்படும் என்றும் கூறினர். டிசம்பர் 31ஆம் தேதி நான் சென்னையிலிருந்து கிளம்பும் முன் என் அறைக்கு ஒரு போலீஸ் அதிகாரி வந்தார். நான் திருச்சியில் இறங்கிய போது, மூன்று போலீஸார் என் பெயரைக் கூறியவாறே விமானத்தை அணுகினர். நான் கஜூரியா ஹோட்டலில் ஓரிரவு தங்கினேன். போலீஸார் என் நடமாட்டங்களை வரையறுத்துக் கொண்டிருந்தனர். என் பாதுகாப்புக்காக இப்படி முன்னெச்சரிக்கையான நடவடிக்கைகள் எடுப்பதாக அவர்கள் கூறினாலும், எனக்கு மிகவும் சங்கடமாக இருந்தது. ஜனவரி ஒன்றாம் தேதி எட்டரை மணிக்கு அவர்கள் என்னிடம் எனக்குப் பாதுகாப்புத் தடைநீக்கம் இல்லையென்றும் நான் மாநாட்டில் பங்கேற்க முடியாது என்றும் அறிவித்தனர். இலங்கையின் தமிழ் அறிஞர்களான பேராசிரியர்கள் சிவத்தம்பி மற்றும் ஷண்முகதாஸ், ஸ்வீடனைச் சேர்ந்த பேராசிரியர் பீட்டர் ஷால்க் இவர்களையும் தஞ்சாவூரிலிருந்து போகச் சொல்லிவிட்டதாகவும், அவர்களும் திருச்சிக்கு வருவார்கள் என்றும் எனக்குக் கூறப்பட்டது. நான் அவர்களுடன் சேர்ந்து கொண்ட பின் நாங்கள் எல்லோரும் சென்னைக்குப் போக வேண்டும் என்று ஏற்பாடு. இதில் எனக்கு மகிழ்ச்சி இல்லை. ஆனால் தஞ்சாவூரில் உள்ள மாநாட்டு மற்றப் பிரதிநிதிகள் இந்நிலையை மாற்ற ஏதாவது செய்வார்கள் என்று நினைத்தேன். மதியத்திற்குள் என் சாமான்களைக் கட்டிக்கொண்டு, சென்னை செல்ல அவர்கள் வண்டியில் ஏறும்படிப் போலீஸார் கூறினர். சென்னையிலிருந்து திருச்சிக்கு வெளிநாட்டைச் சேர்ந்த ஒரு மரியாதைக்குரிய நபராக விமானத்தில் வந்த நான், ஒரு போலீஸ் வாகனத்தில், ஒரு வேண்டப்படாத அந்நியனாக ஏற்றப்பட்டேன்.

இதுதான் என் பயணத்தின் திருப்பு முனை. இதன்பின் நான் போலீஸ் பாதுகாப்பிலேயே இருந்தேன் என்ற உணர்வு எனக்கு ஏற்பட்டது. தமிழ்நாட்டைச் சேர்ந்த பல போலீஸ்காரர்கள் என்னிடம் நல்லமுறையில் நடந்து கொண்டனர். மேலிடத்து உத்தரவுகளை நிறைவேற்ற வேண்டியிருப்பதாகவே கூறினர். அவர்கள் அன்புச் செயல்கள் பல எனக்கு நினைவிருக்கிறது என்றாலும் நான் இருந்த நிலைமையில் அவற்றை என்னால் பொருட்படுத்த முடியவில்லை. எவ்வளவு சீக்கிரம் முடியுமோ அவ்வளவு சீக்கிரம் அவர்களிடமிருந்து விடுபடவே விரும்பினேன். என் பாஸ்போர்ட்டை தத்தம் செய்யும்படிக் கூறினர். தஞ்சாவூரில் எல். டி. டி. ஈ. குழுவின் ஊடுருவல் இருப்பதாகவும், இந்திய அரசாங்கம் இந்தியாவிலிருந்து ஜனவரி 2 அல்லது 3ஆம் தேதி நான் திருப்பி அனுப்பப்பட வேண்டுமென்று ஆணையிட்டிருப்பதாகவும் என் பயண ஏஜன்டிடம் கூறப்பட்டது. அதன்பின்தான் எல். டி. டி. ஈயுடன் எங்களை இணைத்துப் பார்க்கிறார்கள் என்று எனக்குப் புரிந்தது. அதன் பின்பு, எல். டி. டி. ஈயுடனான தொடர்பு பற்றிச் சில செய்தித்தாள்கள் எழுதியிருந்ததையும், சில தினசரிகளில் பாதுகாப்பு அதிகாரிகள் மாநாட்டிலிருந்து நீக்கப்பட்டவர்களின் இத்தகைய தொடர்பு குறித்த தகவல்களை உறுதி செய்திருப்பதான அறிக்கைகளையும் காண நேரிட்டது. ஆதாரமற்ற இத்தகைய குற்றச்சாட்டுகளை அவர்கள் எய்திருந்தால் இதற்கான ஆதாரங்களைத் தரும்படி அவர்களுக்கு நான் சவால் விடுகிறேன்.

என் நிலைமையை நான் தெளிவாக்க வேண்டும். நான் அரசியலிலிருந்து முற்றும் விலகி இருக்கிறேன். எந்த அரசியல் கட்சியுடனோ, குழுவுடனோ எனக்குத் தொடர்பில்லை. என் ஆராய்ச்சி சரித்திர ஆய்வுப் பொருள்கள் பற்றியது; பழமைக் காலம் பற்றியது. தஞ்சாவூர் மாநாட்டுக்கு நான் எழுதிய கட்டுரையும் தமிழ் இலக்கிய நூலான மணிமேகலையில் வேற்று மதங்கள் எப்படி எதிர்மறையாக எடையிடப் பட்டிருக்கின்றன என்பதைக் குறித்துதான். நான் அரசியல் கொள்கைகளைப் பரப்புவதாகவோ, அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபட்டிருப்பதாகவோ யாரும் எந்த ஆதாரமும் காட்ட முடியாது. என்னுடைய சில வெளியீடுகளில், இலங்கையும் தமிழர்கள் காலம் காலமாக உறைந்த இடம் என்று



படிப்பகம்

www.padippakam.com

வலியுறுத்தியிருக்கிறேன். இந்த நோக்கு அங்குள்ள எல்லாத் தமிழ்க் கட்சிகளும், குழுக்களும் ஏற்கும் ஒன்று. எனக்குத் தெரிந்த அளவு, இந்த நோக்கு தமிழ்நாடும், இந்தியாவும் ஏற்றுக் கொள்ளும் ஒன்றுதான். செப்டம்பர் 1990இல் என் குடும்பத்துடன் ஸ்வீடன் வந்து இருக்கத் தொடங்கியபின் இலங்கைக்கு ஒரு முறை கூட இதுவரை செல்லவில்லை.

இந்திய அரசாங்கம் செய்த தவறை இப்போது நேராக்க முடியாது என்பதை நான் உணர்கிறேன். ஆனால் மிகுந்த அவமானத்துக்குள்ளாக்கிய இந்த மாநாட்டுத் தொடர்பாக நான் செய்த செலவை ஈடுகட்ட இழப்பீடுக்கான கோரிக்கையை நான் வைக்க விரும்புகிறேன். இந்தச் சோதனையிலிருந்து நான் இப்போதுதான் மீண்டு கொண்டிருக்கிறேன். தடுப்பூசிகளுக்கும், மருந்துக்கும், விஸா பெறவும், மற்ற ஏற்பாடுகளைச் செய்யவும் நான் நிறையப் பணம்' செலவிட நேர்ந்தது. இந்தியப் பயணத்துக்கும், அங்கு தங்கும் போதும் - குறிப்பாக, என்னைப் 'பாதுகாக்க' முற்பட்ட போது - எனக்கு ஏற்பட்ட செலவுகள் குறித்து நான் மிகவும் கசப்படைந்திருக்கிறேன். மிகவும் மனச் சோர்வுற்றதால் என் வேலைகளைச் சரியாகக் கவனிக்கும் மனநிலை இல்லாமல் போயிற்று. தமிழ்நாடு அரசாங்கம் விமானப் பயணச் சீட்டுகளை அனுப்பி, என் சில செலவுகளுக்கான பணத்தைக் கட்டியிருந்தாலும், வீணாக நான் நானூறு டாலர்கள் செலவழிக்க நேர்ந்தது. சென்னை ஏர் இந்தியா ஒரு ஸ்டாக்ஹோம் பயணியாக என்னை ஏற்றுக் கொண்டது என்றாலும், பம்பாய் ஏர் இந்தியா நான் பொறுப்பேற்க முடியாத ஏதோ ஒரு குறையைச் சுட்டிக்காட்டி, என் செலவிலேயே என்னை ஜனவரி மூன்றாம் தேதி திருப்பி சென்னைக்கு அனுப்பியது. ஜனவரி ஐந்தாம் தேதி சென்னையிலிருந்து பம்பாய் மீண்டும் செல்வதற்கான விமானப் பயணச் செலவை நானே ஏற்க வேண்டும் என்று போலீஸ் அதிகாரி கூறிவிட்டார். 3ஆம் தேதியிலிருந்து 5ஆம் தேதிவரை போலீஸார் மூன்று முறை வேறு வேறு விருந்தினர் விடுதிகளுக்கு என்னை மாற்றியபடி இருந்தனர். பல முறை சாமான்களைக் கட்டவும், அவிழ்க்கவும் நேரிட்டது. இங்கு வந்த பிறகுதான், திருச்சியில் 31ஆம் தேதி நான் வாங்கி, இன்னும் அணிந்து கூடக் கொள்ளாத ஸ்ஃபாரி உடை எங்கோ காணாமல் போனதைக் கவனித்தேன்.

இந்திய அரசாங்கத்தைத் தன் நல்ல பெயரை இழக்கச் செய்து, கேலிக்குள்ளாக்கிய அதிகாரிகளிடமிருந்து தகுந்த விளக்கங்களை இந்தியத் தூதரகம் பெற்றுத் தரமுடியுமா? பல வகைகளில் உயர்ந்த நாடான இந்தியாவின் நல்ல பெயரைக் காப்பது இந்திய தூதரகத்தின் பொறுப்பு ஆகும்.

**ஏ. வேலுப்பிள்ளை**

***(DLA News Vol: 19 No.2 February 1995)***

○

**பேராசிரியர் பீட்டர் ஷால்கின் கடிதத்திலிருந்து . . .**

என்னையும் என் குடும்பத்தையும் இந்தியாவிலிருந்து வெளியேற்ற இந்திய அரசு மூலம் தெரிவித்த முடிவு இத்துடன் இணைக்கப்பட்டிருக்கிறது. எந்தவித விளக்கமும் தரப் படவில்லை. எங்களுடன் பேராசிரியர் வேலுப்பிள்ளை, பேராசிரியர் ஷண்முகதாஸ் மற்றும் பேராசிரியர் கே. சிவத் தம்பியும் அவர்கள் குடும்பங்களுடன் வெளியேற்றப்பட்டனர். இவர்கள் எல்லோரும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் பேராசிரியர்கள். பேராசிரியர் வேலுப்பிள்ளை உப்பசாலா பல்கலைக்கழகத்தில் வருகைதரு பேராசிரியராக இருக்கிறார். 1989லிருந்து எங்கள் கல்வி நிறுவனம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்துடன் பரிமாற்றத் திட்டம் வைத்திருப்பதால் நானும் இப்பேராசிரியர்களுடன் இணைக்கப்பட்டு விட்டேன். யாழ்பாணப் பல்கலைக்கழகத்துடன் எங்களுக்குள்ள தொடர்புதான் வெளியேற்றத்துக்குக் காரணம் என்று நான் அனுமானிக்கிறேன். நாங்கள் பேராசிரியர்களாக இருப்பதால் தலைப்புச் செய்திகளில் குறிப்பிடப்பட்டோம். ஆனால் ஐம்பதுக்கும் மேற்பட்ட இலங்கைத் தமிழர்கள் மாநாட்டிலிருந்து வெளியேற்றப்பட்டோ அல்லது மாநாட்டில் பங்கெடுப்பதிலிருந்து தடை செய்யப்பட்டோ இருக்கிறார்கள் என்பதை நானறிவேன். டில்லியின் குறுக்கீட்டால் தமிழர்களின் உலக மாநாடு ஒரு தேசிய அல்லது பிரதேச மாநாடாகிவிட்டது.

தமிழ்நாடு அரசு ஏற்பாடு செய்த மாநாட்டில நாங்கள் அரசு விருந்தினர்களாகவும், ஆராய்ச்சிக் கட்டுரை எழுதிப் பங்கேற்ப வர்களாகவும் அழைக்கப்பட்டதற்கான சான்று களையும் நான் இத்துடன் இணைக்கிறேன். நாங்கள் எல்லோரும் தமிழ்நாடு அரசின் விருந்தினர்கள். எங்களில் சிலரின் பயணச் செலவும் ஏற்கப்பட்டது. பேராசிரியர் வேலுப்பிள்ளை மற்றும் பேராசிரியர் சிவத்தம்பி இருவரும் சிறப்புச் சொற்பொழிவு ஆற்ற அழைக்கப்பட்டிருந்தனர். வழக்கமான ஆராய்ச்சிக கட்டுரைகளின் தொகுப்பைத் தவிர மாநாட்டின் சிறப்புத் தொகுப்பு ஒன்றுக்கு விசேஷக கட்டுரைகள் வழங்கவும், அமர்வுகளுக்குத் தலைமை தாங்கவும் நானும் பேராசிரியர் வேலுப்பிள்ளையும் அழைக்கப் பட்டிருந்தோம்.

ஸ்டாக்ஹோமிலுள்ள இந்திய தூதரகத்துக்கு விசாவுக்காக விண்ணப்பித்த போது நான் மாநாட்டுக்கான அழைப்பை இணைத்து, நான் மாநாட்டுக்குப் போகப் போவதைத் தெளிவாக்கியிருந்தேன். எனக்கு விசா கிடைத்ததால் நான் சென்றேன். ஆனால் புது வருடப் பிறப்பின் முதல் நாள் நடு இரவில், தஞ்சாவூரில் மாநாட்டு ஸ்தலத்தில் நாங்கள் தங்கியிருந்த இடத்துக்கு ஐந்து போலீஸ்காரர்கள் வந்து எங்களையும் மற்றப் பேராசிரியர்களையும் சென்னைக்கும் திருச்சிக்கும் அழைத்துப் போயினர். சென்னையில் சில நாட்கள் நாங்கள் போலீஸ்காரர்களுககு இடையே கடத்த நேரிட்டது. ஆனால் நாங்கள தமிழ்நாட்டுப் போலீஸாரால் நன்றாக நடத்தப்பட்டோம். டில்லியின் இந்த முடிவு அவர் களையும் சங்கடபபடுத்தியிருந்தது. கிளம்புவதற்கு முன்னால் சென்னை போலீஸாருடன் நடநத பிரிவுபசார நிகழ்ச்சியில், ஒரு போலீஸ்காரர் என்னை அணைத்துக் கொண்டு, "தமிழ் நாடு போலீஸ் உங்களை விரும்புகிறது" என்று உளமாறச் சொன்னார். தஞ்சாவூரைத் தவிர்த்துவிட்டுத் தமிழ்நாட்டில் தங்கவும் தமிழ்நாட்டுப் போலீஸாருடன் நாங்கள் உடன்பாடு செய்து கொள்ள முடிந்தது. இதுவும் டில்லியால் ரத்து செய்யப் பட்டது. என்னைப் பற்றிய சாதகமான கட்டுரைகள் செய்திப் பத்திரிகைகளில் வெளியிடப்பட்டன. மாநாட்டின் அங்கத்தினர் கள் ஒரு ஆர்ப்பாட்ட ஊர்வலம் நடத்தவும் திட்டமிட்டிருந்தனர்.

இதிலிருந்து மத்திய அரசாங்கத்தின் தீர்மானம் எதிர்மறை விளைவுகளை ஏற்படுத்தியது என்பது தெரிகிறது. மையத்துக்கும் விளிமபுக்கும் இடையே வழக்கமாக உள்ள இறுக்கத்தை இது தெளிவாகக் காட்டியது. இந்தியத் தமிழர்களிடமும், தமிழ்நாட்டுப் போலீஸாரிடமும் டில்லிக்கு எதிர்வான உணர்வுகளை ஏற்படுத்தியது மத்திய அரசாங்கம். ஒரு கல்வி மாநாட்டில் அரசியல் தீர்மானத்துடன் புகுந்தது அனைத்துலக அறிஞர் சமூகத்தில் வியப்பையும், எதிர்ப்பையும் உண்டாக்கியது. இது கல்வியாளர் சமூகத்தில் கட்டாயமாக ஏற்கப்படாத ஒன்று. அடுத்தத் தமிழ் மாநாட்டுக்கான பொதுக் காரியதரிசியாக சிவத்தம்பியை பொதுஜன அபிப்பிராயப்படி ஏற்கெனவே நியமித்தாயிற்று. டில்லியின் முடிவு முன்னெச்சரிக்கை எடுத்துக கொள்வதற்கான உதாரணங்களாக இல்லாமல வீரததியாகிகளை உருவாக்கி விட்டது.

உங்கள் அரசாங்கம் ஒரு கல்வி மாநாட்டில் அரசியல் சார்ந்த தீர்மானத்தை எவ்வகையிலும் ஏற்க முடியாத அடிப்படையில் எடுத்திருக்கிறது. இவ்விடம் நான் குறிப்பிடுவது, யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம் எல். டி. டி. ஈ.யின் ஆளுமையிலுள்ள பிரதேசத்தில் இருப்பதால் நாங்கள் எல்லோரும் எல். டி. டி. ஈ. சார்ந்த ஊடுருவல்வாதிகளாகக் கருதப்பட்ட வதந்திகளையும் யூகங்களையும்தான்.

இந்திய அரசாங்கம் எல். டி. டி. ஈ.யைத் தடை செய்திருப்பதும், எல். டி. டி. ஈ. ஆதரவாளர்களும் தடை செய்யப் படுவார்கள் என்பது நான் அறியாததல்ல. எங்கள் எல்லோருக்குமே இது பற்றித் தெரியும். ஆனால் இதற்கும் எங்களுக்கும் என்ன சம்பந்தம்? நாங்கள் யாரும் எல். டி. டி. ஈ.யை செயல் ரீதியில் ஆதரித்திருக்கிறோமா? டில்லி இதற்கான ஆதாரங்களைக் காட்ட நான் சவாலிடுகிறேன். யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்துடன் கல்வி சம்பந்தமான தொடர்பு வைத்திருப்பது எங்களை எல். டி. டி. ஈ. ஆதரவாளர்களாக்கி



படிப்பகம்

www.padippakam.com

விடாது. பல ஆண்டுகளாக எல். டி. டி. ஈக்கு மனித உரிமைகள் பற்றிப் போதிக்க நாங்கள் முயற்சித்திருக்கிறோம்.

என்னைப் பற்றி மட்டுமே கூறப்போனால், 1970 முதல் தமிழர் - சிங்களர்களுக்கிடையே உள்ள பிரச்னையை நான் கவனித்து வருகிறேன். 1981இல் யாழ்ப்பாணத்துப் பொது நூலகம் சிங்கள மந்திரிகளால் எரிக்கப்பட்டு கலாசார ரீதியில் தமிழர்களை இன அழிவுக்குள்ளாக்க முயன்றபோது, தமிழர்கள் நம்மிடையே உள்ள நார்டிக் ஸாமிஸ் (Nordic Saamis) போன்றவர்கள், தன்முடிவுரிமை பெற உரிமையுள்ளவர்கள், மாவட்ட ஆட்சி மன்றங்கள் உடைய தனியொருமை (Unitarian) அரசிலோ, கூட்டாட்சி (Federate) அரசிலோ, கூட்டமைவு (Confederate) அரசிலோ அல்லது தனிப்பட்ட அரசிலோ இருப்பது பற்றி தீர்மானிக்க உரிமையுள்ளவர் என்பதை ஏற்க நான் தயாராகயிருந்தேன். சமீபத்து நிகழ்ச்சிகள் எல். டி. டி. ஈ.யே தனி ஈழம் பற்றிய திட்டங்களைக் கைவிட்டு, மற்றத் தமிழர்களுடன், பொது நோக்கை ஒட்டி நடக்க முற்படுவதைக் காட்டுகிறது. அவர்களுக்கும் அவர்கள் வாழும் தீவுக்கும் எது நல்லது என்று தமிழர்கள் தீர்மானிக்கிறார்களோ அதை நான் ஆதரிக்கிறேன். சமாதானத்துக்கான நம்பிக்கையை ஊட்டும் தற்போதைய நிகழ்ச்சிகளை நான் வரவேற்கிறேன். இந்த என் மதிப்பீட்டு அடிப்படைதான் 1981இலிருந்த தமிழர்களுக்கான செயல்ரீதியான வேலைகளுக்கு என்னை இட்டுச் சென்றிருக்கிறது. இலங்கையின் யு. என். பி. அரசுகள் என் செயலைத் தீவிரமாக வெறுத்தன. என்னை வன்மையாகப் பலமுறை எதிர்த்தன.

பல அனைத்துலகக் கருத்தரங்குகளில் தமிழர்கள் ஒரு மக்கள் இனமாக உணரப்பட வேண்டும் என்பதற்கான செயலாளியாக நான் இருந்திருக்கிறேன் என்பதை நான் எவ்வகையிலும் மறுக்கவில்லை. இப்பிரச்னையில் ஒரு மூன்றாம் நபர் புகுந்து இடையீட்டாளராகச் செயல்படுவதற்கான முயற்சிகளிலும் பலமுறை நான் சம்பந்தப்பட்டிருக்கிறேன். இதற்கும் தமிழர்கள் எத்தகைய அரசு வேண்டும் என்று தீர்மானிப்பார்கள் என்று கணிப்பதற்கும் நிறைய வித்தியாசம் உண்டு. தமிழர்கள் மக்கள் குழுவாய் தீர்மானிக்க வேண்டிய ஒன்று இது. கல்வி சம்பந்தப்பட்ட என் வேலையினின்றும் மாறுபட்டது இது.

ஒரு செயலாளி என்ற முறையில் இலங்கை ராணுவம் யாழ்ப்பாணத்தை அழித்தது பற்றி ஒரு புத்தகம் நான் வெளியிட்டிருக்கிறேன். யாழ்ப்பாணத்து மக்கள் குழுவினைச் சேர்ந்தவர்கள் மக்களுக்கு எதிரான போரை நிறுத்தும்படி இலங்கைப் பிரதமருக்கு எழுதிய 62 கடிதங்களின், விளக்கங்களோடு கூடிய, தொகுப்பு இப்புத்தகம். யாழ்ப்பாணத்து மக்கள் குழுவின் சிறப்பு அங்கத்தினனாக நான் இருந்தேன். அனைத்துலக சமுதாயத்திற்கு இப்போரை நிறுத்தும்படி அவர்கள் எழுதிய முறையீடுகள் பலவற்றை எழுத நான் உதவியிருப்பதற்கு நான் எந்தவகையிலும் வருத்தப்படவில்லை. இக்கடிதங்களில் ஒன்று இந்தியப் பிரதமருக்குக் கூடப் போயிற்று. புத்தகத்தின் தலைப்பு மிகுந்த நம்பிக்கையுடன் (Hoping Against Hope) என்பதாகும். ஒரு சமாதான உடன்படிக்கைக்கான நம்பிக்கையை வெளிப்படுத்துகிறது தலைப்பு. மக்கள் குழுவைச் சேர்ந்த பலரும் செல்வநாயகத்ததின் கொள்கையை ஏற்றவர்கள்.

கல்வி சார்ந்த என் பிரதான வேலை காலனிய ஆதிக்கத்துக்கு முற்பட்ட தமிழ் பௌத்தத்தைப் பற்றியது. இதற்கும் தற்காலப் பிரச்னைகளுக்கும் எந்தவித சம்பந்தமுமில்லை. தஞ்சாவூரில் நடந்த தமிழ் மாநாட்டில் பல ஆண்டுகள் இது பற்றிச் செய்த ஆராய்ச்சியின் முடிவுகளைத்தான் முன் வைப்பதாக இருந்தேன். பௌத்த மதம் தமிழ் நிலத்தில் வந்த சரித்திர காலத்தை நான் மாற்றிக் கணித்திருக்கிறேன். தமிழர்கள் சரித்திரத்தில் பௌத்தம் (Buddhism in the history of the Tamils) என்ற தலைப்பிட்ட இப்புத்தகம் இரு பகுதிகளாக வரவிருக்கிறது.

நான் எடுத்துக் கொண்டிருக்கும் இன்னொரு ஆராய்ச்சி இலங்கையைச் சேர்ந்த தமிழர்களின் மதங்களின் சரித்திரம். நான் கொண்டு வரும் லங்கா இதழின் ஐந்து மற்றும் ஆறாம் இதழ்கள் இந்தப் பொருள் குறித்தது. தற்போதைய அரசியலுக்கும் இதற்கும் எந்தவிதத் தொடர்புமில்லை.

நான் ஈடுபட்டுள்ள மூன்றாவது ஆராய்ச்சி எல். டி. டி. ஈயின் தியாகம் என்ற கோட்பாடு பற்றியது. வீரத்தியாகம்தான் முடிவாக வாழ்க்கையைத் துறப்பதைக் குறிக்கிறது என்று பொருள்படுத்திப் பல கட்டுரைகளை வெளியிட்டிருக்கிறேன். இப்பொருள் பற்றிய பல கட்டுரைகள் அகில உலக உயர்கல்விப் பத்திரிகைகளில் வரவிருக்கின்றன. ஸைடாஸியன (Sydasion) என்ற ஸ்வீடனைச் சேர்ந்த பத்திரிகையில் இலங்கையின் இனப்போர் எப்படி மதத்தை உருவாக்குகிறது என்பது பற்றி ஸ்வீடனைச் சேர்ந்தவர்களுக்கு பல ஆண்டுகளாகச் சொல்லி வருகிறேன். மதத்தைப் பற்றிய சரித்திராசிரியனாக இருப்பதால், இந்தியாவின் புராதன மதக்கோட்பாடான தியாகத்தையும், பகவத் கீதையின் கடைசிப்பகுதியையும் மூலாதாரமாக வைத்துக் கொண்டு அது எவ்வாறு காலம் காலமாக புரிந்து கொள்ளப்பட்டது, எவ்வாறு இந்தியாவின் சுதந்திரப் போராட்டத்திலிருந்து, தெலுங்கானா போராட்டம் மற்றும் இலங்கையின் தமிழர் போராட்டம் வரை எட்டியது என்பதைப் பற்றி எனக்கு மிகுந்த ஆர்வம் உண்டு. யாழ்ப்பாணத்துக்கு நான் பலமுறை சென்றிருக்கிறேன். தியாகம் என்ற கோட்பாடு பற்றிய நிறைய விவரங்கள் சேகரித்துள்ளேன். உலகத்திலேயே இது பற்றிய மிகச் சிறந்த தகவல்காப்பகம் என்னிடம்தான் உள்ளது எனலாம். ஒவ்வொரு நவம்பர் 27ஆம் தேதியும் ஒஸ்லோ, ஹெர்னிங், ஸ்டாக்ஹோம், லண்டன் மற்றும் பாரிஸில் நடைபெறும் மாவீரர்கள் தினத்திலும் நான் பங்கேற்று வீரத்தியாகம் பற்றிய தகவல்களைச் சேகரிக்க இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி வருகிறேன்.

டில்லி அரசாங்கத்திடமிருந்து நான் எதிர்பார்ப்பது தமிழர்களுக்காக நான் செயலாளியாக இருப்பதையும் என் கல்வி சார்ந்த வேலைகளையும் இரு வேறு விஷயங்களாக்குவதுதான். நான் அவற்றை ஒருபோதும் இணைப்பதில்லை. செயலாளியாக இருப்பதில் என் நோக்கம் தமிழர்கள் ஒரு மக்கள்குழுவாக ஏற்கப்படுவதும், இலங்கை அரசும் தமிழர்களும் ஒத்துப் போவதுமான இரண்டும்தான். டில்லி அரசாங்கத்தின் கடமை எல். டி. டி. ஈயுடன் உள்ள தொடர்பு பற்றி கவனமாகப் பார்ப்பதுதானே ஒழிய, ஒட்டுமொத்தமாக, எந்தவித வேறுபாடும் காணாமல், யாழ்ப்பாணத்து அறிஞர்களை எல்லாம், எல். டி. டி. ஈயின் ஆதரவாளர்களாக்குவது அல்ல. சிவத்தம்பி நவீன தமிழ் இலக்கிய வல்லுனர் ஆவார். ஷண்முகதாஸ் தமிழ் இலக்கணத்திலும், தமிழ் மற்றும் ஜப்பானிய கலாசாரத்தை ஒப்பு நோக்கும் படிப்பிலும் வல்லுனர். தமிழ்க் கல்லெழுத்துக்களில் வேலுப்பிள்ளை வல்லுனர். அரசியல் கலந்த எதையும் அவர்கள் எழுதவில்லை. இவர்களை எல். டி. டி. ஈ. ஆதரவாளர்களாக்குவதைப் புரிந்து கொள்ள முடியவில்லை. டில்லியில் தீர்மானங்களைச் செய்யும் சிலர் ஒரு பெருந்தவறைச் செய்து சீர்தூக்கிப் பார்ப்பதில் உள்ள பலவீனத்தைக் காட்டியிருக்கிறார்கள். அமெரிக்காவில் மெக்கார்த்தி காலத்தில் ஒவ்வொரு முற்போக்குவாதியையும் கம்யூனிஸ்டாக ஆக்கிய நிலைமை இன்று இந்தியாவில் உள்ளது. டில்லி ஒவ்வொரு இலங்கைத் தமிழனையும், தமிழர்களை ஒரு மக்கள் குழுவாக ஏற்றுக் கொள்ள தமிழர் மேற்கொண்டுள்ள போராட்டத்தை ஆதரிக்கும் யாரையும் எல். டி. டி. ஈயின் ஆதரவாளராகக் காண்கிறது.

டில்லி எடுத்த தீர்மானத்தை மாற்ற முடியாது. ஆனால் தகுந்த விசாவுடன் மாநாட்டுக்குப் பயணப்பட்ட எங்களுக்குப் பொருளாதார இழப்பீடு தரலாம்.

இங்கு ஸ்டாக் ஹோமிலுள்ள தூதரகத்துடன் கலாசார விஷயங்களில் எனக்கிருக்கும் நல்லுறவு இந்நிகழ்ச்சியினால் பாதிக்கப்படாது என்று நம்புகிறேன். எனக்கு விசா அளித்ததில் நீங்கள் எந்தத் தவறையும் செய்யவில்லை. மாநில அரசாங்க விருந்தினர்களை வெளியேற்றி, தானே அளித்த விசாவை ஏன் ரத்து செய்கிறது என்பதை விளக்குவது டில்லியின் பிரச்னையாகும்.

**பீட்டர் ஷால்க்**

*(DLA News Vol: 19 No.3 March 1995)*

**தமிழாக்கம்: சி. எஸ். லக்ஷ்மி**



படிப்பகம்

www.padippakam.com

# புதுமைப்பித்தன் பகுதி

## புதுமைப்பித்தன் - புரட்சி அத்தியாயம் முற்றிற்று

**எஸ். சிதம்பரம்**

*[கட்டுரையாளர் எஸ். சிதம்பரம் திருவனந்தபுரத்தைச் சேர்ந்தவர். திருநெல்வேலியில் கல்லூரிக் கல்வி கற்றவர்; கல்லூரிக் கல்விக் காலத்திலிருந்தே எனக்கும், தி.க.சி., வல்லிக்கண்ணன் ஆகியோருக்கும் இனிய நண்பராக விளங்கியவர். சிறந்த இலக்கிய ரசிகர்; எழுத்தாளர். கற்பனை வளமும் சொல்நயமும் மிக்க 'காதலிக்கு' என்ற கவிதைத் தொகுப்பை எழுதி வெளியிட்டவர். தமிழ்நாட்டின் சிறந்த எழுத்தாளர்கள் பலரது படைப்புகளைத் தாங்கி உருவான 'கவிக்குயில்' என்ற சிறந்த இலக்கிய மலரையும் ஆண்டுக்கு ஒன்றென ஈராண்டுக் காலம் வெளியிட்டவர். புதுமைப்பித்தனின் 'மாகாவியம்' என்ற கவிதையும், 'பாட்டும் அதன் பாதையும்' என்ற கட்டுரையும், எனது 'ஆனைத்தீ' என்ற சிறுகதையும் முதலில் 'கவிக்குயில்' மலரில் வெளிவந்தவைதாம்.*

*செல்வந்தர் குடும்பத்தில் பிறந்த இவர் இவரது தந்தையார் பி.எம்.சி. சுப்பிரமணியன் செட்டியார் திருவனந்தபுரம் சாலையில் நடத்தி வந்த 'ஜுவல் மான்ஷன்' என்ற நகைக்கடையை நிர்வகித்து வந்தார். 1946இல் புதுமைப்பித்தன் தமது குழந்தைக்கு நகை வாங்குவதற்காக இவரது நகைக்கடைக்குச் சென்றபோதுதான், புதுமைப்பித்தனின் நேர்முக அறிமுகம் இவருக்குக் கிட்டியது; இதன்பின் இவர் புதுமைப்பித்தனின் நட்பையும் பெற்றார். புதுமைப்பித்தனின் இறுதி ஆண்டுகளிலும், அந்திம தசையிலும் அவருக்குப் பலவிதத்திலும் உதவியவர். புதுமைப்பித்தன் காலமான சமயத்தில், அழகிரிசாமியும் நானும் ஆசிரியப் பொறுப்பேற்றிருந்த 'சக்தி' மாசிகையில் 'புதுமைப்பித்தனின் கடைசி நாட்கள்' என்ற இவரது கட்டுரை வெளிவந்தது. 'புதுமைப்பித்தன் வரலா'ற்றை நான் எழுத முற்பட்ட காலத்தில், புதுமைப்பித்தனைப் பற்றிய தமது நினைவுகளையும், அவரது அந்திம கால நிலைமைகளையும் பற்றிய பல விவரங்களை நேரிலும் கடிதங்கள் மூலமாகவும் வழங்கி உதவியவர்.*

*இங்கு வெளியிடப்படுகின்ற இந்தக் கட்டுரையை அவர் 'இதிலே எந்தப் பாகத்தையும் எந்த ரூபத்திலேயும் பிரசுரிக்கக் கூடாது. யாருக்கு இது போகிறதோ அவர் படித்துப் பார்ப்பதற்கு மட்டும்தான்' என்ற கட்டம் கட்டிய குறிப்புடனேயே எனக்கு அனுப்பியிருந்தார். ஆயினும் அவரது அனுமதி பெற்று, இந்தக் கட்டுரையில் உள்ள சில பகுதிகளை மட்டும் நான் 'புதுமைப்பித்தன் வரலா'ற்றில் பயன்படுத்திக்கொண்டேன். புதுமைப்பித்தன் மறைந்து நாற்பத்தியேழு ஆண்டுகள் ஆகிவிட்டதாலும், இக்கட்டுரை ஆசிரியரும் அற்பாயுஸில் காலமாகிப் பல ஆண்டுகள் ஆகிவிட்டதாலும், கட்டுரையில் குறிப்பிடப்பட்டுள்ள சிலரும் காலமாகிப் பல ஆண்டுகள் கழிந்து விட்டதாலும், இந்தக் கட்டுரையை இப்போது வெளியிடுவதில் தவறில்லை என்று கருதி, இதனை நான் வெளிச்சத்துக்குக் கொண்டு வருகிறேன். - ரகுநாதன்]*

பெயர் பெற்ற எழுத்தாளன் புதுமைப்பித்தனை அவருடைய மனைவி முத்தினாள்; அதை நானும் பலரும் பார்த்துக் கொண்டிருந்தோம். இது அரங்கிலே, இருட்டிலே நடந்ததல்ல; அம்பலத்திலே நாலு பேர் பார்க்க நடந்தது.

புதுமைப்பித்தனின் மனைவி புதுமைப்பித்தனை முத்தாடவில்லை; அவருடைய உயிரற்ற சடலத்தையே முத்தினாள். எல்லையற்ற சோகத்தோடு, உயிர் பிரிந்து சவமாகக் கிடந்த புதுமைப்பித்தனின் சடலத்தை அவருடைய மனைவி தழுவிக் கொண்டாள். தாள முடியா உணர்ச்சியால் அந்த அம்மையார் கதறினாள். "இன்னும் கொஞ்ச நேரத்தில் சாம்பலாகி விடுவாயே, கண்ணா! கடைசியாக ஒரு முத்தமாவது கொடு, என் ராஜா!" என அந்த அம்மையார் கதறியபோது கூடியிருந்தவர் உள்ளங்கள் எல்லாம் நிலை பெயர உருகியது. பேச்சில்லை; சிறு அரவம் கூட இல்லை. சோகத்தைத் தாங்க முடியாதவர்கள் சிலர் எழுப்பும் விக்கலும் விசும்பலும் தவிர வேறு சப்தமே இல்லை. மரணத்தின் முன் சோகத்திற்குத் தவிர வேறு எந்த உணர்ச்சிக்கும் வேலை இல்லையன்றோ?

உயிரற்ற இதழ்களிலே உயிருள்ள இரு உதடுகள் அமுங்கின; நான் கண் கொட்டாது பார்த்துக் கொண்டு நின்றேன். சவமாகிக் கிடந்த புதுமைப்பித்தனின் உதடுகளிலே அவருடைய மனைவியார் இறுதி முத்தம் கொடுத்து தலை நிமிர்ந்தார்; அழிந்த சித்திரமாக, தாளம் தவறிய சங்கீதமாக, நியதி அற்றுப் போன இயற்கையாக, அந்த அம்மாவின் கோலம் பயங்கரமாக இருந்தது. பிரேதத்தின் முகத்தோடு முகம் வைத்த காரணத்தால், அதன் வாயிலிருந்த மஞ்சள் அரிசி அந்த அம்மையின் கன்னத்திலும் உதடுகளிலும் அப்பியிருந்தன. பிரேதத்திற்கு இட்டிருந்த குங்குமப் பொட்டு ரத்தக் கறைபோல அந்த அம்மாவின் கன்னத்தில் படிந்திருந்தது.

நான் பார்த்துக் கொண்டே நின்றேன். பிரேதத்திற்கு வெயிலடிக்காமல் இருப்பதற்கோ, அன்றி கேலி செய்வதற்கோ தெரியவில்லை, ஒரு சின்ன ஓலைப் பந்தல் போட்டிருந்தார்கள். அதனடியில் எண்ணெய்ப் பிசுக்குப் படிந்த ஒரு சின்னக்கட்டில். விளிம்பு பிசிராக நிற்கும் புது ஓலைப்பாய்; அதன் மேல் ஒரு சமக்காளம். இதுவே புதுமைப்பித்தனைத் தாங்கிய 'சப்ர மஞ்சம்'. சாட்சிக்காக வைத்திருந்த நெல் நாழியும், சாணிப் பிள்ளையாரும் கட்டில் கால்பக்கம் இருந்தன. சின்னப் 'பாளையங்கோட்டை பழத்'திலே குத்தி வைத்திருந்த சாம்பிராணிப்பத்தியிலிருந்து சுழன்று எழுந்த புகைச் சுருள்கள் பட்டு நூல் காற்றில் இழைவது போல் இழைந்தன.

நான் எல்லாவற்றையும் பார்த்துக் கொண்டேயிருந்தேன். சுற்றி நின்றவர்கள் எல்லோரும் சோகத்தோடு கல்லாய்ச் சமைந்தனர்.

சவத்தையே உற்று நோக்கினேன்; அது அசைவதாகப் பட்டது; ...சே! வெறும் மனப் பிராந்தி... மெதுவாகச் சுற்றி நின்றவர்கள் என் பார்வையிலிருந்து தூரே தூரே போவதாகப் பட்டது. பந்தல் மறைந்தது. கட்டில் காட்சியில் படவில்லை. எல்லாம் மறைந்தது...

ㅇ ㅇ ㅇ

நான் புதுமைப்பித்தனையே பார்த்துக் கொண்டிருந்தேன். நோயின் கொடுமையால் வாடிய தேகம். தாடி வளர்ந்து போயிருந்தது. தண்ணீர் வற்றிப்போன ஊற்றுக் குழிபோல் கண்கள் வறண்டு பாதலத்தில் கிடந்தன. ஓயாத ஒழியாத இருமல். விறகுச் கட்டை போல முட்டும் முடிச்சும் வெளிக்காணும் கையும் காலும் சதைப் பற்றற்றுக் கிடந்தன. அவர் படுத்திருந்த கட்டிலருகில் கிடந்த சின்ன ஸ்டூலில் ஒரு பேஸின் வைக்கப்பட்டிருந்தது; அடிக்கடி வாயிலூறும் கபத்தைச் 'சேகரித்து' வைப்பதற்காக. பக்கவாட்டிலே வைக்கப்பட்டிருந்த அலமாரியில் மருந்து சீசாக்கள், ஹார்லிக்ஸ் டப்பாக்கள், அவுன்ஸ் கிளாஸ் முதலியன. பார்க்க வருவோர் சௌகரியத்திற்காக இடப்பட்டிருந்த சில நாற்காலிகள். படுதா கட்டப்பட்டிருந்த நடையிலே ஸ்ரீமதி கமலா விருத்தாசலம் நின்று கொண்டிருந்தார்கள். எதிரே நான். பக்க வாட்டில் பு.பி. யின் மைத்துனர்.



படிப்பகம்

www.padippakam.com

பொடியன் இவ்வளவு பெரிய சாதனையை முதலிலேயே சாதித்து விடுவதா என்ற கொதிப்பும் காரணம்தான்..."

ஒரு க்ஷணம் பெருமிதம் ஏற்பட்டாலும் மறுகணம் பழைய நிலையே ஏற்பட்டது... அவர் கூறினார்:

"சிதம்பரம், உனக்கு இலக்கியத்திலே ஆர்வம் உண்டா? சரி. ஆனால் இலக்கியத்திற்காக உன் முழுநேர உழைப்பையும் செலவிடாதே. அது உன்னைக் கொன்று விடும். பொழுதுபோக்காக மட்டுமே இலக்கியத்தைக் கைக்கொள்..."

இரவு வெகு நேரம் ஆகிவிட்டது. வீடு செல்ல விடை கேட்டேன்.

"சிதம்பரம், எனது விளக்கிற்கு பாட்டரி போட்டு கொடுத்தனுப்புவாயா?"

"ஓகோ! கொடுங்கள். போட்டு அனுப்புகிறேன்."

அவர் சிரித்தார்.

"... எனக்கு எப்பவுமே ஒளியிலே ஆசை. இலக்கியத்திலே ஒளி செய்தேன். இப்போ எனக்கே ஒளி வேண்டியிருக்கிறது. அதை நீதான் செய். எனக்கு ஒளி கொடு..."

முடிவில் விடைபெற்று வந்தேன். வீடுவந்ததும், பார்த்தவைகளையும் கேட்டவைகளையும் ஒரு முறை சிந்தனை செய்தேன். பிறகு எனது கடைப் பையன் வசம் இரண்டு ஹார்லிக்ஸ் டின் கொடுத்து அவரிடம் சேர்க்கச் சொன்னேன்.

எனது பையன் ஹார்லிக்ஸைக் கொடுத்ததும், அவர் சொல்லி அனுப்பியது இது: "அப்பா, உனது முதலாளி சிதம்பரத்திடம் சொல்லு. ரொம்ப ரொம்ப நன்றி. சிதம்பரம் எனது பூரண ஆசிக்கும் அன்புக்கும் பாத்திரமானார்; அவருக்கு வணக்கம்"

...இது தான் நான் கடைசியாக அவரிடம் இருந்து வாய்ப் பேச்சாக பெற்ற பேச்சு...,

○ ○ ○

"மறுமுறையும் சொல்லு"

"புதுமைப்பித்தன் இறந்து போனார்" வந்த பையன் மீண்டும் சொன்னான். "நேற்று இரவு சுமார் 10 மணிக்கே போய்விட்டார். உங்களிடம் சொல்லி வரச் சொன்னார்கள்..."

செயலற்று, உணர்வற்று நின்றேன். நம்ப முடியாத செய்தியாகப் பட்டது....

○ ○ ○

... அதோ, அதோ!

காட்சி தெளிய ஆரம்பித்தது.

ஓலைப்பந்தலும், கட்டிலும், அதன் பக்கவாட்டிலிருந்த நெற்நாழியும், சாணிப் பிள்ளையாரும் எல்லாம் கண்களிலே தெரியவாரம்பித்தது. உலக வெளிச்சத்தையும், பக்கத்து அரவத்தையும் எனது புலன் உணர ஆரம்பித்தது...

புதுமைப்பித்தனின் பிரேதத்தைக் குளிப்பாட்டி கட்டிலிலே கிடத்தினார்கள்; கமலாம்மாள் அருகிலே கதறியதும் கண்டேன். உயிரோடு இருக்கும்போது தலை வணங்கா மன்னனாக விளங்கியவரின் உடல் அங்கு கூடியிருந்த புரோகிதப் பிண்டங்களின் ஆட்சிக்கெல்லாம் உட்பட்ட கோலத்தைக் கண்டபோது...! குளிப்பாட்டி, கண்களிலே சந்தனம் அப்பி, திறக்காத வாயைத் திறந்து மஞ்சள் அரிசியைத் திணித்து - என்னவெல்லாமோ செய்தார்கள்.

...'அனுப்பதற்கு'க் காத்திருந்தவள் மேலே, கச்சைகளும், 'வெள்ளை'களும் எறியப் பட்டன.

"எனக்கு இந்தக் கோலம் வேண்டாம். என்னை விடுங்கள். அலங்கோலம் அவருக்குப் பிடிக்காதே... என்னையேன் அசிங்கப்படுத்துகிறீர்கள்...?" எனக் கதறினாள் ஸ்ரீமதி கமலா.

யார் யாரோ வந்தனர். சடலத்தை கச்சைத் துணியால் மூடினர்; அவ்வளவுதான், ஸ்ரீமதி கமலா துள்ளியெழுந்தாள்.

"ஆக்கம் தந்த கண்ணா! உனக்கு கச்சை தானா மிச்சம். தள்ளுங்கோ..." என ஓலமிட்டு வீட்டிற்குள் ஓடினாள். வரும்போது விலையுயர்ந்த தனது பட்டுச் சேலையை எடுத்து வந்து, பிரேதத்தை மூடினாள்.

"இதுதான் எனது கடைசிப் பரிசு கண்ணா; எனது விவாகச் சேலை..."

○ ○ ○

சுற்றும் புகைச் சுழலின் அடியில், காயத் தொடங்கிய மண் மூட்டத்தினுள், புதுமைப்பித்தனின் உடல் தீக்கு இரையாகியது... பலருக்கு தனது அறிவால் இன்பமூட்டி, தமிழுக்கே உயிரூட்டியவர், மண் மூட்டத்திற்குள் மக்கிப் புகையிலே கலந்து கொண்டிருந்த அந்தக் காட்சி...

"... இலக்கியத்திற்கு உனது முழுநேர உழைப்பைக் கொட்டாதே. அது உன்னைக் கொன்று விடும்..." என்ற சொல் எனது காதுகளிலே ஒலித்தது.

குனிந்த தலையும், சோர்ந்த இதயமுமாக வீடு திரும்பினேன். யாரோ பெண் குழந்தை பக்கத்து வீட்டில் அழுதது கேட்டது.

'எழுதி எழுதி கையும் வீங்கிற்றே; உயிரும் கொடுத்தாயே' எனக் கதறிய கமலாம்பாளின் நீர்புரண்ட கண்களும் எழில் அழிந்த முகமும், என் முன்னே தோன்றின...

●


**நாஞ்சில் நாடனின்**
**மூன்று புத்தகங்கள்**

நாவல்
**சதுரங்கக் குதிரை**
(இரண்டாம் பதிப்பு)

தமிழக அரசு, புதிய பார்வை
நீலமலைத் தமிழ்ச்சங்கம்,
கஸ்தூரி ஸ்ரீநிவாசன்
டிரஸ்ட் பரிசுகள் பெற்றது — ரூ. 36

**என்பிலதனை வெயில் காயும்**
(இரண்டாம் பதிப்பு) — ரூ. 45

சிறுகதைத் தொகுப்பு
**பேய்க் கொட்டு**
லில்லி தேவசிகாமணி நினைவுப்
பரிசு பெற்றது — ரூ. 27

வெளியீடு
**விஜயா பதிப்பகம்**
20, இராஜ வீதி
கோவை 641 001
☎ 394614




படிப்பகம்

www.padippakam.com

## தமிழைப்பற்றி

புதுமைப்பித்தன்

தமிழ் பாஷையைப் பற்றி - தனித் தமிழ் பதத்தை ஏன் உபயோகிக்கவில்லை என்று சிலர் சீறலாம், தாயை சிதையில் வைத்துக் கண்டுகளிக்க ஆசைப்படுகிறவர்கள் எழுதிக் கொள்ளட்டும் - தமிழ் பாஷையைப் பற்றி ஒரு தனிப்போக்கான கொள்கை பிலாக்கணம் வைக்கப்படுகிறது. அதில் ஒரே ஒரு மயக்கம். தமிழுக்கு ஒரு காலத்தில் பெருமை (இலக்கியத்தைப் பொறுத்து அல்ல) இருந்ததாம். இது இப்பொழுது போய்விடும் என்ற பயம். தமிழணங்கு 'கலப்பு' மணம் செய்து கொள்வாளோ என்ற பயம். அதனால், தனிமை என்ற திரையால் மறைத்து 'பூசல் அம்பு நெறியின் புறஞ்செலா' நங்கையாக்க பிரயத்தனம். சிரிக்கத்தான் வேண்டியிருக்கிறது.

பாஷை ஒரு சத்தியாயுதம்; உள்ளத்தை திறந்து காண்பிக்கும், மறைக்கவும் செய்யும். உபயோகப்படுத்தாது உறையில் போட்டு வைத்தால் துருப்பிடிக்கும். அந்தக் கதிதான் நமது பாஷைக்கும்.

கொஞ்ச காலமாக இயற்கைக்கு மாறாக நாம் நடந்து வருகிறோம். பாஷை ஒரு சமூகத்தின் ஜீவசக்தி. சொந்த பாஷையில்தான் நமது அந்தரங்க உணர்ச்சிகளை வலிமையுடன் சொல்ல முடியும். இந்த இயற்கையை மறந்ததினால்தான் நமக்கு நமது பாஷையே அன்னிய பாஷையாக இருக்கிறது. எங்கிருந்து ஆரம்பிப்பது என்று தெரியாமல் பழைய சங்கப் பலகையை தொத்திப்பிடித்து கீழே கவிழ்கிறோம்.

பாஷை, காலம் என்ற ஜீவநதியின் பாசனத்தில் ஓங்கி வளரும் கற்பகவல்லி. புதிய சக்தியைப் பெற்ற தமிழின் மறு மலர்ச்சியின் பொழுது, உலர்ந்து விழுந்த சருகுகளைக் கொண்டு பாமாலை தொடுப்பதுதான் பாஷை வளர்ச்சி என்றால், அது சௌந்தரிய உணர்ச்சியற்ற ஒட்டகங்களுக்குத்தான் பொருந்தும்.

தமிழ் 'இன்ஸால்வெண்டு' பாஷையல்ல. புதிய வார்த்தைகள் சேர்வது, அவள் சுய உருவைக் குலைத்து விடாது. அவள் அரசி. புதிய வார்த்தைகளைப் பெறுவது, புதிய நாடுகளைச் சயித்து, புதிய கலைச் செல்வங்களின் பண்டகசாலைகளைப் பெறுவதுதான். இது பாஷை - இயற்கையின் சூட்சுமம். இதைக் கம்பன் அறிந்திருந்தான். அவன் காலத்து கலைச் செல்வர்கள் அறிந்திருந்தார்கள். அவன் இலக்கியத்தில், புதிய வார்த்தைகள் - வாய் நிறைந்த வடசொற்கள் - அழகுத் தெய்வத்தை அணி செய்கின்றன.

### வசனம்

தமிழில் வசனத்திற்கு இதுவரை ஒரு ஸ்தானம் இல்லை. இதற்கு மூன்று காரணங்கள். ஒன்று எல்லா சமூகத்திற்கும் பொதுவானது. ஆதி மனிதனுக்கு மகத்தான, அடக்க முடியாத உணர்ச்சிகள்தான் தென்பட்டன. அதைத்தான் அவன் அறிந்தான், அனுபவித்தான். அது ஆட்டத்தில், வெறியாட்டத்தில் ஆரம்பித்து, நாட்டியத்தில் தனது முழு ஆகிருதியையும் பெற்றது. பாட்டில் (முதலில் கூப்பாடுதான்) ஆரம்பித்து கவிதையாக வடிவெடுத்தது. அதை சேமித்து வைத்தான். அதுதான் ஆதி இலக்கியங்கள். ஆதி இலக்கியங்கள் எங்கும் பாட்டில் இருப்பதின் இரகசியம் இதுதான்.

தமிழுக்கு இதுவரை வசனம், பேச்சுமட்டிலேயே இருந்ததின் காரணம், நாம் ஓலையை இலக்கியத்தை சேர்த்து வைக்கும் பண்டசாலையாக உபயோகித்தது. ஓலையில் நீண்ட வசனகாவியம் எழுதிவைக்க முடியாது. இதனாலேயே வசனத்திற்கு உரைநடை என்ற பெயர் கொடுக்கப்பட்டது. அதாவது பாட்டிற்கு பொருள் தெரிவிக்கும் நடை என்று கவிதைத் தெய்வத்தின் சேடியாக பிணைத்து வைத்ததினால், வசனத்தில் பேசுவதே கேவலம் என்ற அபிப்பிராயம் பண்டித பாவலர்களிடம் ஏற்பட்டு அவர்களை சீட்டுக்கவி முதல் எடுத்ததெல்லாம் பாடும் செய்யுள் யந்திரங்களாக்கிவிட்டன. இதனாலேயே வசனம், தமிழில் ஒரு வளர்ச்சிபெறாத ஆயுதமாக இருக்கிறது.

வச்னத்திற்கு ஒரு ஸ்தானம் கொடுக்க வேண்டுமானால், நமது துருப்பிடித்த அபிப்ராயங்களை கொஞ்சம் ஒதுக்கிவைக்க வேண்டும். இலக்கியத் தமிழுக்கும் பேச்சுத் தமிழுக்கும் நெடுந் தூரம் இருக்கவேண்டும் என்று நினைத்துக் கொண்டிருப்பது பெருந்தவறு. அப்படியிருந்தால் 'மெல்லத் தமிழினிச் சாகும்' என்பதில் சந்தேகமில்லை. இலக்கியத் தமிழுக்கும் பேச்சுத் தமிழக்கும் ஒரு சிறு வித்தியாசந்தான். இலக்கியத் தமிழ் கிரந்த கர்த்தாவின் சௌந்தர்ய உணர்ச்சியில் மெருகு போடப்பட்ட சிருஷ்டி. பேசுந் தமிழ் உள்ளத்தின் துடிதுடிப்பை அப்படி அப்படியே சொல்லும் பட்டை போடாத வைரம். பேச்சுத் தமிழ்தான் ஜீவசக்தி, சிருஷ்டி கர்த்தாவின் பண்டசாலை. இவை இரண்டிற்கும் இடையில் சுவர் எழுப்பினால், லத்தீன், சமஸ்க்ருதம் முதலியவைகளுக்கு நேர்ந்த கதிதான்.

வாக்கியத்துக்கு உயிருண்டு. அது பல தசைகளும் நரம்புகளும், அவயவங்களும் கொண்ட சிருஷ்டி. அதை நாம் உம்மைத் தொகுதிகளால் பிணிக்கப்பட்ட வெறும் வார்த்தைச் சங்கலிகளாக மதித்துவிடக் கூடாது. வாக்கியத்தின் கட்டுக் கோப்பு **(Architectronics)** மிகவும் முக்கியமானது. ஒரு வாக்கியத்தில் வார்த்தையின் 'அமைப்பு' நயமான அர்த்த விசேஷங்களைத் தந்துவிடும். வாக்கியங்களின் **(Prose-rhythm)** ஓசை இன்பம் - கவிதையைப் போல் வசனத்திலும் இருக்கிறது; ஆனால் அதைவிட சூக்ஷ்மமானது - வார்த்தை நயங்களையும், வாக்கியத்தின் 'அமைப்பு' வசீகரத்தையும் பொறுத்தே இருக்கிறது. இதைப்பற்றி எழுதமுடியாது; பயிற்சியினாலும், மேதாவிகளின் நூல்களைப் படித்து படித்து அனுபவிப்ப தினாலும் வரும். தமிழில் இதற்கு இலக்ஷிய கர்த்தாக்கள் அவ்வளவாக இல்லை. வெளியிலிருந்துதான் ஆகர்ஷிக்க வேண்டும். சிலர் மோனைகளையும், பிராசங்களையும் வசனத்தில் உபயோகிப்பது ஓசை இன்பம் என்று நினைக் கிறார்கள். என்னமோ, அசுணப் பறவையையும் பறை முழக்கத்தையும் பற்றி கம்பன் சொன்ன கதைதான் நினைவிற்கு வருகிறது. அப்படி எழுதுவது ஆபாசம்; பேசுவது பைத்தியக்காரத்தனம்.

வார்த்தைகள் ஓர் பாஷையின் ஜீவ சக்தியை சுமந்து செல்லும் பரமாணுக்கள். தனித் தமிழ் என்ற ஆவேசத்தில், ஒரு காலத்தில் உபயோகப்படுத்தப்பட்டு இப்பொழுது துருப்பிடித்து அகராதியில் ஒளிந்து கிடக்கும் வார்த்தைகளை தோண்டி எடுத்து கோர்த்து வைப்பதைவிட, குழிப்பிள்ளையை எடுத்துக் கொஞ்சலாம். பழைய கலைவாணர்கள் வார்த்தைகளின் இரகசியத்தை அறிந்துதான் தமிழுக்கு, பைந்தமிழ், அதாவது பசுந்தமிழ் அல்லது ஜீவ சக்தி நிறைந்த பேச்சுத் தமிழ் என்று கூறிக் கணித்தார்கள். இலக்கியக் கிழவி ஔவை தமிழின் அருமையைப் பற்றிப் பேசுகையில் "பழகு தமிழ் சொல்லருமை" என்று குறித்துக் கூறுவதின் ரகசியம் இதுதான். 'பழகு த்மிழ் சொல்லருமை' என்ற இலக்ஷியம் போய் 'செத்த தமிழருமை' வேண்டுமானால்தான் அகராதியில் சுரங்கம் போடுவதில் ஈடுபட வேண்டும்.

வசனத்தை அழகுணர்ச்சிக்குப் பொருந்த சிருஷ்டிப்பதற்கு பல பாஷைகளில் நல்ல பயிற்சி வேண்டும்; அதன் நயங்களை ஆகர்ஷிக்கும் சக்தி வேண்டும். இந்த விஷயத்தில் பண்டிதர்களால் ஒரு உதவியும் செய்ய முடியாது. அவர்களிடம் சிருஷ்டி சக்தியும் கலையுணர்ச்சியும் நாம் எதிர்பார்க்க முடியாது; அவ்விரண்டும் கபாடபுரத்தைப் போல் கடல் கொண்டுபோன 'சரக்குகள்'. இப்பொழுது சில காலமாக பெருகிவரும் ஆங்கிலம் படித்த பண்டிதர்களோ? பழைய பண்டிதர்களுக்கு மேற்பட்ட பண்டிதர்களாக இருக்கிறார்கள். அபூர்வ நடையும் அபூர்வ அபிப்பிராயங்களும் நிறைந்த இந்த 'போலி'களை செல்லாக் காசுகளாக மதித்து ஒதுக்க வேண்டும். இவ்விருவரிடமும் சிறைப்பட்டு இருக்கும் தமிழை மீட்க வேண்டுமானால், கலைவளர் மன்றங்கள் என்று சொல்லுகிறார்களே, எழுதிய மை காயுமுன் உலர்ந்து விழும் தமிழ் இலக்கிய கோரங்களை பொறுக்கி எடுத்து பாட புத்தகமாக வைக்கும் சர்வகலா சாலைகள், அவைகளால் முடியுமா?

பத்திரிகைகள் இருக்கின்றன. 'தனித் தமிழ் உரை நடைக் கென்று தொண்டாற்றும்' பத்திரிகைகள், அவைகளல்ல, எழுதுவது வாசிப்பதற்காகத்தான் என்பதை மட்டும் கவனித்து வெளிவரும் பத்திரிகைகள்தான் இந்த மகத்தான பொறுப்பை ஏற்றுக்கொள்ள வேண்டும். இவைகளால் இலக்கியத்தை சிருஷ்டிக்க முடியாமல் இருக்கலாம்; ஆனால் 'வளைந்து' கொடுக்கும் வசனத்தை பழக்கிவிட முடியும்.

*காந்தி* 25 ஜூன் 1934.

●



படிப்பகம்

www.padippakam.com

குமார் எழுதியுள்ளதை போல் **சரிபாதி** எனக் கூறவில்லை. ஆனால் நான் அவர்கள் **சரிபாதியாகப்** பங்கிட்டு எழுதினா என்றுதான கூறினேன் என்ற அழுத்தத்தை ஏற்படுத்துவதற்காக, எனது கூற்றின் மேற்கோளை அவர் வேண்டுமென்றே தவிர்த்திருப்பதோடு, அதனைத் திரித்தும் இருக்கிறார். இது எவ்விதத்தில் நேர்மையாகும்? பு. பி.யின் பல்வேறு அம்சங்களையும் பற்றி வானொலிக்காக நடத்திய பேட்டியில் நான் ஆராய்ச்சியா செய்து கொண்டிருக்க முடியும்? ஒருவேளை நான் "இவர் கொஞ்சமும் இன்னொருவர் கொஞ்சமுமாக எழுதினார்" என்றோ "இவர் ஒரு பகுதியையும் இன்னொருவர் ஒரு பகுதியுமாக எழுதினார்" என்றோ கூறியிருந்தால், வேதசகாயகுமார் என்ன செய்வார்? இதே அர்த்தபாவத்தில் "இவர் ஒரு பாதியும் இன்னொருவர் ஒரு பாதியும்" என்று கூறுவதும் உலக வழக்குத் தான் என்பதுகூடவா அவருக்கு உறைக்காமல் போய்விட்டது? இதை மறந்துவிட்டு, பொதியவெற்பன் செய்த காரியத்துக்கு என்னைக் காரணமாகக் காட்டி, "ரகுநாதனின் வாய்மொழி எந்த அளவுக்கு நம்பகத்தன்மை கொண்டது?" என்று கேள்வி எழுப்புவானேன்? அவ்வாறாயின் ஒரு கள ஆய்வாளர் கள ஆய்வில் வாய் மொழியாகக் கேட்டறியும், கேட்டறிந்து எழுதப்படும் தகவல்கள் எல்லாமே கேள்விக்கு உள்ளாகிவிடுமே. ஒரு கள ஆய்வாளர் வாய்மொழியாகப் பெறும் தகவல்களைப் புறக்கணித்துவிட முடியுமா?

ஆனால் அவர் இவ்வாறு எழுதுவதற்கு முதற்காரணம் என்ன? நூலின் முதல் பாதியை - அதாவது 18 அத்தியாயங்கள் கொண்ட நூலின் முதல் 9 அத்தியாயங்களை - பு. பி. தான் எழுதினார் என்பதை ஏற்றுக் கொள்கின்ற வேதசகாயகுமார், பிற்பாதியில் இடம் பெற்றுள்ள கடைசி அத்தியாயமான 18ஆவது அத்தியாயத்தையும் பு. பி. யே **எழுதியிருக்கவேண்டும்** என்ற தமது **ஊகத்தை** முடிந்த முடிவாகச் சாதிக்கக் கருதியதுதான் இதற்குக் காரணம். இவ்வாறு அவர் முடிவு கட்டுவதற்கு அவர் புரிந்துள்ள மயிர் பிளக்கும் ஆராய்ச்சியும் வாதங்களும், வேதசகாயகுமார் கூறிவிட்டார் என்பதனால் விவாதத்துக்கு அப்பாற்பட்ட வேதவாக்கு ஆகிவிடாதே. அதுவும் விவாதத்துக்குரிய ஒரு பிரமேயம்தானே!

ரகுநாதன் கூறுவதை நம்பக்கூடாது என்று வேதசகாயகுமார் அடித்துக் கூறுவதற்கான மற்றொரு காரணம், இதற்கும் முன்பே அம்பலமாகி விடுகிறது.. 'கப்சிப் தர்பார்' பற்றிய அவரது விமர்சனத்தின் முதல் பாராவிலேயே "புதுமைப்பித்தனை நசிவு இலக்கியவாதியாகச் சித்தரித்த மாஜி 'சோவியத் லேண்ட்' யதார்த்தவாதிகளை" அவர் குறை கூறி "பிற்போக்குத் தனிமனித வாதத்தில் சரிந்தவராகப் புதுமைப்பித்தனை இனம் கண்ட இவர்களுடைய மார்க்சீய அறிவு அலாதியானது" என்று நையாண்டி செய்யும் தொனியில் எழுதியுள்ளார். அவர் குறிப்பிட்ட 'மாஜி சோவியத் லேண்ட் யதார்த்தவாதி'களில் நானும் ஒருவன்தான். என்றாலும், நான் பு. பி. யை ஒரு நசிவு இலக்கியவாதி என்று எதிலும் எழுதியதும் இல்லை; எங்கும் பேசியதும் இல்லை. அவருடைய மேதத்துவத்தையும் கலைத்திறனையும் சொல்லாட்சியையும் அன்றும் மதித்தவன்; இன்றும் மதிப்பவன்தான். என்றாலும், பு. பி. ஒன்றும் விமர்சனத்துக்கு அப்பாற்பட்டவர் அல்ல. எனவே பு. பி. தமது இலக்கிய வாழ்க்கையின் பிற்பகுதியில் தனிமனித வாதத்துக்குச் சரிந்தவர் என்ற கருத்தை நானும் தெரிவித்திருக்கிறேன். பு. பி. பற்றிய எனது மதிப்பீட்டிலும் கூட, பு. பி. வரலாற்று நூல் தொடங்கிப் பல சந்தர்ப்பங்களில் இந்தக் கருத்தைக் கூறியும் எழுதியும் வந்திருக்கிறேன். இதனையும் கருத்தில் கொண்டுதான் ரகுநாதன் கூறுவது எதையும் நம்பாதீர்கள் என்று வேதசகாயகுமார் வாசகர்களுக்குச் சமிக்ஞை காட்டியிருக்கிறார். பு. பி. 'கயிற்றரவு' கதையை எழுதிய காலத்தில் - இதுவே அவர் எழுதிய கடைசிக் கதை எனலாம் - நான் அவரோடு உடன் இருந்தவன். அப்போதே அவரது முந்தைய தர்மாவேசமும், முற்கால எழுத்துக்களில் கலகக் கொடி தூக்கும் அளவுக்கு இருந்த ஆத்திரமும், வேட்கையும் அடங்கிப் போயிருந்ததை நானே உணர முடிந்தது. இவ்வாறு நான் கூறுவதை நம்பாதீர்கள் என்றுதான் வேதசகாயகுமார் கூறுவார். ஆனால் இந்த மாற்றங்களெல்லாம் அவரது பிற்கால எழுத்துக்களில் எவ்வாறு பிரதிபலித்தன என்பதை நான் கு. ரா. வுக்கு அளித்த பேட்டியிலேயே, பு. பி. யின் முற்காலக் கதைகளையும் பிற்காலக் கதைகளையும் ஒப்பிட்டு, ஆதாரபூர்வமாகவே விளக்கியிருக்கிறேன். இதனை வேதசகாயகுமார் ஏற்றுக் கொள்ளவில்லை என்றால் அது பற்றி எனக்குக் கவலையில்லை. நான் அவருக்காக அல்லது அவரைப் போன்றோருக்காக எழுதவில்லை.

ஓர் எழுத்தாளரைப் பற்றி மற்றவர்கள் செய்யும் மதிப்பீடு, அவ்வாறு மதிப்பீடு செய்பவர்களையும் இனம் காணவும் மதிப்பீடு செய்யவும் உதவுகிறது. ஏனெனில் அவ்வாறு ஒருவர் செய்யும் மதிப்பீடு அவரவர்கள் கொண்டுள்ள கோட்பாடுகள், கொள்கைகள், நம்பிக்கைகள் ஆகியவற்றைப் பொறுத்ததாகும். அவ்வாறு தெரிவிப்பது அவர்களின் உரிமை, கடமை; அதனை ஏனையோர் ஏற்றுக் கொள்வதும் அல்லது ஏற்க மறுப்பதும் அவர்களுக்குள்ள உரிமைதான். ஆனால் மாற்றுக் கருத்துக்களைச் சகித்துக் கொள்ளக்கூட மனமில்லாது, ஏதோ தாமே மார்க்சியத்தைக் கரைத்துக் குடித்தவர், அதில் கரை கண்டவர் என்பது போன்ற மாய்மாலத்தாலோ, அல்லது மார்க்சியத்தையே வெறுப்பவர் என்ற காரணத்தாலோ, மாற்றுக் கருத்தாளர்களை நையாண்டி செய்து எழுதுவது வேதசகாயகுமாருக்கு விவேகமல்ல. 'மாஜி சோவியத் லேண்ட யதார்த்தவாதி'களான நாங்களும், விரும்பினால எங்களுக்கு ஒவ்வாத கருத்துக்களைத் தெரிவிக்கும் மாற்றுக் கருத்தாளர்களை நையாண்டி செய்து எழுத முடியும். அதிலும், 'புதுமைப்பித்தன்' என்ற இரும்புப் பட்டறையில் புடம் போட்டப்பட்டு, உருக்காகப் பதப்பட்டு உருவான என்போன்றோர், புதுமைப்பித்தனைப் போலவே வன்மைமிக்க நையாண்டி மொழியில் பேசப் பாட முடியும். ஆனால் நான் அதில் ஈடுபட விரும்பவில்லை.

(தடித்த எழுத்துக்கள் இதனை எழுதியவர் எழுதியவை)

**தொ.மு.சி. ரகுநாதன்**

குறிப்பு:

காலச்சுவடு 10 இதழில் இடம் பெற்றுள்ள, வேங்கடாசலபதி தேடி எடுத்துக் கொடுத்த 'ஒரு கொலை அனுபவம்' என்ற புபியின கதை இடம் பெற்றுள்ளது. இது பு.பி.யின் கதைகளின் எண்ணிக்கையைப் பற்றி வேதசகாயகுமார் முடிவுகு வந்துள்ள வரையறையைப் பொய்யாக்கி விடுகிறதே. இனியாவது பு. பி. யின் கதைகளைப் பற்றிய கள ஆய்வில் அத்துபடியாகிக் கரைகண்டு விட்டோம் என்ற வேதசகாயகுமாரின் ஆணவம் அடங்கும் என்று நினைக்கிறேன்.

○

## எழுதத் தவறிய பதிப்புரையும் இன்னும் கொஞ்சம் தகவல்களும்

காலச்சுவடு 11 ஆமிதழில் எனது மதிப்பிற்குரிய நண்பரும் விமர்சகரும் புதுமைப்பித்தன் ஆய்வாளருமான திரு. வேதசகாயகுமார் அவர்கள் எமது வெளியீடான பு. பி. யின 'கப்சிப் தர்பார்' பதிப்பு குறித்து எழுப்பியுள்ள அடிப்படையான சில கேள்விகளை எதிர்கொள்ளுமுகமாகவும் மற்றும் அவரது பு. பி. யின் கதைகளின் கதையை ஒட்டி மேலதிகத் தகவல்களை முன் வைக்கவுமே இதனை எழுதலானேன்.

"இப்போதைய பொதியவெற்பன் பதிப்பில் காணக் கிடைக்கும் முதல் ஒன்பது அத்தியாயங்களை பு. பித்தனும் இறுதி ஒன்பது அத்தியாயங்களை ராமரத்தினமும் எழுதியுள்ளனர் என்ற குறிப்பு முதற் பதிப்பில் இல்லை" என்றவர் குறிப்பிடுகிறார்.

ஆனால், "இந்நூலின் முதல 9 அத்தியாயங்கள் ஸ்ரீ விருத்தாசசலம் எழுதியவை; பின 9 அத்தியாயங்கள் ஸ்ரீ ராமரத்தினம் எழுதியவை" எனும் குறிப்பு முதற் பதிப்பிலேயே இடம் பெற்றுள்ளது. இத்துடன் அதற்கான நகலசசும் உடன் இணைக்கப்பட்டுள்ளது. "பு. பித்தன் கப்சிப் தர்பார் முடிவுரையில் ஹிட்லரும் ஸ்டாலினும் அரசியல் எதிரிகளை ஒரே வகையில் கையாள்வதாகக் குறிப்பிடுகிறார்" என்றவர் குறிப்பிடும் முடிவுரைப் பகுதி ராமரத்தினம் எழுதியதே.

"ஹிட்லர் யுக புருஷன்; ஜெர்மனிக்கு அவன் வேண்டும் என்கிறார் ஸ்ரீராமரத்தினம்" என இத்துடனுள்ள முதற்பதிப்பின் நகலச்சிலுள்ளதைக் காண்க. இந்த வரிகள் இடம்பெற்றுள்ளதும் இறுதி அத்தியாயத்தில்தான். 'கப்சிப் தர்பாரை' தீவிர வாசிப்புக்குட்படுத்தி இந்நூலெழுந்த காலச்சூழல் குறித்தும்; பு. பி. யின் பார்வை குறித்தும்; திமிறிக் கொண்டு செயல்படும் பு. பி. யின படைப்பு மனம் குறித்தும்; இருவேறு எழுத்துப் போக்கின் தனித் தன்மை குறித்தும் சரியாகவே இனங்கண்டு எடுததுக்காட்டியுள்ள பு. பி. ஆய்வாளர் அவர்கள் இறுதி அத்தியாயத்தை மட்டும் இனங்காணத் தவறி விடுகிறார்.

அவர் குறிப்பிடுவது போல ஒன்பதாம் அத்தியாயத்தின் முடிவுரையாகவும் அது இல்லை; இரண்டு அத்தியாயங் களின் மொழிநடையுங்கூட வேறு வேறானவையே. எல்லாவற்றிற்கு மேலாக ஹிட்லர் பற்றிய பார்வையில் இருவரும் அடிப்படையிலேயே முரண்படுவதனை இங்கேதான் அவர் காணத்



படிப்பகம்

www.padippakam.com

தவறி விட்டார். பு.பி. யின் பார்வை ஹிட்லரின் பாசிச ஏகாதிபத்தியச் செருக்கை விமர்சித்து இனங்காட்டுவதாயும் ராமரத்தினத்தின் பார்வை ஹிட்லரை தேசபக்த - சர்வாதிகாரியாக நேசபாவத்துடன் அணுகி வியந்து பாராட்டி நியாயப்படுத்துவதாகவுமே அமைந்து கிடக்கின்றன. பு. பி. நடையில் பவுண்டில் கிடந்த ஜல்லிக்கட்டுக் காளை பிய்த்துக்கொண்டு போன மாதிரியான ஹிட்லரின் கதை ராமரத்தினத்தின் பிரவேசத்தால் அந்திமதிசை நோக்கிப் போகும் அடிமாடு மாதிரி அந்தோ பரிதாபம் ஆகக் கிடக்கிறது.

இங்கே நூலெழுந்த காலச்சூழல் குறித்தும் மேலதிகத் தகவல் சிலவற்றை இத்துடன் முன்வைக்க வேண்டியதா யுள்ளது. சர்வாதிகாரிகள் சரித்திரம் பற்றிய நூல்களின் தோற்றத்திற்கான பின்னணி அக்காலகட்டச் சூழலில் எவ்வாறு நிலவி வந்ததென்பதை மட்டும் சற்றே இங்கே கோடிகாட்டிச் செல்கிறேன்.

பிரபஞ்ச ஜோதி பிரசுராலய வெளியீடுகளாக திரு.வெ.சாமிநாத சர்மா அவர்களின் 'முஸோலினி', 'ஹிட்லர்', 'அபிசீனிய சக்ரவர்த்தி', 'ஸ்பெயின் குழப்பம்' ஆகிய நான்கு நூல்களும் 1936 தொடங்கி வெளிவரலாயின. இவை எவ்வாறு திட்டமிட்டு வெளியிடப்பட்டன என்பது பற்றி பிரசுராலய உரிமையாளர் திரு. அரு. சொக்கலிங்கம் செட்டியார் குறிப்பிடுகிறார்.

"1935 இறுதியில் திட்டம் போட ஆரம்பித்தோம். அந்தச் சமயம் பல தேசங்களில் சர்வாதிகார ஆட்சி நிலவிக் கொண்டிருந்தது. அந்தத் தேசங்களில் வாழும் ஜனங்கள் சுபிட்சமாக இருப்பதாகவும் பறைசாட்டப்பட்டு வந்தது. ஜனநாயக நாடுகள் தன்னம்பிக்கை இழந்திருந்தன...

அந்நிய ஆட்சியில் அல்லலுற்றிருக்கும் நமக்கு, ஆட்சி செலுத்தும் நாடு அந்த ஜனநாயகத்தின் பேரால்தான் நாம் அழுத்தப்பட்டிருக்கிறோம் என்ற ஒரு எரிச்சலும் ஏற்பட்டிருந்தது. சுயராஜ்ஜியம் கிடைத்ததும் அராஜகமும் தலைக்கனமும் ஏற்பட்டு எல்லோரும் இந்நாட்டு மன்னர்கள் என்ற பாணியில் ஜனங்கள் வளர்ந்துவிடாமல் இருக்க ஒரு சில ஆண்டுகளாவது நம் நாடு ஒரு சிறந்த தேசபக்த சர்வாதிகார ஆட்சியிலிருந்து வருவது நலமென்றும் சிந்திக்க ஆரம்பித்தோம். அதன் முடிவுதான், முதன்முதலாக முஸோலினியின் வாழ்க்கையை எழுதி வெளியிட எங்களைத் தூண்டியது. அவன் ஆட்சியிலுள்ள நல்ல அம்சங்களை மட்டும் சித்தரித்து வெளியிட்டோம்".

ஹிட்லரைப் பற்றிய ஒரு மயக்கம் எந்த அளவிற்கு இரண்டாம் உலகயுத்தம் தொடங்குவதற்கு முன் ஆட்டிப் படைத்தது என்பதற்கு உதாரணமாக பாரதி ஆய்வாளர் திரு.பெ.சுமணி அவர்கள் தம் 'சாமிநாத சர்மாவின் தமிழ்ப்பணி' குறித்த நூலில் 'ஸ்ரீ ராமகிருஷ்ண விஜயம்' எனும் அப்போதைய ஆன்மீக இதழிலிருந்து எடுத்துக் காட்டுகின்றார். "அஞ்சா நெஞ்சு, நன்னடத்தை, தூய்மை, தியாகபுத்தி முதலிய ஒப்புயர்வற்ற குணங்களால் திகழ்பவர் என்பதற்கு நேர் எடுத்துக்காட்டாக நிற்பவர் ஹிட்லர்". இன்னும் 'விடாமுயற்சி வெற்றிதரும்' என்கிற ரீதியில், "அடித்தளத்தில் உள்ள ஓர் எளியவன், ஊக்கமும் உள்வலியும் கொண்டு மேனிலைக்கு வர ஹிட்லரின் வாழ்க்கை வரலாறு தூண்டுதல் தரவல்லது என்னும் ஒரு கருத்து" அக்காலத்தில் வேரூன்றி நின்ற அன்றைய மனோபாவங்குறித்தும் அன்றைய 'சுதேசமித்திர'னிலும் மற்றும் திரு.உ.வே.சா., திரு.வி.க. போன்றவர்களிடம்கூட வெளிப்படுவதனை அதே நூலில் திரு.பெ.சுமணி அவர்கள் விவரித்துச் சொல்கின்றார். இவ்வாறு தேசபக்த சர்வாதிகாரப் போக்கை நேசபாவமாய்ச் சித்தரிக்கும் போக்கு அன்று ராமரத்தினத்திற்கு மட்டுமல்ல, சாமிநாத சர்மா அவர்களுக்குங்கூட இருந்ததாலேயே ஹிட்லர் 'யுக-புருஷனாக' ராமரத்தினத்திற்கும், முஸோலினி 'சரித்திர நாயக'னாக நம் சாமிநாத சர்மாவிற்குங்கூட அன்று காட்சி அளித்தனர். இத்தகைய மனோபாவங்கள் அன்றுமட்டுமே நிலவியவை அல்ல. 'பிரிட்டீஸ்காரன் போல வருமா?' 'எமர்ஜன்ஸி எமர்ஜன்ஸிதான்' என்றெல்லாம் காலந்தோறும் வரலாற்றின் வழிநெடுகலுமாக - ஏன்? இன்னமும் பாசிச மேகங்கவியத் தோகை விரித்தாடும் நம் 'தேசிய மயில்'களாகவும்; மர்மமாய்ப் பாயும் கருப்புச் சட்டங்களாயும் இன்றளவும் தொடரும்போதும் கூட இத்தகைய 'வீரவழிபாட்டு'க் குரல்கள் நம்மிடையே எதிரொலிக்கக் கேட்கிறோமா இல்லையா? இதற்கெல்லாம் மாறாக அன்று ஒலித்த இன்னுஞ்சில குரல்களையும் இங்கே நாம் கவனங்கூர வேண்டியதாயுள்ளது. "தேசியம் எத்தகைய தீமைகள் விளைவிக்கும் என்பதற்கு இந்த (1990இல் வெளியான Z.Y. ஹிம்ஸாகரின் 'அடால்ப்ஹிட்லர்') வரலாறு ஓர் எடுத்துக்காட்டு. உலக வரலாற்றை நன்றாகக் கண்டு அறிந்தவரும் ஐரோப்பிய நாடுகளை அப்போது சுற்றி வந்தவருமான தந்தை பெரியார் அவர்கள் தன்னுடைய 'குடியரசு' பத்திரிகையில் 1935-ம் ஆண்டு எழுதிய தலையங்கத்தை இங்கு நினைவு கூர்கிறேன். "வேறு எந்தக் காரணத்தாலும் பிழைக்க முடியாதவர்களும் ஒழுக்கமும், நாணயமும் அற்றவர்களும், மக்களை ஏமாற்றி வாழும் மோசக்காரர்களும் கடைசியாய்ப் போய் அடைக்கலம் புகுவதற்கு இன்று தேசிய வியாபாரத்தை விடச் சுலபமான வழி வேறு ஒன்றும் இல்லை" என்றார்கள். இந்தக்கூற்று ஜெர்மனியைப் பொருத்தவரை நூற்றுக்கு நூறு உண்மையாயிற்று" என்கிறார், அந்நூலின் அணிந்துரையில் திரு. அ. சுப்பையன்.

அப்புறம் சாமிநாத சர்மா அவர்களும் தம 'ஸ்பெயின் குழப்ப'த்தில், "ஜெர்மனியின் சர்வாதிகாரியான ஹிட்லருக்கும், இத்தாலியின் சர்வாதிகாரியான முஸோலினிக்கும் நாடு பெருக்கும் ஆசை இதனோடு நிற்கும் என்பதற்கு என்ன நிச்சயம்?" என்று கேட்கிறார். 1935 ஆம் ஆண்டில் வெளியான 'கலைமகள்' தொகுதியில் திரு. நெல்லை நேசன் என்பவர் 'உலகப்போக்கு' குறித்தெழுதுகிறார் : "ஜெர்மனியின் விஸ்தீர்ணம் அதிகப்பட வேண்டுமென்றும், ஜெர்மன் சாமான்களை விற்கப் புதிய சந்தைகள் வேண்டுமென்றும் பழைய கைஸர் சக்கரவர்த்தியைப் போலவே சர்வாதிகாரியான ஹிட்லரும் ஆசைப்படுகிறார் என்பது அவர் எழுதியுள்ள சுயசரிதையிலிருந்து தெரிகிறது.

. . . ஹிட்லரைப் போல முஸோலினியும் தமது நாட்டினரால் ஒரு ரட்சகராக மதிக்கப்படுகிறார். ஆனால் இந்த இருவருடைய ராட்சஸ மனோபாவமும், ஐரோப்பிய ராஜதந்திரிகள் அனைவரையும் நடுங்கச் செய்கிறது.

. . . விஷப் புகையாலும், விஷக்கிருமிகளாலும் ஒருவரை ஒருவர் வதஞ்செய்து கொல்வதில் ஜனங்கள் சந்தோஷம் அடைய மாட்டார்கள் என்று பெர்னாட் ஷா நினைப்பது உண்மையிலும் உண்மை. இப்போதுள்ள அபாயம் ஜனங்களுடைய போர் வெறியல்ல. ஸர்வாதிகாரிகளுடைய திமிரும் ராஜதந்திரிகளுடைய சூழ்ச்சிகளுமேயாகும். ஸர்வாதிகாரிகளிலும், ஹிட்லரைக் காட்டிலும் முஸோலினியே இப்போது அபாயகரமானவர் என்பது ஷாவின் அபிப்ராயம்" என்றெல்லாம் எழுதிச் செல்லும் அவர் 'சமாதானத்தின் முக்கிய சத்துரு' என ஹிட்லரைக் குறிப்பிடுகிறார்.

'கப்சிப் தர்பார்' நூலெழுந்த காலச்சூழல் குறித்த இத்தகைய புரிதலோடு இனி நாம் மீண்டும் இறுதி அத்தியாயத்திற்கு வருவோம். இவ்வாறே, "சர்வாதிகார அமைப்பில் ஒருவனே சகல அதிகாரங்களையும் பிரயோகிக்கிறான். ஜனநாயக அமைப்பில், பலர் பெயரைச் சொல்லி, சிலர் அந்த எல்லா அதிகாரங்களையும் பிரயோகிக்கிறார்கள் என்ற அளவில் வித்தியாசமேயொழிய, முறையில் வேறுபாடில்லை. ஜெர்மனியை மீண்டும் ஒரு தேசமாக்க வேண்டுமென்று சங்கற்பம் செய்து கொண்டுள்ள ஒருவன், ஜனநாயகம் என்ற தத்துவமாயையுடன் போராட வேண்டுமென்று எதிர்பார்ப்பது நியாயமன்று.

வெறும் மரக்கட்டைகள் போன்ற மனிதப் பிராணிகளைக் கூட்டம் கூட்டிவைத்துக் கையைத் தூக்கச் சொன்னாலும், எதற்குக் கைதூக்க வேண்டும் என்று வழிகாட்டுவதற்கு ஒருவன் இருந்துதானாக வேண்டும். ஒரு ஸ்தாபனத்திலுள்ள எல்லோருமே மேதைகளாயிருக்க முடியாது. ஓரிருவர்தான் அப்படி இருக்க முடியும். அவர் சொற்படிதான் நாம் நடக்க வேண்டும். நாம் என்ன ஆடுகளா? என்று கேட்கலாம். ஆம் ஆடுகள்தான். ஆயன் காட்டும் பாதையில்தான் போகவேண்டும்" என்கிறார் 'கப்சிப் தர்பார்' முடிவுரையில் ராமரத்தினம். இந்த ராமரத்தினம் அவர்களின் - அதாவது ஆயனுக்குக் கட்டுப்பட்ட ஆட்டின் மந்தை மனோபாவத்தொனி இருக்கிறதே அதற்குத்தான் ஜெர்மனியில் 'பூவர்ரா பிரின்ஸிப்' என்று பெயர்! இத்தாலியில் இதற்குத்தான் 'பாசியோ'க் கட்டுப்பாடு என்று பெயர். இதைநான் சொல்லவில்லை வேதசகாய குமார் அவர்களே - இதைச் சொன்னவர்கள் ஹிட்லரும் முஸோலினியுமே. "ரோம ஏகாதிபத்தியம் செல்வாக்குடனிருந்த காலை, மாஜிஸ்ட்ரேட்டுகள் செல்லும்போது, அவர்களது அதிகாரத்தைத் தெரிவிப்பதற்காக அவர்களுக்கு முன்னால் 'லிக்டர்கள்' என்ற உத்தியோகஸ்தர்கள் தடியேந்திச் செல்வார்கள். இவற்றிற்குப் 'பாசஸ்' (Faces) என்று இத்தாலியில் பெயர். இந்தக் கழிகள் தனித்தனியாக இருந்தால் எளிதில் முறிந்து விடலாம். ஆனால் இவற்றை ஒன்று சேர்த்துக் கட்டி விட்டால் முறிக்க எவராலும் ஆகாது. அதுபோல் இன்று நாம் தொடங்கும் இச்சங்கத்தில் சேர்ந்து அனைவரும் பிரிக்க முடியாத ஓர் ஒற்றுமைக்குட்பட்டிருப்போமானால் நம்மை அழிக்க எவராலும் இயலாது. இந்த உறுதியைத் தெரிவிக்கும் அடையாளமாக இந்தச் சங்கத்திற்கு, இந்தக் கட்டுப்பாட்டுக்குப் 'பாசியோ' என்று பெயரிடுவோமாக" - இதுதான் சாமிநாத சர்மா தம் 'முஸோலினி' நூலில் சுட்டிக் காட்டும் பாசிஸ இயக்க - 'பெயர்பெற்ற' வரலாறு. இறுதியாக நாம் பு. பி. யின் 'கப்சிப் தர்பார்' முதல் அத்தியாயத்திற்கு வருவோம், "ஹிட்லரின் அரசியல் சித்தாந்தத்தில் ரொம்பச்



படிப்பகம்

www.padippakam.com

## பெண்ணியமும் கலை இலக்கியப் பிரதிகளும் 😐

தொகுபாசிரியர்: **டாக்டர் க.சண்முகசுந்தரம்,** வெளியீடு : காவ்யா **16, 17** ஆவது **E** குறுக்கு, இந்திரா நகர் **II** ஸ்டேஜ், பெங்களூர் **560 038,** பக்கங்கள் **134,** விலை ரூ.**30** அட்டை அமைப்பு : தமிழ் நாடன்.

ஐரோப்பாவில் இன்று பெரிதும் பேசப்படுவதும் எழுதப்படுவதும் பெண்ணியம்தானாம்; ஆங்கிலப் பேராசிரியர்கள் சொல்லுகிறார்கள். தமிழிலும் இப்படித்தான் நிகழ்ந்து கொண்டிருக்கிறது. ஆனால் தமிழில் எந்த அளவிற்கு இது ஒழுங்கு முறைப்பட்ட கோட்பாட்டு அளவிலான கல்வியாக விளங்குகிறது என்பது ஒரு கேள்விக்குறியே. பெண்ணியம் பற்றிய பலவிதமான கோட்பாட்டு நூல்கள் பலவும் தமிழில் மொழிபெயர்க்கப்படும் போதுதான் இது சாத்தியமாகும்; ஆனால் கல்வியாளர்களின் ஆய்வுலகச் செயல்பாடு, புத்தகச் சந்தையிலும் ஆக்ரமிக்கிற ஒன்றாக உருவாகியுள்ள சூழலில், ஆழமான, நல்ல மொழிபெயர்ப்பு நூல்கள் வருவது குறைந்திருப்பதை உணர முடிகிறது; இது தமிழ் வளர்ச்சிக்கு நல்லதல்ல; டாக்டர் சண்முகசுந்தரம் அரும்பாடுபட்டுத் தொகுத்தளித்துள்ள ஒன்பது கட்டுரைகளையும் பார்க்கும்போது இது மேலும் உறுதியாகிறது; (உள்ளே- என்ற பகுதியில் 10 கட்டுரைகளின் பெயர் இருக்கிறது; ஆனால் நூலின் உள்ளே 9 கட்டுரைகளே உள்ளன; அம்பையின் கட்டுரை இல்லை; பெரிய ஏமாற்றம்).

முதல் கட்டுரையான "பெண்ணியம் - வரையறை - வகைகள்" (டாக்டர் வி.சரோஜா) என்ற கட்டுரைதான் பெரிய கட்டுரை. மனிதனின் சரித்திரத்தில் 'அரசியல்' இன்றி அணுவும் அசையாது என்பது உண்மைதான்; ஆனால் அதற்காக இலக்கியச் செயல்பாடுகளை, இலக்கியத் தளத்தில் நின்று நிகழ்த்துவதற்குக் கடுகளவும் முயலாமல், 'அரசியலாகவே' காண்பது தமிழ் இலக்கிய உலகில் இன்னும் தொடர்ந்து கொண்டிருப்பது பெரிய அவலம். இந்தக் கட்டுரை பெண்ணுரிமைப் போராட்ட வரலாற்றையே பெரிதும் பேசுகிறது; பேசக்கூடாதென்பது அல்ல; அதுதான் பெண்ணியம் சார்ந்த இலக்கியக் கோட்பாடுகள் என்ற தவறான புரிதலோடும் கட்டுரை தயாரிக்கப்பட்டுள்ளது. "பெண்ணியம், பெண்ணியல், பெண்நிலைவாதம், பெண்ணுரிமை, பெண்விடுதலை - ஆகிய சொற்கள் ஒரு பொருளுடையன" (பக்.12) என்று வருவதே இதற்குச் சான்று! தொகுத்த செய்திகளைக் கொட்டி வைத்திருக்கும் கட்டுரை இது. கல்வியாளர்களின் குணமே இப்படித்தான்; படித்ததை எங்காவது (அது பொருத்தமாக இல்லா விட்டாலும்) பயன்படுத்தினால்தான் அவர்களின் ஆத்மா சாந்தி அடையும்! 'பாமா'வின் 'கருக்கு' பற்றி எழுதியுள்ள அமங்கையின் கட்டுரையும் ('பெண்ணியம்'- வரையறைச் சிக்கல்கள்: பாமாவின் கருக்கு) இப்படித்தான் நகர்கிறது. இந்நாவலைக் "(கிறித்துவ) நிறுவனத்திற்குள் வளர்ந்துவரும் கலகச் சக்திகளுக்குப் போடப்படும் ரொட்டித் துண்டாகக்" காண்கிறார் மங்கை (பக்.83). ஒரு தலித் நாவலைப் பற்றித் தலித்தியத்தை ஏற்றுக் கொள்ளாத ஒரு வாசகன் எழுதித் தீர வேண்டிய நிர்ப்பந்தத்திற்குள் மாட்டிக்கொண்டால் எப்படித் தோன்றிய கருத்துக்களை அங்கங்கே விதைத்துக் கொண்டு போவானோ அப்படிப் போகிறது கட்டுரை. தமிழ் நாவல் இலக்கிய உலகிற்கு ஒரு புதிய பிரதேசத்தையும் மொழியையும் கலைமேன்மைமிக்க ஒரு முறையில் திறந்து காட்டிய 'கருக்கு' நாவலைப் பற்றி மங்கை நன்றாகவே எழுதியிருக்கமுடியும். ஆனால் கிரா. (கிராஜ நாராயணன்) கூறுவது போல, அவர் மூளைக்குள் நுழைந்து கொண்ட 'அரசியல் பன்னிக்குட்டி' நாவலைச் சரியாகப் பார்க்கவிடாமல் தடுத்து இருக்கிறது என்று எண்ணும்படியாகக் கட்டுரையின் போக்கு அமைந்துள்ளது; திட்டவட்டமான ஒரு பார்வை கட்டுரையில் இல்லை; எம்ஜிஆர் பேச்சுப் போல கட்டுரை ஆதி அந்தம் இல்லாமல் அலை பாய்கிறது. பாவம்!

சூரியதீபனின் கட்டுரை (பெண்கள் - சமகால எழுத்தாளர் பார்வைகள்) சமகால எழுத்தாளர்களின் பார்வையிலுள்ள பெண்மை பற்றிய நேர்பார்வைகளையும் கோணல்பார்வைகளையும் சுட்டிக் காட்டுகிறது; முதலாளித்துவ வர்க்கத்தைச் சார்ந்த பெண்கள் கோரும் பெண்ணியம், உழைக்கும் வர்க்கத்தைச் சார்ந்த பெண்களுக்கு எந்தவிதத்திலும் பயன்படப் போவதில்லை என்ற கருத்தை முன் வைக்கிறது; பெண்ணியத்திலும் இருக்க வேண்டிய வர்க்கப் பார்வையின் தேவையை வலியுறுத்துகிறது; இவ்வாறு இந்தக் கட்டுரையிலும் ஒலிப்பது அரசியல் குரலே! ஆனாலும் "ஒவ்வொரு பெண்ணும் இன்னொருத்தியின் கண் அடியின் கருவட்டங்களைத் தடவவேண்டும்; பிரசவக்கோடுகளில் உள்ளங்கைகளை வைக்கவேண்டும்; புடைத்த நரம்புகளில் விரலை வைக்கவேண்டும்.வெடித்த கால்களைக் கைகளில் ஏந்த வேண்டும்" என்ற புதிய பெண்நிலைவாதக் குரலை (அம்பையின் குரலை) கட்டுரை பதிவு செய்துள்ளது.

"உரிப்பொருள்"- பற்றிய சத்தியத்தின் கட்டுரை (பெண்ணியமும் உரிப்பொருளும்) 'தமிழ் மானுடவியலை' வகுக்கப் பயன்படக்கூடிய ஒரு கட்டுரை எனலாம். 'இருத்தல்' என்ற முல்லை உரிப்பொருள், பெண் 'குடும்பச் சிறைக்குள் முடக்கப் பட்டமையைத் தெளிவு செய்கிறது' என்கிறார் (பக்.55); கணவன் போர்க்களத்தில் உடல்ரீதியான செயல்பாட்டில் ஈடுபட்டிருக்கும்போது, இங்கே மனைவி மட்டும், அவனையே நினைத்து 'இருத்தல்' என்பதன் மூலமாக உடல்ரீதியான செயல்பாட்டிலிருந்து விலகி, மனரீதியான செயல்பாட்டிற்குள் புகுந்து கொள்ளுமாறு முடக்கப்படுகிறார்; இதனால் ஒரு கணப்பொழுதில் முடிந்துவிடும் உடல்சார்ந்த செயல்பாடு, மனம் என்னும் பெருக்கியினால் பன்மடங்காக விரிவாக்கம் பெறுகிறது; நாள் முழுவதுமான ஒன்றாக உருப்பெறுகிறது; இந்நிலையில் அதைப்பற்றிய கற்பனைப் புனைவுகளைக் கட்டி விடுவது எளிதாகி விடுகிறது. இப்படி ஆதிகாலக் கருத்தாக்கங்களை மறு வாசிப்புக்கு உட்படுத்துவதன் மூலம், அடக்கு முறையின் முகங்களை அடையாளம் காட்டும் நல்ல கட்டுரை இது! இதுபோலவே நவீன நாடகங்கள் பற்றியெழுதியுள்ள டாக்டர் செண்பகம் ராமசாமியின் கட்டுரையும் (தமிழ் நவீன நாடகங்களும் பெண்ணியமும்) இப்புத்தகத்திற்கு அழகு சேர்க்கும் ஒரு கட்டுரை ஆகும்! பெண்ணியக் கோட்பாடுகளைப் பயன்படுத்தித் தயாரிக்கப்பட்டுள்ள சிறந்த கட்டுரை ஆகும். மேலும் அம்பையின் கதைகளைப் பற்றி டாக்டர் சு.வேங்கடராமனும், சிலப்பதிகாரத்தைப் பற்றி டாக்டர் அ.அமணவாளனும் கோட்பாட்டு அடிப்படையில் எளிமையான ஒரு முறையில் எழுதியுள்ளனர்; மணவாளன் கட்டுரையில் (சிலப்பதிகாரம் ஒரு 'பெண்ணிய' நோக்கு) பெண்ணியம் பற்றிய அவருடைய தெளிவான புரிதல் புலப்படுகிறது. லிண்டா கிறிஸ்டி, வேதநாயகம் பிள்ளையின் நாவல்கள் பெண்மை பற்றிய சீர்திருத்த நாவல்களே தவிர, பெண்ணியல் நோக்கில் அமைந்தவை அல்ல எனச் சான்றுகளுடன் விளக்குகிறார்; (வேதநாயகம் பிள்ளையின் நாவல்கள் - ஒரு பெண்ணிய நோக்குத் திறனாய்வு) இறுதியிலுள்ள தமிழ்ச் சினிமா பற்றிய கட்டுரை மிகச் சாதாரணமான ஒரு கட்டுரை! (பிம்பங்களின் ஊடே... சுநாகநந்தினி) மொத்தத்தில் பெண்ணியம் பற்றிய கோட்பாட்டு நூல்கள் சரியான முறையில் இன்னும் அறிமுகப்படுத்தப்படாத சூழலில், இப்படி ஒரு கட்டுரைத் தொகுப்பை வெளிக் கொண்டு வந்திருக்கும் சண்முகசுந்தரம் திறனாய்வு உலகினால் பாராட்டுதற்கு உரியவர் என்றே கூறவேண்டும். ஏனெனில் ஒருவரிடம் கட்டுரை வாங்குவது என்பது கல்லில் நார் உரிக்கும் கதையாக இருக்கிறது இன்று!

**டாக்டர் க. பஞ்சாங்கம்**

### வரப்பெற்றோம்

மெய்யாகவே உங்களுக்குச் சொல்கிறேன் (கவிதைத் தொகுப்பு); ஆசிரியர் : **மோகனப்ரியன்;** பக் 72; விலை ரூ.25; வெளியீடு: **தலித் ஆய்வு மையம், தமிழ்நாடு இறையியல் கல்லூரி, மதுரை 625 010.**

பசலை (சிறுகதைத் தொகுப்பு); ஆசிரியர்: **கோவிந்தராஜ்,** பக் 112; விலை ரூ.18; வெளியீடு : **திருஞி, 4, மாரீசன் 5வது தெரு(மாடி), ஆலந்தூர், பரங்கிமலை (அஞ்சல்), சென்னை 16.**

**மறுபக்கம்** (சிறுகதைத் தொகுப்பு) ஆசிரியர்: **எஸ்ஸார்சி;** பக் 140; விலை ரூ.22; வெளியீடு : **பானுசந்திரன் பதிப்பகம், அக்ரஹாரம் தர்மநல்லூர் 606 103, வள்ளலார் மாவட்டம்.**

**போய்ச் சேரா கடிதம்** (கவிதைத் தொகுப்பு); ஆசிரியர் : **பா.சத்தியமோகன்;** பக் 36; வெளியீடு : **பா.சத்தியமோகன் 133-டி, வட்டம் 7, நெய்வேலி 3.**

**குமரி முதல் வார்சா வரை** (பழந்தமிழ்ச் சுவடிகளைத் தேடி ஒரு பயணம்); ஆசிரியர் : டாக்டர் ஜி.ஜான் சாமுவேல்; பக் 133; விலை ரூ.30; வெளியீடு : **ஆசியவியல் ஆய்வு நிறுவனம், 377, 10வது கிழக்கு தெரு, திருவான்மியூர், சென்னை 41.**

**மறதியின் புதைசேறு** (சிறுகதைத் தொகுப்பு); ஆசிரியர்: **உதயசங்கர்;** பக் 144; விலை ரூ. 35;

**25 கவிதைகளும் 500 கமாண்டோக்களும்;** ஆசிரியர்: **மொஹமத் தார்வீஷ்;** தொகுப்பு : யமுனா ராஜேந்திரன்; பக் 62; விலை ரூ. 20

(வெளியீடு : **ஸ்நேகா, 348 டி.டி.கே.சாலை (முதல் தளம்), இராயப்பேட்டை, சென்னை 600 014.)**



படிப்பகம்

www.padippakam.com

# ஹிம்சை

தளவாய் சுந்தரம்

நீங்கள் மஞ்சளாய் வெளிச்சம் பரவிக் கிடந்த அந்த பள்ளிக் கூடத்திற்கு முன்னால் இறங்கிக் கொள்கிறீர்கள். ஆனால் உண்மையிலேயே நீங்கள் ஆஸ்பத்திரிக்குத் தான் டிக்கெட் எடுத்திருந்தீர்கள் என்பது எனக்குத் தெரியும். நீங்கள் பயணப்பட்ட வண்டியில் இருந்த அதிகப்படியான கூட்டமும் தினமும் மருந்துகளின் வாடையுடன் நோயாளிகளுக்கு இடையே நடக்க வேண்டியிருந்ததும் உங்களை எரிச்சல் படுத்தியிருந்தது. இங்கே இறங்குவதன் மூலம் கொஞ்சம் அதிகமான தூரத்தை கடக்க வேண்டி வரும் என்று தெரிந்தும் - நம்முடைய தலைவிதியில் இறங்க வேண்டும் என்று இருக்கும் போது நாம் செய்வதற்கு என்ன இருக்கு - நீங்கள் இப்படி நடந்து கொள்கிறீர்கள். உங்களுக்குப் பிறகு வயதான ஒருவரும் முன்னால் ஒரு பெண்ணும் இறங்கிக் கொண்டதும் அந்த வண்டி அதற்குள் பிதுங்கி கொண்டிருந்த ஆட்களோடு ஓடிப் போகிறது.

வயதான அந்த ஆளும், பெண்ணும் காணாமல் போன பின்னாடியும் நீங்கள் அங்கேயே - எதையோ ஞாபகப்படுத்திக் கொள்ள முயற்சிப்பதுபோல் - நின்று கொண்டிருக்கிறீர்கள். அங்கிருந்த ஒன்றிரண்டு கடைகளையும் அடைத்துவிட்டு போயிருந்தார்கள்.

திடீரென்று ஞாபகம் வந்ததுபோல் பள்ளிக் கூடத்திற்கு எதிர்திசையில் போகிற பாதையில் நடக்க ஆரம்பிக்கிறீர்கள். சாயங்காலம் மழை பெய்திருந்ததாலும் பாதை குண்டும் குழியுமாய் இருப்பதாலும் மிகக் கவனமாகத்தான் நடக்க வேண்டியிருக்கிறது. கொஞ்ச தூரம்தான் பள்ளிக் கூடத்திற்கு முன்னால் இருந்த மெர்க்குரி உங்களுக்கு உதவி செய்கிறது. கொஞ்சம் கொஞ்சமாய் நீங்கள் இருட்டிற்குள் செல்ல ஆரம்பிக்கிறீர்கள். அது உங்களைப் பயப்படச் செய்கிறது. பாதையின் ஓரங்களில் எப்போதோ டியூப்கள் எரிந்து கொண்டிருந்தன என்பதற்கு அடையாளமாய் மின் கம்பங்களில் குழாய்கள் நீண்டு கொண்டிருக்கின்றன. முந்தின நகரசபை தேர்தலின் போதாக இருக்கலாம் என்று நினைத்துக் கொள்கிறீர்கள். நகரசபைத் தலைவரின் மேலும் அவரை தேர்ந்தெடுத்த முட்டாள் ஜனங்களின் மேலும் உங்களுக்கு கோபமும் எரிச்சலும் வருகிறது. ஆனாலும் நீங்கள் நடந்துகொண்டேதான் இருக்கிறீர்கள்.

ஆங்காங்கே பாதையின் ஓரத்தில் நாய்களும் பன்றிகளும் மலங்களை தின்றுகொண்டிருக்கும் வாயால் உங்களைப் பார்த்து உறுமுகின்றன. எனவே மிக கவனமாக - மலங்களை மிதிக்காமல் இருக்க வேண்டியும் - பாதையின் மத்தியில் எப்பவாவது வரும் சைக்கிளுக்கோ பைக்குக்கோ ஒதுங்கி இடம் விட்டுக் கொண்டு நடக்கத் தொடங்குகிறீர்கள்.

இருண்ட பகுதிக்குள் சிறிது தூரம் கடந்ததும் முன்னாடி யாரோ போய்க் கொண்டிருப்பது நிழலுருவமாய் உங்களுக்குத் தெரிகிறது. என்னென்னமோ நினைத்து பயந்து கொண்டிருந்தது போய் மனதில் கனம் குறைவதை உணர்கிறீர்கள். பேசிக் கொண்டே போக துணை கிடைத்துவிட்ட சந்தோஷத்தில் கொஞ்சம் உங்கள் நடை வேகமாகிறது. தண்ணீர் தேங்கி, குண்டுகள் தெரியாமல் இருப்பதாலும் பாதை சேறும் சகதியுமாக இருப்பதாலும் வேகமாக நடப்பது உங்களுக்குச் சிரமமாக இருக்கிறது. ஆனாலும் அதில்தான் நீங்கள் விருப்பம் காட்டுகிறீர்கள். எனவே விரைவிலேயே அந்த நிழலுருவத்தை நெருங்குகிறீர்கள்.

ஆனால் இப்பொழுது அந்த நிழலுருவம் ஒரு பெண்ணினுடையது என்பதைக் காண்கிறீர்கள். பேருந்தில் இருந்து இறங்கின பெண்ணை ஞாபகப் படுத்திக் கொள்கிறீர்கள். உங்கள் நடையின் வேகம் குறைந்து கொண்டே வருகிறது. ஆனாலும் நீங்கள் அந்த பெண்ணைவிட வேகமாகவே நடந்துகொண்டிருக்க வேண்டும். ஏனெனில் அந்த பெண்ணிற்கும் உங்களுக்குமான இடைவெளி குறைந்து கொண்டே வருகிறது.

அந்த பெண்ணும் பாதையின் மத்தியில்தான் சென்று கொண்டிருக்கிறாள். கையில் சின்னக் கூடை ஒன்று தொட்டிலாடுகிறது. எங்கேயாவது கடைக்கோ, சந்தைக்கோ அல்லது கோயிலுக்கோ போய்விட்டு வருபவர்களாக இருக்கும் என்று உங்களுக்குத் தோன்றுகிறது. ஆனாலும் இப்படி அர்த்த ராத்திரியில நாமே பயந்து சாகும்போது ஒரு பெண் தைரியமாய்ப் போகிறாளே என்று ஆச்சரியம் உங்களுக்கு. அந்த பெண்ணிற்கும் உங்களுக்குமான இடைவெளி குறையக் குறைய அப்பெண்ணின் வயதும் குறைந்து கொண்டே வருகிறது. நீங்கள் கணக்கிட்டிருந்ததையும் தாண்டி பாதை நீண்டு கொண்டே போகிறது.

உங்களின் காலடிச் சத்தம் அப்பெண்ணிற்குக் கேட்கும் அளவுக்கு நெருங்கியபொழுது அவள் திரும்பிப் பார்க்கிறாள். உடனே நீங்கள் தாக்கப்பட்டது போல் - உங்களுக்கு அவள் ஒரு பொருட்டு இல்லை என்பதை காண்பிக்க விரும்பி - முகத்தைத் திருப்பி சுற்றிலும் பார்க்கிறீர்கள். மங்கிய பிறைநிலா வெளிச்சத்தில் தென்னை மரங்கள் கறுத்து போய்த் தெரிகிறது. திரும்பிய அவள் முகம் அழகாக இருந்தது என்று நினைத்துக் கொள்கிறீர்கள். ஒரு நாய் திடீரென ஓட ஆரம்பிக்கிறது. அவளுக்கு உங்கள் வயதோ அல்லது கொஞ்சம் குறைவாகவோ இருக்கலாம். இந்த எண்ணம் உங்களை பரவசப்படுத்துகிறது. நீங்கள் மீண்டும் அவளைப் பார்ப்பதற்காக திரும்பியபொழுது அவள் திரும்பித் திரும்பி உங்களைப் பார்த்தபடியே சென்று கொண்டிருக்கிறாள். அப்பொழுதுதான் நீங்கள் அப்படியே நின்று கொண்டிருப்பது உங்கள் பொறியில் தட்டியது. இது எப்படி நடந்தது என்று ஆச்சரியப்படுகிறீர்கள். சிந்தித்துக் கொண்டே உடனே நடக்க ஆரம்பிக்கிறீர்கள். நாம் நடக்கிறோமா ஓடுகிறோமா என்று சந்தேகம் வருகிறது உங்களுக்கு. புள்ளியாய் ஒரு வெளிச்சம் ஆரம்பித்து பெரியதாகிக் கொண்டே வந்து உங்களையும் அவளையும் ஒரு சைக்கிள் கடந்து போகிறது.

திடீரென அவள் ஒரு கல்லில் தட்டி கீழே விழப் பார்க்கிறாள். குடிகாரனைப் போல் தள்ளாடி - குட்டிகரணம் அடிக்காமல் - தப்பித்துக் கொள்கிறாள். திரும்பிப் பார்க்கிறாள். உடனே நீங்கள் முந்தைய முறை போலவே ஆனால் இந்த முறை மெதுவாக நடந்துகொண்டே முகத்தைத் திருப்பிக் கொள்கிறீர்கள். நீங்கள் அவளால் கவரப்பட்டிருப்பீர்கள் என்று நினைத்து கொண்டிருக்கும் அவளுக்கு இது மிகப்பெரிய ஏமாற்றமாய் போயிருக்கும் என்று நினைத்துக் கொள்கிறீர்கள். வெற்றியடைந்துவிட்ட திருப்தி உங்களுக்கு.

பெண்ணாய் இருந்தால் என்ன, பேசிக்கொண்டே போனால் செத்தா போய்விடுவோம் என்று உங்களுக்குள் கேட்டுக் கொள்கிறீர்கள். அவளும் நீங்களும் பேசிக்கொண்டே செல்கிறீர்கள். பின் நண்பர்களாகிறீர்கள். அப்புறம் என்ன, காதலிக்க வேண்டியதுதானே. அப்புறம் நீங்கள் இருவரும் உங்கள் காதல் உண்மையானதுதான் என்று இந்த பாழாய்ப்போன சமுதாயம் ஏற்றுக் கொள்ளவேண்டி கல்யாணம் செய்து கொள்கிறீர்கள். அப்புறம் உங்கள் கற்பனை சரடு போட்ட கிடா போல் அடங்கி போகிறது.


இதுபோல் நினைத்துக் கொண்டே பின் தொடர்வது உங்களுக்கு சுகத்தைக் கொடுக்கிறது. நீங்கள் வேகமாக நடக்க ஆரம்பிக்கிறீர்கள். ஆனாலும் உங்களுக்குத் தயக்கம் இல்லாமலில்லை.

இப்பொழுது அவளும் வேகமாக நடந்து கொண்டிருக்கிறாள். அவள் திரும்பித் திரும்பி பார்ப்பதற்குள்ளான இடைவெளி மிகக் குறைவாக இருக்கிறது. அவள் உங்களைப் பார்த்துப் பயப்படுகிறாள் என்று உங்களுக்குத் தெரிகிறது. எதற்கு வீண்வம்பு என்று நினைக்கிறீர்கள். ஆனாலும் உங்களுக்கு இதில் சுவாரஸ்யம் கூடி வருகிறது. அவள் உடுத்தியிருந்த துணி வேகமாக நடப்பதில் அவளுக்கு சிரமத்தை



படிப்பகம்

www.padippakam.com



ஓவியம் : எஸ்.ஜி. வாசுதேவ்

ஏற்படுத்துகிறது. சரட் சரட் என்று சத்தம் கேட்கிறது. மோசமான பாதையாதலால் அடிக்கடித் தள்ளாடுகிறாள். வேண்டியதுதானே.

நீங்கள் சிரிக்கிறீர்கள். கூப்பிட்டு "எம்மா பயப்பட வேண்டிய அவசியமில்லை" என்று சொல்லிவிட முடிவு செய்கிறீர்கள். கொஞ்சம் விளையாடிப் பார்க்கலாமே என்ற எண்ணமும் இருக்கிறது. இப்போதைக்கு இதில அதிக விருப்பம் இல்லாமல் இருந்தாலும் நாளை நண்பர்கள் மத்தியில் சொல்லி அவர்கள் நினைத்துக் கொண்டிருப்பது போல் நீங்கள் கோம்பையன் இல்லை என்று நிரூபிக்க வேண்டியாவது கொஞ்சம் விளையாட வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறீர்கள். கொஞ்சம் பயமும் தயக்கமும் இருக்கத்தான் செய்கிறது. திடீரென்று ஞாபகம் வந்ததுபோல தப்தப் என்று சப்தம் ஏற்படுத்திக் கொண்டே கண் தெரியாதவர்களை போல் ஓடுகிறீர்கள். பன்றிகளும் நாய்களும் உங்களின இந்த திடீமாற்றம் கண்டு திகைத்து உறுமிக் கொண்டே ஓடுகின்றன. ஒன்றிரண்டு எதிர்த்து பார்க்கின்றன. உங்களிடமா நடக்கும்! உங்கள் எண்ணம் அவளைப் பயமுண்டாக்குவது மட்டுமே ஆதலால் உங்களுக்கும் அவளுக்குமான இடைவெளி இருபது அடி இருக்கும்போது நின்று கொள்கிறீர்கள். அவளின் எண்ணம் உறுதிப்பட்டிருக்க வேண்டும். தலைதெறிக்க ஓடுகிறாள். சேலையின் அடிப்பாகம் கைகளுக்கு உயருகிறது. முண்டமே இப்படி பயப்படுத்தியே என்று அவளை மனதிற்குள் திட்டிக் கொள்கிறீர்கள். ஆனால் இன்னும் அதிக சுவராஸ்யத்தை இதில் நீங்கள் கண்டுகொள்கிறீர்கள். அவள் திரும்பிப் பார்த்த சில சமயங்களில் டாட்டா காண்பிக்கிறீர்கள்.

இப்படியே உங்கள் திருவிளையாடல் நடந்து கொண்டே இருக்கிறது. ஒவ்வொருமுறையும் அவளுக்கும் உங்களுக்குமான இடைவெளி குறைந்து கொண்டே வருகிறது. இடைவெளி குறையக்குறைய நீங்கள் குரூரமாய் சிந்திக்கத் தொடங்குகிறீர்கள். இது தவறு இல்லையா என்று உங்களுக்குள் ஒரு கேள்வி. பாழாய்ப்போன கேள்வி நேரம் காலம் தெரியாமல வந்து நிற்கிறது பார்த்தீங்களா. சும்மா நினைத்துதானே பார்க்கிறோம். அப்படியெல்லாம் செய்யக் கூடிய அளவுக்கு நாம ஒன்றும் மோசமானவன் இல்லையே என்று சமாதானம் செய்துகொள்கிறீர்கள். சரி, செய்தால் தான என்ன என்றும் நினைத்துக் கொள்கிறீர்கள். இது தெரிய வரும்போது உங்களை அப்பாவி என்று எண்ணிக் கொண்டிருக்கும் உலகம் என்ன செய்யும் என்று சிந்திக்கத் தொடங்குகிறீர்கள். வேறு ஒன்றும் இல்லையென்றாலும் கழட்டு நகையை என்றாவது மிரட்டிப் பார்க்கலாமே என்று தோன்றுகிறது. ஆனாலும் பழையபடியேதான் ஓடி ஓடி நின்றுகொண்டிருககிறீர்கள்.

பாதையின் அந்த முதல் திருப்பத்தைக் கடந்தபோது அதிர்ந்து போகிறீர்கள். லைட்டு எரிந்து கொணடிருககும் அந்த வீட்டுக்கு முன்னால் அவளுடன் இன்னும் இரண்டு பேர் நின்று கொண்டிருக்கிறார்கள். அவள் நீங்கள் நின்று கொண்டிருந்த திசையைக் காண்பித்து அவர்களிடம் உங்கள் திருவிளையாடலை சொல்லிக் கொண்டிருக்கிறாள். அவர்கள் முகங்களில் ஆச்சர்யம் பரவிக் கிடக்கிறது. அவள் சொலவதை நம்ப முடியாதவர்களாய் அவர்கள் நின்று கொண்டிருக்கிறார்கள். பின் அவர்கள் அவளோடு சேர்ந்து உங்களைப் பார்த்து வருகிறார்கள். இதை நீங்கள் எதிர் பார்ககவில்லை. நீங்கள் நின்று கொணடிருப்பது அவர்களுக்குத் தெரியாது என்றாலும் உங்களை அடைய அவர்களுக்கு அதிக நேரம் தேவைப்படும் என்றாலும் நீங்கள் வேகமாக சிந்திககத தொடங்குகிறீர்கள்.

காலம் கடந்துவிட்டது என்பதை நீங்கள் உணராமலில்லை. உங்களுடைய எந்த வாதத்தையும் அவர்கள் நிச்சயமாய் ஏற்றுக் கொள்ளப் போவதில்லை. அப்படியே ஏற்றுக கொண்டாலும் அது இரண்டு மூன்று தர்ம அடிகளுக்குப் பின்னாடிதான் சாத்தியப்படக்கூடும். வந்த பாதையில் 'அம்புட்டேனா பார்' என்று ஓடத் தொடங்குகிறீர்கள்.

இதை நான் எதிர்பார்க்கவில்லை. இந்த கதையை முடிப்பதற்காக உங்களை விரட்டிக் கொண்டு ஓடிவர வேண்டிய கட்டாயத்தில் நான் இருக்கிறேன. கல்லூரி அளவிலான இருநூறு மீட்டர் ஓட்டப்பந்தயத்தில் முதல் இடத்தை பெற்றிருந்த பின்னும் உங்களை பாதியிலேயே தொலைக்கிறேன. விரட்டிக் கொணடு ஓடி வந்த நாய்கள் முடியாமல் பாதியில் திரும்பி மலம் தின்ன போகிறது. மூச்சிரைக்க நான் அந்த பள்ளிக்கூடத்தை வந்தடைந்த போது நீங்கள் அந்த வயதானவருடன் பேசிக் கொண்டிருக்கிறீர்கள். உங்களைப்போலவே ஆஸ்பத்திரியில் இறங்க வேண்டிய அவர், ஆனால் தெரியாமல் இங்கே இறங்கி விட்டிருந்திருக்கிறார். இந்த இடத்திற்கு புது ஆள் போல், எங்கல்லாமோ சுற்றி கடைசியில் உங்களிடம் வழி கேட்கிறார். நீங்கள் பயந்து கொண்டிருப்பது அவர் முகத்தில் கேள்விக்குறியாய் இருக்கிறது. கடைசி பஸ்சும் போயிருககும். வேறு வழி, ஆஸ்பத்திரி வாடையும் நோயாளிகளும தான என்று அவரை அழைதது கொணடு நடக்க தொடங்குகிறீர்கள்.

உங்களைப் பார்த்தாகிவிட்டது. சரி, அவர்கள் என்ன ஆனார்கள் என்று தெரிந்து கொள்ள வேணடாமா. மறுபடியும் அந்த பாதையில் ஓடினேன். ஓடிக்கொண்டே இருந்தேன. எந்த இடத்திலும் அவர்கள் என்னை எதிர் கொள்ள வில்லை. சரி, திரும்பி போயிருப்பார்களாக இருக்கும் என்று எண்ணிக் கொண்டேன்.

இதுவரை அனைத்தையும் உங்கள் கண்களின் உதவி கொண்டே பார்த்துக் கொண்டு வந்த நான் அந்த திருப்பத்தை கடந்த போது அதிர்ந்து போனேன். அங்கே எந்த லைட்டும் எரிந்து கொணடிருக்கவில்லை. வீடு இருந்தால்தானே லைட்டு எரிவதற்கு.



படிப்பகம்

www.padippakam.com

விவாதம்

## ஒரு கடிதம்

அன்பார்ந்த கண்ணன்,

காலச்சுவடு 11 பார்த்தேன். இத்தனை கோபதாபங்களுக்கும் மத்தியில் பலராலும் புறக்கணிக்கப்பட்ட எனது 'மார்க்சீயத்தின் பெயரால்' நூலுக்கு இவ்வளவு விரிவான விமர்சனத்திற்கு இடமளித்திருப்பதற்கு மனம் நிறைந்த நன்றிகள். எங்களைத் தொடர்ந்து தூக்கி வருகிற சிலரிடம் காணக் கிடைக்காத நற்பண்பு இது.

உங்கள் தந்தை சு. ரா.வின் பேட்டி குறித்து நான் பல சந்தர்ப்பங்களிலும் கூறியவற்றை அப்பேட்டியிலிருந்து எடுக்கப்பட்ட விரிவான மேற்கோள்களுடன் மறுத்துள்ளீர்கள். அதே பேட்டியில் இலக்கியத்தில் ஜாதி பிரிப்பது வக்கிரம் எனவும், எழுதியது யார் என்பது முக்கியமல்ல, எழுத்து மூலம் வாழ்க்கைப் பார்வை எவ்வளவு விரிந்திருக்கிறது என்பதுதான் முக்கியம் எனவும் சு. ரா. பேசியுள்ளாரே. அதனையும் சுட்டிக் காட்டி நீங்கள் விளக்கமளித்திருக்க வேண்டும். சாதகமானவற்றை மட்டும் வெட்டி எடுத்துத் திரிப்பது வாசகர்களை இழிவு செய்வது என எழுதியுள்ள நீங்களாவது வாசகர்களை மதித்திருக்க வேண்டாமா?

கேவலமான இலக்கியப் போக்குகள், அடாவடித்தனம், அராஜகம், மனிதப் பண்புகளிலும் ஜனநாயகப் பண்புகளிலும் நம்பிக்கையற்றவர்கள், வன்முறையாளர்கள் என்றெல்லாம் சு. ரா.வும் நீங்களும் நல்ல வார்த்தைகள் பேசி இருப்பதெல்லாம் 'பொதுவான போக்குகளைப் பற்றித்தான்' என ஒற்றை வரியில் சொல்லிவிட்டு ஓடிவிட முடியாது. அதி நவீன இலக்கியவாதிகள், போஸ்ட் மார்டனிசம் புனைபவர்கள், இலக்கியத்தில் ஜாதி பிரிப்பவர்கள், தஞ்சையில் தலை ஆடுகிறது என்றெல்லாம் சுட்டப்பட்டிருப்பது யாரை மனதில் கொண்டு? இதுவரை ஊகமாகப் பேசிக் கொண்டிருந்தீர்கள். காலச்சுவடு 11இல் நேராகப் பெயரைச் சொல்லிவிட்டீர்கள். அவ்வளவுதான்.

நானும் வேல்சாமியும் 'திரித்து' எழுதியிருப்பதாக நீங்கள் குற்றம்சாட்டி இருப்பவை அர்த்தமற்றவை. 'லகரி'யை 'லஹரி' எனவும் 'நேர்மறை'யை 'நேர்மை' எனவும், 'ஸ்டாலினிஸ்டுகளால் அவிழ்த்துவிடப்பட்ட வேட்டை நாய்கள்' என்பதை 'ஸ்டாலினிஸ்டு வேட்டை நாய்கள்' எனவும் 'ஐ. ஏ. எஸ். கேடர் ஒழியணும்' என்பதை 'ஐ. ஏ. எஸ். தேர்வு ஒழியணும்' எனவும் திரித்து (!) விட்டதாகப் பட்டியலிட்டுள்ளீர்கள். இப்படி 'திரித்து'ச் சொல்லியதன் மூலம் உங்கள் எழுத்துகளில் இல்லாத என்ன கருத்தைப் புதிதாகத் திணித்துவிட்டோம் என்பதைத் தீர்மானிக்க எந்த ஒரு நடுவர் குழுவிடமும் பிரதிகளை ஒப்புவிக்க நாங்கள் தயாராக இருக்கிறோம். நீங்கள் தயாரா? 'லகரி'யை 'லஹரி' என்கிற வட சொல்லிலிருந்து வேறுபடுத்தி ஒரு தமிழ்ச் சொல்லாக்க நீங்கள் முயற்சித்திருப்பது வேடிக்கை. வேலிக்கு ஓணான் சாட்சி என்பதுபோல உங்களுக்கு ஆதாரம் பலராலும் கண்டிக்கப்பட்ட 'க்ரியா' அகராதி! 'படைப்பு' குறித்த புனித வட்டங்கள் தகர்ந்து கொண்டிருப்பதைச் சொல்ல வரும்போது இன்னும்கூட இது குறித்த சனாதனப் பார்வையிலிருந்து சு. ரா. விடுபடவில்லை என்பதைச் சுட்டிக்காட்டும் போதுதான் லஹரி பற்றி நான் குறிப்பிட்டுள்ளேன். மேற்குறித்த பேட்டியிலும் 'என் நாவல்கள்' என்ற கட்டுரையிலும் உங்கள் தந்தை 'ஜே. ஜே. சில குறிப்புகள்' எழுத நேர்ந்த 'அபூர்வ சந்தர்ப்பம்' பற்றிக் கூறியுள்ளவை இதனை உறுதி செய்யக் கூடியனவாக உள்ளன என விமர்சித்துள்ளேன். 'லஹரி' 'லகரி'யாகிவிடுவதால் என் விமர்சனம் எப்படித் தவறாகிவிடும்?

காலச்சுவடு 10 பற்றிய வேல்சாமியின் விமர்சனக்கட்டுரை ஆராய்ச்சி அறிக்கை அல்ல. 'சுபமங்களா' போன்ற ஒரு இடைநிலை இதழுக்காக எழுதப்பட்ட ஒரு விமர்சனக் கட்டுரை. விரிவான மேற்கோள்கள் அதில் சாத்தியமில்லை. காலச்சுவடு இதழில் மேலோங்கி இருக்கும் ஒற்றைக் குரலை வேல்சாமியின் கட்டுரை சரியாக இனங் காட்டிவிட்டதே உங்களின் ஆத்திரத்திற்குக் காரணம். மாற்றுக் குரல்களுக்கு இருப்பதாக நீங்கள் சுட்டிக் காட்டியிருப்பவை பலவீனமானவை; எண்ணிக்கையில் குறைந்தவை; ஓரமாக நின்று மெலிதாக ஒலிப்பவை. (எ.டு) பிராமண எதிர்ப்பு இயக்கத்தைக் கொச்சைப்படுத்தியும், வருணாசிரமத்தை நியாயப்படுத்தியும், இட ஒதுக்கீட்டு அரசியலை இழிவு செய்தும் பேசிவிட்டு கடைசியாக 'பிராமணர்களின் அறிவுச் செருக்கை'க் கண்டித்து ஒரு செல்லத்தட்டு தட்டிவிட்டுப் போனால் போதாது (நாகராசன் பேட்டி). ஒரு குறிப்பிட்ட கேள்வியை நோக்கி பதிலைச் சொல்வதாக சிறுபத்திரிகை அமைவது தவறில்லை. என்ன கேள்விகளுக்கு என்ன பதிலைச் சொல்கிறீர்கள் என்பதை வைத்தே உங்களைப் புரிந்து கொள்ள முடியும். ஒடுக்கப்பட்ட மக்களின் இணைவைப் பிரதானப்படுத்தியும், உலகளாவிய ஒதுக்கப்பட்ட மக்களின் குரல்களை அறிமுகப் படுத்தியும், இலக்கியம் குறித்த இந்து சனாதன மதிப்பீடுகளைக் கேள்விக்குள்ளாக்கியும் இயங்கி வருபவர்களைப் பிரதான எதிரியாகப் பிரகடனப்படுத்தித் தாக்குதல் தொடுப்பதில் முதன்மையான இடத்தைப் பெறுவது 'காலச்சுவடும்' 'நிகழும்' தான். எங்கள் குரல்கள் தற்காப்புக் குரல்களே! தாக்குதல் குரல்களல்ல.

மாறாக நீங்களே இதுவரை உங்களால் முன்னிலைப்படுத்தப்படும் நயத்தக்க நாகரீகங்களை எல்லாம் தூக்கி எறிந்துவிட்டு தாக்குதல் நடத்துபவர்கள், அவதூறுகள் பொழிபவர்கள், கேவலமானவர்கள் என்றார் உங்கள் தந்தை. வன்முறையாளர்கள் என்றீர்கள் நீங்கள். மௌனி போன்ற புனிதர்கள் மீது "காலைத்தூக்கி சிறுநீர் கழித்த" நாய்கள் என்றார் உங்கள் சகபாடி. சொல்லுங்கள். யார் அடாவடிக்காரர்கள்?

தலித் இலக்கியம், பின் நவீனத்துவம், மார்க்சீய அமைப்பியல் போன்ற கருத்தாக்கங்களை மற்றவர்களோடு சேர்ந்து நாங்களும் முன் வைத்து வருகின்றோம். இவற்றின் மீது சில பொதுக் கருத்துக்களும் உருவாகியுள்ளன: விவாதங்களும் நடைபெறுகின்றன. விவாதங்களுக்கு நாங்கள் எப்போதுமே தயாராக இருக்கிறோம். நீங்கள்தான் தயாராக இல்லை. 'இடைத்தரகர்கள்' என்று எங்களைத் தூக்கிவிட்டு தலித் இலக்கியத்தை நேரடியாக வரவேற்பது போல காட்டிக் கொள்ள முயற்சிக்கிறீர்கள். ஆனால் நீங்கள் சொல்வதென்ன?

"தலித் இலக்கியம், பெண்ணியம் எல்லாம் வேண்டியதுதான். ஆனால் நாங்கள் சொல்லும் மரபு, தரம் இதையெல்லாம் நீங்கள் புறக்கணித்துவிடக்கூடாது. எங்கள் அளவுகோல்களையும் அதனூடான அதிகாரங்களையும் கேள்விக்குள்ளாக்கும் இந்த அடாவடிக்காரர்களோடு சேர்ந்து கெட்டுப் போகாதீர்கள். வாழ்க்கையில் அக்கறையும் கவலையும் இருந்தால் யார் வேண்டுமானாலும் எதையும் எழுதிவிட முடியும். சில விஷயங்களை வேண்டுமானால் எங்களால் எழுதிவிட முடியாது. எடுத்துக்காட்டாக மாதவிடாய் போது எப்படி வலிக்கும் என்றும் மலஞ் சுமக்கும்போது எப்படி நாறும் என்றும் எங்களால் சொல்ல முடியாது. இத்தகைய இடைவெளிகளை நிரப்பும் எழுத்துகளை நீங்களும் எழுதலாம்!"

இதுதானே காலச்சுவடு மற்றும் அதன் நிறுவனரின் குரல்?

மரபு, தரம், படைப்பு, அழகியல் குறித்த பார்ப்பனீய மதிப்பீடுகள் குறித்து நம்மிடையே கருத்து மாறுபாடுகள் உள்ளன. இவை குறித்து முறையாக விவாதிப்போம் வாருங்கள். தலித்தியம், பெண்ணியம், பின் நவீனத்துவம் போன்ற சிந்தனைகளை சு. ரா. போன்ற பெரிய எழுத்தாளர்களெல்லாம் உண்மையிலேயே ஆதரிக்கிறார்கள் என்றால் எங்களைவிட மகிழ்ச்சியடைபவர்கள் யாராக இருக்க முடியும்? நாங்கள் யாரையும் விமரிசிப்பது கொண்ட கருத்துக்களுக்காகத்தானே தவிர வேறு காரணங்களுக்காக அல்ல. இந்திரா பார்த்தசாரதி, கரிச்சான் குஞ்சு போன்றோரிடம் நாங்கள் மிகுந்த நட்பையும் மரியாதையையும் பாராட்டி வந்துள்ளமையைப் பலரும் அறிவர்.

அ. மார்க்ஸ்

●

## மொழி - சமூக உறவு பற்றி ஒரு பதில்

மொழி வளர்ச்சியும் சமூகமும் (காலச்சுவடு இதழ் 9) என்ற என் கட்டுரையை அடுத்த இதழில் விமரிசித்த ஆ. இரா. வேங்கடாசலபதி "மொழி என்பது வெறும் ஒரு சமூக ஆக்கம், மொழியின் வளர்ச்சி சமூக வளர்ச்சியைப் பிரதிபலிப்பதோடு நின்றுவிடுகிறது" என்ற கருத்தாக்கமே அந்தக் கட்டுரையின் மையச்சரடு என்று கூறி இது பத்தாம்பசலியான, வரட்டுத்தனமான கருத்து என்று கூறுகிறார். மேலே எடுத்துக்காட்டிய வரிகளில் "வெறும்", "நின்றுவிடுகிறது" என்ற சொற்கள் அவருடைய செயற்கை. அவற்றை நீக்கியபிறகு எஞ்சியுள்ள கருத்தைக் கூறுவது கட்டுரையின் முதன்மை நோக்கம் அல்ல. கட்டுரையின் மையக் கருத்தான "மொழிப் பயன்பாடு சமூகத்தின் பயன்பாடு; சமூகத்தின் செயல்பாடு இல்லாமல் மொழிபயன்பாடு விரிவடைய முடியாது" என்பதற்குப் பின்புலமாக நிற்கும் கருத்தே அது.

சமூகம் மொழியை ஆக்குகிறது என்று சொன்னால் மொழி சமூகத்தை ஆக்குகிறது என்பது உடன்பாடான கருத்தல்ல என்று பொருளல்ல. இரண்டும் உண்மை; மொழியைப் பற்றி வேறு



படிப்பகம்

www.padippakam.com

எழுதிய பாவத்துக்காக காலச்சுவடில் வந்துவிட்டது. சுந்தர ராமசாமியின் இலக்கியப் பார்வையுடன் நான் முரண்பட்டாலும், பாதியில் முறிந்த பயணம் ஒரு பயனுள்ள முன்னுரை என்பேன். புதுமைப்பித்தனின் தொகுக்கப்படாத படைப்புகள் சுவையாக இருந்தாலும் அவற்றின் தொகை ஒரு சஞ்சிகையில் வழங்கும் அளவுக்கு சிறிது அதிகம். எனினும் புதுமைப்பித்தனிடமிருந்து கற்க இன்னும் நிறைய உண்டு என நினைவூட்டியதற்கு நன்றி. எஸ்.என். நாகராஜன் சந்திப்பில் அவர் பல விஷயங்களை முழுமையாக விளக்க முடியவில்லை என நினைக்கிறேன். கீழைத் தேய - மேலைத் தேய மார்க்சியம் என்ற குழப்பத்தினின்றும் அவர் இன்னமும் விடுபடவில்லை. இவ்வாறான செவ்விகள் கவனமாகத் திட்டமிடப்படாவிட்டால் செவ்வி காண்பவர்க்குச் சிரமம்; காணப்பட்டவருக்குச் சிக்கல். தனிப்பட்ட வாழ்க்கைப் பற்றியும் பலவேறு உலக விவகாரங்கள் பற்றியுமான அபிப்பிராயங்களையெல்லாம் ஒரு சந்திப்பிற்குள் அடக்குவது எளிதல்ல. இதழ் முன்னுரையில் வரும் சில எண்ணங்கள் தொடர்பாக: பம்மாத்துக்காரர்கள் பற்றிய வரிகள் உடன்பாடானவை. சுய அடையாளங்கள் பற்றிய கருத்துடன் எனக்குச் சில முரண்பாடுகள் உள்ளன. சிலவகையான சுய அடையாளங்களில் ஒரு சுய அடையாளம் பிறவற்றுடன் பகைமை இல்லாது ஒத்தியங்க முடியும். வேறு சில சுய அடையாளங்கள் மனிதர் மீது மனிதர் செலுத்தும் ஆதிக்கத்தின் அடிப்படையிலானவை. அந்த ஆதிக்கம் கலையும்போது அந்தச் சுய அடையாளங்கள் கரையத் தொடங்கிவிடும். சகிப்புத்தன்மை எப்போதும் நல்ல பண்பல்ல. தலையங்கம்கூடச் சில விஷயங்களைச் சகிக்க மறுக்கிறது. நல்ல மனிதருக்கும் கோபம் வரும். கோபம் வராதவர் நியாயத்திற்காகப் போராடமாட்டார். தலித் இலக்கிய இயக்கம் அதன் ஆரம்ப கால நெருக்கடிகளினின்று மீள வேண்டும். அங்கு பல ஆயிரமாண்டுகளின் தழும்புகள் மட்டுமல்லாது புண்களும் இன்னும் மாறாமல் உள்ளன. எனவே அங்கு எப்போதும் நிதானமான பண்பட்ட பேச்சை எதிர்பார்க்க நியாயம் இல்லை. எனினும் தலித் இயக்கம் தனது விடுதலைப் போராட்டப் பண்பை உறுதி செய்ய வேண்டுமானால் நண்பர்கள் யார்? எதிர்கள் யார்? நேச சக்திகள் எவை? தனிமைப்படுத்தப்பட வேண்டிய எதிரி யார்? என்பது பற்றிய தெளிவை பெற வேண்டும். தமிழகத்தில் தனி மனித வாதமும் அதன் விளைவான தனி நபர் மோதல்களும் சற்று அதிகம். இது ஒரு விடுதலை இயக்கத்திற்கு நல்லதல்ல. (17.7.95)

காலச்சுவடு 11க்கு நன்றி. ரங்கராஜன் கட்டுரை ஒரு உரத்த சிந்தனையாகத் தென்படும் அளவுக்குக் கவனமாக எழுதப்பட்ட ஒரு ஆய்வுக் கட்டுரையாகவோ முறையான விஷயத் தொகுப்பாகவோ இல்லை. புதுமைப்பித்தனின் பல்வேறு விமர்சனக் குறிப்புகளைப் பார்க்கும்போது சமகால விமர்சகர்கள் கற்க நிறைய அவரிடம் உண்டு என்றே கூறவேண்டும். சச்சிதானந்தனின் உருமாற்றம், வன்முறையும் புரட்சியும் பற்றிய அவரது கருத்துகளில் தெளிவாகவே வெளிப்படுகிறது. சீனாவுக்குப் போய் வந்த அவருக்கு 'ஜனநாயகம்' பற்றிய ஒற்றை வசனத்திற்கு மேல எதுவும் கூற இயலாமை அசர வைக்கிறது. திராவிட இயக்கம் பற்றிய அவரது விமர்சனங்களில் நியாயம் இருந்தாலும் இந்தியத் துணைக் கண்டத்தில் பல்வேறு தேசங்களின் இருப்பும் தேசியமும் தேசங்களாக அமையாத இனங்களது சுய அடையாளமும் பற்றிய கேள்விக்கு, இந்தியத் தேசியவாதம் இந்தியா ஒரு பல்லின, பல்தேச ஒன்றியம் என்ற நிலைப்புக்கு ஆப்பு வைக்கிறது. "எல்லா இலக்கியங்களும் முற்போக்கானவையே" என்ற கூற்று, சட்டத்தில் மாட்டிச் சுவரில் தொங்கவிடப்பட வேண்டியது. அது, மைன் காம்ப்ஃ (Mein Kampf) கூட ஒரு முற்போக்கான படைப்பு என்று நாம் வாதிக்க வசதி ஏற்படுத்தும். எப்போதுமே தமிழகத்தில் 'ஏதாவதிஸம்' பற்றியுள்ள மோகத்துக்கு அவரது விரிவான கருத்துகள் மருந்தாக அமைய முடியுமானால் நல்லது. அஷிஸ் நந்தி, காந்தியின் கொலைக்குத் தரும் விளக்கம் மிகவும் கற்பனாவாதப் பாங்கானது. காந்தியையும் கோட்ஸேயையும் சமூகவியற் படிமங்களாக்கி, வசதிக்கேற்றபடி., அவர்களையும் பிறரையும் வியாக்கியானஞ் செய்கிறார். பிர்லா மாதிரி யாராவது காந்தியைக் கொன்றிருந்தால் அவரது வாதம் கொஞ்சம் நியாயமாகத் தெரிந்திருக்கும். கோட்ஸேயைச் சார்ந்திருந்த 'இந்துத்வ' சிந்தனையை நவீனத்துவத்துடன் இணைப்பது இந்தியத் துணைக்கண்ட அரசியலில் உள்ள ஆபத்தான ஒரு உண்மையை மூடிக்காட்டும் முயற்சி போலவே தெரிகிறது. காந்தி கொல்லப்படாதிருந்தால் காந்தியம் ஒரு வேளை வெகு விரைவாகவே காந்தியின் வாழ்நாளுள் தனது வரலாற்றுப் பலவீனத்தையும் பயனின்மையையும் புலப்படுத்தியிருக்குமோ? விமர்சனங்கள் விவரத்திலும் மதிப்பீட்டிலும் அளவாகவும் கனதியாகவும் உள்ளன. வேதசகாய குமார், நூல் வெளியீடு தொடர்பானவர்களை விமர்சிக்கிற நோக்குடன்தான் எழுதியிருக்கிறார் போல இருக்கிறது. நூல் பற்றிய ஒரு முறையான அறிமுகத்தின் பின்பு நூலின் வாசிப்பின் பிரச்சினைகளைத் தந்திருக்கலாம். 'எங்கள் பரம்பரை போர் புரியட்டும்' என்று பத்து வருடங்கள் முன்பு எழுதிய சேரன் குழந்தைகள் ஆயுதம் ஏந்துவது பற்றி இப்போது மனம் வாடுகிறார். இந்தச் சூழலுக்குக் காரணமானவர்கள் பற்றிய விமர்சனங்களை நமது புதிய சமாதான தேவதைகள் ஏனோ முன்வைப்பதில்லை. உகண்டாவில், மில்டன் ஓபோட்டேயை விழுத்தவும் குழந்தைகள் ஆயுதம் ஏந்தினர். ஜப்பான் எதிர்ப்பு யுத்தத்திலும் சிறுவர்கள் பல நாடுகளிலும் போருக்கு உதவினர். இலங்கையில், ஒரு முழுத் தேசிய இனத்தின் இருப்பே கேள்விக்குள்ளாகியுள்ளது. விடுதலைப் புலிகளின் தவறுகளை விமர்சிக்கும் அதே வேளை, நாம் இந்தப் போரின் வரலாற்றையும் மறந்துவிடக் கூடாது. அப்போது விளங்கும், சிறுவர்களை ஆயுதபாணிகளாக்கியவர் யார் என்று.

**சி. சிவசேகரம்,** லண்டன்

○

'காலச்சுவடு' இதழ் 11 பார்த்தேன். கேவலம், 'தொப்பூளுக்கு கீழே ஜட்டிக்குள் கையைவிட்டு நிரடுகிற விஷயமும்', 'ஆனந்த அல்குலு'க்குள் ஆர்ப்பரிப்புடன் விரல்கள் துடித்துக் கொள்வதும், மிகப் பெரிய இலக்கிய ஞானத்தின் வெளிப்பாடுகள்தான. 'குப்த ஞான்' பற்றி எழுத இங்கே ஏராளமான பத்திரிகைகள் இருக்கின்றன. 'சுந்தர ராமசாமி' எழுதிவிட்டார் என்பதற்காக 'காலச்சுவடு' குப்பைத் தொட்டியாக வேண்டுமென்ற அவசியமில்லை. இலக்கியம பேசுகிறவனுக்கு இதயச் சுத்தம் அவசியம். மொழிச் சுத்தம் மட்டுமே தெரிந்து இலக்கிய மேதையாக பிரகாசித்துவிட முடியாது. ஜெயகாந்தன் போன்ற மேதைகள் அசிங்கத்தையும் தங்களது மேலான ஆளுமையால் அழகாக்கினார்கள். அவரது படைப்புகள் அதன் காரணமாகவே "உந்திக் கொடியோடும் உதிரக் கவிச்சை யோடும், உரத்த குரலெடுத்துப் பிறந்தன" என்பது எவ்வளவு பெரிய உண்மை? இதனைத் தெரிந்து கொள்ளாமல், கண்டதையெல்லாம வாந்தியெடுக்க 'காலச்சுவடு' பாத்திரமாகியிருப்பது விபரீதம். தேவடியாத்தனங்களையெல்லாம் எழுதி மாள இலக்கியப் பத்திரிகை தேவையில்லை. 'சரோஜா தேவி' போதும. இதை நீங்கள் புரிந்து கொள்ளத் தவறினால் 'காலச்சுவடு'வின் நாட்கள் எண்ணப்பட்டு விடும். சுவடுகளே தெரியாமல் அழிந்து போகும். ஒழிந்து போகும்.

**பானுமதி பாஸ்கோ,** கோயம்புத்தூர்

○

இதழில் நல்ல முன்னேற்றம் தெரிகிறது. சச்சிதானந்தன் பேட்டி நன்றாக வந்துள்ளது. இருப்பினும் பேட்டி என்ற genreக்குள் நம பத்திரிகைகளில் வெளிவரும் பேட்டிகள் வருவதில்லை. கேள்விகளை ஒருவருக்கு எழுதி அனுப்பி அவரிடமிருந்து பதில்கள் பெற்று வெளியிட்டால் எப்படியிருக்குமோ அப்படித்தான் பெரும்பாலான பேட்டிகள் இருககின்றன. நேருககு நேர பேசுவதாகவோ கேள்விகள் ஒன்றிலிருந்து மற்றொன்று இயல்பாக தொடர்வதாகவோ உணர முடியவில்லை. அப்படிச் செய்வதில வேறு பல சிக்கல்கள் இருக்கின்றன என்பதை நான் உணர்கிறேன். ஆனாலும் செயற்கையான பேட்டிகள் கொஞ்சம் சலிப்பு தருவதை சொல்லாமல் இருக்க முடியவில்லை. சேரன் கவிதைகள் வித்தியாசமாக இருப்பதாகப்பட்டது. மிகவும் பிடித்திருந்தன. படிப்பதற்கு இதமாக ஒருவிதமான rhymeமுடன் இருப்பதால் இருக்கலாம். சு.ரா.வின் சிறுகதை புரியவில்லை. அவரும் அமைப்பியல் பாணியில் சிறுகதை எழுத முயற்சி செய்கிறாரா என்ற சந்தேகம் வந்தது. மொழி பெயர்ப்பு கதை/கவிதைகளை படிப்பதை நான் தவிர்க்கிறேன். ஆனால் 'மச்சம்' சிறுகதை என்னை மிகவும கவர்ந்தது. மொழிபெயர்ப்பின் நேர்த்தியோடு மூலத்தின தரம்தான் அதற்குக் காரணம் என்று நினைககிறேன. பு. பி. யின படைப்புகள் படிக்கப் படிக்க ஆச்சரியமே மேலோங்குகிறது. அவர மிகவும் தேர்ந்த விமர்சகர் என்பது நன்றாக வெளிப்படுகிறது. தயவு தாட்சண்யமில்லாமல் நேர்மையுடன் விமர்சனம் எழுதியுள்ளார் என்பது மிகவும் சந்தோஷத்தையும் தமிழ்ச்சூழல் மீதுள்ள அவநம்பிக்கையைப் போக்கி கொஞ்சம் நம்பிக்கையை உண்டுபண்ணவும் செய்கிறது. வரா.வுக்கு எழுதியுள்ள கடிதம அருமை. அ. மார்க்ஸின் ஒற்றை வார்த்தை மேற்கோள்களும் அவர் செய்கின்ற பிறழ்வுகளும் சுவாரசியமாக அலசப்பட்டுள்ளன. இன்றைய சூழலில் இத்தகைய exposeகளின் தேவை இருக்கிறது. பாராட்டுகள். சுபமங்களாவில் வெளியான 'காலச்சுவடு' விமர்சனத்திற்கும் நல்ல பதில் தந்துள்ளீர்கள்.

**ஜி.எஸ்.ஆர். கிருஷ்ணன்,** பெங்களூர்

○



படிப்பகம்

www.padippakam.com

அண்மையில் வெளியான காலச்சுவடு இதழ்களில் இதுவரை காணக் கிடைக்காத பு. பி. யின் எழுத்துகளைத் தேடித் திரட்டி மீட்டெடுத்துத் தந்து வரும் நண்பர்களுக்கு எனது மனமார்ந்த நன்றி. பு. பி. யின் எழுத்துகள் புதிய வாசிப்புகளை எதிர்நோக்கியுள்ள இன்றைய சூழலில் 'காலச்சுவடின்' சிறப்புப் பகுதியாக இவற்றை முன்வைக்க முனைந்தமைக்காக காலச்சுவடிற்கும் மனமார்ந்த நன்றி. இலக்கியம், மொழி, அதிகாரம் குறித்த தோழர் சச்சிதானந்தன் அவர்களுடனான பேட்டியும் ஆழமாகவும், அருமையாகவும் பல பரிமாணங்களுடையதாகவும், பன்முக அணுகுமுறையானதாகவும் அமைந்துள்ளது. மீளமீள வாசிக்கத் தூண்டுகின்றது. புத்தொளி பாய்ச்சுகின்றது. தலித் இலக்கிய கோட்பாடு பற்றி தோழர் சி. சிவசேகரம் அவர்கள் முன்வைத்துள்ள பார்வைகள் மிகவும் காத்திரமான அணுகுமுறைகளை உள்ளடக்கியுள்ளன. புரிந்துணர்வுடன் மேலெடுத்துச் செல்ல வேண்டிய விவாதங்களுக்குக் களனமைத்துள்ளார் சிவசேகரம். அஷிஸ் நந்தியின் 'கோட்ஸேயைத் தரிசிக்கும்' பார்வையில் 'இந்துமகா சபையின் தாமரை' கைவல்யம் ஸ்பஷ்டமாக விரிகிறது. கொள்கையே உருவான கோட்சேயின் கடமையுணர்வு நன்னடத்தை பணிவு துணிவு இலட்சிய வேகம் இத்தியாதி இத்தியாதியெல்லாம் அஷிஸ் நந்தி அவர்களால் புகழாரம் சூட்டப்படும்போதுதான் உள்ளபடியே நம்க்கு அடால்ப் ஹிட்லரை நம் 'தேச பக்தர்'கள் வியந்து பாராட்டுவதன் உள்ளார்ந்த தாத்பர்யம் பொறிதட்டிப் புலனாகிறது.

**பொதியவெற்பன்**, கும்பகோணம்

○

அஷிஸ் நந்தியின் தமிழாக்க கட்டுரை படித்தபோது கொதிக்கும் திராவக மனோநிலை ஏற்பட்டது. அறிவும் இறையார்வமும் நேயமும்மிக்க ஒரு தோழமை மிக்க மானுடனை பலி தீர்த்த சம்பவத்தை எவ்விதம் இவர் நியாய வர்ணம் பூசப் பார்க்கிறார். அண்ணலை மூடத்தனம், தூரத்தனமிக்க நம்பிக்கைகள் இவற்றின் உருவாக்கிப் பார்த்து, தன் தாய்நாட்டின் மானுட விடுதலைக்காக 'வேண்டா வெறுப்பாக' கொல்ல வேண்டி வந்தது என்ற காரணம் எத்தனை தூரம் நிஜம்? தன் கொள்கையில் பிடிப்புள்ள, ஆழ்ந்த நம்புதல் உள்ள எவனும் தீர்த்துக்கட்டுவதில் இறங்கமாட்டான். மேற்கு நாடுகளுடன் நவீனத்துவத்தோடு போட்டியிடாமல் இந்திய கிராமப் பொருளாதாரத்தில் கண் ஊன்றச் செய்த காந்தி கொல்லப்பட வேண்டியவர்தான். அகத்தை சுத்தமாக்கும் வழியில் நெடுந்தூரம் நடந்த அந்த 79 வயது 'கடமை தவறிய தந்தை' கொன்று தீர்க்கப்பட வேண்டியவர்தான். உடலுழைப்பைப் பெண்மைத்தனம் சார்ந்ததாக வர்ணிக்கும் அஷிஸ் நந்தி போன்றோர் பேனா தீண்டப்படும்முன் தீர்க்கப்பட்ட அண்ணல் கொடுத்து வைத்தவர்தான். ஒரு கொலையாளியை காந்தியின் சமபங்குக்கு உயர்த்த முயலும் அஷிஸ் நந்தியின் ஆய்வு நல்ல திசைகளை மறப்பதைத்தான் 'நன்றின்பால் உய்ப்பது அறிவு' என்றனர் மூத்தோர். இத்தனை ஆதாரங்கள் திரட்டி கட்டுரையாக்கி தன் மன அழுக்கை வெளியேற்ற அவர்தம் கல்வியறிவு பயன்படத் தேவையில்லை.

**பா. சந்தியமோகன்**, நெய்வேலி

○

சிற்றிதழ்கள் இலக்கிய வளர்ச்சிக்கும், திறனாய்வுப் போக்கிற்கும் கணிசமான பங்களிப்பை நல்கியுள்ளன என்பதில் இருவித கருத்து இருக்க முடியாது. அன்றைய மணிக்கொடி முதல் இன்றைய காலச்சுவடு, நிறப்பிரிகை வரை இது உணரப்படுகிறது. சிற்றிதழ்களில் வைக்கப்படும் கருத்து மோதல்கள் விமரிசனப் பாங்கை வளர்த்தெடுக்க உதவ முடியும் என்பதில் பாரதி மகாகவியா? போன்ற விவாதங்கள் சான்றாகின்றன. தனிப்பட்டவர்களின் புலமைச் செருக்கு இடம் பெற்றதையும் விவாதங்கள் நமக்குக் காட்டின. ஆனால், இப்போக்கு இன்றைக்கு ஆரோக்கியமான விமரிசனப் பாங்கிற்கு வழியமைப்பதற்குப் பதில், கட்சி சேர்ப்பதில்தான் நாட்டம் கொண்டுள்ளன என்பது புலனாகின்றது. 'காலச்சுவடு' (இதழ் 11,) இதழில் வெளியான பல பக்கங்கள் சுந்தர ராமசாமிக்கும் அ. மார்க்சுக்கும் இடையிலான மோதல்களையே காட்டி நிற்கின்றன. நிறப்பிரிகையையோ காலச்சுவடையோ சுபமங்களாவையோ தொட்டுப் படிக்கின்ற வாசகன், அரசியல் கட்சித் தொண்டனின் நிலைக்கு ஆளாக்கப்படுகின்றான். கட்சித் தலைவர்கள் பலவாறான அறிக்கைகளை அளிப்பர். அவ்வறிக்கை குறித்த பேச்சுப்போர் செய்தித் தாள்களில் வந்து கொண்டிருக்கும். அதைப் படிக்கும் தொண்டன் தன் தலைவன் அல்லது கட்சி சார்ந்தவர்கள் எவ்வளவு சாதுர்யமான வார்த்தைகளை வளைத்துப் போட்டு பதில் அளிக்கிறார்கள் என்று வியந்து போய், பாராட்டி பரவசம் அடைந்து நிற்பர். சிற்றிதழ் வாசகர்களில் சிலர், ஓர் அணியைச் சார்ந்து அவ்வாறு பரவசப்படலாம். ஆனால் பலர், அணி சார்ந்து நிற்பதையே தவிர்ப்பவர்கள். அவர்களுககு இந்தச சர்ச்சைகள் நிச்சயமாக புதிய செய்திகளை அளிக்கப்போவதில்லை. விமர்சன வளர்ச்சியிலும் பெரிய பங்கை அளித்துவிடப் போவதில்லை. எனவே, சிற்றிலக்கிய வாசகர்களின் பெரும் பான்மையைக் கருத்தில் கொண்டு இதுபோன்ற சர்ச்சைகளை வளர்க்காமல், ஆக்கபூர்வமான விமரிசனக் கட்டுரைகளில் தங்களது கவனத்தைத் திருப்பினால் சிற்றிதழின் பங்களிப்பு எதிர்காலத்தில் சொல்லக்கூடியதாக இருக்கும். இப்படியே தொடரின், சிற்றிதழ சிறுமை இதழாகவே மாறிவிடும அபாயம் உண்டு.

**ம. மதியழகன்**, புதுவை

○

சச்சிதானந்தன் பேட்டி தெளிவாக இருந்தது - ஒரு பேட்டி இப்படித்தான் இருக்க வேண்டும் எனும்படியாக, எந்தக் குழப்பமும இன்றி. நண்பர் ஜெயமோகன் கேள்விகள் மூலம் நல்ல விஷயங்களை வெளியே கொண்டு வந்திருக்கிறார். 'கல்யாண்ஜி' கவிதைகள் இரண்டுமே அபூர்வமான அனுபவங்களைத் தந்தன. சுந்தர ராமசாமி கதை 'பட்டுவாடா' ரொம்ப சிக்கலாக இருந்தது. வேதசகாயகுமாரின் 'புதுமைப்பித்தன் கதைகளின் கதை', புதுமைப்பித்தனைப் பற்றிய பல குழப்பங்களை நீககுகிறது. நமது தகுதியுள்ள படைப்பாளிகள் பற்றிய இதுபோன்ற கட்டுரைகள உபயோகமாக இருக்கும். சரியான அணுகுமுறை இந்தக் கட்டுரை.

**நாஞ்சில் நாடன்**, கோவை.

○

அஷீஸ் நந்தியின் 'காந்தியும் கோட்ஸேயும்...' ஒரு தவறான முன்னுதாரணமாகிவிடக்கூடாது. தலைவர்கள் கொலை செய்யப்படும் ஒவ்வொரு சமயத்திலும் கொலையாளியின் செயலை நியாயப்படுத்தி செய்திகளைப் பரப்புவதற்கு ஆட்களும் இருந்து வந்திருக்கிறார்கள். இதே மனவியல் ரீதியில் பார்க்கப்போனால், இந்திராவைக் கொன்றவர்கள், ராஜீவைக் கொன்றவர்கள் கூட தியாகிகளாக்கப்பட்டுவிடுவார்கள் எனப் பயப்படவேண்டியுள்ளது. காந்தியின் கொலை நடந்து 47 ஆண்டுகளாகிவிட்டதாலேயே கோட்ஸேயின் பக்கம் நியாயம் இருப்பதாகக் கற்பித்துவிட முடியாது - கூடாது. இந்த நியாயப்படுத்தும் மனோபாவம்தான் பஞ்சாப் முதல்வர் பியாந்த் சிங் கொலையில் மனித வெடிகுண்டாக மாறுவதற்கு ஆயத்தமாக இருந்த நான்கு இளைஞர்களை தொலைக்காட்சி செய்தியில் காட்டியபொழுது, மகிழச்சியும பெருமிதமும் தோய்ந்த முகத்தோடு அவாகளால் போஸ் கொடுக்க முடிந்திருக்கிறது. இன்று ஒரு அஷீஸ் நந்தியைப் போல், இன்னும் பத்தாண்டுகள் கழித்து வேறொருவர் இந்த கொலையாளிகளுக்கும் கூட சூழ்நிலை, மனோபாவம், நியாயம் என பகுத்தாய்ந்து வக்காலத்து வாங்கலாம். இதுவும் ஒருவகை சுதந்திரந்தானே!

**பொறிகண்ணன்**, சென்னை.

○

அஷிஸ் நந்தியின் காந்தியும் கோட்ஸேயும் கட்டுரை வாசித்தேன். கட்டுரையின் பல இடங்களில் கோட்ஸேயை காந்தியுடன் ஒப்பிடும்போது அவரைவிட உறுதியான தார்மீகவாதி போன்றே குறிப்பிடபபட்டுள்ளது. இது எவ்வளவு தூரம் உண்மையானது என்பதை கட்டுரையின் பிற்பகுதிகளில தேடினேன. அதற்கான சிறுநிகழ்ச்சியும் உதாரணமாய், தெளிவாய் அமையவில்லை. இது ஒருவனை காலரில் வைத்தும மற்றவனை பாக்கெட்டில் வைத்தும் உயரம் அளக்கிற சாதுர்யம். கட்டுரையாளரின் முயற்சி கோட்ஸேவை ஹிட்லர், முசோலினி வரிசையில் வைத்துப் பார்க்கலாமென்பது. அப்படியே கொண்டாலும் அவர்களின் தோல்வியும், அதன் கொடூரமும் நாம் அறிந்தது. எத்தனை முயற்சிகள் கொண்டாலும் மனித நேயமற்ற, தன்சமூகநலனான லட்சியங்கள் தோற்கவே செய்யும். நவீனவாதியாகவும், பகுத்தறிவு கொண்டவனாகவும் சித்தரிக்கப்பட்ட கோட்ஸேவுக்கு தன்நாட்டின் வெற்றிக்கு ஒரு அரை நிர்வாணியா எதிரியாக இருக்கமுடியும் என்பது எப்படி தெரியாமல் போனது. தாழ்த்தப்பட்டவர்களுக்கு ஹரிஜன் என்று பெயர் வழங்கியதையே பொறுக்காதவர்கள் எப்படி அவர்களை இந்து என்று வரைவார்கள்? இன்றும் இந்து என்று குறிப்பிட்ட வகுப்பினர் மட்டுமே பெருமைப்பட்டுக்கொள்கிற நிலையில் இந்து ராஜ்ஜியம் அமைப்பதற்காகவும், நவீன இந்தியாவின் வடிவமைப்பிற்காகவும் (இன்றேதும் அப்படி ஏற்பட்டுள்ளதோ) மகாத்மாவின் படுகொலை நியாயமென கொள்கிற வாதம் எத்தனை கொடுமையானது. இதனை பிரசுரிக்க முயற்சித்தது எவ்வளவு கோரமானது.

**ஜி. பி. இளங்கோவன்**, அம்மாசத்திரம்

○



படிப்பகம்

www.padippakam.com

## பிரேமிளது விஞ்ஞானப்பார்வை

"மை டியர் மாரப்பன்..." என்று இரண்டொரு கடிதங்களில் தனது ஒவிய எழுத்துக்களால் பிரேமிள் எனக்கு by ruturn of post-ல் பதில் எழுதியிருந்தாலும் அவரை நேரில் சந்திப்பது திருநாளைப் போவார் ஆசை போல நாளனந்தம் நழுவிக் கொண்டே போயிற்று. அத்தோடு - சிறு வயதிலேயே, குன்றக்குடியாரையும், கைலாச பதியாரையும் அசட்டை செய்த தலைக்கனம் பிடித்த ஆசாமி, அவரை நான் முன்பின் அறிமுகமின்றிச் சந்திப்பதை ஏற்றுக் கொள்வாரா, எடுத்து எறிந்து விடுவாரா அல்லது ஏட கூடமாக ஏதாவது நடந்து விடுமோ என்ற சங்கடமும் மனதில் வௌவாலைப் போல் தொத்திக் கொண்டு தானிருந்தது. இலக்கிய யுத்தத்தில் வெங்கட் சாமிநாதனை வெட்டிச் சாய்த்தவர், சுந்தர ராமசாமியை சுட்டுத் தள்ளியவர், எதிர்த்த பல எடுபிடிச் சில்லரைகளையெல்லாம் வெகுண்டு துவம்சம் செய்த ஜாம்பவானிடம் ஒன்றுமில்லாத நீ நெருங்கிச் சாகாதே, பிரேமிள் நெருப்பு வேண்டாம் விபரீதம் என்று சில நண்பர்கள் சாம்பிராணிப் புகையும் தூவியிருந்தனர். பத்தாததற்கு, சமீபகால சிறுபத்திரிக்கைகளும் அவரை இலக்கிய ரவுடியாக, இமாலய அகந்தைக்காரராக, கிறுக்காக குரங்காக வெறிபிடித்த வேட்டை நாயாக திருநாமங்கள் ஜபித்து புளகாங்கிதம் அடைந்திருந்தன. இடையிடையே - இப்படிப் பட்ட இடிமின்னல்கள் பயத்தில் நடுநடுங்க வைத்திருந்தாலும் என் இயல்பான தைரியம் நேரங்காலத்தை நோக்கியிருந்தது . . . பிரேமிளின் வீரியமும் ஒரே போடாக போட்டு என் நெஞ்சை அமுக்கிக் கொண்டது எதிர்பாராது தாக்கிய ஒரு காத்துக கருப்பு விபத்துதான் . . .

வைணவத்தில் தென்னாட்டு காசியான இத்தலம் (கும்பகோணம்) பனிரெண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை நிகழும் மகாமக மகிமை பெற்றது. அரசலாறு பாயும் இவ்வூரில் தடுக்கி விழுந்தால் கோயில்கள்தான். . . இத்தகைய புண்ணிய க்ஷேத்திரத்தில் 19-2-95 நன்னாளில் பிரேமிளுக்கு 'புதுமைப்பித்தன் சாதனை வீறு' வெ. மு. பொதியவெற்பன் வழங்குவதாக கால. சுப்ரமணியன் கடிதம் மூலம் அறிந்து சொல்லாமல் கொள்ளாமல் அழையா விருந்தாளியாக பிரேமிளை சந்திக்க முடிவு செய்தேன். . . பிரேமிள் என்ற படுபாதாளக் கிணற்றுள் எட்டிப் பார்த்து அதில் என்ன இருக்கிறது, ஒரு a,b,c ஆவது தெரிந்து கொள்ளலாம் என முயல, அதற்குள் தன்ன கங்காரத் தன்மை கொண்ட ஒரு மெடபிசிக்கல் தாக்க உலகம் வியாபித்துக் கிடக்கின்ற பயங்கரம் மட்டும் 'a sight to dream of not to tell' போல் என்னை ஓடஓட திருப்பித் துரத்தியிருக்கிறது . . . பிரேமிளின் பெயர் மாரீசம் 'எழுத்து' வுக்கு முன்னும் பின்னும் ஒரே தாவலாக பறந்தடித்து 'லயம்' பத்திரிகையில்தான் ஒரு கிளையில் நிலைத்து அமர்ந்திருக்கிறது. வானவில்லின் நிறங்களாய் ஒன்றிலேயே - தருமு, தர்மு, தர்மோ, தர்ம-சிவராம், சீவராம், ஜீவராம், அஜித்ராம்-பிருமிள், பிரமிள், பிரேமிள்- என்ற வண்ண ஜாலங்கள். இவ்வேஷங்கள் நாடோடித்தனமாக தெரிந்தாலும் இவைகள் நியூமராலஜியின் அடிப்படையில் அவ்வப் போது கூட்டிக் குறைத்துக் கொண்டிருக் கலாம் என்பது என் அனுமானம். தன்மீது மோதும் போலிகளை வம்புக்கு இழுத்து 'ராவுடி.' பண்ணுவது வழி மறைத்து 'கலாட்டா' செய்வது, 'திடீரென்று' தாக்குவது இப்படியான வாடிக்கைகள் இவரை இலக்கிய கொரில்லா(sic)வாககியுள்ளது. நிலைமை முற்றும்போது விஷயத்தை விட்டு விட்டு ஆள்மேல் ஏறுவதும் தமிழில் பிரேமிள் தோற்றுவித்த புதுவகையான கலக விமர்சனம். . . வணிகப் பத்திரிகைகளுக்கு இவர் ஜென்ம எதிரி, பிரசுரகர்த்தாக்களுக்கு வேதாளம். போலிக் கவிஞர்களுக்கு இன்றைய ஒட்டக்கூத்தன். வறட்டு விமர்சகர்களுக்கோ எமன். . .

தமிழின் விமர்சன தரித்திரத்தை போக்கிய பிரேமிளின் ஆன்மீக ஞானமார்க்கம் முன்னேறிய ஒரு நான்காவது தமிழை உற்பத்தி செய்துள்ளது மறுப்புக்கூற முடியாத சவாலாகும் . . . ஜான்சனுக்கு ஒரு பாஸ்வெல என்றால் பிரேமிளுக்கு கால. சுப்ரமணியம் அதைவிட பல பங்குமேல என்பது இன்னும் எழுதப்படாத பையாகிரப்பி. உலகக் கவிதை இயக்க வரலாற்றில் ஒரு புதிய சகாப்தத்தின் விடிவெள்ளி பிரேமிள் என்பது விசாலமான ஆந்தைக் கண்களுக்குத்தான் தெரியும். தமிழில் இந்த அற்புதம் நடந்திருப்பது நம்ப முடியாததாகவே இருக்கிறது . . .

'போட்டோவுக்கும் நேரிலும் நிறைய வித்தியாசம்' என்றேன் 'அதில் என்ன ஆச்சரியம்' என்றார் பிரேமிள். ஏதோ கூழையாக கூன்தள்ளி ஒரு 'Hunchback of Notterdame' போல் மனிதர் ஜிப்பாபோட்ட வயோதிகராக காட்சியளிப்பார் என்றிருந்தேன் சொடுக்கிவிட்டாற் போன்ற உடம்பிலோ முதுகிலோ ஒரு ஒடுக்கும் இல்லை. ஒரு லேசான மஞ்சள் கலந்த வொயிட் சபாரி. ஜேப்பில் ஒரு ரோட்டமாக் பால்பாயின்ட் குடி கொண்டிருந்தது. குளித்து வாரிவிட்டிருந்த தலையில் பொதுபொதுப்பான லேசான நரைத்த தலைமுடிகள் சொன்ன பேச்சைக் கேட்டுக் கொண்டு அடங்கியிருந்தன. . .

பிரேமிள் அவர் அருகாமையிலேயே என்னை உட்கார வைத்துக் கொண்டதும் வேர்த்து வெலவெலத்துப் போனேன். 'தமிழின மாமேதை'யின் அருகில அமர்ந்திருக்கிறோம் என்ற பயத்தில் வெகு நேரம் வரைக்கும் உஷாராக வாயை கட்டி வைத்துக் கொண்டிருந்தேன். வேறுசில விவாதங்களும் காரமாக தொடர்ந்தன. பிரேமிள் அவற்றை சமாளித்தபோது 'அய்யோ நாம் சிங்கத்திடம் தாம் சிக்கிக் கொண்டோம்' என்ற நினைப்பு எழுந்த போது 'இல்லை இல்லை ஒரு தாயின் அன்பான அரவணைப் பில்தான் பாதுகாப்பாக இருக்கிறோம்' என்ற மகிழ்ச்சியாக அது பின்னால் மாறியது. ஒரு வழியாக பிரேமிள் என் விஷயங்களுக்கு திரும்பினார். 'போ என்ன கல்வீடு காளியப்பன் போல் ஒரே ரொமான்டிக்கா இருக்கிறது' லேசான நகைப்பு. பலரும் சுட்டிக்காட்டியதை பிரேமிள் அழுத்தமாகச் சொன்னார். ஆர். ஷண்முக சுந்தரம் பற்றி கட்டுரை கேட்டபோது பிரேமிள் என்னை Marrappan என்றும் சுருக்கி 'மாரி' என்றும் குறித்திருக்கிறார். பெயர் விஷயங்களில் கூட பிரேமிளது விஞ்ஞானப்பார்வைதான் . . .

"நீங்கள் நாடகத் துறையை சேர்ந்தவரா ?"

"ஆம், அமெச்சூர் வகையறா . . ." என்றபோது அவரது 'மாஸ்டர் பீசா'ன 'நக்ஷத்ரவாஸி' வானில் வெடித்துச் சிதறிய பிழம்பாய் ஒரு நிமிடம் பிரகாசித்து மறைந்தது. . . .கருப்பான காமராசர் காலண்டரில் சிவப்பாக தெரிவது வெறும சாயத்தில்தான என்ற விமர்சன உறுதிகள் பிரேமிளின் கருத்து யதார்த்தத்தை காலம் முழுவதும பறைசாற்றும் . . .

கவிதையில் பிரேமிள் சாதனை இயற்கையின் கரடுமுரடான காட்டுத்தனமும் காண்டாமிருக மூர்க்கபலமும் கொண்டது. குறைந்தபட்ச சங்க இலக்கியப் பயிற்சிகூட இல்லாமல் இன்றைய குருட்டாம போக்குக் கவிதைகளை வைத்து பிரேமிளை நெருங்குவது அபாயகரமானது. அடிப படையான பௌதீக அறிவில்லாமல் பிரேமிளைத் தொட்டால் ''ஷாக்'தான் அடிக்கும். . .

*(பயங்கர மர்மக்கதைத் தன்மை வாய்ந்த இப்பக்திக் காவியம் சதுக்கபூதம் ஆகஸ்டு 95 இதழில் அதன் ஆசிரியர் இரா. மாரப்பன் எழுதிய கட்டுரையிலிருந்து தொகுக்கப் பட்டது. அழுத்தங்கள் மூலத்தில் உள்ளபடி. முழுமையாகப் படித்துப் பரவசம் எய்த விரும்பும் அன்பர்கள் எழுதவேண்டிய முகவரி: இரா. மாரப்பன், போதுபட்டி அஞ்சல், நாமக்கல் 637 003)*

○

## மாவோவும் கணையாழியும்

கணையாழி, எந்தப் பிரகடனத்தையும் தவிர்க்கவே நினைக்கிறது. எனினும் மாவோ சொன்னதைப்போல

'மரம் சும்மா இருக்க நினைத்தாலும
காற்று விடுவதில்லை....'

(ம.ரா தலையங்கத்தில்)

கணையாழியின் முக்கிய ஸ்வாரஸ்ய மான குணமே அதன் Unpredictabilityதான். அதில் என்ன வெளியாகும் என்று யாராலும் சொல்ல முடியாது. அந்த மரபு கஸ்தூரி ரங்கனிடமிருந்து தசராவின் பொறுப்புக்கு வந்த பின்பும் கணையாழியில் தொடர்கிறது.

சுஜாதா

'மணிக்கொடி'க்கும் 'எழுத்து'க்கும என்ன பங்கு உண்டோ அதற்கு சமதையான பங்கு கணையாழிக்கும உண்டு. 31வது ஆண்டு மலரைப் படித்தால், அடுத்த 30 ஆண்டுகளுக்கும் அப்படியே இருப்பதறகான நம்பிக்கை தெரிகிறது . . .

தமன்பிரகாஷ் அவருடைய தந்தை மேடையில் அமர்ந்திருந்த போது தனது இருக்கையில் அமராமல் மேடையில் நின்று கொண்டேயிருந்தார். இந்தப் பணிவு கணையாழியைக் காப்பாற்றும்.

சாம்

இன்குலாப் : ✂ ✂ ✂
(துணிக்கை செய்யப்பட்டுள்ளது)

(கணையாழி செப்டம்பர் 95 இதழிலிருந்து தொகுக்கப்பட்டவை)

நான் நேரடி தாக்குதல் செய்தது கிடையாது.

**வெங்கட் சாமிநாதன்**

(சுபமங்களா அக்டோபர் 1995)

**தொகுப்பு : இரும்புக்கை மாயாவி**

Edited and Published by S.R. Sundaram for Kalachchuvadu Pathippagam 151, K.P.Road, Nagercoil 629 001 and Printed by Smt.V. Bagavathy at Bharathy Press, Chettikulam, Nagercoil 629 002.



படிப்பகம்

www.padippakam.com




Sharda®
SAREES BELGAUM

**SHARDA TRADING CO.,**
79, GODOWN STREET
MADRAS - 600 001
☎ 564270

படிப்பகம்

www.padippakam.com




படிப்பகம்